
3019

[illegible]

07.04.1989 and 16.04.1989


[illegible] 19. [illegible] 19. [illegible] 19. [illegible] 20.

JL
V2I1m, N70TA
[illegible].19.1
127075.


தமிழரசு
1-4-1989 ரூ. 1



மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமிழ் நாட்டிற்கான 1989-90 ஆண்டுத் திட்டச் செலவு குறித்து, மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு மாதவ் சிங் சோலங்கியை 15-3-89 அன்று டில்லியில் சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு பி. சங்கரானந்த் அவர்களை 16-3-89 அன்று டில்லியில் சந்தித்து உரையாடினார்.



## இந்த இதழில்...


| | |
|---|---|
| தமிழ்நாடு நிதி நிலை அறிக்கை - 1989-90 (முழு விவரம்) | 2 |
| மீண்டும் வசந்தம் (கவிதை) | 17 |
| ஈரோடு நகரில் நாணயவியல் கண்காட்சி | 18 |
| வேளாண்மைச் செய்திகள் | 19 |
| சிறுதானியங்கள் செழித்து வளர... | 21 |
| தொழுநோயை ஒழிப்போம்! | 23 |
| வரவேற்பு (சிறுகதை) | 24 |
| நூல்நயம் | 29 |
| மாணவர் பக்கம் | 30 |
| திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தோட்டக் கலை | 32 |
| தமிழக முதல்வரின் டெல்லிப் பயணம் | 47 |



திருவள்ளுவர் ஆண்டு 2020
விபவ - பங்குனி 19
மலர் : 19 இதழ் : 19
1-4-1989

Verified

தமிழரசு




# முதல்வர் கலைஞர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் குடிகொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு, அவர் உறங்குகின்ற இடம் நோக்கித் தொழுது—

*தலையாகிய அறமேபுரி*
*சரிநீதி யுதவுவாய்*
*சமமேபொருள் ஜனநாயகம்*
*எனவேமுர சறைவாய் !*
*இலையே உண விலையே கதி*
*இலையே எனும் எளிமை*
*இனிமேலிலை எனவே முர*
*சறைவாய் முரசறைவாய் !*

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் எழுச்சிவரிகளுக்கு இயன்றவரையில் செயல்வடிவம் கொடுத்திட—

மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஒப்புதலுக்காக, 1988-89ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1989-90ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்த அவையின் முன் வைக்கிறேன்.

**2.** ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகக் குரலெழுப்பி, அதன்விளைவாக ஆட்சிப் பொறுப்பை இழந்து—ஆளுங்கட்சியாக இருப்பினும், எதிர்க்கட்சியாக இருப்பினும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற கருத்திற்கேற்ப, பணியாற்றி வரும் எங்களை, மீண்டும் அரசுப் பொறுப்பில் அமர்த்தித் தங்களுக்கு ஊழியம் புரிய உத்திரவிட்டுள்ள தமிழக மக்கள் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**3.** பல்வேறு இனம்—மொழி—கலை—கலாச்சாரம் கொண்ட இந்தியாவின் ஒற்றுமையை, மாநில சுயாட்சியோடு கூடிய முழுமையான கூட்டாட்சி முறை தான், (wholesome federalism with autonomy for the States) காப்பாற்ற முடியும் என்று இந்த அரசு நம்புகிறது. அதற்கேற்ற வகையில், அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக, இந்தியாவிலேயே முதல் முறையாக, 1969ஆம் ஆண்டு, உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி. வி. ராஜமன்னார் அவர்கள் தலைமையில், பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஏ. லட்சுமணசாமி முதலியார், உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்திரா ரெட்டி ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து —இந்தியாவிலேயே முதல் முறையாக, 1974ஆம் ஆண்டு, சட்டப் பேரவையில் மாநில சுயாட்சிக்கான தீர்மானத்தையும் இந்த அரசின் சார்பில் நிறைவேற்றி, அந்தக் கொள்கை பரவிட முன்னோடியாகத் திகழ்கிறது. மத்தியில் அதிகாரங்களைக் குவிப்பது நாட்டின் ஒற்றுமை சக்திகளைப் பலவீனப்படுத்தி, ஒருமைப்பாட்டை வீழ்த்தி விடும் என்று இந்த அரசு அஞ்சுகிறது. எனவே, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கை வெற்றி பெற, இந்த அரசு, அயராது தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கும்.

**4.** " அதேபோன்று அரசியல் சட்டத்தின் 8-ஆவது அட்டவணையில் உள்ள, தமிழ் உள்ளிட்ட பதினைந்து தேசிய மொழிகளும், இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது இவ்வரசின் நிலை. இச்சட்டத் திருத்தம் நிறைவேறும் வரை, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்பதை இவ்வரசு பல்வேறு மட்டங்களில் வலியுறுத்தும். அதே நேரத்தில், தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிராக, இந்தி மொழியைத் திணிப்பதற்காக எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் இவ்வரசு தடுத்து நிறுத்தத் தயங்காது. "

என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பதை மீண்டும் நினைவூட்டுவதோடு, இந்தி ஆதிக்க எதிர்ப்புக் காவல் அரணாக, இந்த அரசு என்றும் விளங்கும் என்பதை, உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய–மாநில நிதி உறவுகள்

5. இவ்வரசு பொறுப்பேற்று, கடந்த இரண்டு மாதங்களில், மத்திய–மாநில உறவுகளைப் பற்றியும், தமிழ்நாட்டிற்கு மத்திய அரசிடமிருந்து நியாயமாக வரவேண்டிய உதவிகளைப் பற்றியும் எடுத்துச் சொல்ல வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. பிப்ரவரித் திங்களில், புது தில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மத்திய–மாநில உறவுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளேன். அவ்வமயம் சட்டம், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மத்திய–மாநில அரசின் உறவுகள் குறித்து, ஒன்றுக்கொன்று தொடர்பான முறையில், தொகுத்து விவாதிக்க முன்வருவது அவசியமும் அவசரமானதுமாகும் என்று விளக்கியுள்ளேன். இதன்பொருட்டு, அரசியல் சட்டத்தின் 263ஆம் பிரிவின்கீழ் " அனைத்து மாநிலங்களின் குழு"வை (Inter State Council) உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்றும், அத்தகைய குழுவின் அமைப்பு, செயல்முறைகளைப்பற்றி, பிரதமர் அவர்கள் மாநில முதலமைச்சர்களுடன் வெகுவிரைவில் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளேன்.

6. 1984ஆம் ஆண்டில் எடுத்த முடிவின்படி மத்திய அரசு விதித்து, வசூலித்து, மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய சரக்கு அனுப்புவதின் மீதான வரியை (Consignment Tax) மேலும் தாமதமில்லாமல், மத்திய அரசு கொண்டுவர வேண்டுமென்று, நமது மாநிலம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களும் அந்த மாநாட்டில் கருத்துத் தெரிவித்தனர். அதன் அடிப்படையில், விரைவில் இதற்கான சட்டம், நாடாளு' மன்றத்தில் கொண்டுவரப்படும் என்று நம்புகிறோம்.

7. ஒன்பதாவது நிதிக்குழுவினர் பிப்ரவரித் திங்களில், சென்னைக்கு வருகை தந்தபோது, அவர்கள் முன் நமது அரசு விரிவான அறிக்கை ஒன்றை வைத்தது.




குறிப்பாக தமிழ்நாட்டின் தனிப் பிரச்சினைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளோம். 1989-90ஆம் ஆண்டின் ஒன்பதாவது நிதிக் குழுவின் அறிக்கை, நமக்கு மனநிறைவை அளிப்பதாக இல்லை என்று சுட்டிக்காட்டி, நிதிக்குழு 1990-95ஆம் ஆண்டுகளுக்குத் தர இருக்கும் இறுதி அறிக்கை, நம்முடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவு செய்ய வேண்டுமென்று சான்றுகள் பலவற்றை எடுத்துரைத்துக் கேட்டுள்ளோம்.

8. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடுகள் குறைந்து கொண்டே வருகின்றன என்பது பற்றி ஆளுநர் உரையில் கவலை தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக பிப்ரவரியில் நான் தில்லி சென்றபோது, பிரதமரிடம் விரிவான அறிக்கை ஒன்றைக் கொடுத்துள்ளேன். அதில், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் மூன்றாவது பிரிவு, காவிரி கழிமுகப் பகுதியை நவீனமயமாக்கும் திட்டம், கடலூரிலிருந்து கன்னியாகுமரி வரையிலான சாலையை மேம்படுத்துதல், சென்னை மாநகரின் விரைவுப் போக்குவரத்துத் திட்டம் என்பது போன்ற முக்கியமான திட்டங்களுக்கு அனுமதி அளித்து, அப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளேன். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைத் தொகையும் (Royalty) இலாபத்தில் பங்கும் (Profit Sharing) விரைவில் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்ற நியாயத்தை எடுத்துரைத்திருக்கிறோம்.

9. அண்மையில் கொண்டு வரப்பட்ட இரயில்வே வரவு–செலவுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் நடைபெறும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் மிகவும் குறைவாக உள்ளது வருந்தத் தக்கதாகும். கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதைப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்றும், சென்னைப் பெருநகர் விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை முனைப்பாக நிறைவேற்ற வேண்டுமென்றும், நான் இரண்டாவது முறையாக தில்லி சென்றபோது வற்புறுத்தியுள்ளேன்.

நிதி நிலைமை

10. ஆளுநரின் பேருரையில், நமது அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறையின் பிடியிலிருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 1988-89ஆம் ஆண்டுத் திருத்த மதிப்பீட்டைத் தொடர்ந்து ஆராயும்போது, முழு விவரங்களையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இடர்ப்பாட்டுக்குரிய இக்கட்டான நிதி நிலைமையில்தான், இந்த வரவு-செலவுத் திட்டத்தை நான் உங்கள் முன்னர் எடுத்து வைக்கின்றேன். இன்றைய நிதி நிலைமை இன்னும் பல மாதங்கள் கழிந்த பின்னர்தான் ஓரளவு சீரடையக் கூடும்.

11. இந்த நிலையில், இந்த அரசு பொறுப்பேற்று இரண்டு திங்கள்களே ஆன காரணத்தால், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை முன் வைத்து விட்டு, நிதி நிலை சீர்ப்பட்ட பிறகு, சில திங்களுக்குப் பிறகு முழுமையான வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைக்கலாமா என்று ஆராய்ந்தோம். அதனால், வளர்ச்சித் திட்டங்களின் வேகம் குறைவதோடு, நிச்சயமற்ற நிலைமை உருவாகலாம் என்ற காரணத்தால், அவ்வாறு செய்யாமல், மிகக் குறுகிய காலமாக இருந்த போதிலும், இந்த ஆண்டிற்குரிய முழுமையான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

12. கடந்த கூட்டத் தொடரில், மதுவிலக்குத் தொடர்பான சட்டத்திலும், விதிகளிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100 கோடி வருவாய் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழி காணப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்ட இடர்ப்பாடுகள் இம்மாற்றங்களினால் ஓரளவுக்குக் குறையும்.

நிறைவேற்றப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள்

13. நமது அரசு பதவியேற்று இரண்டு திங்கள் கூட முழுவதுமாக இன்னும் முடியவில்லை என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கறிவர். இச் சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடர், நமது அரசு பொறுப்பேற்ற இரு வார காலத்தில் தொடங்கியது. அவ்வமையம் ஆளுநர் பேருரையில், நமது அரசின் கொள்கைகளும், முன்னுரிமைகளும் கூறப்பட்டன. ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு திங்களே ஆகியுள்ள இக் குறுகிய கால அளவிலேயே தேர்தல் வாக்குறுதிகள் சிலவற்றை நிறைவேற்றியுள்ளோம். குறிப்பாக, சட்டமன்ற மேலவை அமைக்கத் தீர்மானம் நிறைவேறியது—மாநகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது — ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் பதவிக் காலத்தை, ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பது— ஊராட்சி ஒன்றியங்களுக்கு, பறிக்கப்பட்ட அதிகாரங்களை வழங்குவது—மகளிருக்கு 30 சதவீதம் அரசுப் பணிகளிலே ஒதுக்கீடு செய்வது— அரசுப் பணிகளில் சேருவோருக்கு வயது வரம்பு 30ஆக

உயர்த்துதல் — விவசாயிகள் மின்வாரியத்திற்கு 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் செலுத்தப்பட வேண்டிய • நிலுவைத் தொகையைத் தாமதமாகக் கட்டியதற்கு விதிக்கப்பட்ட அபராத வட்டி (belated payment surcharge) அறவே ரத்து செய்யப்படுதல் ஆகியவை அடங்கும்.

விவசாயிகள் நிவாரணம்.

**14.** நடப்பாண்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்க்காவிடினும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்து, பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. எனவே, மாநிலத்தின் பல பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு மிகக் கடுமையாக நிலவுகிறது. விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளின் கடன் பளு குறைக்கப்பட வேண்டும் என்ற முறையிட்டை இந்த அரசு மிகப் பரிவோடு பரிசீலித்தது. சிறு விவசாயிகளின் மீதுள்ள அந்தப் பாதிப்புப் பளுவைக் குறைக்க, அரசு ஒரு சில முடிவுகளை எடுத்துள்ளது.

(அ) ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன்களின் தவணைத் தவறிய கடன் தொகைகள் அனைத்தும், அறவே ரத்து செய்யப்படும்.

(ஆ) குறுகிய, மத்தியக் காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும், அறவே தள்ளுபடி செய்யப்படும்.

(இ) நீண்ட காலக் கடன்கள்மீது ஒத்தி வைக்கப்பட்டுள்ள வட்டியும், அறவே தள்ளுபடி செய்யப்படும்.

**15.** கடந்த கால அரசு, இதுபோன்ற தள்ளுபடிச் சலுகைகளை விவசாயிகளுக்கு அளித்தது. அதன்படி விவசாயிகள் கட்ட வேண்டிய நிலுவைகளை, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசே கட்டுவதாக உறுதி அளித்திருந்தது. ஆனால், கடந்த கால அரசு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்ட வேண்டிய ஈட்டுத் தொகை இன்னும் 67 கோடி ரூபாய் பாக்கியிருக்கின்றது.



கூட்டுறவுச் சங்கங்கள் நொடித்துப் போகாமல் இருக்கும் பொருட்டு, அந்தப் பாக்கித் தொகையைக் கட்ட வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பும், இந்த அரசின் தலையில் விழுந்து விட்டது. அந்த பாக்கித் தொகை ரூபாய் 67 கோடியும், இப்போது விவசாயிகளுக்கு அளிக்கும் சலுகைகளின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய 39 கோடி ரூபாயும் சேர்ந்து, மொத்தமாக ரூபாய் 106 கோடியை நிதிநிலை நெருக்கடியான இந்த நேரத்தில் நாம் ஏற்க முன் வந்துள்ளோம். இப்போது அறிவிக்கப்படும் சலுகைகளால் 9·36 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.

வறட்சி நிவாரணப் பணிகள்

**16.** குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கும்பொருட்டு அரசு ஆரம்ப நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக 5,000 ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட, ரூபாய் 12.5 கோடி செலவிட அரசு முன் வந்துள்ளது. இந் நிலை குறித்தும் மற்றும் வறட்சி நிலவரம் குறித்தும் விரைவில் நடைபெறவிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் விவாதித்து, விரிவான அளவில், உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவிருக்கின்றது. வறட்சித் துயர் துடைப்புப் பணிகளுக்கென, முதற்கட்டமாகவும், உடனடியாகவும், ரூபாய் 25 கோடி வழங்குமாறு மத்திய அரசையும் கேட்டுள்ளோம்.

உணவு நிலைமை

**17.** 1987–88ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி, 58இலட்சம் டன்னாக இருந்ததற்கு மாறாக 1988-89ஆம் ஆண்டில், 57 இலட்சம் டன் அளவுக்குத்தான் அமையக் கூடுமெனக் கருதுகிறோம். இவ்வாறு உற்பத்தி நிலையில் தேக்கம் காணப்பட்டாலும், பொது விநியோக முறையில் போதிய உணவுப்பொருள்கள், மக்களுக்குத் தடையின்றிக் கிடைப்பதற்கும், அதிக விலையின்றிக் கிடைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுப்போம் என உறுதியளிக்கிறேன். நடப்பாண்டில் அரிசிக் கொள்முதல் திட்ட இலக்கான 7 இலட்சம் டன் அளவை அடைவோம். பன்முறை நாம் முறையிட்ட பின்னரும், 1988 நவம்பரிலிருந்து 1989 ஜனவரி வரைப்பட்ட கால அளவுக்கு, மத்தியத் தொகுப்பிலிருந்து திங்கள் ஒன்றுக்கு ஒதுக்கி வந்த 80,000 டன் அரிசி அளவை, பிப்ரவரியிலிருந்து 40,000 டன் அளவுக்குக் குறைத்திருப்பது, பெரிதும் வருந்தத் தக்கதாகும். இந்த ஒதுக்கீட்டளவில் வெட்டு விழுந்ததோடு மாத்திரமின்றி, அரிசி விலையை, கிலோ கிராமுக்கு ரூ. 2.79 என்பதிலிருந்து ரூ. 3.25 ஆக மத்திய அரசு திடீரென உயர்த்திவிட்டது. இந்த விலை உயர்வை நமது அரசு நடைமுறைப்படுத்தவில்லை. ஏற்கெனவே உணவுக்காக உதவித் தொகை (food subsidy) ரூபாய் 113 கோடி இழப்பை ஏற்றுக் கொண்டுள்ள இந்த அரசு, இப்போது இந்த விலை உயர்வினால், மேலும் ஆண்டு ஒன்றுக்கு 23 கோடி ரூபாய் இழப்புச் சுமையைத் தாங்க வேண்டியுள்ளது.


நிர்வாகச் சீர்திருத்தம்

**18.** நிர்வாகச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து மும்முரமாக நிறைவேற்ற சில முக்கியமான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

முதற்கண், உள்ளாட்சி மன்றங்களுக்குக் கணிசமான அளவுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்துள்ளோம்.

இரண்டாவதாக, சமயச் சான்றோருடன் நடத்திய கலந்துரையாடலின் அடிப்படையில், கோவில் நிர்வாகம் பற்றி விரிவாக ஆய்வு செய்யக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கோயில் நிர்வாகத்தில் முறைகேடுகள் நிகழாமல், நிலையான சீர்திருத்தங்கள் கொண்டுவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவதாக, கிராம நிர்வாகம் திறம்பட நடைபெறுவதற்கு வழிவகை கண்டறிய, குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகள் அவரவர் கிராமத்திலேயே வாழ்பவர்களாக இருக்க வேண்டும்;




அவ்வாறு இருந்தால்தான், கிராம மக்களுக்கு வசதிக் குறைவு எதுவும் ஏற்படாது; மேலும் கிராமக் கணக்குகள் சரிவரப் பராமரிக்கப்படும் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. இது குறித்தும் அந்தக் குழு ஆய்வு நடத்தி அரசுக்கு அறிக்கை தரும்.

நான்காவதாக, மேலிருந்து கீழே வரை நிர்வாகம் செம்மைப்படுத்தப்படும். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல், வட்டாட்சியர் அலுவலகம் வரை நவீனப்படுத்தப்படும். பொது மக்களின் மனுக்கள் விரைவில் பைசல் செய்யப்படும். அரசு, மக்களுக்கு அறிவித்த சலுகைகள் மக்களுக்கு எளிதாக விரைவில் கிடைத்திட வழி வகை செய்யப்படும். இதன் பொருட்டு அரசு அறிவித்துள்ள திட்டப் பணிகளின் பயனை மக்கள் அடைய அவர்கள் என்ன செய்ய வேண்டும், அதிகாரிகள் என்ன செய்ய வேண்டும், எந்த கால அளவுக்குள் செய்ய வேண்டும் என்பதை அறிவிப்புப் பலகைகள் வாயிலாகவும், மக்களுடன் தொடர்பு கொள்ளும் கூட்டங்களிலும், அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் மூலமும் தெரிவிக்க உள்ளோம். இது திட்டப் பணிகளின் பயன்களைத் தகுதியுள்ளோர் பெறவும், ஒருசிலர் தகாத முறையில் பெறுவதைத் தடுக்கவும் அனைவரும் அறியத்தக்க வகையில் அமையும்.

நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரித்தல்

**19.** கடந்த கால அரசில், நிர்வாக வசதிக்காகப் பல மாவட்டங்கள் இரண்டாகவும், மூன்றாகவும் பிரிக்கப் பட்டுத் தனித் தனியே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களும், மாவட்டக் காவல் துறை அலுவலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த மாவட்டங்களுக்கு தலைவர்கள் பெயரும் சூட்டப்பட்டுள்ளன. இது ஒரு பாராட்டத்தக்க முயற்சி எனினும், செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த மாவட்ட மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சூட்டப்படவில்லை. அதற்கு மாறாக, மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திண்டுக்கல்லை தலைநகரமாகக் கொண்ட பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது அதிலே ஒரு மாற்றம் செய்து, இப்போதைய செங்கல்பட்டு மாவட்டத்திற்கு ''செங்கை-அண்ணா மாவட்டம்'' என்றும், திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டத்தின் பெயரை மாற்றி ''திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம்'' என்றும் பெயர் சூட்டப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**20.** மற்ற மாவட்டங்களையும், நிர்வாக வசதிக்காகப் பிரிப்பதும், அதற்கான பெயர்களைச் சூட்டுவதும், விரைவில் ஆராயப்பட்டு அறிவிக்கப்படும்.

அரசு அலுவலர் - ஆசிரியர் நலன்

**21.** மத்திய-மாநில அரசு அலுவலர்களின் ஊதிய விகிதம் சமநிலையாக இருக்க வேண்டுமென்பதைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட இவ்வரசு, இதற்கென குடியரசுத் தலைவர் ஆட்சியில் நியமிக்கப் பட்ட ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையை, ஏப்ரல் மாத இறுதிக்குள் தாமதமின்றிப் பெற்று, அதனை ஆராய்ந்து, மே மாத இறுதிக்குள், அரசு அலுவலர், ஆசிரியர் கோரிக்கை நிறைவேறும் வகையில் முடிவு அறிவிக்கப்படும். இந்த முடிவு 1—6—1988 முதல், முன் தேதியிட்டு நடை முறைப்படுத்தப்படும்.

1989-90 ஆம் ஆண்டுக்குரிய திட்ட ஒதுக்கீடு

**22.** 1989–90ஆம் ஆண்டு, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும். வரும் ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீட்டைக் குறிப்பிடுவதற்கு முன்பாக, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், முதல் நான்காண்டுகளின் திட்டச் செலவு பற்றி சுருக்கமாகக் கூறிட விரும்புகிறேன். இம் மாநிலத்தின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 5,750 கோடி என முதலில் வரையறை செய்யப்பட்டுள்ளது. 1985-86-ல் ரூ. 1,012 கோடியும், 1986–87இல் ரூ. 1,203 கோடியும், 1987–88-ல் ரூ. —1,337 கோடியும் செலவாயிற்று. இவையனைத்தையும் சேர்த்துத் திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளின் மொத்தச் செலவு ரூ. 3,552 கோடியாகும்.

**23.** திட்டப் பணிகளை வகுத்த நிலையில் (1988–89) நடப்பாண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு அமைந்த நிதியாதாரம் சுமார் ரூ. 1,302 கோடி தான் என்பது தெளிவாக இருந்த போதிலும், ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ. 1,457 கோடி என அறிவிக்கப் பட்டது. பற்றாக்குறையாகவுள்ள தொகை ரூ. 155 கோடியாகும். கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதன் மூலமாக சுமார் ரூ. 50 கோடிக்கு இப்பற்றாக் குறையை ஈடு செய்ய, அப்போதிருந்த அரசு ஒப்புக் கொண்டிருந்தது. ஆயினும், அந்த வகையில் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. 1988–89ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் முதற்கண் சேர்க்கப்பட்டிருந்த, ஏறத்தாழ 409 திட்டப் பணிகளைக் கைவிட்டும் கூட, வருவாய் குறைந்ததோடு, செலவும் மிகுதிப்பட்டு, இறுதியில், நடப்பாண்டில் திட்டப் பணிகளுக்கென அமைந்த நிதியாதாரங்கள் பெரிதும் குறைந்தன. எனவே, 1988–89ஆம் ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீட்டை, ரூ. 1,202 கோடியாகத் திருத்தியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது, 1986–87-ல் திட்டப் பணிகளுக்குச் செலவிட்ட ரூ. 1,203 கோடி தொகை அளவே ஆகும். மேலும், 1987–88-ல் வரையறுக்கப் பட்ட 1,250 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டைவிடக் குறைவாகும். திட்டத்தில் ஏற்பட்ட இந்தச் சரிவு நமக்கு மிகவும் கவலை தருவதாயிற்று.

**24.** 1989–90 ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீடு பற்றி, மத்திய திட்டக் குழுவுடன், அண்மையில் விவாதித்து, வரும் ஆண்டில், ரூ. 1,360 கோடிக்குத் திட்ட ஒப்புதல் பெற்றுள்ளோம். நிதி நெருக்கடி இருந்த போதிலும், கடந்த ஆண்டை விட, 1989–90-ல் திட்ட ஒதுக்கீட்டை 13 சதவீதம் பெருக்கியுள்ளோம். எனவே, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்ட 5,750 கோடி ரூபாய் என்பதற்கு மாறாகத் திட்டச் செலவு, ரூ. 6,114 கோடியாக அமையுமென எதிர்பார்க்கலாம். எனினும் இந்த ஐந்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள பண மதிப்பைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால், தமிழ்நாட்டின ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்ட அளவுக்கு சுமார் 20 சதவிகிதம் குறைவாகவே நிறைவேற்றப்படும் நிலைமையில் உள்ளது.

வேளாண்மை

**25.** நம்முடைய மக்களில் நூற்றுக்கு எழுபது பேர் வேளாண்மையையே நம்பி வாழ்கின்றனர். வேளாண்மை விரிவாக்கப் பணிகளுக்காக ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் வேளாண்மைப் பணிகள் மாநிலம் முழுவதும் பெருகுவதோடு, வேளாண்மை உற்பத்தியும், ஆதாயமும் மேலும் உயர்வதற்கு உதவும். பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகள், களைக்கொல்லிகள் போன்றவற்றை வழங்குவதுடன், வேளாண்மைக்குரிய நவீன தொழில்நுட்ப உத்திகளும்

அறிமுகப்படுத்தப்படும். தொடக்க நிலையில், சிறிய பகுதிகளுக்கானத் திட்டங்கள் வகுக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களும், பிற நிறுவனங்களும், இப் பணியில் ஈடுபடுத்தப்படும. வேளாண்மைப் பணிகளில் அதிக அளவில் ஈடுபட்டிருக்கிற மகளிர் நிலை உயரவும், முதன்மை அளிக்கப்படும். பயிற்சி — நேர்காணல் திட்டத்தின்கீழ்த் தற்போதுள்ள பணியாளர்களைத் திரட்டி, விரிவாக்கப் பணிகளை அடுத்த ஆண்டு மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படும். விதைப்பெருக்கம், அவசர காலத்தின் தேவையை நிறைவு செய்ய, விதைகளை இருப்பில் வைத்திருத்தல் ஆகியவை, போதுமான அளவிற்கு நிறைவு செய்யப் படும்.


26. போதுமான கடனுதவியுடன் தீவிர அரிசி உற்பத்திக்கான சிறப்புத் திட்டங்கள் வரும் ஆண்டில் செங்கை —அண்ணா, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, நெல்லை கட்டபொம்மன் ஆகிய எட்டு மாவட்டங்களில் தொடரப்படும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் துறையும் முதன்மை பெறும் துறையாகும். 1989-90-ல், 18 இலட்சம் டன் உற்பத்தி செய்ய இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. வேளாண்மைக் கல்விக்கு நாம் தனி முதன்மை அளித்திருக்கிறோம். தற்போது, மாநிலத்தில் மூன்று வேளாண்மைக் கல்லூரிகள் உள்ளன. நான்காவதாக, வரும் ஆண்டில், திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க முடிவு செய்திருக்கிறோம் என்பதை, அவை உறுப்பினர்களுக்கு உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


### வன வள மேம்பாடு

27. சுவீடன் நாட்டிலிருந்து நிதி உதவி பெறும் சமூக நல வன வளர்ப்புத் திட்டம், இத்துறையில் இடம் பெறும் பெரும் திட்டமாகும். இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி சரியாகச் செயல்படவில்லை. அதனைச் செம்மைப்படுத்தி, ரூ. 85.40 கோடி செலவில், இரண்டாம் கட்டப் பணியைச் செயற் படுத்த அரசு முன்வந்துள்ளது. மேலும், நீலகிரி, பழனி மலைப் பகுதிகளில், கடந்த சில ஆண்டுகளாக, பெருமளவுக்கு வன வளம் அழிவுக்குள்ளாகி, நிலச் சரிவும் ஏற்பட்டுள்ளது. இதனால், மழையளவும் பாதிக்கப்பட்டுள்ளது. இது வருந்தத்தக்க ஒன்றாகும். இதனைச் சீர்செய்து, வன வளத்தை அப்பகுதிகளில் பெருக்கிட, மாநில அரசு ஒரு திட்டம் வகுத்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. விரைவில் அதற்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

### கால்நடை வளர்ப்பு

28. வரும் ஆண்டில், ரூ. 13.73 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆடுகள் வளர்ப்புப் பெரும் திட்டம் ஒன்று புதிதாகத் தொடங்கப்படும். செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும், நமது நாட்டு ஆடுகள், 15 கிலோ முதல் 20 கிலோ வரை எடை கொண்டதாயிருக்கின்றன. இந்த எடையை 40 கிலோவாக உயர்த்த வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இதனால், ஆடு வளர்ப்போருக்கு நல்ல வருமானம் கிட்டும். கால்நடைகளின் தீவன மேம்பாட்டிற்கு முதன்மையளித்து, ஒருங்கிணைந்த புதிய மேம்பாட்டுத்






திட்டம் ஒன்று, ரூபாய் 4 கோடி செலவில், புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

### மீனளம்

29. இம் மாநிலத்தில், மீனள வளர்ச்சித் திட்டங்கள் மூலம், மீன் உற்பத்தியையும், மீன் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதில், குறிப்பாக, உவர் நீரில் அதிகப் பரப்பளவில் இறால் வளர்ப்பை மேம்படுத்தவும், மீனவர் சமுதாயத்தின் சமூக — பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும் அதிக கவனம் செலுத்தி வரப்படுகின்றது. தற்போதைய மீன் குஞ்சு உற்பத்தி அளவான 60 மில்லியனை, 100 மில்லியனாக உயர்த்துவதற்கு, இரண்டு பெரிய மீன் குஞ்சுப் பண்ணைகள், பவானிசாகரிலும், மணிமுத்தாறிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இறால் வளர்ப்பை மேம்படுத்துவதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும்பொருட்டு, சுமார் 37,000 ஏக்கர் உவர் நீர் நிலைப் பகுதி பயன்படுத்திக் கொள்ளப்படும். வரும் ஆண்டில் அத்தகைய பகுதி களில், 2,500 ஏக்கரில் இறால் வளர்ப்புப் பணி மேற் கொள்ளப்படும்.

### பட்டுப் புழு வளர்ப்பு

30. உலக வங்கியின் உதவியுடன் பட்டுப் புழு வளர்ப்புத் துறையில் ரூ. 41.77 கோடி மதிப்பீட்டில் விரிவானதொரு திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப் படவுள்ளது. வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி போன்ற நிறுவனங்கள், இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்யும். இத்திட்டக் காலத்தின் இறுதியில், கூடுதலாக 30,000 ஏக்கர் பரப்பில் முசுக்கொட்டைச் செடி வளர்க்கப்படும் என்பதோடு, கிராமப் பகுதிகளில், ஆடவரும், மகளிருமாக இத்திட்டத்தினால் ஒரு இலட்சம் பேர் வேலை வாய்ப்பைப் பெறுவர்.

### பாசனம்

31. ரூபாய் 70 கோடி செலவில் தொடங்கப்பட்ட பெரியார் — வைகைத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணி, வரும் ஆண்டில் முடிக்கப்படும். இதனால், கூடுதலாகச் சுமார் 18,500 ஏக்கர், பாசனப் பயன் பெறும்.


32. 1989-90ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில், ரூ. 10.87 கோடி செலவில், பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டமும், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில், ரூ. 10.12 கோடி செலவில், நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டமும் துவங்கப்படும். 1975ஆம் ஆண்டில் செயலாக்க உத்தேசித்த, பச்சையாறு பாசனத் திட்டம், சுற்றுச் சூழல் குறித்த அனுமதி கிடைக்காததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வனுமதியினைப் பெற்றுத் திட்டத்தை விரைவில் துவங்குவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தினால், புதிதாக 1.75 இலட்சம் ஏக்கர் கொண்ட புதிய ஆயக்கட்டு உருவாக்கப்பட்டு உள்ளது. மேற்கூறிய புதிய ஆயக்கட்டுப் பகுதியும், ஏற்கெனவே உள்ள ஆயக்கட்டுப் பகுதியும் பயனடையும் வகையில், பாசன வசதிகள் முறைப்படுத்தப்படும்.

33. மதுரை மாநகரில் தண்ணீர்த் தட்டுப்பாடு உடனடி யாகத் தீர்க்கப்படவேண்டும். இம்மாநகரத்திற்கு 2.40 டி.எம்.சி. அளவிற்குக் குடிதண்ணீர் வசதியைப்

பெருக்கும் வகையில், கல்லாறு மற்றும் அச்சன்கோயிலாறு ஆகியவற்றின் நதி நீரைப் பெறுவதற்குக் கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். வைகை அணைத் திட்டத்தில் இணையாத, பல சிறிய ஆறுகளின் நீரைத் திரட்டித் தேக்குவதே அழகரணைத் திட்டம். இதன் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

34. பாசனத்திற்கு ஏரிகள் முக்கிய ஆதாரமாக இருந்தாலும், போதுமான கவனம் செலுத்தப்படாமலிருந்தன. ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் உதவியுடன், செங்கை-அண்ணா, வட ஆற்காடு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், காமராஜர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 206 ஏரிகளை நவீனப்படுத்தும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இதனால் 71,000 ஏக்கர் வேளாண்மை நிலம் பயனடையும். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணியை ரூ. 53.12 கோடி செலவில், மேற்கண்ட ஏழு மாவட்டங்களிலும், மற்றும் வரும் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல்-காயிதே மில்லத், நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 230 ஏரிகள், ஐந்தாண்டுக் கால அளவில், நவீனப்படுத்தப்படும். இத்திட்டத்தினால், 60,300 ஏக்கர் வேளாண்மை நிலங்கள் பயனடையும்.

35. தமிழ்நாட்டில், பயிர் செய்யப்படும் சுமார் 60 சதவீத நிலங்கள், பாசனம் பெறாமல் இருக்கின்றன. வறண்ட பகுதிகளில், ஈரப் பாதுகாப்பிற்கும், ஏற்கெனவே பாசனம் பெறுகின்ற பகுதிகளில், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும், முதன்மை அளிப்பது அவசியமாகும். இதை முன்னிட்டு, வரும் ஆண்டில், சிதம்பரனார் மற்றும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில், 49,400 ஏக்கர் பரப்பில், புன்செய் நிலங்களுக்கான நீரைச் சேமித்து உற்பத்தித் திறனைப் பெருக்கும் ஒரு திட்டத்தை மேற்கொள்வோம். உலக வங்கி நிதி உதவி பெற்று,




சாத்தனூர், தாமிரபரணி, கோதையாறு ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும், தேசிய நீர்க் கட்டுப்பாடுத் திட்டம் (National Water Management Project) வரும் ஆண்டில் கம்பம் பள்ளத்தாக்கிற்கும் நீட்டிக்கப்படும். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வகை செய்ய, மேலும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. முதற்கண், பாலாறு, அமராவதி, நொய்யல், வெள்ளாறு வடிநிலப் பகுதிகளில் உள்ள ஏறத்தாழ 49,400 ஏக்கர் பரப்பு இதில் அடங்கும்.

36. மாநிலத்தில், ஆற்றுப் பாசனத்தில் பெரும் பகுதி பாசன வசதி பெறுவது, காவிரி வடிநிலப் பகுதி தான். கர்நாடக மாநிலத்திலிருந்து மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குப் போதுமான நீர் பெறுவதில் ஆண்டுக்காண்டு நமக்கு ஏற்பட்டு வரும் இடர்ப்பாடுகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கறிவர். காவிரி நீர்ச் சிக்கல் குறித்து கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உடன்பாட்டிற்கு வர மீண்டும் ஒருமுறை முயல்வது இந்த அரசின் கருத்தாகும். இந்த நம்பிக்கை வீண்போகுமேயானால், இப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென மத்திய அரசை வற்புறுத்துவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவிரி வடிநிலப் பகுதிப் பாசனத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக, ரூபாய் 78.80 கோடி செலவில் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய நீர்ப்பாசன அமைச்சரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளேன்.

37. இஃதன்னியில், வருங்காலத்தில், தமிழகம் முழுவதும் பாசன வளத்தை மேம்படுத்த, ஒருங்கிணைந்த அணுகு முறையைக் கையாளுவது மிக அவசியம். தற்போதுள்ள பாசன ஆதாரங்களைப் பேணுவதில், போதிய கவனத்தைச் செலுத்த வேண்டும். பழைய ஆற்றுப் பாசன அமைப்புகளையும், ஏரிப் பாசன அமைப்புகளையும் நவீனப்படுத்த வேண்டும். ஆறுகள், ஏரிகள், நிலத்தடி நீர் போன்ற பல்வேறு பாசன ஆதாரங்களை, ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்த வேண்டும். ஒவ்வோர் ஆற்று வடிநிலப் பகுதியிலும் நிலவுகின்ற சூழ்நிலையைப் பொறுத்து, இப் பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இவ்வகை அணுகுமுறைக்குப் பல்வேறு துறைகளில் வல்லமை பெற்ற பொறியாளர்கள், மற்றும் வல்லுநர்கள் கொண்ட "பாசன மேம்பாட்டு நிலைக் குழு" ஒன்று தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு அமைக்கப்படும்.

மின்சக்தி

38. 1988–89ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு குறைக்கப்பட்டதால், மின்சாரத் துறைக்கான ஒதுக்கீட்டை ரூ. 500 கோடியிலிருந்து ரூ. 350 கோடியாக குறைக்க வேண்டியதாயிற்று. இதனை 1989–90-ல் திட்ட ஒதுக்கீட்டின் மூலமாக ரூ. 385 கோடியும், மின்சக்தி நிதி உதவி நிறுவனத்திலிருந்து எதிர்பார்க்கும் ரூ. 75 கோடியும் சேர்த்து, ரூ. 460 கோடியாக உயர்த்த முனைவோம்.

39. மேட்டூர் அனல் மின் நிலையத்தின் 3ஆம் பிரிவு வரும் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுக் கூடுதலாக 210 மெகாவாட் மின் சக்தி அளிக்கும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு முன்னுரிமை அளிப்பதால் 1991-ல், கூடுதலாக 420 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும். நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக இடர்ப்பாடுகள் இருப்பதால், 2,050 மெகாவாட் கிடைக்கக் கூடிய, நீண்டகாலத் திட்டமான வட சென்னை அனல் மின் நிலையப் பணி தாமதமடைந்துள்ளது. இந்த இடர்ப்பாடுகளை நீக்கித் திட்டப் பணியை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். மின் சக்தியை அனுப்புவதற்கும், விநியோகிப்பதற்கும் மின் துறைக்கான ஒதுக்கீட்டில் ரூ. 110 கோடி அளவில் கணிசமான தொகை அடங்கும். இதனால், உத்திரவாதமான முறையில் மின் சக்தி அளிக்கவும், 40,000 பம்பு செட்டுகளுக்கும், 40,000 குடிசைகளுக்கும் வரும் ஆண்டில் புதிதாக மின் இணைப்பு கொடுக்கவும் முடியும்.

40. கூடங்குளத்தில் ஏறக்குறைய ரூ. 4,000 கோடி மூலதனத்துடன், அணு மின் நிலையம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தமிழ்நாட்டில் மத்திய அரசுத் துறையில் பெரியதொரு புதியத் திட்டமாகும். இத் திட்டம் குறித்து, மீனவர்கள் சார்பிலும், பேச்சிப்பாறை பாசனத்தை உபயோகிக்கும் விவசாயிகள் சார்பிலும், பொதுவாக அணுமின் உற்பத்தியால் ஏற்படக் கூடிய பாதகங்கள் பற்றியும், கவலைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினைகளை ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலித்து, மீனவர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் எவ்விதமான பாதகமும் ஏற்படாத வகையிலும், முழுமையான பாதுகாப்பு உத்திரவாதத்துடனும் நிறைவேற்ற—அதற்கான பரிந்துரைகளை அளிக்க—நிபுணர் குழு அமைக்க, மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

தொழில்

41. மாநிலத்தில், பெரிய, நடுத்தர, மற்றும் சிறு தொழில்களை வளம் பெறச் செய்வது நம்முடைய அரசின் முக்கிய குறிக்கோளாக இருக்கும். இது குறித்து அண்மையில் நான், தமிழ்நாட்டின் தொழிலதி

பர்களின் கூட்டத்தைக் கூட்டி விரிவாக விவாதித்தேன். தொழில்களுக்கு அளிக்கப்படும், பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து வழங்குவதுடன், தொழில் வளர்ச்சியுற, மாநில அரசு, அக்கறையும் ஆர்வமும் காட்டுமெனத் தொழிலதிபர்களிடத்தில் நான் உறுதி அளித்துள்ளேன். தொழில்களைத் தொடங்க, மாநில அளவில் இசைவளிப்பதிலும், மத்திய அரசிடமிருந்து புதிய தொழிலுக்கான உரிமங்கள் பெறுவதிலும், தாமதம் ஏற்படாமல் விரைவான நடவடிக்கையை மேற் கொள்வோம்.

42. இரசாயன மற்றும் இயற்கை எரிவாயு அடிப்படையிலான தொழில்களில், புதிய பெரும் திட்டங்கள், விரைவில் உருவாவதற்கு, நல்ல வாய்ப்புகள் உள்ளன. மணலியில் ரூ. 840 கோடி மதிப்பீட்டுச் செலவில் அமைக்கப்படும் "பென்சீன்" மூலப் பொருள் கொண்ட பல இரசாயனப் பொருட்களை உருவாக்கும் தொழிற்சாலைக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. இது, இதனைச் சார்ந்த தொழில்கள் பலவற்றிற்கு அடிப்படையாக அமையும். தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தில், 94 கோடி ரூபாய் மதிப்பீட்டு முதலீட்டில், பெட்ரோலியம் கச்சா எண்ணெய் வடிசாலை அமைப்பது, அப் பகுதியைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். காவிரி கழிமுகப் பகுதியில் கிடைக்கப் பெறும் இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு, மின் உற்பத்தியைப் பெருக்கவும், தொழில் வளர்ச்சிப் பிரிவுகள் பலவற்றை அமைக்கவும் பல வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகளை, இந்த அரசு பரிசீலித்துப் பயன்படுத்திக் கொள்ளும்.

43. நன்முறையில் நிர்வாகம் அமையப் பெறாததால், தமிழ்நாடு கனிம நிறுவனம் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு உள்ளாயிற்று. இந்த முக்கியமான பொதுத் துறை நிறுவனத்தை நாம் சரி செய்து, அதனைக் கொண்டு சிவகங்கை கிராபைட் திட்டத்தைச் செயல் படுத்துவோம்.

44. புதிதாக ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைகள், இராணிப்பேட்டை, ஒசூர் போன்ற பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பெறும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) புதிய மூன்று வளர்ச்சி மையங்கள் குறித்த பணியை, 1989–90ஆம் ஆண்டில் தொடங்கும். ஒவ்வொரு வளர்ச்சி மையத்திற்கும் உரிய முதலீடு, 30 கோடி ரூபாயாகும்.

45. சிறு தொழில் துறையில், தமிழ்நாட்டில், மருந்துகள், மருந்துப் பொருட்கள், மருத்துவ மின்னணுவியல் கருவிகள், உடைகள், உணவுப் பொருட்களை செய்முறைப்படுத்துதல், மோட்டார் துணைப் பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில், ஜப்பான் நாட்டு உதவியுடன், உயர் தொழில் நுட்பம் வாய்ந்த தொழில்களைத் தொடங்குவதற்குரிய பெரும் திட்டத்தைச் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) மேற்கொள்ளும். சிறுதொழில் துறையில் தமிழ்நாடு சிறந்த முன்னேற்றத்தை எய்தியுள்ள போதிலும், நமது மாநிலத்தில், நூற்றுக்கணக்கான சிறுதொழில் பிரிவுகள், தொடர்ந்து நிதி மற்றும் தொழில் நுட்பப் பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நலிந்த பிரிவுகளின் பிரச்சினைகளை, எல்லாக் கோணத்திலும் ஆராய்ந்து, இவற்றைப் புதுப்பித்து, மீண்டும் நன்னிலைக்குக் கொண்டு வர, சிறு தொழில் சீரமைப்புக்கு ஏதுவான நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படும்.


46. நிதி நிலை காரணமாகவோ, அல்லது வேறு இடர்ப்பாடுகளின் காரணமாகவோ, தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள 17 நூற்பாலைகளிலும் மற்றும் 4 பொறியியல் நிறுவனங்களிலும் பணியாற்றிய 12,000 தொழிலாளர்களுக்குத் தலா ரூபாய் 250 வீதம் தொழிலாளர் நல நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள ஆலைகளுள் இதுவரை, மூன்று ஆலைகள் மறுபடியும் திறந்து இயங்க ஏற்பாடுகள் செய்து விட்டோம். மற்ற ஆலைகளைத் திறப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### கைத்தறி

47. இந்த அரசு, கோ-ஆப்டெக்ஸ் மற்றும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய ரூ. 26.15 கோடி தள்ளுபடித் தொகையை, சில ஆண்டுகளாக வழங்காமல் இருந்ததை அளிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளும். இந்தத் தொகையை, வரும் மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்படும். கைத்தறி ஒத்துக்கீடு திட்டத்தை அமுல்படுத்து வதற்காக செயலாக்கப் பிரிவு ஒன்றை அமைத்து அதன் மூலம் விசைத்தறிப் பிரிவின் செல்வாக்கு, கைத்தறித் துறையைப் பாதிக்காத வகையில், அத் துறையின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும். இந்த ஆண்டில், கைத்தறித் துறையின் வளர்ச்சித் திட்டங்களில் முக்கியமாக, கைத்தறிகளை மேலும் மேலும் கூட்டுறவுத் துறையின் கீழ்க் கொண்டு வரப்படும். புது வகையான கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்ய உதவுவோம். கைத்தறிகளை நவீனமாக்குவதுடன், கைத்தறித் தொழிலாளர்களுக்கு, சீரான சம்பளம் வழங்க முயற்சி எடுக்கப்படும். வீட்டற்ற கைத்தறி நெசவாளர்களுக்கு குடியிருக்க வீடும், தொழில் கூடமும் வழங்கப்படும். கைத்தறி நெசவாளர்களை மேலும் அதிகமாக காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். நெசவாளப் பெண்களுக்குத் தறிகள் வழங்கப்படும். ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நெசவாளர்களுக்கு, பங்குத்தொகை வசதி வழங்குவதன் மூலம், கைத்தறித்துறை மேலும் பலப்படுத்தப்படும். கைத்தறி வளர்ச்சிக்கு, மாநில கைத்தறி ஆலோசனைக் குழு (State Level Handloom Advisory Committee) திருத்தி அமைக்கப்படும்.

### சாலைகள்

48. நமது மாநிலத்தில், சுமார் 3,700 கிலோ மீட்டர் நீளம் உள்ள நெடுஞ்சாலைகள், 43,000 கிலோ மீட்டர் நீளம் உள்ள மாவட்டச் சாலைகள், 1,00,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஆகியவற்றைப்




பராமரிக்கும் பணியையும், மேம்படுத்தும் பணியையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்சொன்ன சாலைகளைப் பராமரிப்பதற்காகவும், புதிய சாலைகளை அமைப்பதற்காகவும், வரும் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 103 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில், கிராமப் புறங்களில் புதியதாகச் சாலைகள் அமைப்பதற்காகச் சுமார் ரூ. 11.70 கோடியும், நகர்ப்புறங்களில் புதியதாகச் சாலைகள் அமைப்பதற்காகச் சுமார் ரூ. 20 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கல்வி

49. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, ரூபாய் 900 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்து வதற்கு, ரூபாய் 5 கோடி செலவில், சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். ஆதி திராவிடர் வாழும் பகுதிகளில் புதிதாக 50 தொடக்கப் பள்ளிகள் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும்.

50. மேல்நிலைக் கல்விக்குரிய தேவைகள் பெருகிக் கொண்டே வருகின்றன. இதனை நிறைவு செய்யும்




பொருட்டு, வரும் ஆண்டில் கூடுதலாக 600 இடைநிலை ஆசிரியர் பதவிகள், 50 பி.எட். ஆசிரியர் பதவிகள், மற்றும் 50 தமிழ் ஆசிரியர் பதவிகள் தோற்றுவிக்கப் படும். மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் போதுமான அளவில் இல்லாத ஒரு குறை இருந்து வருகின்றது. வரும் ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கம் செய்துள்ள ரூ. 1:50 கோடியைப் பயன்படுத்தி ஹட்கோ நிறுவனத்தின் உதவியுடன் 60 மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக 14 மாவட்டங்களில் ஆசிரியர் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டில், மீதம் உள்ள 6 மாவட்டங்களிலும், புதிதாக ஆசிரியர் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும்.

51. புதியக் கல்விக் கொள்கை என்கின்ற அடிப் படையில், நவோதயா பள்ளிகள் மூலமாக, இந்தி திணிக்கப்படுவதை இவ்வரசு வன்மையாக எதிர்க்கும். நவோதயா பள்ளிகள் ஏழை மக்களுக்குப் பயன்படு வதற்குப் பதிலாக, வசதி மிக்க மேட்டுக்குடியினர் மேன்மை பெறுவதற்கே பயன்படும் என்று கல்வி வல்லுநர்கள் தெரிவித்துள்ளக் கருத்தினை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். நவோதயா பள்ளி களுக்கு அளிக்கக் கூடிய நிதி ஒதுக்கீட்டினை, கிராமப் புறங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகள் வசதி பெறுவதற்கும், சிறப்படைவதற்கும் அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துவோம்.

52. கல்லூரி ஆசிரியர்களுக்கு, பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பிப்ரவரி மாதத்திலிருந்து சம்பள விகிதங்கள் வழங்கப் பட்டுவருகின்றன. 1–1–86லிருந்து அவர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகைக்காகவும், வரும் ஆண்டில் சம்பள விகிதத்தால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினத்திற்காகவும், மொத்தமாக ரூ. 55 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

53. கடந்த காலத்தில், பல தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரிகளில் போதுமான வசதிகள் இல்லை என்றும், கல்வியின் தரம் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது என்றும், முறைகேடுகள் பெருகிடுவதாகவும் பல புகார்கள் வந்துள்ளன. எனவே, புதிதாகத் தனியார் சுயநிதிக் கல்லூரிகள் துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஏற்கெனவே தொடங்கி நடைபெற்று வருகிற கல்லூரிகள் இயங்குவது குறித்தும் ஆய்வு செய்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### தமிழ் வளர்ச்சியும் - பண்பாடும்

54. தமிழ்ப் பயிற்று மொழித் திட்டம், கழக ஆட்சி யின்போது இளங்கலை பட்டப் படிப்பளவில் கொண்டு வரப்பட்டது. அது ஊக்குவிக்கப்பட்டு மேலும், முதுகலை, உயர்நிலை, ஆய்வு நிலை வரை செயல்பட வேண்டும். இதற்கு அடித்தளமாக, தொன்மையான தமிழ் மொழி–தற்கால சமூகவியல், அறிவியல் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப வளம்பெற திட்டமிட்டுச் செயல்படுவோம்.

55. தமிழைப் பயில்வதற்கு, உலகத்தின் பல பகுதிகளில் ஆர்வம் இருக்கிறது. இதனை நிறைவு செய்யும் வகையில், தமிழில் பாட நூல்கள், எளிய அகராதிகள், எளிய இலக்கணம் ஆகியவற்றை வல்லுநர் ஒத்துழைப்புடன் அரசு வெளியிடும். அவ்வாறே, உலகப் புகழ் பெற்ற நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து, மலிவு விலையில் வெளியிடப்படும்.

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)



# ஈரோடு நகரில் நாணயவியல் கண்காட்சி

வே. ஜெயராஜ்
அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர்,
ஈரோடு.

**நா**ணயங்களைப் பற்றிய அறிவே நாணயவியல் ஆகும். நாணயங்கள் கி.மு.800 லிருந்தே புழக்கத்தில் இருந்தாலும், கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தான் நாணயவியல் உருவானது. தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, வெண்கலம், இரும்பு, ஈயம் போன்ற உலோகங்களாலும், உலோகக் கலவைகளினாலும் நாணயங்கள் உருவாக்கப்பட்டன. நாணயங்கள் பல அளவுகளில், வடிவங்களில் வார்த்தல் முறையிலும், அடித்தல் முறையிலும் செய்யப்பட்டன. முற்காலத்தில வங்கிகள் இல்லாமையால் பூமிக்குள் புதைத்து வைத்துப் பணத்தைப் பாதுகாத்தனர் மக்கள். அக்காலத்தில புதையுண்டு போன நாணயங்களே இக்காலத்தில் புதையல்களாகவும், பூமியின் மேற்பரப்பிலும் ஆற்றங்கரைகளிலும் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. பழங்கால நாணயங்கள் இன்னும் புதிய வரலாற்றுச் செய்திகளை வழங்கும் வரலாற்றுப் பெட்டகங்களாக விளங்குகின்றன.

## ஆய்வரங்கம்

பெரியார் மாவட்டத்தில் நாணயவியலார் பலர் இருப்பது தெரிய வந்த போது, அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் வண்ணமும், புதிதாகக் கிடைத்த நாணயங்களைத் தெரிந்து கொள்ளும் வண்ணமும், 30.1.89 அன்று நாணயவியல் ஆய்வரங்கமும் 30.1.89 முதல் 2.2.1989 வரையில் நாணயவியல் கண்காட்சியும் ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்றன. ஈரோடு சிக்கையா நாயக்கர் கல்லூரி நாட்டுநலப் பணித் திட்டமும், அரசு அருங்காட்சியகமும் இணைந்து இந்த நிகழ்ச்சிகளை நடத்தின.

அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு.என்.ஹரிநாராயணா ஆய்வரங்கத்தைத்தொடங்கி வைத்தார். இவ்வாய்வரங்கத்தில் பல பேராசிரியர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றும் பொது மக்களும் நாணயவியலார் பலரும் பங்கேற்றனர்.

கண்காட்சியில் தமிழகக் காசுகளின் பெயர்கள், கல்வெட்டுக்களில் காணப்படும் பெயர்கள், பலவித உலோகக் காசுகளின் பெயர்கள், காசுகள் தயாரிக்கும் முறை, நாணயத்தின் பகுதிகள், பல நாட்டு நாணயங்களின் பெயர்கள், தமிழகத்தின் நாணயச் சாலைகளின் பெயர்கள், நாணயச் சாலைகள் இருந்த இடங்கள், காசுகள் அழிந்து போவதற்குக் காரணங்கள், நாணயங்களைப் பாதுகாத்தல், காசுகளை ஆய்வு செய்தவர்களின் பட்டியல், காசியல் புத்தகங்கள், காசுகளைப் பற்றி வெளியான சில பத்திரிகைச் செய்திகள் மற்றும் பழங்காலக் காசுகள் முதல் இக்காலப் பன்னாட்டுக் காசுகள் வரை வகைப்படுத்திக் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, வெண்கலம், ஈயம், நிக்கல், அலுமினியம் போன்ற உலோகங்களாலும் உலோகக் கலவைகளினாலும் செய்யப்பட்ட 1175 நாணயங்கள் காட்சியில் இடம் பெற்றிருந்தன. பழங்கால உரோமானிய தங்க, வெள்ளிக் காசுகள், கங்கர்கள், பல்லவ, சேர, சோழ, பாண்டியர், விஜயநகர் மன்னர்கள், சுல்தான்கள், மைசூர் அரசர்கள், திப்பு, ஹைதர் அலி, களப்பிரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், டேனியர், போர்ச்சுக்கீசியர் ஆகியோர் இந்தியாவில் புழக்கத்தில் விட்ட காசுகள் பல்வேறு நாட்டில் தற்காலத்தில் புழக்கத்திலுள்ள காசுகள் இவற்றில் அடங்கும்.

இக் கண்காட்சியில் பேராசிரியர் க.அ. திருஞானசம்பந்தம் அவர்களின் 392 நாணயங்களும், திரு கோ. சுப்பிரமணியம் அவர்களின் 170 நாணயங்களும், திரு கே.கே.ராஜூ அவர்களின் 83 நாணயங்களும், திரு.எம்.ராமதாஸ் அவர்களின் 26 நாணயங்களும், திரு பி. சிவானந்தம் அவர்களின் 73 நாணயங்களும் மற்றும் ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்பட்ட நாணயங்களும் இடம் பெற்றிருந்தன. இவ்வித நாணயவியல் கண்காட்சியும் ஆய்வரங்கமும் பெரியார் மாவட்டத்தில் நடைபெற்றது இதுவே முதல் முறையாகும்.

இக்கண்காட்சியை, பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் கண்டுகளித்தனர்.





# வேளாண்மைச் செய்திகள்

## நவீனப் பண்ணை இயந்திரங்களின் பயன்

**வி**வசாயிகள் ஏன் நவீன பண்ணை இயந்திரங்களை உபயோகிக்கத் தயங்குகிறார்கள் என்பது குறித்து ஆராய ஆய்வுப்பணிமேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்விற்காக, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு,சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர்,மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு மாவட்டங்களிலிருந்து 400 விவசாயிகள் பேட்டி காணப்பட்டனர். மேலும், நவீன பண்ணை இயந்திரங்களின் உபயோகத்தைப் பரவலாக்கும் உத்திகள் குறித்து அரசு விவசாய அதிகாரிகளின் கருத்துகளும் சேகரிக்கப்பட்டன.

உற்பத்தியாளர்களிடமிருந்து இயந்திர சாதனங்களை ஒப்பந்த விலைக்கு விவசாயிகள் பெறும்படி செய்தல், இயந்திரங்களைச் செயல் விளக்க முறைகள் மூலம் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துதல், மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தினால்விவசாயிகள்நவீன பண்ணை இயந்திரங்களைப் பெருமளவு உபயோகிப்பார்கள் என்று விவசாய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர். மேலும், சமுதாய இயந்திரக் கருவிக் கூடங்களைக் கிராமங்களில் நிறுவவும் அவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

விவசாயிகளைப் பொறுத்தவரை, பெரும்பாலான நவீன பண்ணைக் கருவிகளைப் பற்றி-முக்கியமாக, மனித உழைப்பை மிச்சப்படுத்தும் கருவிகளைப்பற்றி ஏதும் தெரியாமலிருப்பதே அவர்கள் அத்தகைய இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாமலிருப்பதற்கான காரணமாகும். அப்படி அவர்கள் ஏதேனும் ஒருசில கருவிகளைப் பற்றித் தெரிந்திருந்தாலும், கருவிகள் அதிக விலை, குறைந்ததரம், பழுது பார்க்கும் வசதியின்மை, வாடகைக்குக்கிடைக்காமை போன்ற காரணங்களால் அவற்றை விவசாயிகள் பயன்படுத்த இயலவில்லை.

எனவே, குறைந்த விலையில் பண்ணைக்கருவிகளை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்வது அவசியமாகிறது. கருவிகள் வாங்க மானியம் மற்றும் செயல் விளக்க முறைகளைப் பெருக்குதல், பண்ணை இயந்திரங்களின் உபயோகத்தைப் பரவலாக்கும். ஆனால், கருவிகளை விவசாயிகள் பயன்படுத்துமாறு ஆலோசனை கொடுக்கு முன்னர் அக்கருவிகள் அந்தந்த இடம் மற்றும் பயிர்களுக்கு ஏற்றவையா என்பது குறித்து விவசாய அதிகாரிகளால் தீர ஆராயப்பட வேண்டும்.

மேலும், விவசாயப்பொறியியல் விரிவாக்கப்பணி தனியாக ஆரம்பிக்கப்பெற்றால், நவீன விவசாயிகள் கருவிகளின் உபயோகத்தை அதிகரிக்கலாம்.

## வருங்காலக் கிராமத்திற்குத் திட்டமிடுதல்


**வ**ருங்காலத்தில் கிராமங்கள் நல்ல நிலையில் முன்னேறுவதற்கு உள்ளூர் அளவிலான திட்டங்கள் இன்றியமையாதனவாகும். அத்தகைய திட்டங்கள் வகுக்க, உள்ளூர்த் தேவைகள் பற்றிய கணிப்பும் அங்கே கிடைக்கக்கூடிய உற்பத்திக் காரணிகள், மூலதனங்கள், பற்றிய அறிவும் மதிப்பீடும் ஆரம்பத் தேவைகளாகும். இத்தகைய புள்ளி விவரங்களைச் சேகரிக்க, அமெரிக்காவின் போர்டு அறக்கட்டளையின் நிதியுதவியுடன் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆரம்ப கட்ட முயற்சியாகத் தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் வரும் கமலாபுரம் என்ற கிராமமும், காமராசர் மாவட்டம், கரியபட்டி ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் வரும் குரந்தை கிராமமும், கோவை மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கரியம்பாளையம் கிராமமும், இந்த ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றுள், கமலாபுரம் பாசனவசதி கொண்ட கிராமங்களுக்கும், குரந்தை மானாவாரிப் பரப்புகளுக்கும், கரியம்பாளையம், இரண்டுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்புக்கும் முன்மாதிரிகளாகும். இந்த மூன்று கிராமங்களிலுமாகச் சேர்ந்து 1190 குடும்பங்கள் இந்த ஆய்வுக்காகத் தொடர்பு கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வின் மூலம், இந்த மூன்று கிராமங்களிலுமே கடந்த பத்தாண்டுகளாக மக்கள் தொகைப் பெருக்கம் அதற்கும் முந்தைய கால கட்ட வளர்ச்சியைவிடச் சற்றேறக் குறைய 0.35 சதவீதம் குறைந்திருப்பது தெரியவந்துள்ளது. ஏறத்தாழ இரண்டு வேலையாட்களைக் கொண்ட, ஐந்து நபர்களடங்கிய ஒரு சராசரிக் குடும்பத்தின் வேலை நாட்கள் 300 மனித நாட்களிலிருந்து 350 மனித நாட்கள் வரையில் இருந்தன. விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, சில்லறைக் கூலி வேலைகள், வாணிபம், தச்சு வேலை, நெல் அறைத்தல் முதலானவை முக்கிய வேலைவாய்ப்புத் தொழில்களெனத் தெரிய வந்தது. இவற்றுள் பெரும்பாலான தொழில்கள் பருவகாலங்களைச் சார்ந்ததாகையால் வேலை வாய்ப்பும் நிரந்தரமானதாக இருக்க முடியாது என யூகிக்க முடியும்.

இக்கிராம நபர்களின் சராசரி ஆண்டு வருமானம் 1000 ரூபாயிலிருந்து 1300 ரூபாய் வரையாகும். ஏறத்தாழ 65 சதவீத மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளனர். இவர்களுள் விவசாயக் கூலிக் குடும்பங்களில் எழுபது சதவீதம் அடங்கும்.

இந்தப் புள்ளி விவரங்களின் மூலம் கிராம மக்களின் வேலை வாய்ப்புக்களையும் வருமானத்தையும் பெருக்கி, அவர்களை வறுமைப் பிடியிலிருந்து மீட்பது அவசியம் என்பது தெளிவாகிறது. ஒருங்கிணைந்த வேளாண்மைத் தொழில்களும், பலதரப்பட்ட வேலைவாய்ப்புத் தொழில்களின் வளர்ச்சியும், மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் தொழில் மற்றும் வாணிப நுட்பங்களைப் பயன்படுத்துதலும் ஆகிய உற்பத்திப் பெருக்கத் திட்டங்களே கிராமங்களின் வளமான எதிர்காலத் தேவைகளாகும்.



## கிராமப் பெண்களுக்குப் பால்பண்ணை பட்டுப்பூச்சி வளர்ப்பில் பயிற்சி

போர்டு அறக்கட்டளையின் உதவியால் கோவை மாவட்டத்திலுள்ள கிராமப் பெண்கள் 90 பேருக்கு பட்டுப் பூச்சி வளர்ப்புமற்றும்பால் பண்ணை நிர்வாகம் பற்றிய பயிற்சி கொடுக்கப்பட்டது. இந்த 90 பெண்களில் 45 பெண்களுக்குப் பால் பண்ணைநிர்வாகத்திலும்மற்றொரு 45 பெண்களுக்குப் பட்டுப் பூச்சி வளர்ப்பு பற்றிய பயிற்சியும் கொடுக்கப்பட்டது. சிறு மற்றும் குறுவிவசாயக் குடும்பத்தினரும், நிலமற்ற விவசாயக் குடும்பத்தினருமே பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பயிற்சிக்கு 15 பேர்கள் என்ற முறையில் மூன்று முறையாகப் பயிற்சி கொடுக்கப்பட்டது. மேற்கூறிய பயிற்சிகள் 1982 முதல் 1985 ஆண்டு வரை நடத்தப்பட்டது. பயிற்சிக்குப் பிறகு, தொழில் நுட்பத் திறமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் இலாப நஷ்டங்களுக்கான காரணங்கள் பற்றிய ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

பயிற்சி பெற்றவர்களில் 28 பெண்கள் பால்பண்ணை நிர்வாகத்தையும், 18 பெண்கள் பட்டுப்பூச்சி வளர்ப்பையும் வெற்றிகரமாக நடத்திவந்தனர். பால்பண்ணை நிர்வாகத்தில் வெற்றி பெறாததற்குப் பசுந்தீவனத்தின் அதிக விலை, கடும் வறட்சி, போதிய கடனுதவி இல்லாமை ஆகியவை முக்கிய காரணங்களாகும். பட்டுப்பூச்சி வளர்ப்பைப் பொறுத்தவரை, 45 பயிற்சியாளர்களில் 27 பெண்கள் தங்கள் பட்டுப்பூச்சி வளர்ப்பைத் தொடரமுடியவில்லை. முக்கியமாக பாசன நீர்த்தட்டுப்பாடு, போதிய கடனுதவி இல்லாமை, அடிக்கடி நோய் மற்றும் பூச்சி தாக்குதல், கூலியாட்கள் கிடைக்காமை மற்றும் பயிற்சிக்குப் பிறகு திருமணமாகி வேறு கிராமங்களுக்குச் சென்றுவிடுதல் போன்றவைகளே பட்டுப்பூச்சி வளர்ப்பதைத் தொடர முடியாததற்கு முக்கிய காரணங்களாகும்.

ஆயினும், பால்பண்ணை நிர்வாகம் மற்றும் பட்டுப்பூச்சி வளர்ப்புத் தொழில்களை மேலும் இலாபகரமான தொழில்களாக மாற்றுவதற்கு உகந்த பயிற்சியும், போதிய கடனுதவியும் செய்து கொடுப்பது அவசியமாகிறது.

மதுரைவேளாண்மைக்கல்லூரியில் 1986-87ஆம் ஆண்டு பால்பண்ணை நிர்வாகம் பற்றி மதுரை மாவட்ட கிராமப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதேபோல், தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் சிதம்பரனார் மாவட்ட மீனவப் பெண்களுக்கு உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் மீன் பதப்படுத்துதல் பற்றிய பயிற்சி கொடுக்கப்பட்டது.

## பயிற்சி உத்திகளில் பெண் விவசாயிகளின் விருப்பங்கள்

டென்மார்க் பன்னாட்டு அபிவிருத்தி மையத்தின் உதவியுடன் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெண்களைப் பற்றியும், பயிற்சி உத்திகளில் அவர்களுடைய முன்னுரிமைகளையும் தெரிந்து கொள்வதற்காக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்காகத் தமிழ்நாட்டிலுள்ள தேர்வு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களிலிருந்து 90 பெண் விவசாயிகளின் விருப்பங்களைக் கேட்டதில் பெரும்பான்மையான விவசாயிகள் (70 சதவீதத்திற்கும் மேலாக) வயல் வெளிப் பயிற்சியையே அதிகமாக விரும்புகிறார்கள். மேலும் மார்ச்-ஜூன் (பங்குனி-வைகாசி) மாதங்கள் பயிற்சிக்கு ஏற்றவையாக இருக்கும் என்று 65 சதவீதத்திற்கு அதிகமான பெண் விவசாயிகள் கூறினர். காலைநேரப் பயிற்சியையே அதிகம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர். பயிற்சிக் காலம் ஐந்து நாட்களுக்கும் அதிகப்படாமல் இருத்தல் நலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். பயிற்சி முறைகளைப் பொறுத்தவரை ஸ்லைடு மற்றும் படக்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதுகிறார்கள். அத்துடன் செய்முறை விளக்கம், கருத்துக்காட்சி, மற்றும் வயல்வெளிப் பயணம் முதலியனவும் முக்கியமான பயிற்சி முறைகள் என்பது தெரிய வந்துள்ளது. எனவே வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மேலேகூறப்பட்டுள்ள பெண் விவசாயிகளின் விருப்பங்களைக் கருத்திற் கொண்டு பயிற்சி முறைகளை அமைத்துப் பயனுள்ள சிறந்த பயிற்சியாகச் செயலாக்க வேண்டப்படுகிறார்கள்.





# சிறுதானியங்கள் செழித்து வளர...

தானியங்களில், சிறுதானியங்கள் வறட்சியை மிகவும் தாங்கக்கூடியவை. தமிழ்நாட்டில் சிறுதானியங்கள் 15 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்படுகின்றன. மொத்தச் சாகுபடி செய்யப்படும் பரப்பளவில் இது 21 சதவீதம் ஆகும். சோளம், கம்பு, ராகி, மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்களில் வீரிய ஒட்டு இரகங்கள் மற்றும் அவற்றிற்கேற்ற உற்பத்தி நுணுக்கங்களைக் கண்டுபிடித்ததால் சிறுதானியங்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இப்பயிர்களின் ஒரு எக்டேரின் சராசரி விளைச்சல் கணிசமாக உயரவில்லை. தற்பொழுதுசராசரிமகசூல்எக்டேருக்கு 1.2 டன்களே! ஆனால் சிறுதானியங்கள்எக்டேருக்கு 4.5 டன் வரை மகசூல் கொடுக்கவல்லவை.

ஆகவே வருங்காலங்களில் சிறுதானியங்களின் உற்பத்தியைப் பெருக்கவும், அதற்கான ஆராய்ச்சித் திட்டங்கள் வகுக்கவும், தமிழ்நாட்டில் உள்ள சிறுதானிய ஆராய்ச்சியாளர்கள், கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மார்ச் 7, 8(1989) ஆகிய தேதிகளில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், டாக்டர் சோ.ஜெயராஜ் கருத்தரங்கினைத் துவக்கி வைத்துத் தனது தலைமை உரையில் வறட்சி நிலையைச்சமாளிக்கும்முறைகளைப் பற்றியும், கால்நடைகளுக்கான தீவனப் பயிர் பற்றாக்குறைகளைப் பற்றியும், மற்றும் சிறுதானியங்களுடன் மரம் வளர்ப்பு முறைகளையும் குறிப்பிட்டார். சிறுதானியங்கள் அதிகமாக விளையக்கூடிய பருவங்களில் உற்பத்தியைப் பெருக்கி, கோழி மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து மிகுந்த புல்வகைகளைக் கண்டுபிடிக்குமாறும் வலியுறுத்தினார். உழவர்களின் வருமானத்தைப் பெருக்க சிறுதானியங்களிலிருந்து பக்குவப்படுத்தப்பட்ட உணவுப்பண்டங்களைக் கண்டறியுமாறு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளைக் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு தட்ப வெப்ப மண்டலத்தில் பெய்யும் மழையளவைப் பொறுத்துச்சிறுதானியவகைகளைத் தேர்வு செய்து சாகுபடி செய்ய வேண்டும். தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பண்ணை உழவு இயந்திரங்களைத் தேர்வு செய்து மண்டல ஆராய்ச்சி நிலையங்களுக்கும், வேளாண், அறிவியல் நிலையங்களுக்கும் அனுப்பி மானாவாரி உழவியல் நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.


தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டுள்ள கம்ப்யூட்டர் மூலம் பருவநிலை, வறட்சி, மண்ணின் ஈரப்பதம், பூச்சி மற்றும் நோய் ஆகியவற்றை அறிந்து, மகசூலின் அளவு மற்றும் அதனைச் சார்ந்த பண்ணைத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு உபயோகப் படுத்தப்படுகின்றன. இந்த மாற்று வடிவங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாய நிலங்களில் பரிசோதிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் எஸ்.செல்லையா சிறுதானியங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் வெவ்வேறு பகுதிகளுக்கு ஏற்றவாறு ஊடுபயிர்களைக் கண்டறிந்து பயிர் செய்தால் உழவர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என அறிவித்தார். சோளம் மற்றும் கம்புப் பயிர் வகைகளில் பிறநாட்டு இரகங்களின் இனக்கலப்புச் செய்ய வேண்டினார். கீழ்க்கண்ட ஆராய்ச்சி முடிவுகள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படுகின்றன.

- சிறுதானியங்கள் பற்றிய ஆராய்ச்சி நுணுக்கங்கள், மழை பெய்யும் தருணம், நோய் மற்றும் பூச்சி தாக்குதல் மற்றும் ஒளும் விளைந்த நீர் பிடிப்புப் பராமரிப்பு முறைகள் ஆகியவற்றை கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்து பயன்படுத்துதல்.
- சோளம், மக்காச்சோளம் மற்றும் கம்பு ஆகிய பயிர் இரகங்களில் ஆண் மலட்டுத் தன்மையுள்ள இரகங்களை வகைப்படுத்தி உயர் விளைச்சல் மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்பு இரகங்களை உருவாக்குதல்.
- தொழிற்சாலைக்குத் தேவைப்படும் "எத்தனால்" என்னும் எரி சாராய உற்பத்திக்காக இனிப்புத் தட்டுப் புதிய சோள இரகங்களை உருவாக்குதல்,
- திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற வறட்சியைத் தாங்கும் உயர் இரக மக்கட்டைச்சோள இரகத்தையும், கோவை மற்றும் பெரியார் மாவட்டப் பகுதிகளுக்கு ஏற்ற உயர் இரக, பெரிய மஞ்சள் இரகத்தையும், வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்ட மானாவாரி நிலங்களுக்கு வறட்சியைத் தாங்கும் உயர் இரக தலைவிரித்தான் சோளரகத்தையும் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்;
- நிலக்கடலையில் ஊடுபயிர் செய்ய ஏற்ற கம்பு இரகங்களையும் வீரிய ஒட்டு இரகங்களையும் கண்டறிதல்.
- சமவெளி மற்றும் மலைப்பகுதிகளுக்கு ஏற்ற வறட்சியைத் தாங்கும் உயர் விளைச்சல் தரும் தினை, பனிவரகு, மற்றும் சாமை இரகங்களை உருவாக்குதல்.
- வட ஆர்க்காடு மாவட்டம், பாலாறு நிலப்படுகைகளில் தோல் பதனிடும்தொழிற்சாலையில்இருந்து வரும் கழிவுநீருக்கு ஏற்ற சிறுதானிய இரகங்களைக் கண்டறிதல் மற்றும் அவற்றின் நச்சுத்தன்மையைப் போக்க ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.
- சிறுதானியங்களுக்கு நுண்ணுயிர் உரங்களைக் கொண்டு பூச்சி மற்றும் பூஞ்சாள நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வறட்சியைத் தாங்கும் திறனை ஆராய்தல்.
- கேழ்வரகில் கொலைநோயையும் கம்பில் கீழ்சாம்பல் நோயையும் எதிர்க்கும் இரகங்களைத் தாவரதிசு இனக்கலப்பு முறையின் மூலம் உருவாக்குதல்.

இக்கருத்தரங்கில், தற்பொழுது வரை மேற்கொள்ளப்பட்ட சிறுதானியங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை விவாதித்து புதிய செயல் அணுகுமுறைவரையறுக்கப்பட்டது. இம்மாதிரியான கருத்தரங்குகள் தன்னாய்வு மற்றும் எல்லாத் துறையைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் கருத்துக்களைக் கண்டறியவும் ஒரு வாய்ப்பாக உள்ளது.

"குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"




**பான்மின்த்***

(மொரண்ட்டல் லிட்ரேட்)

குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

"பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சுது —அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!"

**பால் இழப்பே இல்லை.**
"அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது."

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**
"என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!"

**வசதி மிக்கதும் கூட.**
சாப்பிட வெகு இலகு பான்மின்த். கண்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு. உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!"

பால் இழப்பே இராது
பான்மின்த்*
விலையை ஈடு செய்வது

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர்: சிறந்த மருந்து

**பான்மின்த்***

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 4 2217 TM

* யு.எஸ்.ஏ. ஃபைஸர் நிறுவன டிரேடு மார்க்

**pfizer**

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு : ஃபைஸர் லிட்., பி.ஒ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021


# தொழுநோயை ஒழிப்போம்

மனித இனத்தைத் தாக்குகின்ற பற்பல நோய்களில் தொழுநோயும் ஒன்று. தெய்வக் குற்றத்தால் இந்நோய் ஏற்படுவதாக நமது சமுதாயம் நெடுங்காலமாக நம்பி வந்திருக்கிறது. இது தவறான கொள்கை என்பதை மருத்துவர்கள் மெய்ப்பித்து விட்டார்கள்.

இந்நோய் பரம்பரையாக வருகிறது என்றும், இது ஒரு மனிதனைத் தாக்கிவிட்டால் அம்மனிதன் இந்நோயினின்றும் மீளவே இயலாது என்றும் கருத்துக்கள் நிலவி வந்தன. இந்தக் கருத்துகளும் தவறானவை என்பதை மருத்துவ உலகம் நிரூபித்து விட்டது.

லெப்ரஸி பாஸில்லி என்னும் ஒரு வகைக் கிருமியினால் இந்த நோய் ஏற்படுகிறது. இந்நோய் ஒருவரைப்



பற்றியுள்ளது என்பதை அறிவதற்கு நெடுங்காலம் ஆகிறது. இந்நோய் தாக்கியிருக்கிறது என்பதைத் தொடக்கத்திலேயே கவனித்து விட்டால்-உரிய சிகிச்சை அளிக்கப்பட்டால். இந்நோய் முழுமையாகக் குணமாகக் கூடியது. காலம் கடந்து விட்டால், கைகால்களில் ஊறு நேர்ந்து, உடலுறுப்புக் குறைவும் ஏற்படுகிறது.

தொழுநோய் நமது இந்திய நாட்டில் பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. நமது புராணங்களில்கூட இந்நோய் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நளாயினியின் கணவர் தொழுநோயினால் பீடிக்கப்பட்டவர் என்று நமது புராணம் கூறுகிறது.

இந்நோயினால் பீடிக்கப்பட்டவரை அவரது குடும்பத்தினரே ஒதுக்கி வைக்கும் வழக்கம் இருந்து வந்தது-இருந்து வருகிறது. சமுதாயமே தொழுநோயாளியைப் பிரித்து வைக்க காவரம் உண்டு.

காலம் மாற மாற மருத்துவ அணுகுமுறைகள் வளர வளர தொழுநோய் குணப்படுத்தப்படக் கூடிய நோய் என்பது நிரூபணம் ஆகியது.

அரசு மருத்துவமனைகளும் தனியார் தொண்டு நிறுவனங்களும் இந்நோயைஒழிப்பதில் அக்கறை காட்டி வருகின்றன.

இந்திய குஷ்ட நிவாரண சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளை, கிறிஸ்துவ மருத்துவமனை மற்றும் தொழுநோய்ச் சிகிச்சை மையம், டேமியன் நிறுவனம், ஜெர்மன் தொழுநோய் நிவாரண சங்கம், தொழுநோய் மிஷன், தமிழ்நாடு தனியார் தொண்டு நிறுவன சங்கம், கிரி மால்ட்ஸ் மருத்துவமனை மற்றும் தொழுநோய்ச் சிகிச்சை மையம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தொழுநோய் தொடர்பான மாநில மாநாட்டை மார்ச் 10ஆம் நாளன்று சென்னையில் நடத்தின.

இந்திய குஷ்ட நிவாரண சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையின் கௌரவச் செயலாளர் டாக்டர் எஸ்.என்.கணபதி வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

"1937ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்திய குஷ்ட நிவாரண சங்கம் தொழு நோய் ஒழிப்புப்பணியில் ஈடுபட்டது. பின்னர் 1950ல் அரசும் இந்த மாபெரும் பணியில் ஈடுபடத் தொடங்கியது. அதன் பின்னர் வேறு பல தனியார் தொண்டு நிறுவனங்களும் தொழுநோய் ஒழிப்புப் பணியில் ஈடுபட்டன.

"தமிழ்நாட்டில் ஏறக்குறைய 40 மையங்களில் தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் செயலாற்றி வருகின்றன.

"தொழுநோய் சிகிச்சையில் 1982ஆம் ஆண்டு முதல் பல்வகை மாத்திரைகள் வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த முறை தமிழகத்தில் உள்ள 20 மாவட்டங்களில் 11 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஏனைய 9 மாவட்டங்களில் 1990க்குள் இம்முறை செயல்படும்.


மாநாட்டுக்குத் தலைமை வகித்த தமிழ்நாடு மருத்துவத் துறை இயக்குநர் டாக்டர் திரு.எம்.ஜி. முத்துக்குமாரசாமி தமது உரையில் குறிப்பிட்டார்:

"அண்ணல் காந்தியடிகள், தொழுநோய் ஒழிப்பில் முனைப்புக் காட்டி வந்தார்.

"நமது மாநிலத்தில் 110 மருத்துவ நிலையங்கள் இருந்தபோதிலும் ஆயிரக் கணக்கான மருத்துவர்கள் பணியாற்றுகின்ற போதிலும், தொழுநோய் ஒழிப்புப் பணியில் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள்தான் அதிக அளவில் ஈடுபட்டுள்ளன என்பது நாம் எண்ணிப் பார்க்கத் தக்கது.

"தமிழக அரசு தாம்பரத்தில் ரூ.1கோடி செலவில் உருவாக்கிவரும் தொழுநோய் மறுவாழ்வு நிலையம் இந்த ஆண்டுக்குள் கட்டி முடிக்கப் பட்டுவிடும்"

ஆக்ராவில் உள்ள ஜல்மா நிறுவனத்தில் பணியாற்றி வரும் டாக்டர் எச்.சீனிவாசன் தமது சிறப்புரையில் தெரிவித்ததாவது:



"MDT என்று சொல்லப்படும் பல்வகை மாத்திரைகள் வழங்கப்படும் சிகிச்சை முறை இன்னும் இந்தியா முழுதும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. MDT முறை நல்ல முன்னேற்றமான சிகிச்சை முறை ஆகும்.

"முன்பு வழங்கப்பட்ட மாத்திரைகளை நோயாளி ஆயுள் முழுதும் சாப்பிட்டு வரவேண்டும். ஆனால் இந்த MDT முறை மாத்திரைகளை நோயாளி 2 வருடம் அல்லது 4 வருடம் என ஒரு கால கட்டத்திற்கு உட்கொண்டால் போதுமானது."

இந்திய குஷ்ட நிவாரண சங்கம்-டெல்லித் தலைமைச்சங்கத்தின் அமைப்புச் செயலாளர் திரு எம்.ஏ. ஜெகந்நாதன், தமிழ்நாடு தொண்டு நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் வெங்கடேஸ்வரராவ் ஆகியோரும் உரையாற்றினர்.



# வரவேற்பு

ஆர். சண்முகசுந்தரம்

நான் ''ஒரு மாதிரி''யான ஆசாமி என்று பெயரெடுத்தவன்- ஆனால் அந்த ''ஒரு மாதிரி'' என்பது எந்த ''முன்மாதிரி''யும் அல்ல; ''முன்னு தாரணமாகக் கொள்ள வேண்டிய பட்டியலில் என்பெயர் சேரவே சேராது.!

வாரி வெளியில், வரப்பின்மீது, வேலி ஓரங்களில், பாத்திகளுக் கிடையே, வேட்டியைக் கோவணம் போட்டு இழுத்துக் கட்டிக்கொண்டு மணிக்கணக்கில் வேலை செய்யும் என் பழக்கம்தான் அந்த ''ஒரு மாதிரி''ப் பட்டத்தை எங்கள் ஊர்க் காரர்கள் மத்தியில் எனக்குத் தேடிக்கொடுத்தது. அந்தக் கோவணாண்டிக் கோலத்தில் என்னைப் பார்த்ததும், ''இவரு ஒரு மாதிரி யான ஆளு இல்லீங்கோ?'' என்ற கேள்வியும், ''ஆமாங்கோ, அப்படித் தானுங்கோ'' என்ற ஆமோதிப்பும் அவர்களிடமிருந்து புறப்பட்டு என் காதுகளை எத்தனையோ தரம் எட்டியிருக்கின்றன.

ஆனாலும் அந்தப் பட்டத்துக் காகப் பயந்து என் பழக்கத்தை நான் விட்டதில்லை. திறந்த மேனி யாகவே தோட்டத்து நிழலில் உட் கார்ந்து, ரொம்ப ஆனந்தமாக வெற்றிலை-பாக்குப் போடுவேன்.

இன்னும் சில நேரங்களில் சார்ப் புக்கு வெளியே மாமரத்து நிழலில் கட்டிலைப் போட்டு உட்கார்ந்து படித்துக் கொண்டிருப்பேன்; நேரம் போவதைப்பற்றி எனக்குக் கவலை கிடையாது. எழுதுவதும் அப்படித் தான்; பாயை விரித்து எதிரில் ''டெஸ்க்'' மாதிரி ஒன்றை-நானே செய்தது, வைத்து, வெள்ளைத் தாள்களில் பேனாவை ஓட்ட ஆரம் பித்தால் இருட்டியதும் தெரியாது. விடிந்ததும் தெரியாது; எழுதிக் கொண்டே இருப்பேன். பசி, தாகத்தை விரட்ட மனைவி துணை புரிவாள். கொஞ்சம் ''கர்நாடகம்'' தான் என்றாலும் அவளுக்குப் படிப் பதில் ஆசை; ஒவ்வொரு காகிதமா கப் படித்துப் பார்த்துக்கொண்டே வருவாள்.



அப்படி மெய்மறந்து நான் எழுது வதும் அங்குள்ள ஆட்களைப் பற றித்தான்; அங்கே இட்டேறித் தடங்களில், பச்சைகளுக்கு மத்தி யில், சந்தை சாரிகளில் நடமாடும் பெண்கள், குழந்தைகளைப் பற்றித் தான்; கீரனூர் மண்ணின் மணமும் அதில் கலந்திருக்கும். ஆனால், அது ஈர மண் அல்ல; வறண்ட மண். வறண்ட மண்ணிலே புரண்டுகொண் டிருக்கும் ''ஈர''முள்ள நெஞ்சங்கள் அவை.

இப்படியேதான் சென்ற இருபது, இருபத்தைந்து வருஷங்களை உல் லாசமாக ஓட்டிவிட்டேன். அதற்கு முன்பு அப்படி இல்லையா என்ற கேள்வி சரியான ஒரு கேள்விதான். அப்போதெல்லாம் தாத்தா இருந் தார்; அப்பா இருந்தார். அவர் களுக்குப் பிறகு கணவன் -மனைவி என்கின்ற வாழ்க்கைப் பயணத்தில் அனுபவித்துக்கொண்டிருக்கும் சுயா னுபூதி இந்தக் குடும்பக் காட்சிகள். இக்காட்சிகளைக் கலைப்பார் யாரு மில்லை. கூட்டுவாரும் இல்லை. ''கர்நாடக''மும் ''ஒரு மாதிரி''யும் இப்படிப் புது மாதிரிதான்'. எங் களைத் தட்டிக்கேட்பார் இப்போது எவரும் கிடையாது.

ஆனால் இரண்டு வருஷத்திற்கு முன்வரை ''ஒருவர்'' எங்களைத் தட்டிக் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்-தட்டிக்கேட்பதா? அதட் டுவார். ஆணையிடுவார். அவரு டைய கட்டளைகளுக்கு நாங்கள இருவருமே அடிபணிந்து போவோம். அவர் வேறு யாருமல்ல; எங்கள் அருமைப் புதல்வி பாப்புதான்!

செல்ல மகள் அவள். அப்படிப் பட்டவளின் சொல்லுக்கு எதிர்ச் சொல் ஏது? என்றாலும், ''அம்மா' நீ இப்படியெல்லாம் ''டிரஸ்'' பண் ணிக்கொண்டு என்னோடு வந்தால் எங்கேயும் கூட்டிக்கொண்டு போக மாட்டேன். என் கல்லூரித்தோழி கள் பார்த்தால் என்ன சொல்லு வார்கள்? என்னைப்பற்றித்தான் என்ன நினைப்பார்கள்?'' என்று பாப்பு அலுத்துக்கொள்ளும்போது அவளுடைய தாய் என்பதற்காக இந்தக் ''கர்நாடகம்'' மாறமுடிய வில்லை.

பாப்புவின் தந்தை என்பதற்காக என்னை நானும் மாற்றிக்கொள்ள இயலவில்லை. எதை விடுத்துவிட்டு எதைப் பூட்டிக்கொள்வது? பாப்பு வின் கல்லூரித்தோழிகள் விடுமுறை யின்போது கிராமத்திற்கு வருகி றார்கள் என்பதற்காக, நான் ஹேட் டும் பூட்சும் அணிந்துகொள்ள முடி யுமா? கதர்வேட்டி இடுப்பில் இருந் தால்தான் வேட்டி கட்டியிருப்ப தான உணர்வே தோன்றுகிறது எனக்கு. எப்போதாவது கோவைக்கோ, காங்கேயத்திற்கோ போக 'வேண்டியிருந்தால்தான் சட்டை போட்டுக் கொள்வேன். மற்ற நேரத்தில் காட்டுக்குள் ''கிளறி''க் கொண்டிருக்கிற ஆளுக்கு சொக்காய் எதற்கு?

ஒருநாள் பாப்பு தன் தாயாரிடம் வேடிக்கை ஒன்று செய்தாள். "தன் னைப் போலவே இந்தக் ''கர்நாடக மும்" தலையை ''பாப்'' பண்ணிக் கொள்ள வேண்டும் என்றாள். அது மட்டுமா? உதடுகளில் ''லிப்ஸ்டிக்'' கன்னங்களுக்கு ''ரூஜ்'', நகத்திற்கு ''கியூடெக்ஸ்'' கையில்லாத (ஜாக் கெட்) ''ரவிக்''; நைலக்ஸ் புடவை; காலுக்கு ''ஹைஹீல்ஸ்'' சலங்கைக் கொலுசு-இவ்வளவையும் போட்டுக் கொள்ள வேண்டும் என்றும் சொன் னாள். அப்புறம் ''ஹிப்பெல்ட்'' வேறாம். இந்த பெல்ட்டைக் கண்டு மிரள வேண்டியதில்லையாம். சிலப் பதிகார மாதவிகூட ''மேகலை'' யில் முப்பத்திரண்டு மணிகள் குலுங் கத் தரித்திருந்தாளாம். இத்தனை யும் சொல்லிவிட்டு ''அம்மா, இவ் வளவும் என்னைப்போல்நீயும்சூடிக் கொள்ளாவிட்டால் நான் சோறு தின்னமாட்டேன்'' என்று பிடி வாதம் பிடித்தாள் பாப்பு.

மகளின் அந்த அடத்தைக் கண்டு என் மனைவி மருண்டாள். மயங்கி னாள் மார்க்கம் ஒன்றும் புலப்படா

மையால் தோட்டத்து மார்க்கமாகப் புறப்பட்டாள். அப்போது நான் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தேன்.


சங்கதி, மகளைக் குறித்ததாக இருக்கும் என்பது எனக்கா தெரியாது? நான் சமாதானம் சொன்னேன். ''இப்பப் போய்ப் பார்! பாப்பு-'டிரான்ஸிஸ்டர்'ரோடு போர் தொடுத்துக்கிட்டு இருப்பா; உன்னை அலைக்கழிப்பதிலேஅதுக்கு ஆனந்தம்'' என்றேன். சிரித்துக்கொண்டு பாப்பு சமாசாரமே அப்படித்தான்; ''கிரிக்கெட் வர்ணனையைக் கேளம்மா'' என்பாள். இவளுக்கோ ''மட்டை''யும் தெரியாது. கட்டையும் தெரியாது. ''டெஸ்''டை ரசிக்க எங்கே தெரியப் போகிறது!

சென்ற தை மாதம் பாப்புவுக்குத் திருமணம் நடந்தது. மாப்பிள்ளை கல்லூரி ஒன்றில் சரித்திர விரிவுரையாளர். பெண்ணும் மாப்பிள்ளையும் பட்டினத்தில் இருக்கிறார்கள். இது தலைத் தீபாவளி. இருவருமாகக் கிராமத்திற்கு வரப் போகிறார்கள். இன்னும் நாலு நாள் இருக்கிறது தீபாவளிக்கு. எங்கள் இருவருக்கும் எவ்வளவோ வேலைகள்-அப்படித்தான் இருவருமே நினைத்தோம்.

பிரம்மதேவன் பூவுலகைப் படைத்தபோது எங்கள் கிரனூர் கிராமத்தையும் படைத்திருப்பான்; அதில் சந்தேகம் என்ன? ஆனால் அதற்கப்புறம் அவன் கணக்கிலிருந்து எப்படியோ இந்த ஊர் விடுபட்டுப் போய்விட்டது. மயனும் சரியாகக் கவனிக்கவில்லைபோலும்! மேலே போகும் முன்னோரும் ஊர் வளத்தை உரைப்பதாயில்லை. ஆகவே ''எல்லையறுபரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல்'' கிரனூரும் ஒரே சீரான, என்றும் இருந்த மாதிரியாகவே, இன்றும் இருக்கிறது.

இந்தக் காலத்தின் மின்விளக்கு இல்லாத சிற்றூரில் குடியிருக்க யார்தான் பிரியப்படுவார்கள்? போகட்டும்: ஊரார் இஷ்டம். ரேடியோக் கிடையாது. பத்திரிகைகள் கிடையாது. அட, சினிமாக் கொட்டகைகளைக்கூட ஏழெட்டு மைல் போனால்தான் தரிசிக்கலாம். ''டென்ட்'' பேர்வழிகளும் இந்தப் பக்கம் தலைகாட்டுவதில்லை. மாரியம்மன் கோவிலும், கல்கட்டு மண்டபமும், அதில் பத்துப் பன்னிரண்டு பேர் வழக்கமாக உட்காருவதும், எப்போதும் போல்தான்; எந்த மாற்றமும் இல்லை. அவர்கள் பேச்சும் அப்படித்தான்; பாட்டன், பூட்டன் பேசியதையேதான் அவர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியில் நானும் இயங்கிக்கொண்டிருக்கிறேன்.

ஆனால் என் மகளுக்கு இதுபிடிக்குமா? மாப்பிள்ளை என்ன சொல்வாரோ. ஆகவே, கிரனூரின் ''தலையெழுத்''தையே தலைகீழாக்கி விடுவது என்று தீர்மானித்து, மாற்றியமைக்கும் பெரும்பணியில் ஈடுபட்டேன். அருமை மகளுக்காக இதுகூடவா செய்யக்கூடாது? செய்யவேண்டியதுதான்; நிச்சயம் செய்தாகவேண்டியதுதான்! அம்மன் கோவில் காப்புக் கட்டுவதுபோல் நானும் கங்கணம், காப்பு எல்லாமே கட்டிக்கொண்டுவிட்டேன்.



என் மனைவி முதலில் தயங்கினாலும் மாற்றும் முயற்சியின் ''உட்பொருளை'' அறிந்ததும் என்னைப் பாராட்டப் புறப்பட்டுவிட்டாள். ''நல்ல யோசனைதானுங்க. தீபாவளி அன்னைக்கு ஊரே ஜகஜ்ஜோதியா இருக்கட்டுமுங்க. நாலு பக்கத்திலும் ''கேஸ் லைட்'' போட்டு, வெடிய வெடிய எரிய விட்டா, பாக்கறவங்களுக்கு நிச்சயமா ஆச்சரியமும் சந்தோஷமாத்தானிருக்கும். ஊர் ''முச்சூடும்'' பெருக்கச் சொல்லி விடலாம். வாழைக்கண்ணுக, தென்னந்தடுக்குக்கா பஞ்சம்? சென்னிமலைக்கு ஆள் அனுப்பினா கொண்டாந்திடுவான். ஆனா ஒண்ணு மட்டும் எம் மனசுக்கு நல்லா இல்லீங்கோ'' என்றாள்.

''என்ன அது? தாராளமாச் சொல்லு'' என்றேன் நான்.

''அது தானுங்கோ, எல்லாக் கொழந்தைங்களுக்கும் பட்டாசுக் கட்டு வாங்கிக் குடுக்கறதுங்கற யோசனை' அதுக்குப் பதிலா வசதியில்லாக் குழந்தைகளுக்கு(முக்காலே மூணுவீசம் குடும்பங்களில் பால் வார்க்கும் வசதி இல்லை; இது பொது உண்மை) நாம பால் வாங்கி ஊத்தலாமே'' என்றாள் ஆர்வம் பொங்க..

''சரி அங்கீகரித்தோம். மெச்சினோம் உன் அறிவை.' என்று பலபடப் பாராட்டிவிட்டு, ''நீ என்னதான் தேனும் பாலும் அபிஷேகமே செஞ்சாலும், ''டப்டுப்'' புன்னு நாலா பக்கத்திலும் பட்டாசு வெடிச்சால்ல அது பண்டிகை? வாண வேடிக்கை நடத்தாத்தானே தீபாவளி? அப்போதான் அலைஅலையாக ஊருக்குள்ளே தோம்பு ஆவட்டம் வீசறதா அர்த்தம்'' என்றேன் நாசுக்காக.

மனைவியும் ''ஆம்'' என மகிழ்ந்தாள். எங்கள் திட்டம் இதுதான். மகளும் மாப்பிள்ளையும் இங்கே வருகின்றபோது, இது ஒரு பட்டிக்காடு என்கின்ற எண்ணமே தோன்றக்கூடாது அவர்களுக்கு. எங்கு பார்த்தாலும் ஒளிமயம்; மாவிலைத் தோரணங்கள்... அழகில் குளித்துக்கொண்டிருக்கிறதாம் கிராமம். ஒன்றுக்கு இரண்டாக ''டிரான்ஸிஸ்டர்களைக் கொண்டு சேர்ப்பது எனக்குப் பிரமாதமான விஷயம் அல்ல; என் வீட்டில்தான் ஒன்று எப்போதும் இருக்கிறதே; இன்னும் இரண்டை வாங்கி வந்து, சின்னப்பன் வெற்றிலை-பாக்கு -டீக்கடையில் ஒன்றை முழங்கச் செய்வது; இன்னொன்றை மாரியம்மன் கோயில் மண்டபத்தில் ஒலிக்கச் செய்வது. கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா? இடையிடையே பல வண்ண மத்தாப்புகளும்வாணவெடிகளும்எத்தனையோ கோலங்களைக் காட்டச்செய்யலாம். இலவசமாக வாங்கித்தந்தால் தங்களையே மறந்துவிட்டு நிறைய ஆட்கள் வந்து கூடிவிடுவார்கள்.

'இன்னொன்றையும் நான் மறந்துவிடவில்லை; அந்த ஊரில் நான் ஒருத்தன்தான் அத்தி பூத்தாற்போலப் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிறேன் என்று மாப்பிள்ளை கருதிவிடக் கூடாது அல்லவா? முக்கியமான நாலைந்து திண்ணைகளில் நாள்-வார-மாத மடல்களை வாங்கி நிரப்பிப் பரப்பி விடுவது, படங்கள் அதுவும் - சினிமாப் படங்கள்-நிறைந்த பத்திரிகைகள் என்றால் எல்லோரும் வைத்த கண் வாங்காமல் பாாத்துக்கொண்டே இருப்பார்கள். அதுகளைப் பார்த்துவிட்டு மாப்பிள்ளை மனம் மகிழ்ந்து நிற்பார், அந்த நேரத்திலே மகளின் சந்தோஷத்திற்கும்தான் அளவேது?

என் நோக்கமெல்லாம் இதுதான். பாப்புவின் கண்களுக்கு கிரனூர் இந்திர லோகமாகத் தோன்றவேண்டும். ''அடடே இது நம்ம ஊர்தானா?'' என்ற அதிசயம் அவளுள் நிரம்ப வேண்டும். மாப்பிள்ளையும் ''இது ஒரு லட்சியக் கிராமமாகவே தென்படுகிறதே' இப்படி 'மாடல்''கிராமம் என்றால் -பிறகு நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் வித்தியாசமே இராது'' என்று சொல்லும்படி எல்லாவற்றையும் செய்து முடிக்க வேண்டும்.



இதையெல்லாம் சாதிப்பதில் காளியப்பன் ஒத்துழைப்பான். அவனுக்கு வேலை ஏதும் கிடையாது. மற்றவர்களுக்காக ஏதாவது வேலை செய்வதே அவன் வேலை. அவன் ஊருக்கு ஒரு பூங்காப்போல-தாகூர் அப்படித்தான் வர்ணித்திருக்கிறார் அவனைப்போன்ற ஆட்களை! ஊருக்கு ஒரு காளி தேவை என்றும் ரவீந்தரர் சொல்லியிருக்கிறார். எங்கள் ஊரோ ரொம்பச் சின்னது. ஆதலால் காளியப்பனை ''சுமைதாங்கி'' என்று அழைப்பது பொருந்தும். நிஜமான ''சுமைதாங்கிக்கு''வாய் ஏது? என்னத்தை வைத்தாலும் ஏற்கும். சுமக்கும். அப்படித்தான் காளி, நான் இட்ட பணிகளை அவன் எவ்வளவு அடக்கமாக ஆனால் எவ்வளவு வேகத்துடன் செய்துமுடித்தான் தெரியுமா?

வீடுகளைச் சுற்றி, ஊரைச்சுற்றி, சந்து பொந்துத் தடத்திலெல்லாம் சிதறிக் கிடந்த கற்களை முதலில் கூட்டி எடுத்தான் காளியப்பன். சிறுசிறு கற்களாகப் பத்துக் கூடைக்கும் அதிகமாகவே சேர்ந்திருக்கும்.

ஊர்திருத்தம், சீர்திருத்தம் என்பது பெரிய விஷயம், ஐயா! ஊருக்குள்ளே ஒரு சின்ன அழகுத் திருத்தத்தை நிலைநாட்ட முற்பட்டபோதுதான், ''உண்மை இப்படியிருக்கிறதா'' என நான் மலைத்துப் போவேன். பாப்பு கலியாணத்தின் போது எள்ளத்தனைகூட எங்களுக்குச் சங்கடமே இல்லை. சென்னையில் ஒரு கலியாண மண்டபத்தில் திருமணத்தை நடத்தினோம். ஆஹா கலியாண மண்டபத்தில்! நாம் துரும்பைக்கூடஎடுத்துப்போட வேண்டியதில்லை. ராமகதையைப் பத்து வரிகளில் ரத்தினச் சுருக்கமாகச் சொன்னாற்போல், மண்டப மகாத்மியத்தையும் . மூன்றே வரிகளில் பாடிவிடலாம். வாடகைப் பணத்தைத் தந்தோம்; ராஜாவைப் போல் விவாகத்தை இனிதே நடத்தினோம்; ''ஜாம்ஜாம்'' என்று பெண்ணையும் மாப்பிள்ளையையும் அழைத்துக்கொண்டு வீடு வந்தோம்.

அப்படி அனுபவம் கிடைக்கப் பெற்ற நாங்கள் இன்று என்னசெய்கிறோம்? என் மனைவி என்ன செய்கிறாள், என்று நான் மெதுவாகப் பார்க்கிறேன். வீட்டினுள் விளக்கை ஏற்றுமுன் கோலமிட்டு உள்ளும் புறமும் பிரகாசமடையச் செய்ய வேண்டி இருக்கிறது. அவளுடன் மற்றப் பெண்மணிகளும் சேர்ந்து கொண்டு ஊர் முழுக்கக் கூட்டித் தள்ளினார்கள்; பெருக்கித் தீர்த்தார்கள்; தண்ணீர் தெளித்தார்கள். தண்ணீர் குடிப்பதற்கே அடித்தட்டும் கிராமம்; எங்காவது இரண்டொரு தோட்டக் கிணறுகளில் தான் தண்ணீர் அதல பாதாளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும். அது மட்டும்போதுமா? காங்கேயத்திற்கு ''பீப்பாய் வண்டி''த் தண்ணீருக்கு காளியப்பன் எத்தனையோ தரம் போய் வந்துவிட்டான். அவனுக்கு இருட்டைக் கண்டு அச்சமா? அர்த்த ராத்திரியிலும் ''வண்டித்தண்ணீர்'' அண்டா அண்டாவாகக் கொண்டு வருகிறான். அட்டாறியில் போட்டு வைத்திருந்த அடுக்குப் பாத்திரங்கள் ஒவ்வொன்றாகத் தலைகாட்டுகின்றன. எங்கள் வீடு மட்டுமா? எல்லா வீடுகளும் மும்முரமாக முனைந்து நிற்கின்றனவே! யாராவது முதலில் இப்படி ஆரம்பிக்க முன்வந்தால் போதும்போல இருக்கிறதே! ஒரு மாணவன் எந்தக் காரியமாக இருந்தாலும் இன்று ''கோஷிக்க'' ஆரம்பித்தால் அப்புறம் ஊர்வலங்கள். கூட்டங்கள் தமாஷான ''கலவர''ங்கள் வரை படிப்படியாக வளர்கிறதல்லவா? அவ்விதம் கிரனூரே அலவோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

இரவு இரண்டு மணி. துப்பறியும் நாவலில் வருகிற சி.ஐ.டி. போல் நான் கொட்டக் கொட்ட விழித்துக்



கொண்டு, என்னத்தையோ செய்து கொண்டிருந்தேன். செய்வதற்கா காரியம் இல்லை? சுவர்களில் படங்களை மாட்டினேன். என் மனைவியோ தையல் கலையில் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றவள் போல், பூவேலைகளிலும், நூல் வேலைகளிலும், பின்னல் வேலைகளிலும் முனைந்திருந்தாள். அதிசயப்படும்படி தன் கருத்தை அவற்றிடை ஒட்டிக்கொண்டிருந்தாள். அவள் விரல்கள் நடனமாடின.

மகளும் மாப்பிள்ளையும் வருகிறார்கள். அவர்களை மகிழ்விக்க வேண்டும் என்று நாங்கள் இருவருமே ''மாறி'' 'விட்டோமா? எங்களை மாற்றியமைத்துக் கொண்டு விட்டோமா? கிராமத்தையே ''உரு''த் தெரியாமல் மாற்றிக் கொண்டிருக்கிறோமே! இந்தப் ''புதுமை'' எங்களுக்குள் எவ்விதம் புகுந்தது?

இரவு மணி நான்கு... நானும் தூங்கவில்லை. அவளும் தூங்கவில்லை. நாளை மாலை வரை, அவர்கள் இருவரும் வரும்வரை எங்களுக்குத் தூக்கம் எப்படி வரும்? ''மாடு கண்ணு என்னாச்சு? பண்டம்- பாடிகள் என்னாகும்? தோட்டம் காடு என்னாச்சு? பயிர் பச்சை என்னாகும்? ஆவதென்ன? உண்மையில் ,அநத நினைப்பெல்லாம் காத தூரத்திற்கு மேல் சென்றுவிட்டது. பாப்பு வருகிறாள்; கணவனுடன் வருகிறாள்; தலைதீபாவளி, ஆகவே, பண்டைக்கிராம வரிசையில் சேர்ந்திருந்த எங்கள் 'கிரனூரை நவீன நாகரீகத்தின் தலைவாசலுக்கே கொண்டுவந்து நிறுத்திக் கொண்டிருக்கிறோம்.

எனக்கு அப்போது தாராசங்கர் பானர்ஜி எழுதிய ''பஞ்சமூர்த்தி'' என்கின்ற நாவல் நினைவுக்கு வருகிறது. மலின் என்பவன் அந்தக் கதையின் நாயகன். அவன் ஓர் கலைஞன். அத்துடன் ஒரு அதிசயப் பிறவி. மண் பாண்டங்களையும், உயிருள்ள பாண்டங்களையும் அக்கதையில் மோதவிட்டு வேடிக்கை பார்க்கிறார் ஆசிரியர். மண் பாண்டங்களுக்கும் மாயக் குயவனார் பாண்டங்களுக்குமிடையேமோதல். ''அழகுச்சந்தை''யிலிருந்து ஆத்மாவின் கதறல்வரைக்கும் மலின் பார்த்தும் கேட்டும் தீர்ந்தாயிற்று. அவன் ''கேள்வி''க்கு விடை எங்கும்கிடைக்கவேயில்லைநாட்டையும் வலம் வந்துவிட்டான். அனைவரும் ''கேட்டு''க்கொண்டே இருக்கிறார்கள்'. எல்லாம் புதிர்; எல்லாம் பொய்; எல்லாம் வீண்; எல்லாம் கனவு! ஆம் வாழ்க்கையின் அர்த்தம் என்ன? எதற்காக மனிதன் வாழ வேண்டும். மலின் பதிலைத் தேடி அலைந்து களைத்துப் போகிறான்; சலித்து நிற்கிறான்; இறுதியில், சஞ்சலங்களுக்குள் கால் சிக்கி நிற்கிறான். வீழ்ந்துவிட்ட அவன் மனத்தைத் தூக்கி நிறுத்துகிறாள் ஒரு கன்னி. அவள் வேறு யாருமல்ல; அவனுடைய மகளேதான். ஆனால், புதல்விக்குத்தந்தையை அடையாளம் தெரியாது. மலின் கண்டுகொள்கிறான்.

வாழ்க்கை மீண்டும் அவனை அழைக்கிறது....

மலினுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமே இல்லை. என்னுடையதோ சீரான வாழ்க்கை. ஆயினும், படித்துக் கொண்டும் எழுதுக்கொண்டும் இருக்கிற இந்த ஆசாமி ''ஒரு மாதிரி'' என்றுதான் மற்றவர்களுக்குப் பட்டது' ''மண்ணிலே இவருக்கு என்ன ஆனந்தம்? ஆட்டுக் காலுக்குப் பின்னாலே வேலியோரம் இவர் என்ன சந்தோஷத்தைக் காணகிறார்?'' என்றே ஊரில் பலரும் எண்ணினார்கள். என் மனைவியை சுத்தக்கர் நாடகம் என்று ஊரிலுள்ளவர்கள் சொல்லாமல் என்ன பண்ணுவார்கள்? இருக்கிற கொஞ்சம் பூமியைக் குத்தகைக்கு விட்டு விட்டு, முகத்தில அழுக்குப் படியாமல் ராஜாத்தி மாதிரி வீட்டில் உட்கார்ந்துகொண்

# வெண்பாப் போட்டி-1

**ஈற்றடி : பெண்ணினம் பெற்றதே பேறு**

**வெண்பா வந்து சேர வேண்டிய இறுதி நாள் :15.4.1989**

தகுதி படைத்த வெண்பாக்கள் வெளியிடப்பெறும். அவற்றில் பரிசு பெற்ற வெண்பாவை எழுதியவருக்கு ஓராண்டு 'தமிழரசு' இலவசமாக அனுப்பப்படும்.

குறிப்பு: அஞ்சல் அட்டையில் வெண்பாவை எழுதி அனுப்பினால் போதும். தேர்ந்த வெண்பாக்களே அனுப்பப்படல் வேண்டும்.

**வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:**

**ஆசிரியர், (வெண்பாப் போட்டி)**
**தமிழரசு அலுவலகம்,**
**அரசினர் தோட்டம்,**
**சென்னை-600002.**

டிருந்தால் மற்றவர்கள் ஏதும் கூறியிருக்கமாட்டார்கள் அல்லவா?

சென்ற மாதம் கல்கத்தாவிலிருந்து ஒரு வார இலக்கிய ஏட்டின் விசேஷ விமர்சிகை என்னைப் பேட்டி காணக் கிராமத்திற்கு வந்திருந்தாள். அந்தப் பெண் அதிசயத்தோடு, "நகரத்தை விட்டு ஒதுக்குப்புறமாகக் கிராமங்களில் இரண்டொரு நாவல் ஆசிரியர்களே அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள்" என்று ஆரம்பித்தாள். விசேஷச் செய்தி சேகரிக்க வந்திருந்த பெண்ணிடம் எனக்குப் பரிதாபமே ஏற்பட்டது. எவ்வளவு கஷ்டப்பட்டு வழி கண்டுபிடித்து தோட்டத்திற்கே வந்திருக்கிறாள்! ஊர் நிலைமையைப் பற்றிப் பொதுவாக விமர்சித்தாள். நான் காதில்கூடப் போட்டுக் கொள்ளவில்லை. போட்டோக்கள் பல எடுத்தாள். என்னையும் மனைவியையும் பல 'போஸ்''களில் படம் பிடித்தாள். அப்படி எடுத்தும் ஆனந்தம் பிறக்கவில்லை -இன்று மட்டும் ஏன் இத்தனை சந்தோஷம்?

மணி ஆகிவிட்டது; மேலும் ஆகிக் கொண்டிருக்கிறது. பகல் முழுக்க ஒரே வேலை! மனைவியோ "சிட்டாக"ப் பறந்துகொண்டிருக்கிறாள். கதாசிரியர்கள் சர்வ சாதாரணமாக எழுதிவிடுகிறார்களே; "விடிந்தால் தீபாவளி" [illegible] "விட்டதையா!" என்னை அது போட்டுப் படாத பாடு படுத்துகிறது; ஒரு இன்பப் பரபரப்பு, மோகனக்கிறக்கு. எல்லா வாத்தியங்களின் சல்லாபமும் நெஞ்சக்குள்!" பாப்பு வருகிறாள். வரப்போகிறாள்! "சைக்கிள் மணி அடித்தது. அதற்கு முன்பும் சில சைக்கிள்களின் மணிகள் சப்தித்திருந்தன. ஆனால், அந்த ஒலி தந்திச் சேவகனுடையது. ஆம் எதிர்பார்த்த தந்தி வந்தாக வேண்டுமே'

"மாப்பிள்ளை என்ன "புரோகிராம்" தருகிறார்?" என எழுந்து சென்று வாங்கிப் பிரித்தேன்:

"மன்னிக்கவும். நாங்கள் இந்தத் தீபாவளியைக் காஷ்மீரில் கொண்டாடுகிறோம். அடுத்த தீபாவளி கிரனூரில்"

ஒரு தரம். இரண்டு தரம்...எத்தனை தரம் படித்தாலும் சேதி அதுதான். விவரம் அதுதான். இந்தத் தகவல் வந்தாலும் வரும் என்று நான் ஒரு எண்ணத்தலை எண்ணக் காரணமுண்டு. என் நண்பர் ஒருவர் டூரிஸ்ட் (ரயில்)கம்பெனி ஒன்று நடத்தி வருகிறார். நாற்பது நாள் பிரயாணம். இங்கிருந்து டில்லி, ஆக்ரா, காஷ்மீர் சென்று திரும்புகிறார்கள். கம்பெனி அதிபரின் மகளும் என் மாப்பிள்ளையும் நண்பர்கள். "காஷ்மீருக்கு ரயில்வே போறதுன்னா?" என்று மாப்பிள்ளை கேட்டதுமே "ஆஹா! பட்டு விடு, ஜுவர்க் குவிப்பு" என்று என் மகள் ஆமோதிக்கத் தொடங்கிவிட்டாள். முதலில் பாப்பு என்னிடம் இதைச் சொன்னபோது "விளையாட்டு" என்று நினைத்தேன். இப்போது? தலைத் தீபாவளிப் புடவையும், ஜரிகை வேஷ்டியும், ஊரே அழகை அள்ளிச் சூடி விழாக்கோலம் பூண்டு நிற்பதும் - யாருக்காக இதெல்லாம்?

மனைவியிடம் தந்திச் சமாசாரத்தைத் "தந்தி"போல் சுருக்கமாகக் கூட என்னால் சொல்லமுடியவில்லை. எனவே ஏற்பாடுகள் தொடர்ந்தன. "எங்கே இன்னும் அவர்களைக் காணோமே' என்று என் மனைவி விடிய விடியக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு வீட்டிலும் குளிப்பும் கொண்டாட்டமும்; 'பட்டாசுகளின் இன்பநாதம். காளிதான் பாவம், வாசலில் காத்துக் கிடந்தான்.

விடிந்தது. மனைவி வாயே திறப்பதற்கில்லாமல், உரிய முக்கியத்துவம் கொடுத்து, "அவர்கள் அடுத்த தீபாவளிக்குத்தான் வருவார்கள். இந்தா கட்டு புதுப் புடவையை! நான் புது வேட்டியைக் கட்டிக் கொள்கிறேன். துளிக்கூட முகத்தில் வேறு உணர்ச்சிகளைக் காட்டக்கூடாது" என்று அதட்டலாக, அழுத்தலாக உத்தரவைப் போட்டேன்.

அப்புறம் ஆடைகள் அணிந்து காளிக்கு வேஷ்டியும் துண்டும் பட்டாசும் எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தோம்.

"அதோ காரு வருதுங்கோ" என்று வெங்கமேட்டு முகட்டைக் காட்டினான் காளி-அந்த மேட்டில் என்ன வந்தாலும் ஊரிலிருந்து பார்த்தால் தெரியும்.

"ஆமாண்டோய்' நாங்கள் கத்தியே விட்டோம்; உற்சாகத்தைத் தாங்க முடியவில்லை.

மாப்பிள்ளையின் அன்புக் கட்டளையைப் பாப்பு ஏற்றுக்கொண்டாள். எங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்க அவர்கள் விரும்பவில்லை. அடுத்த ஆண்டு காஷ்மீர் போவார்கள். ஆக, சரியான நேரத்திற்கு வந்துவிட்டார்கள்.

இந்தத் தலைத் தீபாவளிக்குக் கிரனூர்தான்.

நடக்கவேண்டியதையெல்லாம் ஒரே கணத்தில் தீர்மானித்தேன். மனைவி மெதுவாகப் புதுப்புடவையை மடித்து மகளுக்குத் தந்துவிடுவாள்.

மாப்பிள்ளைக்கு? புதுவேட்டி வாங்கிக் கொண்டுவர காளியைக் கார்த்திகேயத்திற்கு அனுப்ப வேண்டியதுதான்.

(சுதேசமித்திரன் 1967 தீபாவளி மலர்)





# நூல் நயம்

## பாவேந்தர் படைப்பும் வாழ்க்கையும்

ஆசிரியர்: டாக்டர் மா.அண்ணாதுரை.
வெளியீடு: பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600004

விலை ரூ.12 பக்கம்:118

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் சிறுகதைகள் — சில கடிதங்கள், அவரால் போற்றப்பெற்ற சில தலைவர்கள், தியாகராஜகீர்த்தனைகள் சிலவற்றிற்குப் பாவேந்தர் எழுதிய தமிழ் மொழிபெயர்ப்புப் பாடல்கள் மற்றும் சில கட்டுரைகளை நூலாசிரியர் ஆய்வு வழியில் நின்று உருவாக்கியிருக்கிறார்.

சிறுகதை எழுதுவதில் பாவேந்தர் கையாண்ட உத்திகளும் அவரது கொள்கைகளும் தெளிவாக்கப்பட்டுள்ளன. ரத்தினச் சுருக்கமாகக் கடிதம் எழுதுவது பாவேந்தரின் பழக்கம் என்பதும் நிறுவப்பட்டுள்ளது. காந்தியடிகள், சிதம்பரனார், திலகர் ஆகியோரிடம் பாவேந்தர் வைத்திருந்த பேரன்பை இந்நூல் எடுத்துரைக்கிறது. தெலுங்குக் கீர்த்தனைகளைத் தமிழாக்கியதிலிருந்து ,பாவேந்தருக்கிருந்த பிறமொழி அறிவும், இசைத்திறனும் தெற்றென விளங்குகிறது. அவரது பிறந்தநாள் எது என அவரே குறிப்பிட்டிருப்பது சிறந்த ஆவணமாகத் திகழ்கிறது. இந்த அரிய ஆய்வு நூலின் நடை நம்மைக் கவர்கிறது.

— எஸ்.எஸ். சுந்தரம்

## சித்திரைப் பாவை

ஆசிரியர்: புலவர் அ.புனிதவதி
வெளியீடு: அபிராமி பப்ளிகேஷன்ஸ், 307, லிங்கி செட்டித் தெரு. சென்னை-600001

விலை: ரூ.5 பக்கம் 68

சமயம், சமூகம், தமிழ், தமிழ்க் கவிஞர்கள், பல்கலை எனப் பல துறைகளைச் சேர்ந்த 16 கவிதைகளைக் கொண்ட நூல் இது. அனைத்தும் மரபுக் கவிதைகளாக விளங்கி,படிப்பார்க்கு மகிழ்ச்சியை ஊட்டுகின்றன. உவமைச் செறிவும் சொல்லாட்சியும் நிறைந்து காணப்படுகின்றன. 'சித்திரைப் பாவை' என்னும் தலைப்புள்ள கவிதை அருமை.' ஆசிரியப்பாவிலும் நூலாசிரியரின் திறமை மின்னுகிறது. பல்வேறு யாப்பிலும் சுவையாகக் கவிதை எழுதியுள்ளார் நூலாசிரியர்.

—தமிழ்ப்பித்தன்

## உயிர்ச் சுடர்

ஆசிரியர்: கலைப்பொழிலன்

வெளியீடு: கலைப்பொழிலன் பதிப்பகம், 3.இராசமாணியத் தெரு. குன்றத்தூர், சென்னை-61

விலை: ரூ.15 பக்கம்:147

சமுதாயச் சீர்கேட்டினைக் கண்டித்துப் படைக்கப்பட்ட குறுங்காவியம் இது. காட்சியியல் ,கனவியல், கற்பியல் என மூன்று பகுதிகளாகக் கொண்டுள்ளது.

வருணனைகளும், கவிபுனைந்த விதமும், நிகழ்ச்சித் தொடரும் மிகவும் சுவையாக அமைக்கப்பட்டுள்ளன.

'சாதித் திமிங்கலத்தைச் சாடி எதிர்த்தால் தான் காதல் கடலிலே கைகோத்து நீந்தலாம்' என்ற கவிஞரின் கனிப்பு சிறப்பானது.

இறைவனின் சன்னதியில் கூட இன்று நிலவும் ஏற்றத்தாழ்வினை,

'தர்ம தரிசனத்தின் தகுதி
தரிசனம்
ஆவது மறியீரோ ஆலயங்களிலே
நீர்
ஐந்தும் பத்துமாய் ஐம்பதும்
நூறுமாய்

தெய்வத்தைக் காணவும் தேவை பணம் இப்போ ! என ஆசிரியர் சாடுங்குமுறும் பாங்கு சமுதாயத்தின் இழிநிலையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

## புல்தரை

ஆசிரியர்: டாக்டர் வி.லோகநாதன்
வெளியீடு: டாக்டர்வி.லோகநாதன் 53-5, கிரீன்பீல்டு, உதகை-643001

விலை: ரூ.15 பக்கம்: 110

ஆறு சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு நூலிது. அனைத்திலும் கதையோட்டம் நல்ல விறுவிறுப்பு. புதுக்கவிதை பற்றிய ஆராய்ச்சி நூல்கள் பல எழுதியதாலோ, என்னவோ, ஆங்காங்கே கவிதை நடையிலேயே சம்பவங்களை வர்ணித்துள்ளார் ஆசிரியர்.

பசுத்தோல் போர்த்திய குணக்கேடர்களின் உண்மை உருவத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது 'கதை பிறந்த கதை' என்ற சிறுகதை.

நல்ல குடும்பத்தில் பிறந்தும் சூழ்நிலையால் வஞ்சிக்கப்பட்ட அந்தக் கதை நாயகி தன் வாழ்வில் நேர்ந்த விபத்தை வர்ணிக்கும்விதம் அருமை,

ஆசிரியரின் எழுத்தாற்றலை 'கிராமிய மெட்டுகள்' சிறுகதை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

-வி.இராவணன்.

## எமெர்சன்

ஆசிரியர்: டாக்டர் சோ.சேசாசலம்
வெளியீடு: குமரிப் பதிப்பகம், 15, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம்-611 001


விலை: ரூ. 9 பக்கம்: 96

உலகச் சிந்தனையாளர்கள் வரிசையில் முக்கிய இடத்தை வகிப்பவர் அறிஞர் எமெர்சன். அவர் மிகச் சிறந்த கவிஞர்; நூலாசிரியர், பேச்சாளர். அவரது நூல்கள் இன்றும் பயனளித்து வருகின்றன. அவரது வாழ்க்கை அனுபவங்கள், அனுபவ மொழிகள் எல்லாம் கால காலத்துக்கும் உதவுபவை. அவர் முதிய வயதிலும் கூட, சமூகத் தொண்டாற்றுவதில் ஆர்வம் காட்டினார்.

மூடநம்பிக்கைகள் மற்றும் சமயக் கோட்பாடுகளை எதிர்த்து வீரப்போர் புரிவதொன்றையே தன்னுடைய வாழ்வின் இலட்சியமெனக் கருதி வாழ்ந்து வந்தார். அவரது வரலாற்றை, சிந்தனைகளை அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் நூலாசிரியர்.

—பி.வி.கி

மாணவர் பக்கம்



# எழில் நலத்துக்கு எலுமிச்சம்பழம்



எலுமிச்சம் பழம் மங்கள காரியத்துக்கு மட்டுமல்ல, மருந்துக்கும் பயன்படுகிறது. அதன் மகிமையைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

உடல் வலிமையிழந்தவர்களுக்கு 100 கிராம் ஸ்மிஸ் பழத்தைத் தூய்மைப்படுத்தி, பாட்டிலில் போட்டு, அதில் எலுமிச்சம் பழ ரசத்தைப் பிழிந்து, தண்ணீர் கலந்து இரவில் திறந்து வைத்துவிட்டுக் காலையில் எழுந்தவுடன் முகம் கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு இந்தப் பாட்டிலிலுள்ள ரசத்தை தண்ணீருடன் கலந்த குடித்துவிட்டு, மேலும் இறுத்துக் குடித்துவிட்டு, மேலும் ஊற வைத்த ஸ்மிஸ் சிலவற்றைத் தின்னலாம். இப்படி நாள்தோறும் உபயோகப்படுத்திக்கொண்டு வந்தால், உடல் வலிமையில் அற்புதமான வளர்ச்சியைக் காணலாம்.

தக்காளி, கேரட், கொத்தமல்லிக் கீரை, பால்கீரை இவைகளை நன்றாகச் சிறுகச் சிறுக அரிந்து, ஒன்றாகப் போட்டுக் கலந்து பாட்டிலில் அல்லது ஜாடியில் அடைத்து வைத்துக் கொள்ளவேண்டும். உணவிற்குச் சிறிது நேரத்திற்கு முன்பே சிறிது அளவு எடுத்து எலுமிச்சம்பழ ரசத்தைப் பிழிந்து சிறிது உப்புச் சேர்த்துச்சாப்பிட்டுக் கொண்டுவந்தால் நீண்டகாலமாகத் தொல்லை கொடுத்துவரும் மலச்சிக்கலிலிருந்து நிவாரணமடையலாம்.

எலுமிச்சம்பழத் தோல்களைக் கந்தகத்தோடு கலந்து புகை போட்டால், மூட்டைப்பூச்சிகள் மறைந்துவிடும்.

எலுமிச்சம்பழத்தை நன்றாக வெயிலில் காயவைத்து, சாற்றைத் தண்ணீரில் கலந்து தெளித்து விட்டால், ஈ, எறும்புகள் மொய்ப்பதைத் தவிர்க்கலாம்.

சில்க், உல்லன் துணிகளில் ஏமோ வியா கறை பட்டுவிட்டால், உடனுக்குடன் எலுமிச்சம்பழரசத்தைப் போட்டுத் துவட்டினால் கறை அகன்றுவிடும்.

தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவெங்கும் எலுமிச்சம்பழ ஊறுகாய் பெயர் பெற்றது. நன்றாகப் பழுத்த பழங்களைத் தோலுடன் சிறியதாக அறுத்து மண்பாத்திரத்தில் போட்டு உப்பு, மிளகாய்ப் பொடி கலந்து, வெயிலில் சில நாட்கள் வைத்தால் அந்த வெப்பத்தில் காய்கள் துவண்டுவிடும். அவற்றை எடுத்துத் தாளித்து வைத்துக் கொண்டு, சாப்பாட்டுடன் அளவோடு உபயோகித்து வந்தால் உடல் நலத்திற்கு மிகவும் நல்லது.

—திரு கெ. ரா. வேலாயுதம் எழுதிய 'எலுமிச்சம்பழம்' எனும் நூலிலிருந்து

# மழையே மழையே வா! வா!

புலவர் க. அண்ணாமலை



மழையே மழையே வாவா
மண்ணும் குளிர்ந்திடப்பெய்திடவா-

(மழையே)

உழைக்கும் உழவர் மகிழ்ந்திடவே
உலகில் வறுமை நீங்கிடவே
தழைக்கும் மரம்செடி வளர்ந்திடவே
தரணியில் நதிகுளம் நிறைந்திடவே-

(மழையே)

கண்ணில் தெரியா தெங்கேநீ
கரந்து நீயும் வாழ்கின்றாய்
விண்ணில் நின்று சிலகாலம்
வேடிக்கை காட்டி மறைகின்றாய்-


(மழையே)

மன்னன் பாரி கொடைக்குன்னை
உவமை சொல்லிப் புகழ்கின்றார்
சின்னக் கையால் பிடித்திடவே
சேர்ந்து வீதியில் ஓடிவந்தோம்-

(மழையே)

அம்புகள் போல விழுகின்றாய்
அஞ்சி வீரும் ஓடுகின்றார்
செம்புக்குடத்துள் உனைப்பிடித்தோம்
சிரித்துப் பார்த்தோம் உனைக்காணோம்-

(மழையே)




## மாணவர்கள் வடிவமைக்கும் விண்வெளிக்கலங்கள்

அமெரிக்காவில், மாணவர்கள் விண்வெளிக் கலங்களை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தின் மெலிதான வாயுமண்டலத்திற்குள் பறப்பதற்கு ஏற்ற, லேசான ''ஆய்வுக் கோள்'' ஒன்றை வடிவமைக்கும் பணியில் இவர்கள் முனைந்துள்ளனர். இந்த மாணவர்களில் ஒரு பிரிவினர் இந்த ஆய்வுக்கோளை வடிவமைப்பார்கள். இன்னோர் பிரிவினர் இந்த ஆய்வுக்கோளைச் செவ்வாய்க் கிரகத்துக்கு ஏந்திச் செல்லக் கூடிய விண்கலத்தை வடிவமைப்பார்கள்.

மாணவர்களின் இத்திட்டத்திற்கு அமெரிக்க விண்வெளி நிறுவனமும், (நாஸா) அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் ஆய்வுக்குழுவும் உதவி அளிக்கின்றன.

புதிய உத்திகளை மாணவர்கள் உருவாக்குவதற்கு இத்திட்டங்கள் உதவுவதுடன், பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டங்களை மேம்படுத்தவும் இவை உதவுகின்றன.



## விளையும் பயிர்

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தேசிய மேல் நிலைப்பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர் வி. அருள்நாதன். இவர் பல்வேறு பத்திரிகைகளில் துணுக்குகள் கவிதைகள் எழுதி வருகிறார், நாட்டு நலப் பணித் திட்டத்திலும் ஈடுபட்டுள்ளார்.

## தெரிந்து கொள்ளுங்கள்!

சிப்பியில் ஒரு முத்து விளைவதற்கு 15 முதல் 20 ஆண்டுகள் ஆகின்றன.

∴ ∴ ∴

அஜந்தாவிலுள்ள 27 குகைகளையும் வெட்டிச் செதுக்கி முடிக்க 700 ஆண்டுகள் பிடித்தனவாம்.

∴ ∴ ∴

கரையான் தின்னாததும், காளான் உண்டாகாததும் இரும்புத் துரு ஏறாததுமான ஒரே மரம் தேக்குதான்.

∴ ∴ ∴

மனிதனின் விரலில் உள்ள நகம், ஓர் ஆண்டில் இரண்டரை அங்குல நீளம் வளர்கிறது.

∴ ∴ ∴

முதலையானது கண்களைத் திறந்து வைத்துக் கொண்டேதான் தூங்கும்.

# உழைப்பாய்! வெல்வாய்!

—கவிஞர் இராசதேவன்

உழைப்பே உயர்வு, உழைப்பே இறைவன்
உழைப்பே உண்மை, உழைப்பே சத்தியம்
உழைப்பே உயிர், உழைப்பே மானம்
உழைப்பே உண்மை, உழைப்பே உடல்!

உழைப்பாய் தம்பி! உழைப்பாய் யாண்டும்
தழைப்பாய் இனிநீ, தழைப்பாய் என்றும்!
விடுவாய் விதியை! தொடுப்பாய் மதியை!
உழைப்பாய்; உயர்வாய்; உழைப்பாய்; வெல்வாய்!

தன்னிலே தன்னைக் காண்பது அறிவு.
— சாக்ரட்டீஸ்

தீமை செய்தால் தீமை செய்வது உலக வழக்கம். ஆனால், தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வது உத்தமர் வழக்கம்.
— குரு நானக்

பிறருடைய வாழ்க்கையைப் பெருமைப்படுத்தியவர்களின் வாழ்க்கை எவ்விதத்திலும் தோல்வியடைந்தது என்று சொல்ல முடியாது.
— [illegible]

அறிவு தன்மானத்தைத் தோற்றுவிக்கிறது. சிந்தனை அதை உறுதிப்படுத்துகிறது. அறிவு மனிதனின் மனத்தைத் தன்பால் இழுத்து, தீங்கும், கொடுமையும் விளைவதினின்றும் அவனை விலகச் செய்கிறது.
— ரூஸோ

உடலுக்கு ஆன்மா எப்படியோ, மரத்திற்கு வேர் எப்படியோ, அப்படிச் செயல்களுக்குச் சரியான நோக்கங்கள் இன்றியமையாதவை.
— [illegible]

மனிதர்கள் அவர்களுடன் சேர்ந்த மற்ற மனிதர்களுக்கு நன்மை செய்வதிலேயே தேவர்களைப் போல விளங்குகின்றனர். வேறு எதிலும் அவ்வாறு விளங்குவதில்லை.
— [illegible]

# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தோட்டக் கலை



வேளாண்மைப் பிரிவின் ஓர் அங்கமாக இருந்த தோட்டக்கலை 1979ஆம்ஆண்டில், ஒரு தனித்துறையாகப் பிரிககப்பட்டு, தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் இயங்கிவரும் சீதோஷண நிலையும், புவி அமைப்பும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு மிகப் பொருத்தமாக இருப்பதால் தோட்டக்கலைப் பயிருக்கென இத்துறை தனியாகப் பிரிக்கப்பட்டது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்தோட்டக்கலை அலுவருக்குரிய தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் திருநெல்வேலியில் 1971ல் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் அவர்கள் பொறுப்பில் பிரிவு படாத திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரிமாவட்டத்தில் நடைபெறும் தோட்டக்கலைத் திட்டங்கள் இருந்தன.

1978ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்துத் திட்டம் செயல்படத் துவங்கிய பின், கன்னியாகுமரி மாவட்டம், தோட்டக்கலை உதவி இயக்குநர் பொறுப்பிலும், இரு மாவட்டங்களிலும் செயல்படும் தோட்டக்கலைத் திட்டங்களை மேற்பார்வையிடத் திருநெல்வேலி தோட்டக்கலைத் துணை இயக்குநர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்விரு மாவட்டங்களிலும் ஏறத்தாழ சுமார் 25-30 இலட்சம்ரூபாய் செலவில் ஏற்படக்கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மட்டும் 18 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.

தோட்டக்கலைத் துறையினரால் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்துத் திட்டம் மற்றும் அதைச் சார்ந்த இடங்களில் பழப்பயிர் மற்றும் வாசனைத் திரவியப் பயிர் மேம்பாட்டிற்கான மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்துத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பயன் பெறும் விவசாயிகளுக்கு 50% மானியத்தில் தரமான பழக்கன்றுகள் மற்றும் வாசனைத் திரவியப் பயிர்களின் கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன. நடப்பு ஆண்டில் அத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 2.25 இலட்சத்தில் இதுகாறும் ரூ. 2.16 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 260 எக்டேர் குறியீட்டில் இதுகாறும் 233 எக்டேரில் பழம் மற்றும் வாசனைத் திரவியக் கன்றுகள் நடவு செய்ய 50% மானியத்தில் விநியோகம்செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், சிறு மற்றும் குறு விவசாயிகள் 229 பேர் பயன் அடைந்துள்ளனர்.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் காய்கறி பயிரிடும் பரப்பை அதிகரிக்கவும், மேம்படுத்தவும், காய்கறிப் பயிரில் தோன்றும் நோய், பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தத் தகுந்த தொழில் நுட்ப அறிவுரை வழங்கவும், காய்கறி அபிவிருத்தித் திட்டம் தோட்டக்கலைத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரமான சான்றிதழ் பெற்ற காய்கறி விதைகள் இவ்வாண்டு ரூ. 15,000 மதிப்பில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுவிட்டன.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வாழைச் சாகுபடிப் பரப்பு நடப்பு ஆண்டில் அதிகரித்து உள்ளது. வாழையில் தோன்றும் நோய் மற்றும் பூச்சி தாக்குதலிலிருந்து தகுந்த அறிவுரை வழங்கவும், விஞ்ஞான ரீதியாக வாழைச் சாகுபடி பற்றிச் செயல்விளக்கம் செய்து காண்பிக்கவும், வாழை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் 15 மாதிரித் திட்டங்கள் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு மானியமாக ரூ. 5000, இடுபொருள்களாக வழங்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் குற்றாலத்தில் ஐந்தருவி அருகே அரசுத் தோட்டக்கலைப் பண்ணை 1959ல் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது. தமிழ் மாநிலத்தில மிதவெப்பப்பயிரும் (கிராம்பு, மிளகு) வெப்பப்பிரதேசப் பயிரும் (மா, பலா, கொய்யா) ஒருங்கே சாகுபடி செய்யப்படும் பண்ணை இதுவாகும். இப்பண்ணையில் இம்மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான தரமான மா, பலா மற்றும் வாசனைத் திரவியப் பயிர்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படும். கடந்த ஆண்டு இப்பண்ணை 1.5 இலட்சம் ரூபாய் நிகர லாபம் அடைந்துள்ளது. இவ்வாண்டும் இதே அளவு நிகர லாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டங்கள் தவிர, பயறு வகை, காய்கறி சிறுதளைத் திட்டம் 10 வட்டாரங்களில் ரூ. 40,000 செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு 0.2 எக்டேரில் பயிரிடக்கூடிய பயறுவகை, காய்கறிக்குத் தேவையான விதைகள், அடையாளத் தொகையாக ரூ. 5 பெற்று வழங்கப்படுகின்றன. மேலும் மலைச் சரிவுப் பகுதிகளில் மிளகு பயிரிடும் விவசாயிகளுக்கு, மிளகு அபிவிருத்திக்கென உரம் மற்றும் பூச்சி மருந்து (ரூ.75 மதிப்புள்ளது) 20 கொடிக்காலுக்கு இடக்கூடிய அளவு, அடையாளத் தொகையாக ரூ. 10 பெற்றுக் கொண்டு, ரூ 7500 மதிப்பில் விவசாயிகளுக்கு வழங்கப் படவுள்ளது. இது தவிர அவ்வப்போது அரசால் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள் (வறட்சிப் பகுதி மேம்பாடு, காய்கறி அபிவிருத்தித் திட்டம்) போன்றவை இததுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொகுப்பு: டி. ராஜ்குமார்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.



(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

56. தமிழ்நாட்டு வரலாற்றைத் தமிழுணர்வோடும் ஆய்வுச் சுவடிகளோடும் தயாரிக்கும் முயற்சி, முன்பு இந்த ஆட்சியில் தொடங்கப்பட்டது. தமிழாராய்ச்சி நிறுவனம் இந்தத் தொண்டினை முடிக்கவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

57. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் தலைமையில் தொடங்கப்பட்ட 'அகர முதலித்துறை' இரண்டாவது பகுதி அச்சுக்குத்தயாராக உள்ள நிலையில் கலைக்கப்பட்டுவிட்டது. அதற்குப் புத்துயிர் கொடுத்து, தொடர்ந்து 'அகர முதலி' வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தலைமைச் செயலக ஆணைகள், ஆங்கிலத்தில் மாத்திரம் வெளியிடப்படுகின்றன. இனி, தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் வெளியிட, மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

58. கடந்த காலத்தில் இந்த அரசு, குமரிமுனையில் வள்ளுவர் சிலை அமைத்திட வகுத்தத் திட்டத்தை, மீண்டும் ஆய்ந்து, விரைவுப் பணி மேற்கொண்டு, வான்புகழ் கொண்ட வள்ளுவருக்குச் சிலை வைக்கும் அரும் பணியை நிறைவேற்றும்.

59. சங்க காலப் புலவர்கள் பிறந்த ஊர்களில், அவர்களின் பாடலுடன் கூடிய நினைவுச் சின்னங்கள் அமைக்கும் முயற்சி, கடந்த காலத்தில் இந்த அரசினால் தொடங்கப்பட்டது. அந்த முயற்சி மீண்டும் தொடரப்படும்.

60. தமிழ்த் திரைப்படக் கலை வளர்ச்சி கருதி, அதனை ஊக்கப்படுத்த, ஆண்டு தோறும் சிறந்த தமிழ்ப் படங்கள் மூன்றுக்கு வரிசைப் படி முதல், இரண்டு, மூன்று என பரிசுகளும், பரிசுத் தொகைகளும் வழங்கப்படும். அவ்வாறே படங்களில் பங்கேற்ற சிறந்த நடிகர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், விருதும் பரிசுத் தொகையும் அளிக்கப்படும்.

### மக்கள் நல்வாழ்வு

61. மக்கள் நல்வாழ்வு வசதிகள் கிடைக்கப் பெறுவதில் நகர்ப்புறப் பகுதிகளுக்கும், கிராமப்புறப் பகுதிகளுக்குமிடையே அதிக வேறுபாடு காணப்படுகின்றது. இந்நிலையை நீக்கும் பொருட்டு, முதற்கட்டமாக, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு தொடக்கச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1989—90 ஆம் ஆண்டில் கூடுதலாக 164 தொடக்கச் சுகாதார நிலையங்கள் ரூ. 3 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். வரும் ஆண்டுகளில் படிப்படியாக, கிராமப் பகுதிகளில் வாழும் 20,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வோரிடத்திலும் ஒரு தொடக்கச் சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

62. ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளை அளிப்பதில், இடர்ப்பாடு ஏதும் ஏற்படாதவாறு, வழிவகை செய்திட, வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலாக ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படும். தொடக்கச் சுகாதார நிலையங்கள் அனைத்திலும், மருத்துவர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். வரும் ஆண்டில் ரூ. 8 கோடி செலவில், 120 தொடக்கச் சுகாதார நிலையங்களில், மருத்துவர் குடியிருப்புகள் இணைந்த கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

63. மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவமனை நிர்வாகம் இவற்றை ஆய்ந்து, அறிக்கை அளிக்க உயர் நிலைக் குழு ஒன்றை நாம் அமைத்துள்ளோம்.




இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கல்லூரி இணைந்த மருத்துவமனைகள், மாவட்ட, வட்ட மருத்துவமனைகளின் செயலாக்கம் சீரமைக்கப்படும்.

குடிநீர்ப் பிரச்சினை

**64.** மக்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமான ஒன்றாக விளங்கும் குடிநீர்ப் பிரச்சினையை, ஒரு காலக் கட்டம் குறித்துக் கொண்டு அதற்குள் தீர்த்து வைக்க இந்த அரசு உச்சக் கட்ட முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ளும். 1988–89ஆம் ஆண்டு இறுதியில், 12,000 குக்கிராமங்களில் குடிநீர் இல்லை எனக் குமுறும் நிலையுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் முதற் கட்டமாக, வரும் ஆண்டில் 6,000 குக்கிராமங்களுக்காவது குடிநீர் வழங்கவும், சிற்றூர், பேரூர், நகரங்கள், மாநகரங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் ரூ. 155.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி

**65.** வரும் ஆண்டில், பல்வேறு திட்டங்களின்கீழ் 19,400 வீடுகள் கட்டிக் கொடுக்கும் ரூ. 110 கோடி செலவிலான ஒரு திட்டத்தைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றும். மற்றும் ரூ. 2.5 கோடி செலவிலான, 1,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான ஒரு திட்டத்தைத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் செயற்படுத்தும். சென்னை மாநகரில்




நடைபாதைவாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் ஒரு திட்டத்தையும் குடிசை மாற்று வாரியம் செயற்படுத்தும். மேலும், 63 நகரங்களில் நடந்து வரும் குடிசை மாற்றுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**66.** ஒன்பதாவது நிதிக் குழு, கல்கத்தா, பம்பாய் நகர் குடிசை மேம்பாடுத் திட்டத்திற்காக, தலா ரூபாய் 50 கோடி கொடுத்திருந்தும், சென்னை மாநகர் புறக்கணிக்கப்பட்டுள்ளதை எடுத்துக் கூறி, அத்தொகையை வழங்குமாறு வலியுறுத்தியுள்ளோம்.

***67.** தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஆதி திராவிடர்களுக்கு ஓலை மற்றும் ஓட்டுவில்லை வீடுகளுக்குப் பதிலாக, 1974ல் கட்டப்பட்டதுபோல கான்கிரீட் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்படும். வரும் ஆண்டில், 45,000 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 49 கோடி ஒதுக்கப்படும். இதில் மீனவர்களுக்கான 3,000 வீடுகளும் அடங்கும்.

சென்னை மாநகர் உள்ளிட்ட நகர்ப்பகுதி மேம்பாடு

**68.** உலக வங்கி நிதியுதவியுடன், ரூ. 632.55 கோடி அளவில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், 6 ஆண்டுத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தினால், சென்னை மாநகர் மற்றும் சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருப்பூர் மற்றும் வேலூர் நகரங்களும் அவற்றின் புற நகர்ப் பகுதிகளும் பயனடையும். 1989–90ஆம் ஆண்டில், அடிப்படை வசதிகள் உள்ளதாக மனை மேம்பாடு, குடிசைப் பகுதி மேம்பாடு, சாலை வசதி போன்ற பல்வேறு திட்டப் பணிகளுக்காக ரூ. 111.27 கோடி செலவிடப்படும்.

சத்துணவுத் திட்டம்

**69.** சத்துணவுத் திட்டத்துக்கு வரும் ஆண்டில் ரூ. 173.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஏறத்தாழ 85 இலட்சம் சிறார்கள் இதனால் பயனுறுவர். இத் திட்டத்தில் அவ்வப்போது எழும் முறைகேடுகளையும் குறைபாடுகளையும் களைந்திட, தக்க கண்காணிப்புகள் ஏற்படுத்தப்படும். ஆங்காங்கு இத் திட்டம் ஒழுங்குற நடைபெறுகிறதா என்பதைக் கணித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை, உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும். இத் திட்டத்தை ஒருங்கிணைந்த திட்டமாகவும், வீண் விரயமில்லாத சிக்கனத் திட்டமாகவும், உண்மையிலேயே சிறார்களுக்குச் சத்து நல்கிடும் திட்டமாகவும் நடத்திட, பொதுமக்களின் ஒத்துழைப்பும் நிறையத் தேவை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

**70.** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தும். இதற்கென நடப்பாண்டில் ரூ. 16.54 கோடி என்ற திட்ட மதிப்பீடு 1989–90-ல் ரூ. 31.84 கோடி என்று உயர்த்தப்பட்டுள்ளது. 1989–90ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மேலும் 25 மாணவர் இல்லங்கள் புதிதாகத் திறக்கப்படும். தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க, ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களுக்குப் பட்டப் படிப்புவரை, இலவசக் கல்வி அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர்கள், வீடுகள் கட்டிக் கொள்வதற்காக இலவசமாக வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட ரூ. 115 இலட்சத்திற்கும் மாறாக, 1989–90ஆம் ஆண்டில் ரூ. 2.35 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கப்படும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வேலை வாய்ப்புக்கான பயிற்சித் திட்டங்களுக்கும், வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்குத் தேவையான மானியத் தொகை வழங்குவதற்கும், சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவி அளிப்பதற்கும், ரூ. 20 கோடியில் ஒரு சிறப்புத் திட்டம் செயற்படுத்தப்படும்.




திட்ட மதிப்பீடு 1989–90-ல் ரூ. 31.84 கோடி என்று உயர்த்தப்பட்டுள்ளது. 1989–90ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மேலும் 25 மாணவர் இல்லங்கள் புதிதாகத் திறக்கப்படும். தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற்கிணங்க, ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களுக்குப் பட்டப் படிப்புவரை, இலவசக் கல்வி அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர்கள், வீடுகள் கட்டிக் கொள்வதற்காக இலவசமாக வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட ரூ. 115 இலட்சத்திற்கும் மாறாக, 1989–90ஆம் ஆண்டில் ரூ. 2.35 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கப்படும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வேலை வாய்ப்புக்கான பயிற்சித் திட்டங்களுக்கும், வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்குத் தேவையான மானியத் தொகை வழங்குவதற்கும், சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவி அளிப்பதற்கும், ரூ. 20 கோடியில் ஒரு சிறப்புத் திட்டம் செயற்படுத்தப்படும்.

பிற்படுத்தப்பட்டோர் நலன்


**71.** இவ்வரசு எப்போதுமே பிற்படுத்தப்பட்ட இன மக்களின் முன்னேற்றத்தில், குறிப்பாகக் கல்வி, வேலைவாய்ப்புத் துறைகளில், தனி அக்கறை செலுத்தி வந்துள்ளது. வரும் ஆண்டில், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்

களுக்கு, மேலும் 25 மாணவர் இல்லங்கள் திறக்கப்படும். பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், கல்விச் சலுகை பெறுவதற்குப் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு, ரூ. 5,000 என்பதை ரூ.12,000ஆக உயர்த்தி நிர்ணயம் செய்ய, ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை

72. வன்னியப் பெருமக்கள் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கோரிக்கைகள், பல ஆண்டுகளாக நமது சமுதாயத்தில் முக்கியமானதொரு பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இதற்கு நிரந்தரமான தீர்வு காணும் வகையில் நாம் முடிவுகளை எடுத்து அண்மையில் வெளியிட்டுள்ளோம். அதன்படி ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் ஆகியோருக்கு இருக்கும் 18 சதவீத ஒதுக்கீட்டை மாற்றாமலும், எல்லா வகுப்பினரும் போட்டியிட்டுப் பயனடையக் கூடிய 32 சதவீதப் பொதுத் தொகுப்பை (Open Competition) மாற்றாமலும், ஏனைய 50 சதவீதத்தைப் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவீதமாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்களுக்கு 20 சதவீதமாகவும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவுகளுக்குப் பரவலாக, நல்லெண்ணம் கொண்ட எல்லாத் தரப்பினரும் நல்லாதரவு தெரிவித்துள்ளனர்.

73. மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட ஒதுக்கீட்டை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, கல்வியிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற வேண்டும் என்பதே இவ்வரசின் நோக்கம். இதற்காக இவ்வகுப்பினருக்கு உதவ, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்ற தனி இலாகாவை உடனடியாக அமைத்துள்ளோம். இந்த இலாகா முனைந்து செயல்பட்டு இவ்வகுப்பினர் எல்லாத் துறைகளிலும் பயன்பெறுமாறு திட்டங்களைத் தீட்டும். குறிப்பாக, அவர்கள் வாழும் இடங்களில், எழுத்தறிவு பெறுவதற்




கான வாய்ப்புகளையும், கல்வி வசதிகளையும், கணிசமாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்.

வேலை வாய்ப்பு

74. கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் பரவலாக வேலை வாய்ப்பினைப் பெருக்கிட, பல துறைகளில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய-மாநில அரசுகள் பங்கேற்று நடத்தும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (N R E P), ஊரக நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் (R L E G P), என்ற இரண்டு திட்டங்களும் அண்மையில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட இத் திட்டத்திற்கு, ரூ. 109 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 600 இலட்சம் உழைப்பு நாள் அளவிற்கு வேலை வாய்ப்புக் கிட்டும். அதாவது சுமார் 2 இலட்சம் பேருக்கு, ஓராண்டு அளவிற்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

75. மற்றுமொரு, மத்திய-மாநில அரசுகள் பங்கேற்று நடத்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), வரும் ஆண்டில் ரூபாய் 49 கோடி அளவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் விவசாயம், பால் உற்பத்தி, சிறு தொழில்கள், சிறு வியாபாரம், இவை போன்ற வகைகளில் பெருமளவில்

சுயவேலை வாய்ப்புகள் கிட்டும். வரும் ஆண்டில், இத் திட்டத்தில் ஏறக்குறைய 2 இலட்சம் பேர் பயன்பெறுவர்.

76. மத்திய அரசின் உதவியுடன் மாநில அரசுப் பொறுப்பேற்று, நகரப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு சுயவேலை வாய்ப்பளிக்க, 44,000 பேருக்குப் பயனளிக்கும் வகையில், மற்றுமொரு சிறப்புத் திட்டம் (Self Employment Programme for Urban Poor) செயல்படுத்தப்படும்.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு உதவும் மற்றுமொரு திட்டத்தின்கீழ் (Self Employment for Educated Un-employed Youth) சொந்தமாகத் தொழில் துவங்க சுமார் 18,000 இளைஞர்களுக்கு, வரும் ஆண்டில் உதவி செய்யப்படும்.

77. இஃதன்னியில் பத்தாம் வகுப்பு வரையும், அதற்கு மேலும் படித்துவிட்டு வேலை வாய்ப்புக் கிட்டாமல் இருக்கும் இளைஞர்களுக்கு, மாதம் ரூ. 200 மதிப்பூதியத்தில், கிராமப்புறங்களில் முதியோர் கல்வி, தொடர் கல்வி, குடிநீர் பராமரிப்பு, துப்புரவுக் கண்காணிப்பு, படிப்பகங்கள் மூலம் உலக அறிவு பரப்புதல், கிராம நலத் திட்டங்களை ஊக்கப்படுத்துதல், கிராமப் பொதுச் சொத்துக்களைப் பேணி காத்திடத்





துணை புரிதல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற பணிகளை வழங்கி, ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு 60 பேருக்குக் குறையாமல், ஊராட்சிப் பொறுப்பில், மொத்தம் 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப்படும்.

78. இதேபோல் நகரப் புறங்களில் படித்துவிட்டு வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கும், ஒரு விரிவான திட்டம் விரைவில் ஆராய்ந்து அறிவிக்கப்படும்.

மகளிர் நலன்

79. மகளிர் முன்னேற்றமின்றி, சமுதாய மறுமலர்ச்சி இல்லை. சமூகப் பொருளாதாரத் துறைகளில் அவர்களுக்கு நல்வாய்ப்பும், உரிமையும் அளிப்பதொன்றே அவர்களின் விழிப்புணர்வுக்கும், தெளிவுற்ற சிந்தனைக்கும், அடிமை நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் உரிய வழியாகும். இதனை மனத்திற்கொண்டு, இந்த அரசு பல திட்டங்களை அறிவித்துள்ளது. பெண்ணினத்தின் பண்பார்ந்த மேன்மைக்காகப் பெரிதும் பாடுபடும் இந்த அரசு, தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்திய 1929ஆம் ஆண்டு, செங்கற்பட்டு சுயமரியாதை முதல் மாகாண மாநாட்டில், பெண்களுக்கும், ஆண்களுக்குச் சமமான வேலை வாய்ப்புகளும், சொத்துரிமையும் வழங்க வேண்டுமென்ற கருத்தை நினைவிற்கொண்டு அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களில் எழும், வேலை வாய்ப்புகளில், 30 சதவீதம் மகளிருக்கென ஒதுக்கப்படுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளிலும், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணி இடங்களிலும், மகளிரே நியமிக்கப்படுவர். வேலை வாய்ப்பு, இட ஒதுக்கீடு மட்டும் போதாது. அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கல்வி வாய்ப்பு தேவை. எனவே, தேர்தல் வாக்குறுதிக்கேற்ப, ஏழை நடுத்தர வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு,




இளங்கலைப் பட்டப் படிப்பு வரையிலும் இலவசக் கல்வி, வரும் ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

**80.** மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றுமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ. 5,000 உதவித் தொகை வழங்கப்படும். இத் திட்டத்திற்கு நிதி நிலை அறிக்கையில் ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**81.** நகர்ப் புறத்திலும், கிராமப் புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை எளிய பெண்கள், கர்ப்ப வதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும், உழைக்க முடியாமல், ஊதியம் ஈட்ட முடியாமல் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் மேலும் ஏழ்மையில் தவிக்கும் நிலையில் இருந்து வருகின்றன. தேர்தல் அறிக்கையிலே கூறியுள்ளபடி, இதை நிவர்த்தி செய்வதற்காக, அவர்களுக்குக் கர்ப்பவதியான 8-வது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந்தை பிறந்த பின்னர் 2 மாத காலத்திற்கும், மாதம் ரூ. 50 உதவித் தொகை மூலம் மொத்தம் ரூபாய் 200 வழங்கப்படும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இவ்வுதவி அளிக்கப்படும். இத் திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையிலே,

**82.** வெகு விரைவில், அனைத்து நாடுகள் விவசாய வளர்ச்சி நிதி உதவியுடன், பெரியதொரு திட்டம் செயலாக்கப்பட உள்ளது. சேலம், தருமபுரி மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் ரூ. 45.80 கோடி அளவில், சுமார் 40,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய 7 ஆண்டு காலத் திட்டமாக இது நிறைவேற்றப்படும்.

**83.** பரம்பரைச் சொத்து தொடர்பாக, இந்துச் சட்டத்தின்கீழ் ஆண் வாரிசுக்கு உள்ளது போன்று, பெண் வாரிசுக்கும் சம உரிமை வழங்க வகைசெய்து, 1956ஆம் ஆண்டு இந்து வழியுரிமைச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்துள்ளோம். அதற்கான சட்ட முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

### தேர்தல் வாக்குறுதிகள்

**84.** எந்தத் தேர்தல் அறிக்கைக்கு மக்கள் ஒப்புதல் தந்து, அவற்றை நிறைவேற்றுமாறு பணித்து, எங்களை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்களோ, அந்தத் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள சில உறுதி மொழிகள் ஆளுநர் உரையிலும், அதன் பின்னரும் நிறைவேற்றப்பட்டதை இந்த நிதிநிலை அறிக்கையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன். அதனைத் தொடர்ந்து இவ்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாயிகள் நிலை, குடிநீர் வழங்கல், ஆதி திராவிடர் வீட்டு வசதி, மீனவர் வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி, மகளிர் நலன், வேலை வாய்ப்பு இவைகளுக்கான நிதி ஒதுக்கீடு, தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலேயே அறிவிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, வறுமையில் வாடும் மக்கள் நலனுக்காக, குறிப்பாக, பல திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று உறுதி அளித்திருந்தோம். இவ்வாறு தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள, சிறப்புத் திட்டங்கள் அனைத்தும் வரும் ஆண்டிலேயே நிறைவேற்றப்படும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி


* *தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் - தீபாவளி ஆகிய நாட்களில் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக 5 கிலோ அரிசி வழங்கப்படும். புத்தாண்டு நாளான ஏப்ரல் 14, 1989-ல் இத்திட்டம் தொடங்கி வைக்கப் படும். ரூபாய் 14 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமுல் படுத்தப்படும் இந்தத் திட்டத்தினால் 50 இலட்சம் குடும்பங்கள் பயன் பெறுவார்கள்.*

* *ரூபாய் 27 கோடி செலவில், ஏறக்குறைய 50 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடைய, பொங்கல் நாளன்று ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக ஒரு ஜோடி கைத்தறி வேட்டி, சேலை வழங்கப் படும்.*

* *தற்போது முதியோர் உதவித் தொகைக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு விதிக்கப்பட்டதின் காரணமாக, உதவித் தொகை பெறுவோர்கள் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து, உச்ச வரம்பின்றி, இத்தகைய உதவித் தொகை பெறத் தகுதியுள்ள அனைவருக்கும், தற்போது வழங்கப்படுகிற தொகை மாதத்திற்கு ரூபாய் 35-லிருந்து, ரூபாய் 50 ஆக உயர்த்தப்படும். இந்தப் பலன் கிட்டாமல் காத்திருக்கும் 30,000 பேரும் — மொத்தத்தில் 4 இலட்சம் பேரும், இந்த அறிவிப்பினால் பயன் பெறுவார்கள். இதனால் தகுதியுடைய அனைவரும் உதவித் தொகை பெறுவதோடு, இந்தப் பலன் கிட்டாமல் ஆயிரக்கணக் கானோர் காத்திருக்கும் நிலை இனி ஏற்படாது என்றும் உறுதி கூறுகிறேன். இஃதே போல், எண்ணிக்கை உச்ச வரம்பு நீக்கப்பட்டு — உடல் ஊனமுற்றோர், கைம் பெண்கள், ஆதரவற்ற மகளிர் ஆகியோர் இனிமேல்*

* தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் ஆகியோருக்கும் சீர் மரபினருக்கும் பி.ஏ. பி.எஸ்ஸி., பி. காம்., ஆகிய கல்லூரி இளங்கலை பட்டப்படிப்பு இலவசமாக்கப்படும். இதற்கென ரூபாய் 2.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.


* தேர்தல் அறிக்கையில் அளித்த உறுதிக்கேற்ப, அனைத்து சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கும் மோட்டார் பொருத்திக் கொடுக்க உதவி செய்யப்படும். மேலும் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்‌ஷா, ஆட்டோ ரிக்‌ஷா மற்றும் டாக்சி ஆகியவற்றின் ஓட்டுநர்கள், சொந்தத்தில் புதிய வாகனங்கள் வாங்க விரும்பினால் அதன்பொருட்டு வாங்க உதவி செய்யப்படும். இவ்விரண்டுத் திட்டங்களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாகக் குறைந்த வட்டியில், கடன் கொடுக்க வழிவகைகள் செய்யப்படும்.



**85.** கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்ட, சமுகப் பாதுகாப்பு நல்வாழ்வுத் திட்டங்கள், பெருமளவில் மக்களுக்குச் சென்று சேரவில்லை. பயன் கிட்டுவதிலும் பல முறைகேடுகளும், தாமதங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையைத் தவிர்க்க, சமுகப் பாதுகாப்பு நல்வாழ்வுத் திட்டங்களைப் பற்றிய முழு விவரங்களையும் மக்கள் பரவலாகத் தெரிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம். அதே நேரத்தில் உதவி பெறத் தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை கிடைப்பதில் தடங்கலோ, தாமதமோ ஏற்படாதவாறு இத் தகைய திட்டங்களைச் சீராகச் செயல்படுத்துவோம்.

### வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகள்

**86.** *1988-89*ஆம் ஆண்டுக்கான, அதாவது நடப்பு ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும் போது ஆண்டு இறுதியில் ரூ. *327.36* கோடி அளவுக்கு பற்றாக்குறை இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. தற்போது திருத்திய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருவாய்க் கணக்கில் ரூ. *3,341.48* கோடி வருவாயும், ரூ. *3,650.46* கோடி செலவு என்றும் மதிப்பிடப்பட்டு, பற்றாக்குறை ரூ. *308.98*. கோடியாக உள்ளது. இதரக் கணக்குகளின் மதிப்பீட்டையும் சேர்த்து, நடப்பு ஆண்டின் மொத்த இறுதிப் பற்றாக் குறை ரூ. *175.40* கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. முக்கியமாக, திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையானது ரூ. *1,457* கோடியிலிருந்து ரூ. *1,202* கோடி அளவுக்கு குறைக்கப்பட்டத்தினாலேயே திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறையின் அளவு குறைந்துள்ளது. கடந்த ஆட்சி வருவாய் இனங்களை அதிகரிக்க முற்படாததாலும், திட்டத்தைச் சாராத புதிய செலவினங்களை ஏற்றுக்கொண்டதாலும், இந்த நிலைமை தவிர்க்க முடியாததாயிற்று என்று ஏற்கெனவே விளக்கியுள்ளேன். நடப்பு ஆண்டில் ஏற்படும் இந்தப்




பற்றாக்குறையான ரூ. *175.40* கோடியைச் சமாளிக்க குடியரசுத் தலைவர் ஆட்சியும் அதன் பின்னர் இந்த அரசும் பல முறைகளில் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

**87.** *1989-90*ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் ரூ. *3,845.74* கோடி வருவாயும், ரூ. *4,134.23* கோடி செலவு என்றும் மதிப்பிடப்பட்டு, பற்றாக்குறை ரூ. *288.49* கோடியாக அமைகிறது. இதரக் கணக்குகளின் மதிப்பீட்டையும் சேர்த்து *1989-90*ஆம் ஆண்டிற்கு மட்டுமே, ரூ. *149.67* கோடி அளவுக்குத் துண்டு விழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது இவ்வாண்டின் இறுதியில் ஏற்பட்டுள்ள ரூ. *175.40* கோடி பற்றாக்குறையுடன் இந்தத் தொகையும் சேர்த்து *1989-90* இறுதியில் மொத்தமாக ரூ. *325.07* கோடி அளவுக்குப் பற்றாக்குறை ஏற்படுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

**88.** இந்தப் பற்றாக்குறையைச் சரிகட்டும் அதே நேரத்தில், நலிந்த பிரிவினரின் வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் வகையில், அறிவித்துள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்கு, நிதி ஆதாரங்களைத் திரட்டும் வகையில் ஒரு சில கூடுதல் நிதி திரட்டும் முயற்சிகளை மேற் கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். நாம் அறிவிக்கவுள்ளவரி விதிப்பு நேர்வுகள், ஏழைகளின் தோள்களில் சுமையை ஏற்றக்கூடாது —என்ற வகையில் அமைந்துள்ளன.

**89.** முதலாவதாக, விற்பனை வரி விதிப்பதில் சில மாறுதல்களை அறிவிக்க விரும்புகிறேன். பல முனை வரி விதிப்பதிலிருந்து ஒரு முனை வரிவிதிப்புக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை வணிக சமுதாயத்தினரிடமிருந்து நீண்ட நாட்களாக வந்துள்ளது. இந்த நிலைமையை ஆராய்ந்துள்ளோம். *1959*-ல் தமிழ்நாடு பொது வணிக வரிச் சட்டம் அமுலுக்கு வந்தபோது, இதன் கீழ் *63* பொருட்கள் ஒரு முனை வரி விதிப்புக்கு உள்ளாயின. *1959*-க்கும் *1973*-க்கும் இடையே *13* பொருட்கள் இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன. *1974*ஆம் ஆண்டில் தான் *59* பொருட்கள் ஒரு முனை வரி விதிப்பதின்கீழ் கொண்டு வரப்பட்டன. பிறகு *38* பொருட்கள் பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்பிற்கு மாற்றப்பட்டன. தற்போது பல முனை வரி விதிப்புக்குள்ளாகும் *9* பொருட்களை ரூ. *50* இலட்சம் இழப்பைப் பொருட்படுத்தாமல் ஒரு முனை வரி விதிப்பின் கீழ்க் கொண்டுவர தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதன் கீழ் அமையும் பொருட்கள் மற்றும் விதிக்கப்படும் வரி அலகுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :




| வரிசை எண் | பெயர் | வரி விதம் |
|---|---|---|
| 1 | ஆயத்த (ரெடிமேட்) உடைகள் .. | 5% |
| 2 | மிருகங்களால் இழுக்கப்படும் வண்டிகளின் சக்கர ட்யூப்கள் .. .. | 8% |
| 3 | ஸ்கால்ப் நரம்பு, இரத்த இயக்கத்திற்கான மற்றும் இரத்தம் கொடுப்பதற்கான கருவிகள், மேலும் திரவம் செலுத்தும் கருவிகளும், கன அளவைக் கருவிகளும் .. .. | 8% |
| 4 | பற்றவைக்கும் கோல்கள் .. .. | 10% |
| 5 | பீடி இலைகள் ... .. .. | 5% |
| 6 | இரப்பர் கலந்த கயிறுவகைப் பொருட்கள் .. .. .. | 5% |
| 7 | தலைக் கவசங்கள் (ஹெல்மேட்) .. | 8% |
| 8 | இலகுவான கூரைத் தகடுகள் (உலோக மல்லாதவை) .. .. .. | 8% |
| 9 | கடப்பா, சாகாபாத் மற்றும் கிரானைட் கற்பலகைகள் .. .. .. | 8% |

**90.** நமது நிதிநிலை தற்போதுள்ள கடினமான நிலையில், பெருமளவில் வரி விலக்குதல் மூலம் வருவாய் இழக்கும் நிலையில் இல்லை என்றாலும், தேவைப்படுகின்ற சில வரிச் சலுகைகளை அளிக்க முடிவு செய்துள்ளோம்.

**91.** விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் தொழிற் சாதனங்கள் மீதான வரிகளை நீக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் உறுதியளித்துள்ளபடி, இத் தொழிற்சாதனங்களில் மிகவும் முக்கியமான விவசாயத்திற்காக தண்ணீர் இறைக்கும் 3 மற்றும் 5 குதிரை வேகம் சக்தி கொண்ட பம்பு செட்டுகள் மீதான 8 சதவிகித விற்பனை வரி அறவே நீக்கப்படும்.

இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4 கோடி வருமான இழப்பு ஏற்படும்.

**92.** கட்டுமானப் பணிகளுக்காகத் தேவைப்படும் மணல் மீது தற்போது 5 சதவிகித விற்பனை வரி விதிக்கப்படுகின்றது. இதனால் மணல் எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ளவர்கள் தொல்லைக்கு ஆளாக்கப் படுகிறார்கள் என்பதால் இந்த வரி விதிப்பை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**93.** உடல் ஊனமுற்றவர்களால் பெருமளவில் உபயோகப்படுத்தப்படும் தாங்கிகள் (crutches) சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்திய மற்றும் ஏனைய 3 சக்கர வண்டிகள், பலவித கோல்கள் போன்ற சாதனங்கள் அனைத்தின் மீதான வரி விதிப்புகள் மனித நேய அடிப்படையில் நீக்கப்படும்.


**94.** மாணவர்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் பேனாக்கள், உருள் முனைப் பேனாக்கள், பென்சில்கள், ரீபில்கள், எழுத்தழிப்பான், எழுத்து முனை கூறாக்கும் கருவிகள், கரும் பலகைகள், கரும் பலகைத் துடைப் பான்கள், ரப்பர் விளையாட்டுப் பந்துகள், அறுவைக் கருவிகள் அடங்கிய பெட்டிகள் போன்ற பல கல்வி சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். அனைத்து மக்களாலும் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சீப்புகளின் மீதான வரியும் விலக்கப்படும்.


**95.** குடியரசுத் தலைவர் ஆட்சியில் தொழில் துறையினருக்குப் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டன. இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 25 கோடி அளவில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தச் சலுகைகள் தொடர்ந்து செயல் படுத்தப்படும். அறிவிக்கப்பட்ட சில சலுகைகளைச் செயலாக்குவதற்காக 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வணிக வரிச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்தத் திருத்தங்கள் தற்போதைய கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

**96.** அடுத்து தற்போது வரி விதிப்பு விகிதங்களை ஓரளவிற்கு உயர்த்தி, அதன் மூலம் நிதி ஆதாரங் களைப் பெருக்கும் முயற்சிகளைப் பற்றி அறிவிக்க விழைகிறேன்.

பெட்ரோல் மீது அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் முறையே 18 மற்றும் 20 சதவிகிதமும், விற்பனை வரியாக இருக்க, நம் மாநிலத்தில் வரி விதிப்பு 14 சதவிகிதமாக உள்ளது. இது 18 சதவிகிதமாக உயர்த்தப்படும். வான ஊர்திகள் பயன் படுத்தும் எரிபொருள் மீதான தற்போதைய 14 சதவிகித விற்பனை வரி 20 சதவிகிதமாக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**97.** தொழிற்சாலைக்கான இயந்திரங்களின் (Industrial Machinery) மீதான வரி விதிப்பு 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்தப்படும். ஆயினும் நெசவுத் தொழிலில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப் பட்ட சலுகைகள் தொடர்ந்து நீடிக்கப்படும். வரி விதிப்பு உயர்வுக்குப் பின்னும் தொழிற்சாலை களுக்கான இயந்திரங்கள் மீதுள்ள வரி விகிதங்கள் ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும்.






**98.** கையினால் தயாரிக்கப்படும் சோப்புகளின் உற்பத்திக்கும், விற்பனைக்கும் உதவுமாறு அவைகள் மீதான வரி விதிப்பில் மாற்றம் எதுவும் செய்யாமல் இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் சோப்புகள் மீதான வரி விதிப்பு தற்போதுள்ள 6 சதவிகிதத் திலிருந்து 8 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

**99.** வசதி படைத்தவர்கள் ஆடம்பர ஓட்டல்களுக்கும் மற்றும் உணவு விடுதிகளுக்கும் செல்லும்போது ஏழை எளியோர்களுக்கானத் திட்டங்களைத் தீட்டும் அரசுக்குச் சற்றேனும் உதவ வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது தவறாகாது. ஆகவே, ஆண்டொன்றுக்கு ரூபாய் 10 இலட்சம் மற்றும் அதற்கும் மேலாக வியாபாரம் செய்யக்கூடிய ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்கள் மீதும், பானங்கள் மீதும் 5 சதவிகித வரி விதிக்க முடிவு செய்துள்ளோம்.

**100.** தற்போதுள்ள விற்பனை வரியின் மீது விதிக்கப் படும் மிகை வரி மற்றும் கூடுதல் மிகை வரி இவற்றைச் சீராக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மிகை வரிகள் ஒருமுகமாக்கப்பட்டு எல்லா மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளில் 10 சதவிகிதம் என்றும், மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் 8 சதவிகிதம் என்றும் விதிக்கப்படும். வசூல் செலவு போக மீதமுள்ள தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்கப்படும்.

**101.** கூடுதல் விற்பனை வரியானது, வரி விதிப்புக்குள்ளாக்கப்படும் விற்பனை அளவு, ரூபாய் 10 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் வரைக்கும் 1.25 சதவிகிதம் என்றும், வரி விதிப்புக்குள்ளாக்கப்படும் விற்பனையின் அளவு ரூ. 40 இலட்சமும் அதற்கும் மேலாக இருந்தால் 1.50 சதவிகிதம் என்றும் இன்றைய நிலையில் விதிக்கப்பட்டு வருகிறது. இனி ரூபாய் 1 கோடி மற்றும் அதற்கும் மேலுள்ள வரி விதிப்புக் குள்ளாக்கப்படும் விற்பனை அளவின் மீதுள்ள கூடுதல் வரி, 2 சதவிகிதமாக உயர்த்தப்படும். ரூபாய் 10 இலட்சத்திலிருந்து 1 கோடி ரூபாய் அளவில் உள்ள விற்பனை அளவுகளின் மீதுள்ள கூடுதல் வரி விகிதங்கள் தற்போதுள்ள நிலைகளிலேயே இருக்கும். ஒரு சில பெரிய தொழில் நிறுவனங்கள் மட்டுமே இந்த புதிய வரி விகிதங்களின்கீழ் கொண்டு வரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**102.** இவ்வாறு விற்பனை வரி சம்பந்தப்பட்ட கூடுதல் நிதி ஆதாரங்கள், வரும் ஆண்டில் ரூபாய் 30 கோடி அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**103.** வணிகர்களின் நலனைக் கட்டிக் காக்கவும், நலிவுற்ற வணிகர்களின் புனர் வாழ்வுக்கு உதவவும், வணிகர் நல அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவோம் என்று 1975-ல் அறிவித்து இருந்தோம். ஆனால் அது நடந்தேற வில்லை. இந்த உறுதியை மறக்காமல் அத்தகைய ஒரு அமைப்பு வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும். இதற்காக விற்பனை வரி வருவாயில் ரூபாய் 2 கோடியை அரசு ஒதுக்கும். வணிகர்களும் தங்களது பங்காக இதற்கு ஒப்பான தொகையை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த அமைப்பின் நிர்வாகத்தில் வணிகர்கள் பிரதிநிதிகளை ஈடுபடுத்தி அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப, வணிக சமுதாயத்திற்கு பயன் தரக்கூடியத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

**104.** கேளிக்கை வரியின் வாயிலாக அரசுக்கு ஆண்டு தோறும் சுமார் 60 கோடி ரூபாய் கிடைக்கின்றது. இந்த வரி முறைப்படுத்தப்பட வேண்டும் என்று படத் தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும், திரை அரங்கு உரிமையாளர்களும் முன் வைத்துள்ள கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்கவும் இந்த மூன்று துறையினரிடமும் அரசின் சார்பில் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும்.

**105.** மோட்டார் வாகனங்கள் பிற மாநிலங்களில் வாங்கப்பட்டு நமது மாநிலத்திற்குள் கொண்டுவரப் படுவதால் நமக்கு நியாயமாகச் சேர வேண்டிய விற்பனை வரி கிட்டாமல் போய்விடுகின்றது. இதனைத் தடுக்க, பிற மாநிலங்களில் வாங்கப்பட்டு தமிழ் நாட்டிற்குள் சொந்த உபயோகத்திற்காகவோ அல்லது விற்பனைக்காகவோ கொண்டு வரப்பட்டு மோட்டார் வாகனச் சட்டப்படி நமது மாநிலத்தில் பதிவு செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் மீது, நுழைவு வரி விதிக்கப் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவோம். மோட்டார் வாகனம், எந்த மாநிலத்தி லிருந்து கொண்டு வரப்படுகிறதோ, அம் மாநிலத்தின் வரி விகிதம், தற்போது நம் மாநிலத்தில் உள்ள விற்பனை வரி விகிதத்தை விடக் குறைவாக இருக்குமே யானால் அந்த வித்தியாசத்தில் அளவிற்கு நுழைவு வரி விகிதம் விதிக்கப்படும்.


**106.** ஸ்கூட்டர், மொபட், மோட்டார் சைக்கிள் போன்ற இரண்டு சக்கர வண்டிகள் மிகப்பெரும் எண்ணிக்கையில் ஆண்டிற்காண்டு உயர்ந்துகொண்டே போகும் காரணத்தினால், மோட்டார் வாகன வரி சட்டத்தின்கீழ் இவற்றின் மீது விதிக்கப்படும் வரியை, வசூலிப்பதில், வரி கட்டுபவர்களுக்கும் அரசுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் அரையாண்டுக்கு ஒரு முறை வரி கட்டும் நிலையை மாற்றி, இவ்வகை வாகனங்களின் மீது முதலில் புதிதாக வாங்கும் நேரத்திலேயே ஒட்டு மொத்தமாக ஒரு தொகையை வரியாக வசூலிக்க அரசு நிர்ணயித்துள்ளது. 50 சி.சி. திறன் வரை கொண்ட வாகனங்கள் மீது ரூ. 500 என்றும் 50 சி.சி. திறனிலிருந்து 300 சி.சி. திறன் வரைக் கொண்ட வாகனங்களுக்கு ரூ. 750 என்றும், 300 சி.சிக்கும் மேலான வாகனங்கள் மீது ரூ. 1,000 என்றும் ஒட்டு மொத்த வரியாக ஒரே தடவையாக வசூல் செய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே இவ்வாகனங்களை வைத்துள்ளவர்கள் அரையாண்டு வரி செலுத்தவோ அல்லது ஒட்டுமொத்த வரியைச் செலுத்தவோ அவர்கள் விருப்பப்படி அனுமதி (option) அளிக்கப்படுவார்கள். ஆண்டுதோறும் இவ்வகை வாகனங்கள் மீது வசூலிக்கப்படும் வரியானது மேற் கூறிய *திறன் அளவுக்கு முறையே ரூ. 80, ரூ. 90 மற்றும் ரூ. 100 என்று நிர்ணயிக்கப்படும்.

**107.** மோட்டார் வாகனங்களைப் பொறுத்தவரை கார்கள் மீதான ஆண்டு வரிகள், சுமை ஏற்றப்படாத எடையின் அடிப்படையில், தற்போது ரூ. 258-லிருந்து ரூ. 405 வரை இருக்கின்றது. இவை ரூ. 300-லிருந்து ரூ. 500 வரை உயர்த்தப்படும். மற்ற மாநிலங்களில் உள்ளது போன்று கம்பெனிக் கார்கள் மீது இரண்டு மடங்காகவும், இறக்குமதி செய்யப்பட்ட கார்களின் மீது மூன்று மடங்காகவும் வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**108.** பயணிகளின் இருக்கைகள் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற ' ஆம்னி பஸ் ' என்று அழைக்கப்படும் தனியார் சொகுசு பேருந்துகள் மீது வரி, இருக்கை ஒன்றுக்கு ரூ. 500 என்று உயர்த்தி அமைக்கப்படும். அகில இந்திய உரிமம் வைத்திருக்கும் இத்தகைய பேருந்துகளுக்கும் இந்த விகிதத்தில் வரி விதிக்கப் படும். பயணியர்களை ஏற்றிச் செல்லும் வேன்களில் அனுமதிக்கப்படும் இருக்கை அளவினை அதிகப் படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வந்தவண்ணம் இருக்கின்றது. வேன் ஒன்றுக்கு தற்போதுள்ள இருக்கை அளவை 12 ஆக உயர்த்தி இந்த வரி விகிதம் இருக்கை ஒன்றுக்கு ரூ. 150 என்று விதிக்கப்படும்.

**109.** உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை கொடுக்கும் நேரத்தில், அவர்களுடைய நிதிநிலையைப் பெருக்குவது அத்தியாவசியம். தமிழ்நாட்டில் பணித் தொழில்கள், வாணிகங்கள், கொள்தொழில்கள், மற்றும் வேலையமைப்புகள் மீதான வரி (Taxes on professions, trades, callings and employments) உள்ளாட்சி மன்றங்களுக்கான பல்வேறு சட்டங்களின்கீழ் வசூலிக்கப் படுகின்றது. இம்மன்றங்களால் வசூலிக்கப்படும் தொகைகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. மகாராட்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், கர்நாடகா போன்ற மாநிலங்களில் மாநில அரசே இவ்வரி விதிப்பை ஏற்று நடத்துகின்றது. எனவே இந்த வரியினால் கிடைக்கும் வருவாய் கணிசமாகப் பெருகியுள்ளது. அவ்வாறே இந்த வரியை அரசே விதித்து வசூலித்து, வசூல் செலவை மட்டும் வைத்துக்கொண்டு, மீதம் உள்ள தொகையை அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குவது பற்றி பரிசீலிப்போம். இந்த வரியை நல்ல முறையில் சீர்படுத்தி, வசூலித்து, உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்பட்டு அவர்கள் பெருமளவில் தேவைப்படும் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்ற வழிவகைகள் செய்வதேயன்றி, வரி விகிதங்களை தற்போது உயர்த்தும் நோக்கம் இல்லை.

**110.** நடப்பாண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 175.40 கோடி இறுதிப் பற்றாக்குறையாக இருக்கு மென்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் மத்திய அரசு ரூ. 21.49 கோடி அளவிற்கு வெளிச் சந்தையில் கடன் எழுப்ப நமது அரசுக்கு அனுமதி அளித்துள்ளனர். இதன் மூலம் நடப்பாண்டில் இறுதிப் பற்றாக்குறை ரூ. 153.91 கோடிக்குக் குறையும். இதனை முழுமை யாகச் சரிக்கட்ட மத்திய அரசைக் கோரியுள்ளோம். இந்தப் பற்றாக்குறை, குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடந்த நிர்வாகத்தின் பொறுப்பே ஆகும் என்ற அடிப்படையில், மத்திய அரசு நமது கோரிக்கையை ஏற்று வருமாண்டிலாவது அதனை ஈடுசெய்ய உதவ வேண்டுமென்று வலியுறுத்துவோம்.





வருமாண்டு, அதாவது 1989-90, பொருத்த வரையில், வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கியிருக்கும் வரவுகள்-செலவுகள் இவற்றினடிப்படையில் ரூ. 149.67 கோடி துண்டு விழும். இதனை சரிக்கட்டுவது நமது பொறுப்பாகும். நாம் இப்போது கொண்டுவரும் வரி மாற்றங்களினால் நிகரமாக ரூ. 50 கோடி வருமானம் எதிர்பார்க்கிறோம். மேலும், அண்மையில் புதுதில்லியில் திட்டக் குழுவுடன் நடைபெற்ற கலந்து ரையில் வருமாண்டில் தமிழ்நாட்டிற்கு கூடுதலாக ரூ. 34.9 கோடி கொடுக்கப்படுமென்று உறுதி அளித் துள்ளனர். இந்தத் தொகை கடன்கள் மூலமாகவும், கூடுதல் மத்திய திட்ட உதவியின் மூலமாகவும் கிடைக்கப் பெறும். இந்தத் தொகையும், வரிகள் மூலம் நாம் எழுப்ப இருக்கும் ரூ. 50 கோடியும் சேர்ந்து, வரு மாண்டின் பற்றாக்குறையை ரூ. 64.77 கோடி அளவிற்கு குறைக்கும். இந்த நிகர பற்றாக்குறையை சிக்கன நடவடிக்கைகள் மூலமும், வரிகளை செம்மையாக வசூலிப்பதாலும், மத்திய அரசால் கொண்டுவரப்பட விருக்கும், சரக்குகள் அனுப்புவதல் மீதான வரியின் (Consignment Tax) மூலமாகவும், சரிக்கட்ட இயலு மென்று நம்பலாம்.

**111.** இத்தருவாயில் அரசுச் செலவுகளில்-சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டிய அவசியத்தையும் சாத்தியத் தையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். வாகனங்கள் பெட்ரோல், பயணச் செலவு, தொலைபேசிச் செலவு, அரசு விளம்பரச் செலவு இத்தகைய பல செலவுகளில் கண்டிப்பாக இருப்போம். மேலும்

திட்டம், திட்டத்தைச் சாராத எல்லாப் பணிகளிலும் விரயம் ஏற்படாமல் தடுக்க, நடவடிக்கைகள் எடுக்கப் படும். புதுத் திட்டங்களுக்காகவும், நடந்துவரும் திட்டங்களை விரைவு படுத்தவும், புதிய வேலைவாய்ப் புக்களை ஏற்படுத்தும் போது, எந்தெந்த அரசு இலாக்காக்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இருக்கிறார்களோ அவ்வாறான உபரி ஊழியர்களைப் பயன்படுத்த, திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்காக அரசில் ஒரு அமைப்பை ஏற்படுத்த உத்தேசித் துள்ளோம். (Central Manpower Cell.)

112. கடந்த சில ஆண்டுகளில் அரசின்கீழ் பல புதிய வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் தேவையற்ற 10 வாரியங்களும் அமைப்புகளும் மூடப் படும் என்று அண்மையில் அறிவித்தோம். பெரும் பாலான வாரியங்களில் அதிகாரிகளும், அதிகாரிகளல் லாதவர்களும் நியமிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இரட்டிப்புச் செலவைத் தவிர்த்திடும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட்டு சிக்கனத்தைக் கடைப் பிடித்துள்ளோம். ஏனைய வாரியங்களையும் விரிவாகப்






பரிசீலித்து அவைகளிலேற்படும் இழிப்புகளைத் தவிர்க் கவும் வருமயனத்தைப் பெருக்கவும் தக்க நடவடிக்கை களை வரும் மாதங்களில் எடுப்போம். இவ்வாறு பல முனைகளில் சிக்கன முறைகள் கண்டிப்புடன் கடைபிடிப்போமென்று அவைக்கு உறுதி அளிக்கிறேன்.

113. ''தடைக்கற்கள் உண்டெனினும்
தடந்தோள் உண்டென சிரிப்போம்''

எனும் புரட்சிக் கவிஞரின் கவிதை வரிக்கேற்ப, நிதி நெருக்கடி எனும் தடை கடந்து தமிழ் நிலம் வாழ் மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கான திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றும் தீராத ஆசையுடன் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பற்றாகுறை எனும் கூர் அம்புகள் துளைத்திடும் பொழுதும் கடமையினைத் தயக்கமின்றி நிறைவேற்ற சூளுரை மேற்கொண்டுள்ளது இந்த அரசு.

'' இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்.''

செல்வம் சுருங்கிய காலத்திலும் கடமை உணர்ச்சி உடையவர்கள் நற்செயல்களை நிறைவேற்றத் தயங்க மாட்டார் என்கிறார் திருவள்ளுவர். அவர் வாக்கினை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு, தமிழ் மக்களுக்கு என்றும் செய்வோம் தொண்டு என்ற நிலைகுலையா உறுதியோடு அண்ணா வழியில் அயரா துழைக்க அர்ப்பணித்துக் கொண்டுள்ள எங்களுக்கு, தமிழ் மக்களின் பேராதரவு தொடர்ந்து கிடைத்திட வேண்டுமெனக் கோருவதுடன், இந்த அறிக்கை யினை தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து உறுதுணை யாக இருந்த நிதித் துறை செயலாளர் திரு. என். நாராயணன் அவர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும், இதய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த 1989-90ஆம் ஆண்டிற்கான நிதிநிலை திட்ட மதிப்பீடுகளை அவையினர் ஏற்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(சட்டப் பேரவையில் 25.3.89ல் ஆற்றிய உரை)

அட்டை சொல்லும் செய்தி

# தமிழக முதல்வரின் டெல்லிப் பயணம்

தமிழகத் திட்டங்கள் குறித்து மத்திய திட்டக்குழுவுடன் ஆலோசனை நடத்துவதற்காக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மார்ச் 14-ஆம் நாளன்று சென்னையிலிருந்து புறப்பட்டார். மாலை 5 மணி விமானத்தில் புறப்பட்ட அவர் இரவு 8.45 மணியளவில் டில்லி சேர்ந்தார். தலைமைச் செயலர் திரு. எம். எம். ராஜேந்திரன் இ.ஆ.ப., நிதி ஆலோசகர் திரு குகன் நிதித்துறை செயலர் திரு நாராயணன் இ.ஆ.ப, முதல்வரின் தனிச்செயலர் திரு. கே. ஏ. சுந்தரம இ.ஆ.ப., இணைச்செயலர் திரு.சண்முகநாதன் ஆகியோரும் திரு முரசொலி மாறன் எம்.பி.யும் உடன் சென்றனர்.

மார்ச் 15-ஆம் நாளன்று காலை 10 மணிக்கு டெல்லி யோசனா பவனில் நடைபெற்ற தமிழகத் திட்டம் குறித்த கலந்துரையாடலில் முதல்வர் அவர்கள் கலந்து கொண்டார்.

1988-89-ஆம் ஆண்டுத் திட்டம் 1,457 கோடி ரூபாய் அளவில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்றாலும், நிதி இடர்ப்பாடுகள் காரணமாக 1,202 கோடி ரூபாய் அளவில் மட்டுமே நிறைவேற்றப்படும் நிலை ஏற்பட்டது என்பதை எடுத்துச் சொல்லி, 1989-90-ஆம் ஆண்டைப் பொறுத்த அளவில் 1,225 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டம் தேவை என அலுவலர்கள் அளவில் பேசப் பட்டது. முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் இன்றியமையாப் பணிகளைச் சுட்டிக் காட்டி, இது 1360 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இது குறித்து நடைபெற்ற கலந் துரையாடலுக்குப் பின்னர், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு மத்திய

உரையாடினார். இருவரும் சுமார் அரைமணி நேரம் உரையாடினர்.

அதன் பின்னர் மாண்புமிகு மத்திய வெளிவிவகாரத்துறை இணை அமைச்சர் திரு நட்வர்சிங், மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. சங்கரானந்த் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார் முதல்வர் கலைஞர்.

பிரதமரைச் சந்தித்துப் பேசிய முதல்வர் கலைஞர் அவர்களை டில்லியில் உள்ள பத்திரிகை செய்தியாளர் சந்தித்துப் பேட்டி கண்டனர்.

**செய்தியாளர் :** இன்று காலையில் பிரதமரைச் சந்தித்தபோது என்ன பேசினீர்கள்?'

**முதல்வர் :** பிரதமரிடம் அரிசி கேட்டோம். 200 கோடி ரூபாய்



மாண்புமிகு மத்திய வெளிவிவகாரத்துறை இணை அமைச்சர் திரு நட்வர் சிங் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர்.

மத்திய அரசின் திட்ட அமைச்சரும், மத்திய திட்டக்குழுவின் தலைவருமான மாதவ்சிங் சோலங்கி, மத்திய திட்டக்குழு உறுப்பினர்கள், அலுவலர்கள், தமிழக அரசின் தலைமைச் செயலர் எம். எம். ராஜேந்திரன், முதல்வரின் தனிச் செயலர் திரு கே.ஏ.சுந்தரம், நிதிஆலோசகர் திரு குகன், மற்றும் நிதித்துறை செயலர், திட்டத் துறைச் செயலர் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திட்ட அமைச்சர் திரு மாதவசிங் சோலங்கி ஏற்றுக் கொண்டார். மத்திய அரசின் கூடுதல் உதவியின் அடிப்படையிலும், மாநில அரசு செய்யும் வழிவகைகளின் வாயிலாகவும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

மார்ச் 15-ஆம் நாள் பகல் 11 மணி அளவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களை முதல்வர் கலைஞர் சந்தித்து

அளவிற்கு மத்திய அரசு உதவி செய்யவேண்டுமென்று ஏற்கெனவே ஆளுநர் எழுதியிருந்தார். நானும் எழுதியிருக்கிறேன். கடந்த முறை டில்லி வந்தபோதே அது குறித்து வலியுறுத்தினேன். இப்போது மீண்டும் அதை வலியுறுத்திக் கேட்டிருக்கிறேன்.

**செய்தியாளர் :** அரிசி கேட்டதாகச் சொன்னீர்களே, எவ்வளவு கேட்டீர்கள்?

**முதல்வர் :** நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதம் வரை மத்திய அரசு தமிழகத்திற்கு மாதந்தோறும் 80 ஆயிரம் டன் அரிசி கொடுத்து வந்ததை 40 ஆயிரம் டன்னாகக் குறைத்து இப்போது கொடுத்து வருகிறார்கள். அதை மீண்டும் 80 ஆயிரம் டன் வீதம் கொடுத்து வர வேண்டும் என்று கேட்டேன்.

**செய்தியாளர் :** பிரதமரின் பதில் என்ன?

**முதல்வர் :** பிரதமர் அக்கறையுடன் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

**செய்தியாளர் :** மத்திய நீர்ப்பாசன அமைச்சர் சங்கரானந்தைச் சந்தித்தபோது என்ன பேசினீர்கள்?

**முதல்வர் :** காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசினேன்.

**செய்தியாளர் :** காவிரிப் பிரச்சினையில் புதிய அணுகுமுறை ஏதாவது இருக்கிறதா?

**முதல்வர் :** கர்நாடக முதல்வருடன் பேசுவதாக ஓர் ஏற்பாடு இருக்கிறது. அதற்குப் பிறகுதான் மற்றவை எல்லாம். அந்தப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். அப்படி அமையாவிட்டால்கூட இந்தப் பிரச்சினையில் மத்திய அரசுக்கும் பெரும் பொறுப்பு இருக்கிறது.

செய்தியாளர்களின் ஏனைய கேள்விகளுக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள் பதிலளித்தார்.

ஈழத் தமிழ் மாநில முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் மார்ச் 16-ஆம் நாளன்று காலையில் முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்துப் பேசினார். இருவரும் சுமார் ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தினர்.

மார்ச் 16-ஆம் நாளன்று, மீண்டும் பிரதமர் அவர்களைச் சந்தித்து உரையாடினார் முதல்வர் கலைஞர்.

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து இருவரும் 25 நிமிடம் ஆலோசனை நடத்தினர்.

அன்று இரவு 10 மணியளவில் டில்லியிலிருந்து சென்னை திரும்பிய முதல்வர் கலைஞர் அவர்களைச் செய்தியாளர்கள் சந்தித்தனர்.

**செய்தியாளர் :** இருநூறு கோடி ரூபாய் நிதி உதவி கேட்டுப் பிரதமரிடம் இன்று பேசினீர்களா?

**முதல்வர் :** நேற்றே அது பற்றி விவரமாகப் பேசிவிட்டேன். அப்படிப் பேசியதைத் தொடர்ந்து இன்று நம்முடைய அதிகாரிகள் மத்திய அரசின் அதிகாரிகளுடன் பேசியிருக்கிறார்கள்.

**செய்தியாளர் :** அந்தத் தொகை கிடைக்கும் என்று நம்புகிறீர்களா?

**முதல்வர் :** கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். அது கடந்த காலத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை. கடந்த ஆண்டிற்குத் திட்டம் 1,457 கோடி ரூபாய் அளவிற்கு இருந்தது. ஆனால் அதிலே 255 கோடி ரூபாய் குறைந்து 1,202 கோடி ரூபாய் அளவிற்குத் தான் இறுதியாக இருந்தது. அதிலேயே பற்றாக்குறை 200 கோடி ரூபாய் ஆகும்.

**செய்தியாளர் :** இப்போது ஆண்டுத் திட்டம் 1,360 கோடி ரூபாய் அளவிற்குச் சம்மதம் பெற்றிருக்கிறீர்களே, இந்த அளவிற்கு எப்படி நிதியினைப் பெறப் போகிறீர்கள்?

**முதல்வர் :** எப்படிச் சமாளிக்கிறோம் என்பதை நிதிநிலை அறிக்கையிலே பாருங்கள்.

**செய்தியாளர் :** உங்கள் பெயரிலேயே 'நிதி' இருக்கிறதல்லவா?

**முதல்வர் :** பெயரில் 'கருணை' மூன்று எழுத்துக்கள். 'நிதி' இரண்டு எழுத்துக்கள்தான் இருக்கின்றது. அதாவது நிதி குறைவு! கருணை அதிகம்!

**செய்தியாளர் :** நீர்ப்பாசன அமைச்சர் சங்கரானந்த் அவர்களைச் சந்தித்தீர்களே, என்ன பேசினீர்கள்?

**முதல்வர் :** சங்கரானந்த் அவர்களுடன் காவேரிப் பிரச்சினை பற்றிப் பேசினேன். மிக விரைவில் கர்நாடக மாநில முதலமைச்சர் பொம்மை அவர்களுடன் நான் பேசுவேன் என்று அவரிடம் கூறியிருக்கிறேன். அந்தப் பேச்சு வார்த்தை ஒரு நல்ல முடிவை எய்தும் என்று நம்புகிறேன்.

**செய்தியாளர் :** சங்கரானந்த் அவர்கள்தான் முன்பு இந்தத் திட்டத்தையே எதிர்ப்பதைப் போலப் பேசிக் கொண்டிருந்தார். இப்போது எந்த அளவில் பேசினார்?

**முதல்வர் :** பொம்மை அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தும்படியும், அதற்குப் பிறகு பார்க்கலாம் என்றும்சங்கரானந்த் கூறினார்.

**செய்தியாளர் :** பொம்மை அவர்களோடு பேசும்போது கர்நாடகத்தில் தமிழர் -கன்னடியர் மோதல் அதிகமாக இருப்பதைப் பற்றிப் பேசுவீர்களா?

**முதல்வர் :** அதுபற்றி எனக்குத் தகவல் வந்துள்ளது. எனவே காவேரிப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு முன்பாகவே, நாளைக்கோ, அல்லது நாளை மறுநாளோ பொம்மை அவர்களுடன் தொடர்பு கொண்டோ அல்லது கடிதம் மூலமாகவோ கர்நாடகத்தில் தமிழர்-கன்னடியர் மோதுதலைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாக இருக்கிறேன்.

**செய்தியாளர்:** மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி கேட்டிருந்தீர்களே பதில் கிடைத்ததா?

**முதல்வர் :** முடிந்த அளவிற்கு முயற்சிப்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

**செய்தியாளர் :** பொம்மை அவர்களோடு காவேரி பேச்சுவார்த்தை எப்போது?

**முதல்வர் :** நான் அவருடைய வசதியான தேதியினைக் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறேன். அதற்குத் தான் அவரிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இன்னும் பதில் வரவில்லை.

**செய்தியாளர்:** டெல்லிப் பயணம் பற்றி ஒரே வார்த்தையில் கூறுங்கள்.

**முதல்வர் :** 'நன்று'.

## பார்த்தோம் படித்தோம்!

'தமிழரசு' இதழ் (16-2-89) முகப்பு மேதகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆகியோரின் வண்ணப் படம் மிக மிக அருமை.

—இராம. முருகதாஸ்,
காஞ்சிபுரம்.

திரு மாமூலன் எழுதிய நல்ல காலம் பிறந்தாச்சு' சிறுகதை நன்றாக இருந்தது.

—கதி. அன்பழகன்,
ஆரணிமேல்நகர்.

கவியேறு வாணிதாசரின் கவிதையில் சங்கப் புலமையின் சாயலைக் கண்டு இன்புற்றேன். நூலைத்தேடி இதுபோன்ற கவிதைகளைப் படித்திட இயலாத சுவைஞர்களுக்குத் தமிழரசு அரிய கவிதை விருந்தளிப்பது குறித்து மகிழ்ச்சி.

—குமணன்,
திருக்கழுக்குன்றம்,

'வெண்பாப் போட்டி' வரவேற்க வேண்டிய ஒன்று.

—வெ. ச. நாராயணன்,
திருவண்ணாமலை—1.

—கவிஞர் சொல்லரசு
சேலம்—1.

1-3-89 இதழில், வெளிவந்த மின்னல்' சிறுகதை அற்புதம். ஓவியர் கோபனின் படம் அருமை. 'இலவச இணைப்பு' பாதுகாக்க வேண்டிய ஒன்று.

—எஸ். பிரபாகரன்,
மேல்பாலானந்தல்.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



சென்னையில், பிரெஞ்சு இந்தியக் கலைவிழாவை மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நல அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் 10.3.89 அன்று குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.



உலக ஊனமுற்றோர் தின விழாவையொட்டி 17.3.89 அன்று சென்னையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் அவர்கள் தொடங்கி வைத்தார்.



# வறுமையில் வாடுவோர் வாழ்வு பெற

## நமது அரசின் திட்டம்

- முதியோர் உதவித்தொகை பெற இதுவரை இருந்து வந்த எண்ணிக்கை உச்சவரம்பு நீக்கம்.

  தகுதிபெற்ற அனைவருக்கும் உடனே உதவி.

  முதியோர் உதவித்தொகை 35 ரூபாயிலிருந்து 50ஆக உயர்வு.

  ஏற்கனவே காத்திருக்கும் 30 ஆயிரம்பேர் உட்பட, மொத்தம் 4 இலட்சம் பேருக்கு உதவி.

- உடல் ஊனமுற்றோர், கைம்பெண்டிர், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கும் எண்ணிக்கை உச்சவரம்பு நீக்கம்.

  உதவித் தொகை 35 ரூபாயிலிருந்து 50ஆக உயர்வு.

- தமிழ்ப்புத்தாண்டு - பொங்கல் - தீபாவளி ஆகிய நாட்களில் ஏழைக் குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி இலவசம்.

  இப்புதிய திட்டம் 1989 ஏப்ரல் 14 முதல் — தமிழ்ப் புத்தாண்டில் தொடக்கம். நிதிஒதுக்கீடு ரூ.14 கோடி; பயன்பெறும் குடும்பங்கள் 50 இலட்சம்.

- பொங்கலின்போது 50 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு ஜோடி கைத்தறி வேட்டி, சேலை இலவசம்.

- குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்களுக்கு ரூ. 2,000 உதவி.

- விபத்தில் இறப்போர் குடும்பங்களுக்கு நிதியுதவி ரூ. 10,000. இதற்கான வருமான உச்சவரம்பு இனி இல்லை. இதில் ஏற்கனவே இடம் பெற்றிருந்த விவசாயத் தொழிலாளி, மரமேறும் தொழிலாளி, மீன் பிடி தொழிலாளி மட்டுமல்லாமல், லாரி, ஆட்டோ, தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர்கள், கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்கள் ஆகியோரும் இப்போது பயன்பெறுவர்.

  இவர்கள் ஊனமுற்றால், நிலைக்கு ஏற்றவாறு நிதியுதவி.






- 2 மே 1989

# தமிழரசு

இந்த இதழில்


| | |
|---|---|
| மாண்புமிகு முதல்வரின் தமிழ்ப் புத்தாண்டுச் செய்தி | 2 |
| மாண்புமிகு முதல்வர் உரை | 4 |
| 20 சதவிகித இடஒதுக்கீடு — பெருமக்களின் பேட்டி | 9 |
| பார்வையற்றவரின் பயனுள்ள கண்டுபிடிப்பு | 15 |
| ஆறு (கவிதை) | 17 |
| நாம் மட்டுமா இப்பேரண்டத்தில் இருக்கிறோம் | 18 |
| மனோன்மணீயம் படைத்த சுந்தரனார் | 20 |
| ஊரக வளர்ச்சியில் சமூகக்காடுகள் திட்டம் | 22 |
| நிலாப் பாட்டு | 24 |
| மாணவர் பக்கம் | 28 |
| பெரியார் மாவட்டத்தில் பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டம் | 31 |
| குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா | 33 |
| அரசு அறிவிப்பு | 36 |
| வளரும் வேளாண்மை | 39 |
| நூல் நயம் | 41 |
| கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே | 48 |



திருவள்ளுவர் ஆண்டு 2020
சுக்ல-சித்திரை 3
மலர்: 19 இதழ்: 20
16-4-1989

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

தமிழ்மக்களின் புத்தாண்டு நாளாக ஏற்கப்படும்
தைத்திங்கள் முதல் நாளில் என்
நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை வாரி வழங்குகி
றேன். என் உடன் பிறப்புகள் [illegible]
அனைத்துத் தொண்டர்களும் தோழர்களும், இந்நாள்
ஒற்றுமை, சகோதரத்துவம், மொழிக்கும்
சிறப்பை ஒப்புவிக்கும் வகையில் இந்நாளில்
உறுதி மேற்கொண்டிட வேண்டும்.

தையின் சிறப்பின் சிறப்பாக
நாளெல்லாம் என்று போற்றப்படும் [illegible]
[illegible] வரிசையில் - [illegible]
[illegible]; தொடர்ந்து பல்வேறு திட்டங்
களை நிறைவேற்றத் தொடங்கியுள்ளது.

அறிஞர்களுக்கு மக்கள், நெசவாளர்
தொழிலாளர், உழைப்போர், ஒடுக்கப்பட்டோர்
அனைவருக்கும் நல்வாழ்வும் - உரிமையும்
நல்கிட இந்த அரசு; நிலைத்தாக

அடுத்து நிறைந்த நலன்களை மேவ
வேண்டும்.

அறிவியலாக்கத்தை அனைவருக்கும்
கிடைத்திடச் செய்யும் - பகுதி மேம்பாட்டுக்
கும் இந்த அரசு அறிவித்துள்ள திட்டங்கள்
நிறைவேற்றப்பட இந்நாளில் உறுதி
எடுத்துக் கொண்டு உறுதி பூணுவோம்!

சமத்துவத்தின் மாண்பு
போற்றுவோம் - சமூக நீதியும் - தமிழ்க்
கொடை பண்பாட்டு நீதியும் இந்தப் புது
நாளில் உறுதி ஏற்றுக் கொள்வோம்!
சமத்துவம் பெற்றிட உழைப்போம்!
சமூக நீதியே மக்களின் நீதி
என்பதை ஏற்று கொண்டு
திராவிடர் வழியில் பயணத்தைத்
தொடர்வோம்.

அன்புள்ள
மு. கருணாநிதி

# புதிய சொற்கள் படைப்போம் அரிய தமிழை வளர்ப்போம்

## முதல்வர் கலைஞர்



தமிழ் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினைச் சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய தமிழ் இலக்கியத் துறையின் சார்பாகத் தொடங்குகிற இந்த நிகழ்ச்சியில், தமிழாய்ந்த தமிழ்ப் பெருமகன் டாக்டர் சஞ்சீவி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கின்ற பணியையும் எனக்கு அளித்திருக்கின்றார்கள்.

எப்போதும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் வாய்ப்பை அளித்தார்கள் என்று கூறுவது வாடிக்கை. நான் இதனை வாய்ப்பு என்று கூறாமல் பணி என்று கூறியதற்குக் காரணம் இந்த வாய்ப்பை நான் விரும்பவில்லை.

இந்த வாய்ப்பை நான் இவ்வளவு விரைவிலே எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் அவருடைய படத்தை திறந்து வைப்பது வாய்ப்புக்குரிய ஒன்றல்லவா, என்று கேட்கத் தோன்றும். இவ்வளவு விரைவில் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு எனக்கும் கிடைத்திருக்கக் கூடாது. உங்களுக்கும் கிடைத்திருக்கக் கூடாது!

ஏனென்றால் இன்னும் பல ஆண்டுக் காலம் நம்மோடு இருந்து வாழ்ந்து தமிழுக்காக அவர் ஆற்றிட வேண்டிய தொண்டு நிரம்ப உண்டு. ஆனால் அதற்கிடையே அவர் நம்மிடமிருந்து இயற்கையினால் பிரிக்கப்பட்டு விட்டார்.

அவருக்கும் எனக்கும் உள்ள நீண்ட கால நட்பின் காரணமாக இந்தப்படம் திறக்கும் பணி எனக்கு வழங்கப்பட்டதாக உணர்கிறேன்.

எல்லாக் கால கட்டத்திலும் என்னை நேசித்தவர். என்னோடு இருந்தவர். என்னுடைய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர். என்னுடைய முன்னேற்றம் என்று நான் தன்னலத்தோடு குறிப்பிடவில்லை. என்னுடைய முன்னேற்றத்தோடு தமிழ்நாட்டு மக்களுக்கு ஆற்றுகின்ற தொண்டும் இணைந்திருக்கிறது என்ற காரணத்தால், அத்தகைய அக்கறையை அவர் கொண்டிருந்தார்.

எனக்கு இன்னும் பசுமையாக நினைவிருக்கிறது. 1976ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் இறுதி நாள் மாலை 6 மணிக்கு ஆட்சிப் பொறுப்பிலிருந்து நானும், என்னோடு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், அகற்றப்பட்டார்கள் என்ற செய்தி அறிவிக்கப்பட்டு, அன்றிரவே சற்றொப்ப ஐநூறுக்கு மேற்பட்ட, நான் சார்ந்துள்ள இயக்கத்தினர் மிசாக் கைதிகளாக, சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சிறை. பிடிக்கப்பட்டார்கள் என்ற செய்தியும் வந்த பிறகு, மறுநாள் காலையில் என்னுடைய இல்லத்தின் மாடிக் கதவு மெல்லத் தட்டப்பட்ட போது அதைத் திறந்தேன். திருவள்ளுவரே உள்ளே நுழைந்து எனக்கு ஆறுதல் கூறுவதைப் போல, சஞ்சீவி உள்ளே நுழைந்தார். நுழைந்தவர் உள்ளங்கை அகலத்திற்குப் பாதி அளவுள்ள திருக்குறள் புத்தகம் ஒன்றினை என்னுடைய கையிலே வைத்துக் கண்கலங்க நின்றார். கண்ணீர் பொழிந்தார். என்னைக் கட்டி அணைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதார்.

அவர் அழுதார் என்பது ஒரு கோழைத் தனமான செயல் என்று யாரும் கருதமுடியாது. அந்த நெருக்கடியான நேரத்திலும் என்னைச் சந்தித்து அழுதாரே அதை விடத் துணிவான செயல்-வீரமான செயல் வேறொன்றும் இருக்க முடியாது.

அதே நட்பும் பாசமும் பற்றும் என்மீது தொடர்ந்து கொண்டிருந்தவரை திடீரென ஒருநாள் மரணம் தன்னுடைய மடியிலே போட்டுக் கொண்டு விட்டது என்ற செய்தி கேள்விப்பட்டு நான் துடிதுடித்துப் போனேன்.

இன்று இந்த அரங்கில் இந்த நிகழ்ச்சியில் அவரும் இருந்து நம்மோடு கலந்து, இந்த மேம்பாட்டுத் திட்டம் வளம்பெற - வலுப்பெற வழி-வகைகளைச் சொல்லியிருக்க வேண்டியவர். ஆனால் இல்லை.

நான் எழுதிய 'சங்கத்தமிழ்' நூல் மதுரையில் வெளியிடப்பட்டபோது அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு அவர் ஆற்றிய உரை இன்றும் பசுமையாக என் நெஞ்சில் நிழலாடுகிறது. என்னைத் 'தமிழ்த் தொண்டினை நிறுத்தி விடாதே! தொடர்ந்து ஆற்றிடு!' என்று தூண்டிக்கொண்டே இருக்கிறது.

அத்தகைய பெரியவர் - தமிழ் மேதை - அறிஞர் பெருமகன்-அவர் இன்றில்லை என்றாலும் கூட, அவர் உருவாக்கி வைத்த அந்த உணர்வுகளின் அடிப்படையில், அவர் ஆற்றிய மொழிப் பணியினை நாம் அனைவரும் தொடர வேண்டும் என்ற அவருடைய திருவுருவப் படத்தின் முன்னால் சூளுரை மேற்கொள்வதுதான் இந்த நேரத்தில் இந்தப்படத்தைத் திறந்ததன் உற்ற பயனாக இருக்கமுடியும் என்று நான் நம்புகிறேன்.

மூலிகைமணி என்ற ஒரு ஏடு! அது தமிழகத்தில் பிரபலமாக எல்லோருடைய கரங்களிலும் தவழ்கின்ற ஏடு அல்ல! ஆனால் நான் எல்லா ஏடுகளையும் படிப்பவன். நல்ல ஏடுகளையும் படிப்பவன். அல்லாத ஏடுகளையும் படிப்பவன். அப்படிப் படிக்கிற காரணத்தால் அந்த மூலிகை மணியில் எங்கோ ஒரு மூலையில் ஒரு சிறு பெட்டிச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்த கருத்தினைக் கண்டேன்.

அதில் "பேராசிரியர் சஞ்சீவி வாழ்ந்த சென்னை மாநகரத்திலே உள்ள தலையாரி தெருவிற்கு, பேராசிரியர் சஞ்சீவியின் பெயர் சூட்டப்பட வேண்டும் என்கின்ற ஒரு முறையீடு தமிழக முதல்வருக்கு வைக்கப்படுகிறது" என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த முறையீடு நிறைவேறும் என்பதை இந்த மாமன்றத்திலே வெளியிடுவது-அதுவும் அவருடைய படத்தினைத் திறந்து வைத்து வெளியிடுவது முற்றிலும் பொருத்தமான ஒன்று என்று கருதுகிறேன்.

டாக்டர் தமிழ்ப் பேரறிஞர் சஞ்சீவியின் புகழ் வாழ்க! அவர் வளர்த்த-வளர்த்துக் கொண்டிருந்த தமிழ் வெல்க! என்று நான் கூறுகின்றேன்.

நம்முடைய சட்டப் பேரவையின் தலைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இந்த அரங்கத்தைத் தொடங்கி வைக்கிற நிகழ்ச்சியிலே அறிமுக உரையை ஆற்றியிருக்கிறார்.

நான் இந்த நிகழ்ச்சியிலே அவருடைய பணி என்ன என்பதை ஆழமாகச் சிந்தித்தேன். தொடக்கவுரை என்றோ அல்லது சிறப்புரை என்றோ இல்லாமல் அறிமுக உரை என்று அச்சிடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்தேன்.

தமிழகத்தின் பரிதாபம் இன்னும் தமிழை அறிமுகப்படுத்த வேண்டிய நிலையிலே தமிழகம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் போலும், அறிமுக உரை என்று அச்சேற்றியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். நம்முடைய பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்விடத்திலே மேடையிலே பேசிக் கொண்டிருக்கும்பொழுது, இந்தக் கலந்தாய்வு அரங்கத்திற்கு ஆகிற செலவை யூ.ஜி.சி. ஈடுகட்டுகிறதென்றும், அதற்கு மேலான தேவைகளை அரசு துணை புரிந்து ஆற்றிட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நான் என்னதான் முதலமைச்சராக இருந்தாலும், கல்வித்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்களையும் கலந்துகொண்டுதான் இது பற்றிய உறுதியை அவருக்கு நான் வழங்க வேண்டும். ஏனென்றால் நிதிநிலை எந்த அளவிற்குப் பற்றாக்குறையான ஒரு சூழ்நிலையில் இந்த அரசு பொறுப்பேற்றிருக்கிறது என்பதையும் துணைவேந்தர் அறியாதவர் அல்ல! ஆனால் யூ.ஜி.சி. தந்துள்ள செலவுக்கான இந்தத் தொகை இந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்குத்தான் போதுமானதாக இருக்கும். ஆனால் தலைப்போ 'தமிழ் மேம்பாட்டுத் திட்டம்' என்பதாகும்.

திட்டத்தைத் தொடங்கி வைத்து விட்டு நிறுத்திவிட முடியாது. சில திட்டங்கள் அப்படி உண்டு. ஆனால் திட்டம் என்றாலே அது தீட்டப்பட்ட பிறகு தொடர வேண்டிய ஒன்றாகும். அது தொடரவேண்டுமேயானால் இந்த மூன்று நாட்களுக்கு நடைபெறுகிற நிகழ்ச்சி அதற்கான செலவோடு முடிந்து விட்டால் திட்டம் தொடராது. ஒன்றை மாத்திரம் உறுதியாகச் சொல்வேன். இது ஒழுங்குற, செம்மையுற நடைபெறுகிற திட்டமாக நீங்கள் அறிவிப்பீர்களேயானால், ஆக்கித் தருவீர்களேயானால் தொய்வு ஏற்படாமல் தொடர்வதற்கான வழியினை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும் என்பதைமாத்திரம் நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'தமிழ் மேம்பாடு' அதற்கு ஒரு திட்டம் என்று அறிவித்து, மூன்று நாட்கள், முதல் அமர்வு தமிழ் இலக்கிய மேம்பாடு பற்றியும், இரண்டாவது அமர்வு கவடிகள் பற்றியும், மூன்றாவது அமர்வு தமிழ் மொழி மேம்பாடு பற்றியும், நான்காவது அமர்வு மொழி பெயர்ப்பு இயல் பற்றியும், ஐந்தாவது அமர்வு ஆராய்ச்சி மேம்பாடு பற்றியும், ஆறாவது அமர்வு நாட்டுப்புற இயல் பற்றியும் கலந்து ஆராய இருக்கிறது என்று எனக்குத் தரப்பட்டுள்ள குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆறு அமர்வுகள், ஆற அமரக் கலந்து பேசி நல்ல முடிவுகளை நீங்கள் வழங்க வேண்டும். நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். யாரையும் புண்படுத்த அல்ல. யாரையும் குறை சொல்ல அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பு

ஆட்சிப்பொறுப்புக்கு இந்த இயக்கம் வருமா வராதா என்ற கேள்விக் குறியே எழாத ஒரு காலகட்டத்தில், கோவை மாநகரில் தமிழ் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையேற்றார். அந்த மாநாட்டில் தமிழகத்தினுடைய தலைசிறந்த பெரும் புலவர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள். முதல் நாள் மாநாட்டிற்கு நான் செல்ல இயலவில்லை. மறுநாள் மாநாட்டிற்குத் தான் சென்றேன். இப்படிச் சொல்கிற காரணத்தால் அந்தப் புலவர் பெருமக்களோடு என்னையும் இணைத்துக் கொண்டதாக யாரும் கருதத் தேவையில்லை.

அந்த மாநாட்டில் ஒரு பேச்சாளனாக நானும் அழைக்கப்பட்டிருந்த காரணத்தால் முதல் நாள் செல்ல இயலவில்லை. மறுநாள் சென்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டிருந்தார்கள். மறுநாள் பதினொரு மணியளவில் நான் மாநாட்டிற்குச் சென்றபொழுது முதல்நாள் மாநாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்ன என்று கேட்டேன். சொன்னார்கள். இந்த மாநாட்டின் மூலம் தமிழகத்தில் ஒரு தமிழ் மன்றத்தை மாநிலம் தழுவிய அளவிலே அமைப்பதென்றும், அதற்கு என்ன பெயர் வைப்பது என்றும் விவாதம் நடைபெற்றது என்று சொன்னார்கள். என்ன முடிவு ஆயிற்று என்று கேட்டேன், எந்த முடிவும் ஆகவில்லை என்றார்கள்.

ஏன் என்று கேட்டேன். தமிழ் இலக்கிய மன்றம் என்று பெயர் வைக்கலாம் என்று ஒரு சாராரும், இலக்கியம் என்பது தமிழல்ல, எனவே இலக்கிய மன்றம் என்ற பெயர் பொருந்தாது என்று இன்னொரு சாராரும் புலவர்களிடையே இருகூறாகப் பிரிந்து தகராறு நடைபெறுகிறதென்று குறிப்பிட்டார்கள். இலக்கியம் என்பது இலக்கியம் என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது. எனவே இலக்கிய மன்றம் என்ற பெயர் கூடாது என்று ஒரு சாரார். இலங்குதல் என்கின்ற தமிழ்தான் இலக்கியம். எனவே இலக்கியம் தமிழ்தான் என்று இன்னொரு சாரார். ஒரு சாராருக்குப் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் தலைமை வகிக்கிறார். இன்னொரு சாராருக்கு வெள்ளைவாரணர் என்று கருதுகிறேன், அவர் தலைமையேற்கிறார். சரி, மறுநாளாவது இந்தப் பிரச்சனை தீர்ந்து, முடிவு ஏற்பட்டு மாநாட்டின் வேறு பொருட்கள் பற்றிப் பேசுவார்கள் என்று கருதி இருந்தேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும் நாங்களும் மேடையில்




சென்று அமர்ந்தபொழுது, அடுத்துப் பேச சிலரை அழைத்த பொழுது இப்பொழுது இலக்கியம் தமிழா அல்லவா என்பது பற்றி 'இன்னார் பேசுவார்' என்று ஒரு வரியில் அழைக்கத் தொடங்கினார். ஒவ்வொருவரும் பேசத் தொடங்கி இலக்கியம் என்பது தமிழ்ச் சொல் அல்ல என்று ஒரு மணி நேரம் பேசினார்கள். அடுத்துப் பேச வந்தவர்கள் தமிழ்ச் சொல்தான் என்பதற்கு நூற்றுக்கணக்கான ஆதாரங்களைக் காட்டிப் பேசினார்கள்.

அந்த மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பக்கத்திலே பழம்பெரும் புலவர் ஔவை துரைசாமி பிள்ளை அவர்களும் அமர்ந்திருந்தார்கள். நான் மாலையிலே பேசுவதற்கான வாய்ப்புக் கிட்டி, பேசத் தொடங்கினேன். நான் பேசும் பொழுது சொன்னேன்: 'ஏறத்தாழ ஐம்பது, அறுபதாயிரம் ரூபாய் செலவழித்து ஒரு லட்சம் பேரை, கோவை மாநகரத்திலே கூட்டி, இந்த்பரந்த வெளியில் பந்த விட்டு, அழகான மேடை அமைத்து தமிழகத்தினுடைய மிகப் பெரும் புலவர்களையெல்லாம் அழைத்து, இரண்டு நாள் கூடிய லட்சக் கணக்கான மக்களிடத்திலே, இலக்கியம் தமிழா அல்லவா என்கிற ஒரு ஆராய்ச்சியை மாத்திரம் நடத்தியிருக்கின்றீர்கள். இவ்வளவு பேரைக் கூட்டி இந்த மாநாட்டை நடத்தாமலே புலவர்களெல்லாம் ஒரு வீட்டிலே அமர்ந்து உங்களுக்குள்ளாக வாதிட்டு ஒரு முடிவைச் செய்து கொண்டு இந்த மாநாட்டிலே வந்து இலக்கியம் தமிழா அல்லவா என்று அறிவித்திருந்தால் எவ்வளவு பணம் மிச்சமாகி இருக்கும்? எவ்வளவு நேரம் மிச்சமாயிருக்கும்? இதைச் செய்யாமல் உங்கள் ஆராய்ச்சிக்காக ஒரு லட்சம் பேரை ஐம்பதாயிரம் ரூபாய் செலவிலே கூட்டி வைத்திருக்கிறீர்களே, இது நியாயந்தானா? அழகா?' என்று கேட்டேன்.

அப்பொழுது எனக்குத் தெரியாது. பிறகு அண்ணா அவர்கள் இறுதியாகப் பேசும்பொழுது 'தம்பி கருணாநிதி பேசும்பொழுது என் பக்கத்தில் இருந்த ஔவை துரைசாமி பிள்ளை என்னுடைய தொடையைத் தட்டி உங்களுடைய இயக்கத்தில் அணுகுண்டுகள் மாத்திரமல்ல. ஹைட்ரஜன் குண்டுகளெல்லாம் நீங்கள் தயாரித்திருக்கிறீர்களே' என்று சொன்னதாகச் சொல்லிவிட்டு, 'தம்பி சொன்னது நியாயந்தான். நீங்கள் புலவர் பெருமக்கள் கூடி, ஒரே முடிவாக ஒரு முடிவைச் செய்து, அதை அறிவித்தால், தமிழைப் பற்றிய ஆராய்ச்சியிலே நேரத்தைச் செலவிடாமல் தமிழ் மொழியை வளர்க்க-தமிழர்கள் மேன்மையுற-அது பயன்படும்' என்ற கருத்தை அண்ணா அவர்கள் அந்த மாநாட்டிலே முடிவுரையில் அறிவித்தார்கள்.

இப்பொழுது எனக்கு நினைவு வந்ததற்குக் காரணமே ஆறு அமர்வுகளிலும் நீங்கள் ஆய்ந்து தெளிந்து பல்வேறு கருத்துக்கள் ஒன்றோடொன்று மோதுகின்ற சூழல் ஏற்பட்டாலும்கூட, இறுதியாக ஒரு முடிவு எடுத்து இதுதான் முடிவு என்று நீங்கள் வரையறுத்து விட்டீர்களேயானால், பிறகு கேட்கலாம், எல்லாவற்றிற்கும் ஒரே முடிவுதானா? ஆராய்ச்சிக்கே இடம் கிடையாதா? ஆராய்ச்சி என்பது வளர்ந்துகொண்டே போகின்ற ஒன்றல்லவா? அது அறிவின் விசாலத்தைக் காட்டக்கூடிய ஒன்றல்லவா என்று கேட்கக்கூடும். ஆனால் தமிழின் இன்றைய நிலையைப் பார்க்கும்பொழுது இப்படிப்பட்ட அவரவர்களின் ஆற்றலைக் காட்டுவதற்காகவே தமிழைப் பயன்படுத்தி, தமிழின் மேன்மையை, மேம்பாட்டைக் கெடுத்து விடக்கூடாதென்கிற அந்தக் கருத்தை இங்கே நான் உறுதியாகத் தெரிவிப்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேனல்லாமல் வேறல்ல என்பதை இங்கு அமர்ந்திருக்கின்ற அறிஞர், புலவர், தமிழ்ச் சான்றோர் பெருமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உலகத்திலே எத்தனையோ மொழிகள். ரோமானிய சாம்ராஜ்ஜியத்தினுடைய மேற்குப் பகுதியிலே ஒரு காலத்திலே செல்வாக்குப் பெற்றிருந்த லத்தீன் மொழி, அந்த சாம்ராஜ்ஜியத்தினுடைய கிழக்குப் பகுதியிலே ஒரு காலத்திலே செல்வாக்குப் பெற்றிருந்த கிரேக்க மொழி, அதைத் தொடர்ந்து அடுத்து கலாச்சாரத் தொடர்புகளாலும், இராணுவ வலிவினாலும் உலகத்திலே பரவிய பிரெஞ்சு மொழி இவைகளெல்லாம் அகில உலக மொழிகளின் வரிசையிலே இருந்ததுண்டு.

முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போர், இந்த இரு போர்களையும் ஒட்டிய அந்த அடிப்படையில் அந்தப் போர்களுக்குப்பிறகு, ஆங்கிலம் உலக மொழியாகிற செல்வாக்கைப்பெற்றதுண்டு போர்கள் மாத்திரமல்ல வணிகப் பெருக்கம், தொழில் துறை வளர்ச்சி இவைகளின் மூலமாகவும் ஆங்கிலம் உலக மொழிகளின் இடத்தைப்பெற முடிந்தது.

ஆனால் நான் குறிப்பிட்ட இந்த மொழிகளை எல்லாம்விட, தொன்மை மிகுந்த மொழி தமிழ் மொழி என்பதை உங்கள் மத்தியிலே நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. லத்தீன், கிரேக்கம், சீனம், ஹீப்ரு, வடமொழி என்றெல்லாம் சொல்லப்படுகின்ற இந்த மொழிகளோடு, மூத்த மொழியாக விளங்கிய தமிழ்மொழியைக் காப்பாற்ற வேண்டும். அதை மேம்படுத்தவேண்டுமென்பதற்காகத்தான் மீண்டும் வேறொரு வகையிலே ஒரு தொடக்க முயற்சியை இன்றைக்கு நாம் மேற்கொள்கின்றோம்.

*1948*-ஆம் ஆண்டில் ஹீப்ரு மொழியிலே ஒரு மறுமலர்ச்சியைக் காண



**பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும், சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.**

வேண்டுமென்பதற்காக, அந்த மொழியை-அதிலே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக அந்த மொழி மீட்கப்பட வேண்டுமென்கிற ஒரு பெரும் முயற்சி அன்றைக்கு மேற்கொள்ளப் பட்டது.

அதைப்போல இன்றைக்கு, தமிழ் மொழி மேன்மையுற வேண்டும். அது இன்றைக்கு அமிழ்ந்திருக்கின்ற சகதியிலேயிருந்து மீட்கப்படவேண்டுமென்கிற முயற்சியை மேற்கொள்ளத்தான், பல்வேறு ஆயத்தங்கள் தமிழகத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றிலே இதுவும் ஒன்று என்று தான் கருதுகிறேன்.

நம்முடைய இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில் பல்வேறு மொழி, இனம், கலாச்சாரம் இவைகளெல்லாம் இருப்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை. மறுத்துப் பேசிடவும் வழியில்லை.

ஏனென்றால், முழுமையான உண்மை அது. சோவியத் நாட்டிலேகூட சற்றேறாப்ப நூற்று இருபது அல்லது நூற்று முப்பது மொழிகள் அங்கே இருக்கின்றன. அவைகள் அனைத்தும் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகின்ற மொழிகள் அல்ல. மிகச் சிறுபான்மை மக்களால் பேசப்படுகின்ற மொழிகளே கூட சோவியத் ரஷ்யாவில் உண்டு. ஆனால் சிறுபான்மை மக்களால் பேசப்படுகின்ற மொழி என்ற காரணத்திற்காக அந்த மொழி அங்கே அழைக்கப்படவில்லை: அல்லது ஆதிக்கத்திற்கு உட்படுத்தப் படவில்லை.

நூற்று முப்பது மொழிகள் சோவியத் ரஷ்யாவிலே இருக்கிற காரணத்தினாலே தான், அன்றைக்கே லெனின் 'Russia is not a Country, But a World என்று சொன்னான். 'சோவியத் ரஷ்யா ஒரு நாடல்ல, ஒரு உலகம்' என்று லெனின் அன்றைக்குச் சொன்னதற்குக் காரணமே, நூற்று முப்பது மொழிகளைக் கொண்ட தேசிய இனங்கள் சோவியத் ரஷ்யாவிலே உண்டு. அந்த நூற்று முப்பது மொழிகளுக்கும் தரவேண்டிய மதிப்பு, மரியாதை, செல்வாக்கு இவைகள் அங்கே தரப்பட்டதுண்டு.

அங்கே எந்தவொரு மொழியையும் அங்குள்ள மற்ற மொழிகள் ஆதிக்கம் செலுத்தி அடிமைப்படுத்தக்கூடிய நிலைமைக்கு அந்த மொழியோ அந்த மொழி பேசுபவர்களோ அங்கே ஆட்பட்டதில்லை. எல்லா மொழிகளும் சமமாக வளர்க்கப்படுகின்ற நிலைமை சோவியத் பூமியிலே இன்றைக்கும் இருக்கிறது.

ஆனால் நம்முடைய நாட்டில் அந்த நிலை இருக்கிறதா என்றால் இல்லை. நான ஒரு நாலைந்து திங்களுக்கு முன்புகூட ஒரு செய்தியைப் பத்திரிகையிலே படித்தேன். அந்தச் செய்தியினுடைய கதாநாயகர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். நான் கட்சியின் பெயரைச் சொன்னவுடன் நண்பர் உமாபதி திகிலடையத் தேவையில்லை. அவர்களைப் பற்றி நல்லதைத்தான் சொல்லப் போகிறேன்.

கோவை மாநகரத்திலே ஒரு நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியில் அவருடைய பெயர் போடப்படவில்லை. நான் சொல்வது இப்போதல்ல. நான்கைந்து மாதங்களுக்கு முன்பு! அவர் நாடாளுமன்ற உறுப்பினர். அவர் எதிர் வரிசையிலே அமர்ந்திருக்கிறார். மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்கிற விழா! அந்த விழாவிலே அவரையும் அழைத்துப் பேசச் சொன்னார்கள். முதலிலே மறுத்தார். பிறகு மேடைக்கு வந்து பேச, ஒலி பெருக்கியின் முன்னால் வந்து, அழைப்பிதழ் நிகழ்ச்சி நிரலைக் கண்ணுற வேண்டி அதனைப் பார்த்தார். பார்த்தவர் ஒலிபெருக்கிக்கு நேராகவே அந்த அழைப்பிதழ், நிகழ்ச்சி நிரல் இரண்டையும் சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டார். எல்லோரும் திகைத்தார்கள். வியப்புற்றார்கள். கிழித்துப்போட்டவர் என்னசொன்னார், தெரியுமா? 'நானும் இந்த அழைப்பிதழையும்

நிகழ்ச்சி நிரலையும் திரும்பத் திரும்பப் பார்த்தேன். ஒருவரி கூடத் தமிழில் இல்லை. முழுவதும் இந்தியிலே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நடைபெறுகிற விழாவில் இந்தியில் அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழா? இதைவிட அவமானம் வேறொன்றும் இல்லை. இந்தித் திணிப்பு இல்லை என்று சொல்லிக்கொண்டு இப்படிச் செய்கிறீர்களே" என்று கேட்டவர் தமிழுணர்வு படைத்த ஒரு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் என்று எண்ணுகிறபோது, தமிழ் உணர்வு அறவே பட்டுப்போய் விடவில்லை என்கிற பூரிப்பும் -புளகாங்கிதமும் எனக்கு ஏற்பட்டது.

நம்முடைய மொழியின் பெருமையைப்பற்றி இங்கே பெரும் புலவர்கள் எல்லாம் அமர்ந்திருக்கின்ற இந்த அவையில் நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

எந்த ஒரு மொழிக்கும் இல்லாத பெருமை நம்முடைய மொழிக்கு உண்டு. நான் பலமுறை சொல்வதுண்டு. வல்லினம் - மெல்லினம்- இடையினம் என்று! மூன்றுமே 'தமிழ்' என்கிற அந்தச்சொல்லிலே இருக்கிறது என்று நான் சொல்வதுண்டு.

அதைவிட Language என்கிறோம். ஆனால் Language என்று சொல்கிற நாம் 'பேசினான்' என்று சொல்லும்போது Languaginan என்று சொல்வதில்லை. அப்போது Speech அல்லது said என்கிற வேறு வார்த்தை வருகிறது.

ஆனால் தமிழிலேதான் மொழி என்று பெயர்ச் சொல்லிலும் குறிப்பிடுகிறோம். 'மொழி' என்று வினைச் சொல்லிலேயும் குறிப்பிடுகின்றோம். அந்தச் சிறப்பு தமிழுக்கு உண்டு. நம்முடைய மொழிக்கு உண்டு.

இந்தத் தொன்மைச்சிறப்பையே சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? பழம் பெருமையையே பாடிக்கொண்டிருந்தால் போதுமா? போதாது! புதிய புதிய சொற்கள் இன்னும் தமிழுக்கு வந்தாக வேண்டும். தமிழுக்கு நாம் கொண்டு வந்து சேர்த்திட வேண்டும்.


ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய வீட்டுப் பையன் என்ன படிக்கிறான் என்று நண்பர் கேட்பதாக வைத்துக் கொள்வோம். பையன் சட்டக் கல்லூரியிலே படிப்பதாக வைத்துக் கொள்வோம். என்ன சொல்லுகிறோம். 'லா' படிக்கிறான் என்று சொல்கிறோம்.

அதே பையன் வீட்டில் அமர்ந்து கூடத்திலோ தாழ்வாரத்திலோ படிக்கிற பையனாக இருந்து, அதிலே அக்கறை உள்ள பையனாக இருந்து, இரவு பத்து மணிக்கு மின் விளக்கைப் போட்டுக் கொண்டு படித்துக் கொண்டிருக்கும்போது உள்ளே நுழைகிற நண்பர் 'என்ன உன் மகன், என்ன படித்துக் கொண்டிருக்கிறான்?' என்று கேட்டால்' அப்போது அவன் ஏதோ ஒரு 1935ஆம் ஆண்டின் வெள்ளைக்கார 'Act' படித்துக் கொண்டிருப்பான். என்ன சொல்கிறோம். அப்போதும் 'லா' புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறான்.'அதைத்தான் சொல்கிறோம். 'Act' படிக்கிறான் என்று மொழியை மாற்றிச் சொல்வதில்லை.

அது மாத்திரமல்ல. பையன் படித்துவிட்டு 'Law' படித்த துரைமுருகன் சட்டமன்ற உறுப்பினரானதைப் போல, சட்டமன்ற உறுப்பினராக ஆனபிறகு, பையன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? என்று கேட்டால் என்ன சொல்லுகிறோம்? அப்போது சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் Legislative Assembly Member, Member of the Legislative Council என்று சொல்கிறோம்.

ஆனால் தமிழில் சட்டமன்ற உறுப்பினர் என்றுதான் சொல்கிறோம். சட்ட மன்றத்தில் ஒரு மசோதா வருகிறது. வடமொழியிலே மசோதா என்று சொல்கிறோம். ஆங்கிலத்தில் அதை 'Bill' என்று சொல்கிறோம். ஆனால் தமிழில் அதற்கொரு சொல் உண்டா என்றால் இல்லை. தமிழில் அதற்குச் சட்டமுன்வடிவு என்றுதான் பெயரே தவிர அதற்கு தனிப்பெயர் கிடையாது. பிறகு அந்த 'Bill' எல்லோராலும் , விவாதிக்கப்பட்டு இறுதியாக வாக்கெடுப்பு நடைபெற்று அது சட்டமாக மாறிவிடுகிறது. மாறிய பிறகு 'Bill,' 'Act' ஆகிறது. ஆனால் தமிழில் சட்ட முன்வடிவு முன்வடிவை இழந்து சட்டமாகிறது. இவ்வளவுதான்.

எனவே ஆங்கிலத்திலே 'Law' என்றும், 'Legislature என்றும் 'Bill' என்றும் 'Act' என்றும் இத்தனை சொற்கள் இருக்கும் பொழுது, நம்மிடத்திலே ஒரே சொல்லை வைத்துக்கொண்டு, நமக்கு இருக்கிற ஆற்றலை விளையாடிக் கொண்டிருக்கிறோம். சட்டப்புத்தகம் படிக்கிறான் என்கிறோம். சட்டக் கல்லூரிக்குச் செல்கிறான் என்கிறோம். சட்டமன்றத்திற்குச் செல்கிறான் என்கிறோம். சட்டமுன் வடிவு விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது என்கிறோம். சட்டம் ஆகிவிட்டது என்று சொல்கிறோம். எல்லாம் சட்டம் என்கிற ஒரே சொல்லை மாத்திரம் வைத்துக் கொண்டு சொல்கிறோம்.




இதை நம்முடைய புலவர்கள்கூட பார்! பார்! நம் தமிழுக்குள்ள ஆற்றலை என்று சொல்லலாம். ஆனால் எனக்குள்ள ஆற்றாமை, இது போதாது, இன்னும் வளர்க்கப்பட வேண்டுமென்பதுதான். அதை நம்முடைய பெரும் புலவர் பெருமக்கள் நம்முடைய டாக்டர் வ.சுப.மாணிக்கனார் போன்றவர்களெல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். இன்னும் பல புலவர் பெருமக்களெல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்.

நாளைய தினமும் நாளைய மறுதினமும் உட்கார்ந்து கலந்துரையாடிப் பல்வேறு கருத்துக்களை உதிர்த்து நல்ல முடிவுகளை எடுக்க இருக்கின்றார்கள். அந்த முடிவுகளெல்லாம் தமிழ் வாழ, தமிழ் மேம்பாட்டையப் பயன்பட வேண்டும்.

ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் மறந்துவிடக்கூடாது. தமிழ் மேம்பாடடைய வேண்டுமேயானால் முதலில் தமிழன் மேம்பாடடைய வேண்டும். மரத்துக்கோ, செடிக்கோ கொடிகளுக்கோ, நல்ல உரம் இல்லாவிட்டால், நல்ல மலரோ, நல்ல காய்கறியோ, கனியோ கிடைக்காது.

மரமோ, செடியோ, கொடியோ வளமாக இருந்தால்தான், சுவையான கனி, வளமான பழம் கிடைக்கும். அதைப்போல தமிழன் மேம்பட்டால்தான் தமிழ் மேம்படும். தமிழன் மேம்பட்டானா? இந்தக் கேள்விக்குப் பதிலைச் சிந்தித்துக் கொண்டே செல்லுங்கள்.

*(சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத்துறை சார்பில் 27-3-89 அன்று நடைபெற்ற தமிழ்மேம்பாட்டுத் திட்டம் கலந்தாய்வரங்கத் தொடக்க விழாவில், முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.)*

# மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு 20% இடஒதுக்கீடு

## ஒரு வரப்பிரசாதம்

தமிழகத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், Denotified Communities என்று அழைக்கப்படுகிற சீர்மரபினருக்கும் இருபது சதவிகித தனி ஒதுக்கீட்டினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 13.3.89 அன்று அறிவித்தார்கள்.

இதன் தொடர்பாக மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினரின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்தினை விரைவு படுத்திட 'மிகவும் பிற்படுத்தப்பட்டோர்-சீர்மரபினர் துறை' என, தனித்துறை ஒன்றினை தமிழக அரசு ஏற்படுத்தியது.

இத்துறையின் இயக்குநராக, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திரு இ. தசரதன், இ.ஆ.ப. அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இட ஒதுக்கீட்டு அறிவிப்பினை வன்னியர் சமூகத்தார் உள்ளிட்ட பல்வேறு வகுப்பினரும் அமைப்புகளும் வரவேற்றுப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் ஒரு சிலரின் கருத்துமணிகள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன:



### திரு வன்னிய அடிகளார்

"14, 15 ஆண்டுகளுக்கு முன்னதாக அரசின் முன் வைக்கப்பட்ட வன்னியர் கோரிக்கை அண்மைக் காலத்திலே தீவிரமடைந்து, இப்பொழுது ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞருடைய ஆட்சியிலே துரிதமான ஒரு பரிகாரம் காணப்பட்டிருப்பது எங்களுக்கெல்லாம் மிக மகிழ்ச்சியைத் தருகிறது.

"இப்பொழுது வன்னியர்கள் சார்ந்திருக்கின்ற மிகவும் பிற்பட்ட தொகுப்பிற்கு 20% ஒதுக்கீடு தரப்பட்டிருக்கிறது. அந்த 20% ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு 107 ஜாதிகள் அதிலே சேர்க்கப்பட்டிருந்தாலும், வன்னியர் தான் அதிலே மிகவும் பலமான மக்கள் தொகை அதிகமான சமூகம்; ஆகவே அதிலே கிடைக்கக்கூடிய 20 சதவிகித ஒதுக்கீட்டை, ஒதுக்கீட்டின் பலன்களை வன்னியர் சமூகம் பெரும்பான்மையாகப் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.

"தனியாக வன்னியர்களுக்கென்று ஒதுக்கீடு செய்வதைவிட 2, 3 சதவிகிதங்கள் அதிகமாகவே இதிலே கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. ஆகவே இந்தத் திட்டம் வன்னியர்களைப் பொறுத்தவரையிலும் மிகவும் லாபகரமான திட்டம். அவர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதேபோல மற்ற பிற்பட்ட சமுதாய மக்களுக்கும், அதேபோல சீர் மரபினருக்கும் இது நன்மை பயக்கக்கூடிய திட்டம். ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற பலன்களை நாம் அனுபவிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

"இதிலே சேர்க்கப்பட்டிருக்கின்ற 107 ஜாதிகள் சீர்மரபினர், மிகவும் பிற்பட்ட ஜாதியினரெல்லாம் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள். ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் மக்கள் தொகை இல்லாத சமுதாயங்கள், அதிக இடங்களை இதுவரையில் அவர்கள் பெறாத சமுதாயங்களாக இருக்கின்றார்கள். **ஆகவே வன்னியர் சமுதாயத்திற்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது என்று நாம் சொல்ல வேண்டும்.** வன்னியர் சமுதாயம் இதன் மூலம் 12 விருந்து 15 சதவிகிதம் வரை ஒதுக்கீட்டுச் சலுகைகளை அடையலாம். இந்த ஏற்பாட்டினைத் துரிதமாக ஏற்படுத்திக் கொடுத்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வன்னியர் சமூகத்தின் சார்பாகவும், சங்கத்தின் சார்பாகவும் எங்கள் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்."

### திரு ஏ.என்.சட்டநாதன்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முதன் முறையாக முதலமைச்சர். பதவி வகித்த காலத்தில் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் இட ஒதுக்கீடு பற்றி. பரிசீலிப்பதற்காக முதன்முதலாக நியமிக்கப்பட்ட

பிற்பட்டோர் நலக் கமிஷனின் தலைவர் **திரு ஏ. என். சட்டநாதன்** அவர்களின் கருத்து:

"இந்தப் புதிய திட்டம், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும் அதிலும் குறிப்பாக வன்னிய சமூகத்தினருக்கு நிச்சயமாகப் பலன் அளிக்கும்.

"முதலாவது பிற்படுத்தப்பட்டோர் கமிஷனில் நானும் இதே நோக்கங்களுக்காகத்தான் பாடுபட்டேன். அப்போது நான் அந்தக் கமிஷனின் தலைவன் என்ற முறையில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகலை இரு பிரிவாகப் பிரிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தேன். அப்போது அவற்றின் எண்ணிக்கை 127 ஆகும். இதை, பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு என இரண்டாகப் பிரித்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 16 சதவிகிதமும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 17 சதவிகிதமும் ஒதுக்கீடு செய்தேன்.

"இந்தக் கமிஷனிலிருந்து மற்ற இரண்டு உறுப்பினர்களும் மாற்றுக் குறிப்பு அளித்திருக்கின்றனர். இதனால்தான் கமிஷனின் பரிந்துரைகளை அரசு ஏற்காமல் விட்டுவிட்டது.

"புதிய திட்டத்தின்படி 201 பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவது பிரிவில் 39 மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளும், 68 சீர்மரபினர் வகுப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. எஞ்சிய 94 வகுப்புகள் இரண்டாவது பிரிவில் உள்ளன.

"முதலாவது பிரிவுக்கு 20 சதவிகிதமும், இரண்டாவது பிரிவுக்கு 30 சதவிகிதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது"

## திரு ஜே. ஏ. அம்பாசங்கர்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவின் (இரண்டாவது) முன்னாள் தலைவர் **திரு ஜே. ஏ. அம்பாசங்கர்** அவர்களின் கருத்து:

"சமுதாயத்தில் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு வந்த சமூக மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அவர்களுக்குச் சமூக நீதி வழங்க வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு இருந்த ஐம்பது சதவிகித இடஒதுக்கீட்டிலிருந்து இருபது சதவிகித இட ஒதுக்கீட்டைப் பிரித்து, சமுதாயத்திலேயே மிக நலிந்த பிரிவினருக்கு முதலமைச்சர் வழங்கியிருக்கிறார்.

"முதலமைச்சரின் குறிக்கோள் மிகத் தெளிவானது என்பதை, இதற்கென ஒரு தனித்துறையையே உருவாக்கி அதற்குத் தலைவராக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரையே நியமித்திருப்பதும், அந்தத் துறையைத் தனது பொறுப்பிலேயே வைத்திருப்பதும் தெளிவாக்குகிறது.

"பிற்படுத்தப்பட்டோரில் மிகப் பெரும்பான்மையாக உள்ள வன்னியர்கள் இச்சலுகையினால் பெரிதும் பயன் பெறுவார்கள்.

"தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை இழந்து விட்டுத் தவிப்பவர்களைப் பற்றி வரலாறு நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

"இப்பொழுது வழங்கப்பட்டுள்ள இந்தச் சலுகையை வன்னியர்கள் ஏற்றுக்கொள்ளத் தவறுவார்களேயானால் ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை வன்னியர்கள் தவறவிட்டவர்கள் என்று எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் எழுதமாட்டார்களா? எனவே, இதற்கு வன்னியர்கள் தங்களது முழுமையான ஒத்துழைப்பைத் தந்திட வேண்டும்"

## திரு எம். ஏ. மாணிக்கவேலர்

**தமிழகச் சட்டமேலவையின் முன்னாள் தலைவர் திரு எம். ஏ. மாணிக்கவேலர்** அவர்களின் கருத்து

"காங்கிரஸ் ஆட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு கல்விக்கு மட்டும் இட ஒதுக்கீடு கொடுத்தார்கள். வேலைவாய்ப்புக்கான இட ஒதுக்கீடு அவ்விதம் இல்லை. ஆனால் கலைஞர் அவர்களது ஆட்சியில் அதே

பிற்படுத்தப்பட்டோருக்கு, கல்விக்கு மட்டுமில்லாமல் வேலை வாய்ப்புக்கும் இட ஒதுக்கீடு கொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கது.

"வன்னியர் உட்பட மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் சீர்மரபினருக்கும் இருபது சதவிகிதம் இந்த அரசின் மூலமாக பள்ளி, கல்லூரிகளில் படிப்பதற்கும், அரசாங்க வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மிகவும் வரவேற்கத்தக்கது.

"இந்த இருபது சதவிகித ஒதுக்கீட்டில் குறிக்கப்பட்டுள்ள 39 சாதிகளில் வன்னியர்கள்தான் மக்கட்தொகை அடிப்படையில் பெரும்பாலான ஜனத்தொகை உடையவர்கள்.

"எனவே, இந்த இருபது சதவிகித ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு அதிகமாக ஜனத்தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் குறிப்பாக தொழிற் கல்லூரிகளில் சேர்வதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

"மேலும் வேலைகளில் சேர்வதற்கும் அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இதை வரவேற்கிறேன். இது அமலுக்கு வரவேண்டும்"

## திரு பொன். பரமகுரு

**தேவர் கல்வி அறக்கட்டளைத் தலைவர், முன்னாள் காவல்துறை டைரக்டர் ஜெனரல் திரு பொன். பரமகுரு** அவர்களின் கருத்து.

"39 மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், 68 சீர்மரபினருக்கும் சேர்த்து 107 சாதியினருக்குக்கல்வி, வேலை வாய்ப்பில் 20 சதவிகிதம் தனி ஒதுக்கீட்டையும், மீதமுள்ள 95 பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீட்டையும் தமிழக அரசு உறுதி செய்துள்ளது. மேலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கெனத் தனித்துறை உருவாக்கி ஆணைபிறப்பித்துள்ளது.

"சிறிய முறையில் மேற்கண்ட ஆணையைப் பிறப்பித்துள்ள தமிழக முதல்வருக்கும் தமிழக அரசுக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள், உளமார்ந்த நன்றி."



**வன்னியர் மாணவர் நலக் கழகத் தலைவர் திரு சாம்பசிவம்** அவர்கள் விடுத்த அறிக்கையில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"வன்னியர்கள் இட ஒதுக்கீடு கோரிப் பல்லாண்டுக் காலமாகப் போராடி வந்தனர். வன்னியர்களின் நியாயமான கோரிக்கைகளையும், ஏனைய பிற்பட்ட மக்களின் கோரிக்கைகளையும் தி.மு.க ஆட்சியில் அமரும்போது தீர்க்கும் என்று கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

"முதல்வராகப் பொறுப்பேற்ற 6 வாரங்களுக்குள்ளாகவே வன்னியர் உட்பட 39 சாதியினரையும், சீர்மரபினர் 68 சாதியினரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து 20 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார்.

"வன்னியரின் வாழ்வுக்கு ஒளிவிளக்காகத் திகழும் கலைஞர் அவர்களை வன்னியர் மாணவர் கழகம் சார்பில் பாராட்டுகிறோம்."

சென்னை இசைவேளாளர் சங்கம் (அலுவலர் பிரிவு) குடிசைவாழ் மக்கள் மேம்பாடு சங்கம், பர்வத ராஜகுல மீனவர் சங்கம், பிற்பட்ட வகுப்பினர் சம்மேளனம், அனைத்து வன்னியர் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்களும் இந்த அறிவிப்புக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

# மகளிர் முன்னேற்றம்

## "அரசின் அறிவிப்புகளை வரவேற்றுப் பாராட்டுகிறேன்!"

–திருமதி சரோஜினி வரதப்பன்



முன்னாள் முதல்வர்-பெரியவர் திரு எம்.பக்தவச்சலம் அவர்களின் புதல்வியும், இந்திய மகளிர் சங்கத் தலைவியும், மகளிர் தொண்டு நிறுவன உதவி இயக்குநரும், தமிழ்நாடு செஞ்சிலுவைச்சங்கத் தலைவியுமான அவர் 1973-முதல் 1977 வரை மத்திய சமூகநல வாரியத்தின் தலைவியாக இருந்தவர். 1963 முதல் 1967 வரை தமிழ்நாடு சமூகநல அமைப்பின் தலைவியாகப் பணியாற்றியவர்.

மகளிர் முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள திட்டங்கள் பற்றியும், 1988/89ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பெண்கள்முன்னேற்றம் தொடர்பான அறிவிப்புகள் பற்றியும் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் தெரிவித்ததாவது:

அரசுத் துறைக்கான பணிகளில் வரும் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு முப்பது சதவீதம் இடம் தரப்படும் என்கிற தமிழ்நாடு அரசின் அறிவிப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெண்களுக்கு ஆக்கபூர்வமான திட்டங்கள் பல வகுக்கப்படும்என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் அறிவித்திருக்கிறார். அதையொட்டியே தமிழக முதலமைச்சர் அவர்களும் இதுபோன்ற பெண்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை அறிவித்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.

எந்தச் சட்டமானாலும் திட்டமானாலும் அறிவிப்போடு இருந்துவிடாமல், அதை நிறைவேற்றத் தக்க வழிவகைகளிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். (Perspective plan) என்பது மேலே இருப்பதைக் கீழே கொண்டுவருவதல்ல; கீழே இருப்பதை மேலே உயரச் செய்வதுதான். இவைதயெல்லாம் மனதில்கொண்டு தமிழக அரசு அந்த அடிப்படையில் இதை அறிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

பிதுரார்ஜித சொத்துக்களில் பெண்களுக்கு உரிமை அளிக்கப்படும் என்றும், ஏழை-நடுத்தரக் குடும்பப் பெண்களுக்குப் பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி அளிக்கப்படும் என்றும், ஏழை எளிய கர்ப்பிணிப்பெண்களுக்கு ஐம்பது ரூபாய் உதவித்தொகை கொடுக்கப்படும் என்றும், ஏழைத் தாய்மார்களுக்குப் பண்டிகை நாட்களில் இலவசச் சேலை தரப்படும் என்றும், வரவு செலவுத் திட்டத்தில் முதலமைச்சர் அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்க நல்ல திட்டங்களாகும். ஆனால், அந்தத் திட்டங்கள் உரியவர்களுக்குப் போய்ச்சேருவதில் அரசு கவனமாக இருக்கவேண்டும். சின்னஞ்சிறு குழந்தைகளைத் தாய்ப்பாசத்தோடு பெண்களாலேயே நல்லவிதமாக உருவாக்கமுடியும். அந்த அடிப்படையில், பள்ளிக் கூடங்களில், முதலாவது இரண்டாவது வகுப்புகளில் ஏற்படும் ஆசிரியர் பணி இடங்கள் இனி பெணகளுக்கே அளிக்கப்படும் என்று அரசு அறிவித்திருப்பது மிக நல்ல விஷயமாகும்.

மகளிர் வளர்ச்சி மேம்பாட்டுக் குழு (High power committee for women development) தலைவராகப் பிரதமர் இருக்கிறார். நான் அந்தக் குழுவில் உறுப்பினராக அங்கம் வகிக்கிறேன். ஒருவருக்கொருவர் கலந்துபேசித் திட்டமிடுதல், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை எளிதாக்கும் என்பது அக்குழுவின் முக்கிய அடிப்படையாக இருக்கவேண்டும்என்பார், பிரதமர். அந்த வகையில் தமிழ்நாடு அரசும் சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசித் திட்டங்களை முறைப்படிச் செயல்படுத்த வேண்டும்.

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் பல அமைப்புகள் தமிழகத்தில் இருக்கின்றன. ஆனால் அவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் உள்ளன. இந்த நிலை மாற வேண்டும். எல்லா மகளிர் அமைப்புகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு செயல்பட்டால், அரசும் திட்டங்களை நல்லவிதமாக நடைமுறைப்படுத்த முடியும்.

தமிழ்நாட்டில் உள்ள பெண்களில் 75 சதவிகித கிராமப்புறப் பெண்கள் இன்னமும் போதுமான படிப்பறிவு இல்லாமல் இருக்கிறார்கள். முதலில் இந்த நிலையை மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். அப்போதுதான் அரசுப்பணிகளில் முப்பது சதவிகித இடம் பெண்களுக்கு என்ற சட்டத்தைக் குறைவில்லாமல் நிறைவேற்றுவது சாத்தியப்படும்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ்
வையம் தழைக்குமாம்
–பாரதியார்



# நிர்வாகத் தூய்மைக்கான நடவடிக்கைகளை வரவேற்கிறேன்

**முன்னாள் அமைச்சர் திரு சீ. சுப்பிரமணியம்**

மக்களாட்சி ஏற்பட்ட இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தவும், துரிதப்படுத்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் வரவேற்கின்றேன். கவர்னர் ஆட்சிக் காலத்திலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மக்கள் வரவேற்று அப்பொழுது மக்கள் மத்தியிலே ஓர் அச்சமும் கூட இருந்தது. மக்களாட்சி வந்தால் மறுபடியும் பல ஊழல்கள் வந்துவிடுமோ என்கின்ற ஒரு பயம். அதற்கு இடமில்லை என்பதைக் கலைஞர் அவர்கள் நிருபித்துக் காட்டி வருகிறார்கள். இந்த நிர்வாகம் எந்த அளவிற்குத் திறமையாகவும், தூய்மையாகவும் இருக்கின்றதோ அந்த அளவிற்குத்தான் மக்களுக்குப் பலன் ஏற்படும். இதைக் கருத்தில் வைத்துக்கொண்டு பல நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

''அதில் முக்கியமாக இந்த வாரியங்களையும், கழகங்களையும் அதிகாரப் பற்றல்லாதவர்கள் தலைமையில் இருந்ததை நீக்கி, அதிகாரிகளிடம் ஒப்படைத்தது மட்டுமில்லாமல், இந்த எண்ணிக்கையையும் குறைத்தது வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கை.

''இதே முறையிலே நிர்வாகத்தைச் சீரமைப்பதற்காக அது நிதி வசதிகளைப் பெருக்குவதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

''அதிலும் முக்கியமாக சமீபத்திலே டெல்லிக்குச் சென்று Planning Commission உடனும், மத்திய சர்க்காரிடமும் ஆலோசனை செய்து இவ்வருஷத்திய திட்ட அளவை 1,360 கோடி ரூபாய்க்கு அமைத்திருப்பது ஒரு நல்ல முடிவு. இந்த அளவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கான நிதி வசதிகளைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், அந்த நிதி நல்ல முறையிலே பயன்படுத்துவதற்குமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

''அடுத்தபடியாக இந்த மேல் சபையை மறுபடியும் திருப்பிக்கொண்டு வரவேண்டும் என்கின்ற ஒரு முடிவு எடுத்திருக்கின்றார்கள். இதிலே கருத்து வேற்றுமை என்பதற்கு இடம் இருக்கின்றது. என்னைப் பொறுத்த வரையிலும் எப்பொழுதுமே மேல்சபை இருப்பது நல்லது என்கின்ற கருத்தை நான் வலியுறுத்தி வந்திருக்கின்றேன். மேல்சபை வருவதன் மூலமாகப் பல மூதறிஞர்கள் அதிலே இடம் பெற்று, சர்க்காருக்கு நிர்வாகத்தை நல்ல முறையிலே நடைபெறுவதற்கு ஆலோசனைகள் சொல்வதற்கு அதிலே இடமிருக்கின்றது.

மக்களுடைய மனதைப் பெரிதும் கவர்ந்த ஒரு நிகழ்ச்சி, இந்தச் சாராய ஊழலைச் சட்டசபையிலே வெளிப்படுத்தியது. எந்த அளவிற்கு நிர்வாகம் இதற்காகப் பயன் படுத்தப்பட்டிருக்கின்றது என்பது ஓரளவிற்கு இதன் மூலமாக வெளியாயிற்று. இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

''முதல்வர் அவர்கள் சொன்னதைப் போல ஏதோ ஒரு சிறிய அளவில்தான் வெளிப்பட்டு இருக்கின்றது. இந்தக் கள்ளச் சாராயம் சமுதாயத்திற்கே ஒரு பெரிய ஆபத்து. அதை நல்ல முறையிலே அடக்காவிட்டால் பல கேடுகள் விளைவதற்கு இடமிருக்கிறது. இதை எந்த முறையிலே செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுத்து இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கள்ளச் சாராயத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

''இதை நல்ல முறையிலே கவனித்து இதை வீழ்த்துவதுடன் சாராயத்திற்கும் மேலாக போதை மருந்துகள், அது ஒரு பெரிய ஆபத்தாக வந்திருக்கின்றது. இந்த இரண்டு துறையிலேயும் சர்க்கார் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புவோம்.



# பெண்களுக்கு 30 சதவிகித ஒதுக்கீடு தீர்க்கதரிசனம் நிறைந்த நல்ல முயற்சி!

**திருமதி டி. என். அனந்தநாயகி**

மேலவை மீண்டும் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்வது பாராட்டுக்குரியது.



சாதாரணமாக அரசியல் துறையிலே சொல்லுவார்கள், சூடான ஒரு தேநீரை அருந்தும்பொழுது கப் அன்ட் சாஸர் என்று இருந்தால் கப்பிலே சூடாக இருந்தால் சாஸரிலே ஊற்றிக் குடிக்கும்பொழுது அது ஆறிவிடும் என்று. அதே போன்றது மேலவையும். ரொம்பச் சூடான விவாதம் மக்களவையில் நடந்தாலும் மேலவையிலே அறிஞர்கள் பலர் அங்கே இடம் பெற்று, அனுபவசாலிகள் பலர் இடம் பெற்று, அந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீவிரமாக ஆராய்ந்து நல்ல கருத்துக்களை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல முடிகின்ற காரணத்தினாலேதான் மேலவையை வைத்தார்கள்.

''நம்முடைய அரசாங்கம் மேலவையைக் கொண்டு வந்து அங்கே மூத்தவர்கள், மூதறிஞர்கள், அனுபவசாலிகள், ஆற்றல் படைத்தவர்கள், சற்று வயது முதிர்ந்தவர்கள் இவர்களுக்கெல்லாம் அங்கே இடம் கொடுத்து உண்மையிலேயே ஜனநாயக முறையிலே அமைக்கப்பட்ட மேலவை என்ற நல்ல பெயர் வாங்க வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன்.

''அல்லிக்குளத்துக்கருகே இருந்த நிலத்தை அரசாங்கம் அமெரிக்காவிலே வாழ்கின்ற இந்தியர்களுக்குக் கொடுப்பதென முடிவு கட்டி 324 கிரவுண்டை மிகக் குறைந்த விலைக்குக் கொடுத்து அந்தப் பணத்தையும் சுற்றுலாத் துறையிலே பங்குகளாக மாற்றிக் கொள்ளலாம் என்று காட்டிய சலுகை உண்மையிலேயே வரவேற்கத்தக்கதல்ல.

''என்ன தான் அவர்கள் அதை நல்ல முறையிலே பயன்படுத்தினாலும் கூட அரசாங்கச் சொத்தை இப்படிக் குறைந்த விலைக்குச் சில பேர் வாங்கிச் செல்வது என்பது மக்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தும்.

''அதை இன்றைக்கு வெளிக்கொணர்ந்து அதை ரத்துச் செய்வதெனவும் முடிவு கட்டியிருப்பது பாராட்டுக்குரியது. அதுவும் வட சென்னையிலே அந்த இடம் ஒன்றுதான் காலியாக இருக்கிறது. அந்த இடம் மிக மிக எப்படி மனிதனுக்குச் சுவாசப் பை தேவைப்படுகிறதோ, அதுமாதிரி மக்களுக்குச் சுவாசப் பையாக விளங்கக்கூடிய ஒரு இடத்தை இப்படி மற்றவர்களுக்குக் கொடுப்பது சரியல்ல. Better late than never என்று சொல்வது மாதிரி இப்பொழுது அதை உணர்ந்து உடனே ரத்து செய்வதை உண்மையிலேயே பாராட்ட வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

வேலை வாய்ப்புகளிலே பெண்களுக்காக 30 சதவிகிதம் ஒதுக்கி வைத்திருப்பது மிக மிக வரவேற்கத்தக்கது. ஏன் இதைச் சொல்லுகின்றேனென்றால் சாதாரணமாக ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால், அந்த நாட்டுடைய பெண்கள் முன்னேறி விட்டால் அந்த முன்னேற்றம் வெகு விறுவிறுப்பாகவும், வேகமாகவும் இருக்கும் என்பதில் யாருக்குமே ஐயப்பாடு இருக்க முடியாது. அந்த நிலையிலே இன்றைக்குத் தமிழகத்திலே 30%பெண்களுக்கு ஒதுக்கப்படும், அரசாங்க வேலைகளிலும், மற்ற வேலைகளிலும்-என்று சொல்லுவது வரவேற்கத்தக்கது. ஏனெனில் ஒரு ஆண் வேலைக்குப் போனால் ஒரு நபர்தான் போகின்றார். ஒரு பெண் வேலைக்குப் போனால் அவளால் குறைந்த பட்சம் 5 பேருக்காவது லாபமிருக்கும். சிக்கனமாக அந்தப் பணத்தை வைத்து, தன்னுடைய குடும்பத்தைப் பொறுப்போடு கவனிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கக்கூடியவர்கள் பெண்கள். ஊதாரித்தனமாகத் தன்னுடைய சம்பளத்தை செலவழிக்கமாட்டார்கள். இப்படி ஒழுங்கான முறையிலே செலவழிக்கக்கூடிய சக்தி படைத்தவர்கள் படித்து, தகுதியும் பெற்றவுடன் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தருவார்களேயானால் குடும்பங்கள் முன்னேறுவதற்கு வெகு சுலபமான ஒரு சூழ்நிலை ஏற்படும். மக்கள் இப்படி முன்னேறினால் கட்டாயமாக நாடு, குறுகிய காலத்திலே முன்னேறிவிடும் என்ற பெருமைக்கு ஆளாக முடியும். ஆகையினாலே பெண்களுக்கு 30% ஒதுக்கியிருப்பது நல்ல தீர்க்கதரிசனத்தோடு செய்யப்பட்ட ஒரு நல்ல முயற்சி என்று நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.



# 'வரவேற்கப்பட வேண்டிய - பாராட்டப்பட வேண்டிய செயல்!'

**திருமுருக கிருபானந்தவாரியார் கருத்து**

இந்து அறநிலையத் துறையைச் செம்மைப்படுத்தவும், அனைத்துத் திருக்கோயில்களின் பணிகளும் செவ்வனே நடைபெறவும், சமயச் சான்றோர்களுடன் கலந்து பேசித் தக்க முடிவுகள் எடுக்கத் தமிழக அரசு முடிவு செய்தது.

அதன் அடிப்படையில், இந்து அறநிலையத் துறை ஆக்கப் பணி ஆலோசனைக் குழுவினை அரசு அமைத்துள்ளது.

இது தொடர்பாக, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களிடம் கருத்து கேட்டபோது, அவர் கூறியதாவது:

''ஆலயங்களுடைய நிர்வாகம், பூஜைகள், விழாக்கள் ஆகியவை சிறப்பாக நடைபெறவும், மேலும் செம்மைப்படுத்தவும், எந்தெந்த வகையில் நிர்வாக அமைப்பில் காரியங்கள் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், சமயச் சான்றோர்கள் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். அதற்காக இந்து அறநிலையத்துறை ஆக்கப் பணி ஆலோசனைக் குழுவினையும் அமைத்துள்ளார். இது, வரவேற்கப்பட வேண்டிய பாராட்டப்பட வேண்டிய செயல். அதே சமயத்தில், இந்தச் சீரிய திட்டம் மேலும் செம்மையுற, சில யோசனைகளையும் கூறலாம் என்று கருதுகிறேன்.

''ஆலயத்தின் நிலங்களுக்கு விதிவிலக்கு தந்து, அந்தந்தக் கோயில் நிலங்கள், அந்தந்தக் கோயில்களுக்கு உதவுமாறு தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

''அர்ச்சகர்கள் சம்பளம், பாக்கி இல்லாமல் தர வேண்டும்; நலிந்த கோயில்களைக் கவனிக்க வேண்டும்; ஆலய ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

''இந்த ஆக்கப் பணிக் குழு, பலதுறை-சமயத் துறைப் பெரியவர்களைக் கலந்து, தெரிவிக்கும் கருத்துக்களை ஆராய்ந்து, ஆலய நிர்வாகம் சிறப்பாக அமையவும் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெறவும், தனி மனித ஒழுக்கம் வளரவும், நல்ல கருத்துக்களை ஏற்று அரசு செயல்பட வேண்டும்.''



# தமிழக அரசுக்குப் பெண்ணினம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது!

திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி

'அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுப்பணி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்படும் வேலை வாய்ப்பில் முப்பது சதவிதம் வழக்கமாகப் பின்பற்றப் படும் வகுப்புவாரி இட ஒதுக்கீடு அடிப்படையில் மகளிருக்கு ஒதுக்கப் படும் என அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர, தொடக்கப்பள்ளிகளில் முதல் இரண்டு வகுப்புகளில் ஆசிரியைகள் பணிசெய்வது சாலச் சிறந்தது என்ற காரணத்தால், எதிர்காலத்தில் எழும் காலியிடங்களைப் பெண் ஆசிரியர்களைக் கொண்டே நிரப்பப்படும் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. பெண்களின் சமுதாய நிலையை எல்லா வகைகளிலும் மேம்படுத்துவதற்கான வேறுபல சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்த இந்த அரசு முனைந்திடும்'.

—தமிழ்நாடு அரசின் இந்த அறிவிப்புப் பற்றி, சென்னையில் உள்ள அவ்வை இல்லத்தின் நிர்வாகியும், 'இந்திய மகளிர் சங்கத்'தில் 25 ஆண்டுக்காலம் செயலாளராக இருந்தவரும் இப்போது அச் சங்கத்தின் அடையாறு கிளையின் தலைவியாக இருப்பவரும், இந்திய தேசிய மகளிர் கவுன்சிலின் சென்னைப் பிரிவு துணைத் தலைவியாக உள்ளவருமான திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் கருத்துக் கேட்டோம்.

அப்போது அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்ததாவது:

அந்த அறிவிப்பு வெளியான மறுநாளே அதை வரவேற்று வாழ்த்துத் தெரிவித்துத் தமிழக முதல்வர் அவர்களுக்குக் கடிதம் எழுதியவள் நான். Really it is a great step. பெண்கள் இந்த நாட்டில் 50 சதவிகிதத்திற்கு மேல் இருந்தாலும் பெரும்பாலும் ஆண்களால் சம உரிமை தரப்படாமல் இருப்பதைப் பார்க்கிறோம். ஆண்களால் பெண்கள் அடக்கியாளப்படும் நிலையும் இருக்கிறது. இந்த அரசு அறிவிப்பானது அமலானால் அந்த நிலைமைகளையெல்லாம் அடியோடு மாற்றிவிடும் என்பது நிச்சயம்.

பெரும்பாலான பெண்கள், தகுதியிருந்தும் வேலை கிடைக்காத நிலையில் ஆண்களையே சார்ந்திருக்கும்படி ஆகிறது. அதனால், அவர்களுடைய வாழ்க்கைக்கே உத்தரவாதமோ, குடும்பத்தில் பிடிப்போ இல்லாமல் இருந்தது. இந்த அறிவிப்பு அமல்படுத்தப் பட்டால், அப்படிப்பட்ட பெண்களுக்கெல்லாம் நிச்சயம் வாழ்க்கை உத்தரவாதம் கிடைத்துவிடும். தன்னம்பிக்கை ஏற்படும். It gives status for the women.

ஊனமுற்ற பெண்களுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு உண்டா என்று தெரியவில்லை; அவர்களுக்கும் கிடைக்க வகை செய்யப்படுமானால் இன்று இந்த அரசு பெருமை பெறும்.

வேலைக்குப் போகும் பெண்ணுக்குச் சமூக அந்தஸ்தும் கூடிவிடுகிறது. வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிற பெண்ணிடம் 'இவ்வளவு கொடு, அவ்வளவு கொடு' என்று வரதட்சணை கேட்கவும் அஞ்சுகிற நிலை, இச்சட்டத்தினால் நிச்சயம் சமூகத்தில் ஏற்படவே செய்யும். வேலைக்குப் போகும் பெண்ணுக்குத் திருமணமும் சீக்கிரம் கூடிவிடும்.



கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

பகுத்தறிவுத் தந்தை
பெரியார்

அரசுப் பணி புரிந்து அதிக வருவாய் பெறும் பெண்களுக்காக மட்டுமின்றி, சாதாரண வேலை செய்து 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை சம்பாதிக்கும் பெண்களுக்கென்று நாங்கள் ஒரு விடுதி நடத்துகிறோம். அறுபது பேர் அதில் இருக்கிறார்கள். அவர்களில் சிலர், படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமல், கிடைத்த வேலையில் சேர்ந்தவர்கள். ''குறைந்த வருவாய் பெறும் நிலையில் வீட்டில் கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை. அதனாலேயே இங்கு வந்தோம்'' என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கூட இந்த அறிவிப்பு மிகவும் மகிழ்ச்சியளித்திருக்கிறது. இதன் மூலம் தமக்கு வாழ்க்கைப் பிடிப்பு உண்டாகியிருப்பதாக அவர்கள் மனப்பூர்வமாகச் சொல்லுகிறார்கள். ஏனென்றால் இதனால் They will have a better life.

பொதுவாகவே வீட்டில் உள்ள பெண்களுக்குப் பல பிரச்னைகள் இருக்கின்றன. இந்த முப்பது சதவிகித வேலைவாய்ப்பின் மூலம் எல்லாப் பிரச்னைகளுமே நீங்கிவிடும். சமூக சேவை செய்யும் அனைவருமே அரசின் இந்த நல்ல ஏற்பாட்டை மனமுவந்து வரவேற்பார்கள்.

1989-90 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலும் பெண்களுக்கு பெருமைதரும் பல விஷயங்கள் இருக்கின்றன. குறிப்பாக இந்து சட்டத்தின் கீழ் ஆண் வாரிசுகளுக்குப் பரம்பரைச் சொத்துரிமை உள்ளது போலவே பெண் வாரிசுகளுக்கும் சொத்தில் சம உரிமை வழங்க வழி செய்யப் பரம்பரைச் சொத்துரிமைச் சட்டத்தை அரசு திருத்தியமைக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்களுக்காகத் தமிழக அரசுக்குப் பெண்ணினம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.





# பார்வையற்றவரின் பயனுள்ள கண்டுபிடிப்பு

பார்வையோ கிடையாது; பயின்றதோ சட்டம்; ஆனால் கண்டுபிடிப்புகளோ பயின்ற கல்விக்குச் சிறிதும் தொடர்பே இல்லாத எலெக்ட்ரானிக் கருவிகள். இச்சாதனைகளின் சொந்தக்காரரான திரு ஏ. கலாநிதி எதையும் நம்மால் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையால் எலெக்ட்ரானிக் கருவிகள் சிலவற்றைக் கண்டுபிடித்தார். இந்த இளம் விஞ்ஞானியின் அண்மைக்காலக் கண்டுபிடிப்பு தான் பம்புசெட் கட்டுப்பாட்டுக் கருவி.

அறிவியல் வளர்ச்சி காரணமாக, பல்வேறு துறைகளில் இன்று நாம் மின்னணுவியலைப் பயன்படுத்தி வருகிறோம். அதைப்போல விவசாயத் துறையிலும் மின்னணுவியலைப் பயன்படுத்தி நவீன முறைகளைக் கையாள வேண்டும். இதன் பயனாய் விவசாயிகளின் வேலைப் பளு குறைய வேண்டும் என்ற உயரிய நோக்குடன் புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார் திரு ஏ.கலாநிதி. சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் தங்கியுள்ள இவர், பிறவியிலேயே பார்வையற்றவர்.

உடல் ஊனத்தை ஒரு பொருட்டாகக் கருதாது பல்வேறு சிறப்புமிக்க சாதனைகளைப் படைத்து வருகிறார். அதில் ஒன்றுதான் அவரது தற்போதைய கண்டுபிடிப்பான பம்புசெட் கட்டுப்பாட்டு நூதனச் சாதனம்.

மதுரை பசுமலையைச் சேர்ந்த இவர், பாளையங்கோட்டை பார்வையற்றோர் பள்ளியிலும், தூய யோவான் மேல்நிலைப்பள்ளியிலும் தம் பள்ளிக் கல்வியை முடித்தார். பின் சென்னை லயோலா கல்லூரியில் புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு, சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டமேற்படிப்பு பயின்று அண்மையில் சென்னை சட்டக்கல்லூரியில் சட்டப் படிப்பை முடித்துள்ளார்.

பல் முனைச் செயல்பாடு கொண்ட கடிகாரம் பொருத்தப்பட்ட காலக் கட்டுப்பாட்டு ஒலிப்பதிவுக் கருவியுடன் இணைந்த தினசரி அலுவல் அறிவிப்புத் தானியங்கிக்கருவி ஆகியவை இவரது முந்தைய கண்டுபிடிப்புகளாகும்.

இவரது திறமையைப் பாராட்டி, தமிழ்நாடு மாநில ஜேய்சீ மற்றும் இந்திய ஜேய்சீ அமைப்புகள் 1987-ஆம் ஆண்டுக்கான சிறந்த இளைஞருக்கான விருதுகளை வழங்கியுள்ளன.

இவர் கண்டுபிடித்துள்ள பம்புசெட்கட்டுப்பாட்டு நூதனச் சாதன

எந்த ஒரு மின்சாதனத்தையும் தானாகவே இயக்கவோ அல்லது நிறுத்தவோ கூடிய திறன் பெற்ற மின் 'காட்கெட்',

மானது. தேவைப்படும்பொழுது பம்புசெட்டை இயக்கித் தேவையான அளவு நீர் பாய்ச்சி விட்டுத் தானாகவே பம்புசெட்டை நிறுத்திக் கொள்ளும் வகையில் தயாரிக்கப் பட்டுள்ளது. நீர் பாய்ச்சும் வேலையை இக்கருவியே யாருடைய துணையுமின்றித் தானேமேற்கொள்வதால் நீர் பாய்ச்சுவதற்கென்று விவசாயிகள் வயலுக்குப் பகலிலோ அல்லது இரவுநேரங்களிலோ கூட செல்லவேண்டிய அவசியம் இல்லை.

மின்சாரம் எப்பொழுது வரும் என்றும், பம்பு செட்டை எப்பொழுது நிறுத்துவது என்றும், காலத்தை வீணாக்கி விவசாயிகள் காத்திருக்கத் தேவையில்லை. பம்புசெட்டை இயக்கி வயலுக்கு நீர் பாய்ச்ச ஆட்களுக்கு அளிக்கப்படும் ஊதிய செலவையும் இக் கருவி தவிர்க்கிறது. இரவு நேரங்களில் வயலுக்குச் சென்று நீர் பாய்ச்ச இயலாத பெண்களுக்கும் பார்வையற்றோருக்கும் உடல் ஊனமுற்றோருக்கும் இக்கருவி ஒருவரப்பிரசாதமாகும்.

குறைந்த மின்னழுத்தத்தின் போதும் ஒரு பேசில் (single phase) மின்சாரம் வருகின்றபோதும், கிணற்றில் நீர்மட்டம்புட்வால்வுக்கு (foot valve) அருகே செல்கின்றபோதும் பம்பு செட்டைத் தானாகவே நிறுத்தி, மோட்டாரில் காயில் எரிந்துபடாமல் பாதுகாப்பது இக்கருவியின் சிறப்பம்சமாகும்.

மேலும் மோட்டார் இயங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு லைனில் மின்தடை ஏற்பட்டாலும், உடனே மோட்டாரை நிறுத்தி மீண்டும் மூன்று லைனிலும் மின்சாரம் வந்த பிறகு மோட்டாரை இயக்கும்.

விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் இக்கருவியை வாங்கி பம்பு செட்டுகளில் முறைப்படி இணைக்க வேண்டும். மின்சாரம் வருகிற மூன்று லைன்களை இந்தக் கருவியுடன் இணைத்துவிட்டுபம்புசெட்டு மோட்டாரிலிருந்து வருகிற ஒயர்களை நேர்லைன் முறை அல்லது ஸ்டார்ட் டெல்டா முறையில் இணைக்க வேண்டும். பிறகு இக் கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 சென்சார்களில் (sensors )

## 'தமிழரசு' தமிழ் மணம் கமழ்கிறது

பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தமிழரசு இதழில் தமிழ்மணம் கமழத் தொடங்கி இருக்கிறது. மன நிறைவைத் தருகிறது.

ஆர்.ராமகிருஷ்ணன்,
பாளையங்கோட்டை.

'தமிழரசு' இதழ் (1.3.89) இலவச இணைப்பு டாக்டர் கலைஞரின் 'எழுச்சிக்கோலம் காண்போம்' உள்ளபடியே ஒரு பெட்டகம்.

-ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

மாண்புமிகு பேராசிரியர் திரு. க.அன்பழகன் அவர்களின் தமிழ் வளர்த்த பெரியார் - உ.வே.சா. பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது.

-ப.பதுமாவதி,
செதுவாலை.

1.3.89 இதழ் முகப்பு சிறப்பு. 'எழுச்சிக் கோலம் காண்போம்' இலவச இணைப்பு அருமை.

எம்.ஆனந்தகுமார்,
சின்னாம்பாளையம்.

## பார்த்தோம் படித்தோம்



'தமிழரசு' தரும் அரசுச் செய்திகள் உட்பட, மற்ற செய்திப் படங்களும் பாராட்டும்படி உள்ளன.

-எஸ்.எஸ்.வாசன்.
தென் எலப்பாக்கம்.

16.3.89 இதழ் முகப்பில், கிராமியக் கலையான பொய்க்கால் குதிரை ஆட்ட வண்ணப்படம் அற்புதம்.

ப.அ.சண்முகம்,
களம்பூர்.

சுந்தர ராமசாமி எழுதிய 'சன்னல்' சிறுகதை மனத்தைக் கொள்ளை கொண்டது. கோபன் ஓவியம் அருமை.

-டி.ரமேஷ்குமார்.
பரங்கிப்பேட்டை.

இந்த இதழ் (16.3.89) அட்டை கண்ணைக் கவர்ந்தது. மாணவர் பக்கமும் பயனுள்ள பகுதி.

துரைவேணுகோபால்
பரங்கிப்பேட்டை.

'தமிழரசு' பள்ளி மாணவர்களுக்கும் பயன்படும்படி உள்ளது.

க.பாலாஜி,
எறும்பூர்.

'தமிழரசு' வரலாற்றுப் பெட்டகமாய் - இலக்கியக் களஞ்சியமாய்த் திகழ்கிறது. ஒவ்வொரு பக்கமும் அருமை. என் இனிய வாழ்த்துக்கள்.

-கந்ததாசன்.
உட்கோட்டை.

'தமிழரசு' மிகவும் அருமையாகவும், விறுவிறுப்பான செய்திகளைக் கொண்டும் வருகிறது.

கே.எம்.ராஜ்மோகன்
சிலப்பாடி.

'வெண்பாப் போட்டி' தொடங்குவது பற்றிப் படித்தேன். மிக்க மகிழ்ச்சி.

-நா.பசும்பொற்கிழார்.
பாளையம்பட்டி.

---

இரண்டை வயலில் அல்லது தோட்டத்தில் வைக்க வேண்டும். அவற்றில் ஒன்று வயலில் நீர் குறைவதைக் கண்காணித்து நீர்தேவைப்படும்போது பம்பு செட்டை இயக்குகிறது. மற்றொன்று நீர் பாய்ச்சுவதைக் கண்காணித்து தேவையான நீர் பாய்ந்தவுடன் பம்புசெட்டை நிறுத்தி விடுகிறது.

மேலும் இரண்டு சென்சார்களைக் கிணற்றில் பொருத்த வேண்டும். இவை கிணற்றின் நீர்மட்டம் புட்வால்வுக்கு அருகே வந்ததும் பம்பு செட்டை நிறுத்திவிடும். மற்றொரு சென்சார் தேவையான அளவுக்கு நீர் மட்டம் உயர்ந்ததும் பம்புசெட்டை இயக்கிவிடும். இறுதியாக உள்ள சென்சாரை பம்பிலிருந்து தண்ணீர் வெளிவரும் இடத்தில் பொருத்த வேண்டும்.

பம்புசெட்டு இயங்கும்போது திடீரென நீர் வராவிட்டால் இந்த சென்சார் உடனே பம்புசெட்டை நிறுத்திவிட்டு அரை நிமிடம் ஓய்வு கொடுத்து பின்னர் மீண்டும் 20 வினாடி அளவுக்கு இயக்கிப் பார்க்கும். இரண்டாவது முறையும் நீர் வரவில்லை என்றால் மெயினையே நிறுத்திவிட்டு சிவப்பு விளக்கை எரிய விட்டு, பழுது பட்டு இருப்பதை நமக்குத் தெரியப்படுத்தும். இக்கருவியை இயக்குவதும் எளிது, இதில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதனைச் சரிபடுத்துவதும் எளிது. மொத்தத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் நிறைந்த பயனை அளிக்கும் வகையில் இந்தக் கருவி நுட்பமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வரிய கண்டுபிடிப்பை நமக்குத் தந்துள்ள திரு கலாநிதிக்கு எப்படி இம்முயற்சியில ஆர்வம் ஏற்பட்டது? இதற்கான தூண்டுகோல் எது? அவரே கூறுகிறார்.: பார்வையற்றோருக்கும், உடல் ஊனமுற்றோருக்கும் நகர மக்களிடையே கூட ஓரளவு ஆதரவும் அனுதாபமும் கிடைக்கிறது. ஆனால் கிராமங்களிலோ உடல் ஊனமுற்ற குழந்தை என்றால், பெற்றோரே ஒதுக்கி விடுகின்றனர். 'இந்தக் குழந்தை இருப்பதே பாவம்' என்று பாரமாய் நினைத்து [illegible]ட்சியப்படுத்துகின்றனர். [illegible]ப்பட்ட அனுபவங்கள் என[illegible] [illegible]ழ்க்கையில் எனக்கு நிறை[illegible] ஏற்பட்டிருக்கின்றன. எதையும் நம்மால் சாதிக்க முடியும் என்ற உள்ளுணர்வு ஏற்படுத்திய வெறியே இதுபோன்ற என் சாதனைகளுக்குக் காரணம்'' என்று நெஞ்சுயர்த்திக் கூறுகிறார்.

இவரின் இந்தக் கண்டுபிடிப்பை விவசாயிகள் பயன்படுத்தித் தக்க விதத்தில் யாரேனும் தயாரித்து விற்பனை செய்ய முன்வர வேண்டுமென விரும்புகிறார். சமுதாய நல நோக்குடன் தயாரித்தால் இக்கருவியின் விலை அதிக அளவு ரூ. 1500 தான் ஆகுமாம்.

இக்கருவியைக் கண்டுபிடிக்க ரூ.27,000 வழங்கி உதவிய இந்தியன் வங்கியை திரு கலாநிதி நன்றியுடன் நினைவு கூர்கிறார். இவரின் அடுத்த கண்டுபிடிப்பும் விவசாயத்துறைக்கே பயன்படக் கூடியதாய் அமைய வேண்டும் என இவர் விரும்புகிறார். விவசாயத்திற்கு எந்தெந்த பணிகளைத் தானாகவே செய்வதற்கு, எத்தகைய எலக்ட்ரானிக் கருவி கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்று தமக்குக் கருத்துக்களைத் தெரிவித்தால் அதற்கான கருவியைத் தம்மால் கண்டுபிடிக்கமுடியும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

—வி. இராவணன்





# நாம் மட்டுமா இப்பேரண்டத்தில் இருக்கிறோம்?

**சென்னையில் உள்ள பெரியார் அறிவியல் தொழில் நுட்ப வளாகத்தில் அமைந்துள்ள பி. எம். பிர்லா கோளரங்கத்தில், அண்மையில் (16-3-'89) ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி நடைபெற்றது. 'நாம் மட்டுமா இப் பேரண்டத்தில் இருக்கிறோம்?' என்கிற மூன்றாவது ஒளி நிகழ்ச்சித் தொடக்க விழாவே அது.**

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் டாக்டர் தி.இரா. நடேசன் அவர்கள் அந்நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்.**

**தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்களின் செயல் இயக்குநர் திரு. ஆர். பெரியசாமி அவ்விழாவில் வரவேற்புரையாற்றினார். இந்த மூன்றாவது புது நிகழ்ச்சிபற்றி, கோளரங்கத்தின் இயக்குநர் டாக்டர் சி. பா. கோபாலராமன் விளக்கவுரையாற்றினார்.**

**'நாம் மட்டுமா இப்பேரண்டத்தில் இருக்கிறோம்?'-Are we alone in this Universe?' தமிழ்-ஆங்கில நிகழ்ச்சிகள் தனித் தனியே ஒளிபரப்பப்பட்டன.**

பெரியார் அறிவியல் தொழில் நுட்ப வளாகத்தில் அமைந்துள்ள பி.எம்.பிர்லா கோளரங்கத்தின் முதல் நிகழ்ச்சி 'ஞாயிற்றுக் குடும்பத்தைப் பற்றிய ஓர் ஆய்வு' என்பதாகும். 11.5.88ல் அந்நிகழ்ச்சி துவக்கிவைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து 'கட்டுமீறின பேரண்டம்' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

இப்போது மூன்றாவதாக-'நாம் மட்டுமா இப் பேரண்டத்தில் இருக்கிறோம்?' என்கிற நிகழ்ச்சி துவக்கப்பட்டுள்ளது.

'நாம் அனைவரும் இப் பரந்த விண்வெளியில் கவர்ச்சியான பயணம் ஒன்று செய்யப்போகிறோம்...' என்ற இனிய குரலோடு நிகழ்ச்சி தொடங்குகிறது. 'நீங்கள் இப்போது பரந்த சென்னை மாநகரத்தின் பிற்பகல் தோற்றத்தினைக் காண்கிறீர்கள். மேற்குத் திசையில் இதோ சூரியன் ஒளிநயத்தோடு காணப்படுகிறது...' என்று தொடர்கிறது.


**கண் சிமிட்டும் விண்மீன்கள்**

கோளரங்கத்தின் உள்ளேயிருக்கும் நாம், உள்ளபடியே விண்வெளியில் பயணம் செல்லும் உணர்வுக்கு ஆளாகிறோம். மாலைப் பொழுது முடிந்தால் இரவுப் பொழுதுதானே? அரங்கினுள் இருள் கவிகிறது. கருநீலவானில் விண்மீன்கள் கண்சிமிட்டுகின்றன.

பூமி, சூரியன், கோள்கள், துணைக் கோள்கள், ஏனைய சிறு வான்பொருட்கள் ஆகியவற்றின் தோற்றம், பழமை, இயக்கம், அமைப்பு, நிலைமை பற்றியெல்லாம் காட்சிகளும் கனிவுமிக்க விளக்க உரைகளும் தொடர்கின்றன. வினாடிக்கு வினாடி நாம் வியப்படைகிறோம்.



பிர்லா கோளரங்கம்



**புளூட்டோ எனப்படும் குபேரன்**

இப் பேரண்டத்தில் வேறு எங்காவது உயிரினங்கள் உள்ளனவா என்கிற ஆய்வு பற்றியும் தெரிவிக்கப்படுகிறது. விண்மீன் மண்டலத்தில் உள்ள ஓரியன், டாரஸ், ரீகல், வீனஸ், புளூட்டோ சிரியஸ், புரோசியான், பெட்டல்ஜூஸ், சிக்னஸ், மிஸார், அல்கார் ஆகியவை இந்தக்காட்சியில் காட்டப்படுகின்றன; விளக்கப்படுகின்றன. விண்மீன்கள் உருவாவதும் சிதைவதும் தொடர்ந்து நடைபெறுவதால் இப் பேரண்டத்தில் கனத்த தனிமங்கள் அதிகமாகி வருவதாக நமக்குத் தெரிவிக்கப்படுகிறது.

பூமியில் மட்டுமல்லாமல், வேறு எங்கேனும் உயிரினம் உண்டா என்று கண்டறிய நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள், அதன் முடிவுகள் விவரிக்கப்படுகின்றன.

**பறக்கும் தட்டு கற்பனையே!**

மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த ஒரு விண்மீனே சூரியன் என்று சொல்லி, அதன் உண்மைத் தன்மைகள் காட்சியோடு விளக்கப்படுகின்றன.

இந்தப் பேரண்டத்தில் நாம் தனித்தா இருக்கிறோம்? உலகில் உயிர்கள் எப்படித் தோன்றின? உயிரினம் வேறு எங்கெல்லாம் தோன்றக்கூடும்?.... என்பன போன்ற கேள்விகள் கேட்கப்பட்டு அவைகளுக்கான விடைகள் அளிக்கப்படுகின்றன. பறக்கும் தட்டில் மனிதர்கள் வருவதாகச் சொல்லப்படுவதெல்லாம் வெறும் கற்பனையே என்று விளக்கப்படுகிறது.

—ஏறக்குறைய முக்கால் மணி நேரம் நடக்கும் இந்த மூன்றாவது ஒளிநிகழ்ச்சி முடிவில், நாம் பகற்பொழுதில் இருக்கும் உணர்வுக்குக் கொண்டுவரப்படுகிறோம். 'இப்பொழுது கோளரங்கத்தில் சூரியன் உதயமாகிப் புதிய நன்னாளைத் தோற்றுவிக்கிறது...' என்ற இனிய அறிவிப்பைத் தொடர்ந்து, குழலிசையில் பூபாளம் இழைகிறது.




**வீனஸ் எனப்படும் வெள்ளி**

இருளோ என்றிருந்த கோளரங்கில் மெல்ல மெல்ல வெளிச்சம் பரவ, கிழக்கே சூரியன் தோன்றி உலகை வலம்வருவது மிக அழகாகக் காட்டப்படுகிறது.

'நாம் மட்டுமா இப்பேரண்டத்தில் இருக்கிறோம்?' என்ற இந்த மூன்றாவது நிகழ்ச்சிக்கான ஆங்கில வருணனைகளை எழுதி இயக்கியவர்கள் பிர்லா கோளரங்க இயக்குநர் டாக்டர் பி.சி.கோபாலராமன், உதவி இயக்குநர் திரு எஸ். கோபிநாத் ஆகிய இருவருமாவர். டாக்டர் எம்.சற்குருமூர்த்தி ஆங்கில வருணனையை அழகு தமிழில் எழுதியிருக்கிறார்.



**பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மைய அலுவலகத்திலுள்ள தந்தை பெரியார் ஓவியம்**



**கோளரங்கத்தில் உள்ள புரொஜெக்டர்**

இதற்கான கம்ப்யூட்டர் இயக்கங்களைத் திருமதி பி.சுமதியும், ஒலிப்பதிவைத் திரு எம்.இளங்கோவும் கவனித்திருக்கிறார்கள்.

ஆங்கில நிகழ்ச்சிக்குத் திரு எஸ். கோபிநாத், திருமதி நீரவிந்திரன் ஆகியோரும், தமிழ் நிகழ்ச்சிக்குத் திரு எஸ். வரதராஜன், திருமதி சந்தியா ராஜகோபாலன் ஆகியோரும் மிக நல்ல முறையில் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

236 இருக்கைகள் உள்ள இந்த பிர்லா கோளரங்கச் சிறப்பு நிகழ்ச்சிகள் வேலை நாட்களில் 10.30 மணி முதல் துவங்கிவிடுகிறது. 11.30க்கும் 3.30க்கும் தமிழ்க் காட்சிகளும்-12.30 க்கும் 4.30க்கும் ஆங்கிலக் காட்சிகளும் நடத்தப்படுகின்றன. சனி, ஞாயிறு மற்றும் வார விடுமுறை நாட்களில் 11.30, 3.30, 4.30 ஆகிய நேரங்களில் தமிழ்க் காட்சிகளும், 12.30, 2.30, 5.30 ஆகிய நேரங்களில் ஆங்கில நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. மாணவர்களுக்கு மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

திங்கட்கிழமை கோளரங்கத்தின் வார விடுமுறை நாளாகும்.

அறிவியல் கற்றிடும் ஆர்வம் பரவ இத்தகைய ஒளி-ஒலி நிகழ்ச்சிக் காட்சிகள் சமுதாயத்திற்கு, குறிப்பாக இன்றைய இளந்தளிர்களுக்குப் பெரிதும் உதவும்.

—பி. எஸ். ராஜேந்திரன்

தமிழ் வளர்த்த பெரியார் :

# மனோன்மணீயம் படைத்த சுந்தரனார்



"நீராரும் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே-உன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

-அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் இந்தப் பாடல் பாடப்பெற வேண்டும்என்று 1969இல் அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது தமிழக அரசு.

இந்தப் பாடலைத்தமது மனோன்மணீயம் என்னும் காவியத்தில் தமிழ்த்தாய் வணக்கப் பாடலாக எழுதியவர் ராவ்பகதூர் சுந்தரம் பிள்ளை ஆவார்.

திருவாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் துறைமுக நகரில் வாணிகத்தில் ஈடுபட்டிருந்த பெருமாள் பிள்ளை, மாடத்திஅம்மையார் தம்பதிக்கு மகனாக 1855ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் நாளில் தோன்றியவர் சுந்தரனார்.

சுந்தரனார் உரிய வயதில் ஆலப்புழையில் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளிக் கல்வியுடன், தந்தையாரிடமிருந்து ஆத்திசூடி, கொன்றைவேந்தன, மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம், திருக்குறள் போன்ற நூல்களையும், தேவார, திருவாசகப் பாடல்களையும் கற்று வந்தார். ஆசிரியர்கள் வியந்து பாராட்டும் அளவுக்கு முதன்மையான மாணவராக விளங்கினார். தமது பன்னிரண்டாவது வயதுவரை இந்தப் பள்ளியில் கல்வி கற்றார்.

பின்னர் ஆலப்புழையில் அமைந்த ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து ஆங்கிலம் கற்கலானார். அருந்தமிழ் கற்பதில் காட்டிய ஆர்வத்தைப் போன்றே, ஆங்கிலம் கற்பதிலும் அவர் ஆர்வம் செலுத்தினார். அவர் படிப்பிற் காட்டிய ஊக்கம், பல ஆசிரியர்களையே ஈர்த்தது. பள்ளித் தலைவரான பீஸ் என்னும் ஆங்கிலேயர் சுந்தரனாரின் பேச்சு வன்மையைக் கண்டு, "இந்த மாணவர் பிற்கால வாழ்க்கையில் மாபெரும் புகழ் ஈட்டுவார்" என்று தொலைநோக்கு உணர்வுடன் குறிப்பிட்டார்.

ஆலப்புழையில் கல்வி முடிந்தவுடன் உயர்கல்வி பெறுவதற்காகச் சுந்தரனார் திருவாங்கூரின் தலைநகரான திருவனந்தபுரத்திற்குச் சென்றார். அரசர் கல்லூரியில் சேர்ந்து, மெட்ரிகுலேசன் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். அதனால் அவருக்கு அரசியலாரின் பொருளுதவி கிடைத்தது. 1876ஆம் ஆண்டில் பி.ஏ. பட்டம் பெற்றார். திருவனந்தபுரத்திலேயே முதல் மாணவராகத் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

அரசர் கல்லூரியின் தலைவர் ராஸ் என்னும் ஆங்கிலேயர் ஆவார். சுந்தரனாரின் கல்வித் திறனும், ஆங்கில அறிவும், சொற்பொழிவாற்றும் திறமும், ஆண்டுத் தேர்வுகளில் அவர் விடையளித்த பாங்கும், கல்லூரித் தலைவரைப் பெரிதும் கவர்ந்தன. அதனால், அரசர் கல்லூரியில் சுந்தரனாரை விரிவுரை

## புலவர் தமிழ்ப்பித்தன்

யாளராக நியமித்தார். அப்போது சுந்தரனாருக்கு இருபத்தொரு வயதுதான் ஆகியிருந்தது. கல்லூரி வகுப்புகளுக்கு வரலாறு, தத்துவம் ஆகியவற்றைச் சுந்தரனார் கற்பித்து வந்தார்.

1877ஆம் ஆண்டில் சிவகாமி அம்மாள் என்னும் நற்குண நங்கையை மணந்தார் சுந்தரனார். அந்தச் சமயத்தில் திருநெல்வேலி உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் பதவி காலியாக இருந்தது. "தகுந்த ஒருவரைக் கொண்டு அதனை நிறைவு செய்க" என்று மாநிலக் கல்வித்துறைத் தலைவர் டாக்டர் டங்கன், ராஸுக்குக் கடிதம் எழுத, உடனே ராஸ் தமது பழைய மாணவர் சுந்தரனாரே அதற்குத் தகுதிவாய்ந்தவர் என்று அறிந்து அவரையே நியமித்தார்.

சுந்தரனாரின் பெருமுயற்சியால் அந்தப் பள்ளி இடைநிலை வகுப்புகளைக் கொண்ட கல்லூரியாக மாறியது. பின்னர் அக்கல்லூரி 'மதுரை திரவியம் தாயுமானார் இந்துக் கல்லூரி' என்னும் பெயரைப் பெற்றது.

திருநெல்வேலி வாழ்க்கை சுந்தரனாருக்கு மகிழ்ச்சியையே அளித்தது. சுந்தர சுவாமிகள் என்னும் துறவியாரின் தொடர்பும் அங்கே அவருக்குக் கிடைத்தது. அவரிடம் மாணவராகச் சேர்ந்து தத்துவ நூல்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார்.

1878ல் தமது தாய்நாட்டுக்குச் செல்ல விரும்பிய திருவனந்தபுரம் அரசர் கல்லூரித் தலைமை ஆசிரியரான டாக்டர் ஹார்வி, தாம் திரும்பிவரும்வரை, அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு சுந்தரனாரிடம் கேட்டுக்கொள்ள, அவரும் ஒப்புக் கொண்டு, மறுபடியும் திருவனந்தபுர வாழ்க்கையை மேற்கொண்டார். பேராசிரியர் பணியை ஆற்றியவாறே 1880ல் எம்.ஏ. பட்டம் பெற்றார்.

சுந்தரனாரின் கல்வித் திறன், நற்குணம் ஆகியவற்றை அறிந்து கொண்ட திருவாங்கூர் மன்னர் விசாகத் திருநாள் மகாராஜா, தமது அரண்மனையில் சிரஸ்தார் என்னும் பதவியில் சுந்தரனாரை நியமித்தார். சுந்தரனார் அந்தப் பதவியில் இருந்தவாறே சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டக் கல்வி பயின்று வந்தார்.









மறுபடியும் ஒரு பிரச்சினை எழுந்தது. டாக்டர் ஹார்வி தமது தாய்நாட்டிலிருந்து திரும்பினார்; அப்போது ராஸ் தம் தாய்நாடு செல்ல விரும்பினார். அதனால் ராஸின் பதவியில் ஹார்வி அமர்ந்து கொண்டு, தமது பதவியில் சுந்தரனார் அவர்களை நியமித்தார். அரண்மனை வேலையை விட்டுவிட்டு, மறுபடியும் கல்லூரியில் பேராசிரியர் ஆனார் சுந்தரனார்.

ஓய்வு கிடைக்கும்பொழுதெல்லாம் அவரது உள்ளம் ஏதாவதொரு அரும்பொருள் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும். அவ்வாறு சிந்திக்கும் சமயத்தில் ஒருநாள், திருவிதாங்கூர் வரலாற்றை ஆராய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதற்குரிய முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டார். சிலா சாசனங்கள் என்று சொல்லப்படும் கல்வெட்டுக்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றை நுண்ணிய அறிவின் வாயிலாக திருவிதாங்கூரின் வரலாற்றை வெளியிட்டார். அது இன்றும் சிறந்த அத்தாட்சியாகத் திகழ்கிறது. இந்த அரும்பணியை ஆற்றியமைக்காகச் சுந்தரனாருக்கு மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை (ரூ.20) அன்பளிப்பாகக் கொடுத்து வந்தார் திருவிதாங்கூர் அரசர். சுந்தரனாரின் மறைவுக்குப் பின்னரும் அவரது மகனுக்கு அந்த உதவித் தொகை, மன்னரால் தொடர்ந்து வழங்கப்பட்டது.

1884இல் தமது நண்பர்கள் பலருடன் இணைந்து 'சைவப் பிரகாச சபை' என்னும் அமைப்பை உருவாக்கி, அதன் வாயிலாக அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அந்த அமைப்பில் அவர் பல சமயங்களில் ஆற்றிய சொற்பொழிவு 'நற்றொகை விளக்கம்' என்ற தலைப்பில், நூல் வடிவில் 1889ல் வெளியிடப்பட்டது.

அவர் எழுதிய 'திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி', 'திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி' ஆகிய இரண்டு நூல்களும் இந்திய ஆராய்ச்சி அறிஞர்களாலும் மேனாட்டு அறிஞர்களாலும் ஒருங்கே பாராட்டப்பெற்றது. அவரது ஆராய்ச்சித் திறனை உணர்ந்த ஜெர்மனி நாட்டு காட்டிங்காம் பல்கலைக் கழகம் அவரை வரவழைத்து ஆறுமாதம் பயிற்சி தந்து, தத்துவ சாத்திர அறிஞர் என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கியது. இலண்டனிலுள்ள வரலாற்றாசிரியர் குழுவினர் F.R.H.S. என்ற பட்டத்தையும், ஆசிய ஆராய்ச்சிக் குழுவினர் M.R.A.S. என்ற பட்டத்தையும் அவருக்கு வழங்கினர். சென்னை மாகாண அரசினர் அவரது கல்வித் திறமை, ஆய்வுத் திறமை ஆகியவற்றுக்காக 'ராவ் பகதூர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்தவர்கள் அவரைத் தமது கழக உறுப்பினராக நியமித்தனர்.

சுந்தரனாருக்கு மாபெரும் பெருமை ஒன்று உண்டு. தமிழில் கவிநடையில் அரியதொரு நாடக நூலை உருவாக்கிய பெருமைதான் அது.

தமிழில் சிலப்பதிகாரம் முத்தமிழ் நாடகநூல் என்று கருதப்படுகிறது. அதற்குப் பின்னர் அத்தகைய நாடக நூலை எந்தப் புலவரும் படைக்கவில்லை. அத்தகைய நாடக நூலை, பல நூற்றாண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் படைத்துத் தந்தவர் சுந்தரனார் தான்.

அருந்தமிழில் நாடக நூல் இல்லையே என்று ஏங்கிய சுந்தரனார், 1888ல் 'மனோன்மணீயம்' நாடகத்தை எழுதினார். என்றாலும் அது 1891ல்தான் முற்றுப்பெற்று, வெளியிடப் பெற்றது. 'ரகசியவழி' என்னும் ஆங்கில நூலைத் தழுவி மனோன்மணீயம் எழுதப் பெற்றது என்ற ஒரு கருத்தும் உலவுகிறது. என்றாலும் மனோன்மணீயம் பாண்டிய-சேர மன்னர்களின் கதையாகத் திகழ்வதால் நமது தமிழகப் பண்பாட்டை உணர்த்துவதாகவே உள்ளது.

இந்தக் காவிய நாடகத்தில் அவர் உருவாக்கிய சுந்தர முனிவர் என்னும் துறவியின் பாத்திரம் -அவர் குருவாக மதித்தசுந்தரசுவாமிகளின் உருவகமே ஆகும். இந்தக் காப்பியத்தின் தொடக்கத்தில் கடவுள் வணக்கம் என்ற தலைப்பில் கலைமகளை வணங்கி வாழ்த்தியுள்ள சுந்தரனார், அடுத்து, தமிழ்த் தெய்வ வணக்கம் என்ற தலைப்பில் தமிழ்த்தாயின் பெருமையைப் போற்றிப் பாராட்டி, வணங்கி, வாழ்த்தி, மகிழ்கிறார். அந்த வாழ்த்துப்பாடலின் ஒரு பகுதிதான் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகவற்பாவினால் அமைக்கப்பட்ட இந்த நாடகக் காப்பியத்தை திருவனந்தபுரம் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றி வந்த தமது ஆசிரியர் ஹார்வி அவர்களுக்குக் காணிக்கையாக்கியிருக்கிறார் சுந்தரனார். அதுமட்டுமல்ல, தாம் வசித்து வந்த இல்லத்திற்கு ஹார்விபுரம் என்றும் பெயரிட்டார். இந்த இரு நிகழ்ச்சிகளும் சுந்தரனாரிடம் நிறைந்திருந்த நன்றி உணர்வை நாட்டுக்கு எடுத்துக்காட்ட உதவுகின்றன.

இந்தநாடகக் காவியத்தை 'மனோன்மணி' என்ற தலைப்பில் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தினர் 1942ல் திரைப்படமாக்கி, சுந்தரனாருக்குச் சிறப்புச் செய்தனர். அக்காலத்தில் இந்தத் திரைப்படம் மக்கள் மன்றத்தில் மாபெரும் வரவேற்பைப் பெற்றது.

சுந்தரனாரின் நூற்றாண்டையொட்டி, கவிஞர் கண்ணதாசன் தனது தென்றல் ஏட்டின் சார்பில் பேராசிரியர் நூற்றாண்டு சிறப்பிதழை 1955ல் வெளியிட்டுப் பெருமைப்படுத்தினார்.

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தனி வரலாற்றைப் படைத்திருக்கிறார் சுந்தரனார்.

தமிழிலக்கிய வரலாறு ஒன்றினை மிக விரிவான முறையில் உருவாக்கி வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்த சுந்தரனார், அதற்குரிய சான்றுகளைத்திரட்டுவதிலும் தேடித் தொகுப்பதிலும் முனைந்தார். எதிர்பாராமல் அவர் நோய்வாய்ப்பட்டு விட்டார். உதகமண்டலம் சென்று அங்கே சிறிது காலம் தங்கிவர விரும்பினார். செல்லும் வழியில் திருக்குற்றாலத்தில் சில நாட்கள் தங்கினார். அங்கே எதிர்பாராமல் அவரது நோய் அதிகரித்தது. சிகிச்சை தரப்பட்டது. என்றாலும் நோயின்கொடுமையால் 26-4-1897ல் அவரது இன்னுயிர் பிரிந்தது. ஆனால் அவர் உருவாக்கித் தந்த மனோன்மணீயம் என்னும் காவிய நாடகம் அவரது பெயரை நிலைநிறுத்தியுள்ளது; அவருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளது..

# ஊரக வளர்ச்சியில்
# சமூகக் காடுகள் திட்டம்

சமூகக் காடுகள் திட்டம், மக்களின் நன்மைக்காக, மக்களால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தினால் மக்களுக்குத் தேவையான விறகு, கால்நடைகளுக்குத் தீவனம், மரம், பழங்கள், தழை,முதலியவை கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. கிராம மக்கள் ஆரோக்கியமாக வாழ, கிராமச் சூழ்நிலை மேம்படுத்தப்படுகிறது.

*மரம் வளர்ப்பில் பணிகள்*

மரம் வளர்க்கும்பணி சிறப்பாகச் செயல்பட மூன்று முக்கியப் பணிகளை நாம் செய்யவேண்டும்.

1. நல்ல தரமான விதைகளைப் பயன்படுத்தி, வாளிப்பான மரக்கன்றுகளை (நாற்றுக்களை) உற்பத்தி செய்யவேண்டும்.

2. மரக்கன்றுகளை நல்ல முறையில் நடவு செய்யவேண்டும்.

3. நட்ட மரங்களை நல்ல முறையில் பாதுகாப்பு செய்து, பராமரிக்க வேண்டும்.

இம்மூன்று பணிகளில் மிக முக்கியம் வாளிப்பான நாற்றுகளை உற்பத்தி செய்வதாகும்.

*கன்றுகளை உற்பத்தி செய்தல்*

தேவையான மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய கீழ்க்கண்டவற்றை மேற்கொள்ள வேண்டும்.

1. நடும் மரம் தேர்ந்தெடுத்தல்.
2. விதை சேகரித்தல்.
3. விதைக்கும் காலம் நிர்ணயம் செய்தல.
4. நாற்றங்கால் இடத்தேர்வு.
5. காய்ப் பாத்தி தயாரித்தல்
6. விதை முன்நேர்த்தி செய்தல்.
7. தாய்ப்பாத்திகளில் விதைத்தல்
8. நாற்றுப் பைகள் தயாரித்தல்.
9. நாற்றுப்பைகளில் இளங்கன்றுகளை நடுதல் அல்லது நாற்றுப்பைகளில் விதை ஊன்றுதல்.

*நடும் மரம் தேர்ந்தெடுத்தல்*

நடும் மரம் தேர்ந்தெடுக்கும் போது நிலத்திலுள்ள மண் மற்றும் சூழ்நிலைக்கேற்பமரங்களைத்தேர்ந்தெடுக்க வேண்டும். மக்களின் தேவைக்கேற்ற மரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நடும் இடத்திற்கேற்ப மரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

களிமண்: உகந்த மரங்கள்-கருவேல், வேம்பு, இலுப்பை, புளி, புங்கன், மூங்கில், இலவம், சீதாப்பழம், பலா, கொய்யா, மாதுளை, சீமை இலந்தை, மேற்கு இந்தியச் செர்ரி.

செம்மண்: உகந்த மரங்கள் வெள்வேல், வாகை, ஆசா, ஆயா, சீமை இலந்தை, ஆரஞ்சு, எலுமிச்சை.

வண்டல் மண்: தேக்கு, மூங்கில்,

மணல்: சவுக்கு, பூவரசு, புங்கன், வாகை, சீமைக்கருவை, கருவேல், வேம்பு, முந்திரி

பகுதிநிலம்செங்கப்பி: கத்திவேல், ஆசா, ஆயா, மூங்கில், ஆஸ்திரேலியா நாட்டு வேல்

**—கோ. வி. கணபதி**
இணை இயக்குநர்,
(சமூகக்காடு),
ஊரக வளர்ச்சி இயக்கம்

களர், உவர் நிலம்: வேம்பு, வாகை, சீமைக்கருவேல், சவுக்கு, புளி, கருவேல்

நீர் தேங்கும் சதுப்பு நிலம்: நாவல், புங்கல், நீர்மருது.

வயல்களின் எல்லைகள், வளம் குன்றிய நிலங்கள்: சவுக்கு, ஆசா, கருவேல், தேக்கு, இலவம், சீமை இலந்தை.

மண் அரிப்புப்பகுதிகள்: சூபாபுல், கிளிரி சிடியா, புங்கன், உசில், மஞ்சக்கொன்னை, சீமைக் கருவேல்.

குறைந்த ஆழம் உள்ள நிலம்: வாகை,ஆசா, வேம்பு, உசில், மஞ்சக் கொன்னை, சீமைக் கருவேல்.

மக்களின் தேவைக்கேற்ற மரங்களைத் தேர்நதெடுப்பதுல் விறகு, கழி, சிறுதடிகள் என்றால் கருவேல், வெள்வேல், புளி,சவுக்கு,கொடுக்கா புளி, புங்கன், சூபாபுல், மூங்கில், தூங்குமூஞ்சியையும், கால்நடைத் தீவனம் என்றால் சூபாபுல், இலுப்பையையும் தேர்வு செய்ய வேண்டும். மரம் (பலகை முதலியன) தான் தேவை என்றால் வேம்பு, புளி, இலுப்பை, நாவல், வாகையையும்பழம் மற்றும் காய் தேவை என்றால் முந்திரி, பலா, நாவல், மா, புளி, இலவம் போன்றவற்றையும், எண்ணெய்க்கான தேவை என்றால் வேம்பு, புங்கன், இலுப்பை போன்றவற்றையும் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் களர் அல்லது உவர் போன்ற பிரச்சினை உள்ளதாக இருந்தால், அந்நிலத்திலுள்ள மண்ணைப் பரிசோதனை செய்து அதற்குத் தக்கவாறுமரவகைகளைத் தேர்ந்தெடுத்து, நடவேண்டும்.

*நிலம் தயாரித்தல்*

முதலில் நாம் தேர்ந்தெடுத்த பகுதியில் வளரும் மற்ற செடி, கொடிகளை வேருடன் பிடுங்கி, அப்புறப்படுத்த வேண்டும். இதனால் வேரின் மூலம், விரயமாகும் நீரைச் சேமித்து, நடும் மரங்களுக்கு அதிக நீரை அளிக்க முடியும்.

சமவெளியாக இருப்பின், நிலத்தைச்சரிவுக்குக்குறுக்கேஉழுது விடுவது அல்லது கரை போடுவது அவசியம். இதனால் மழை நீரைச் சேமிக்க இது உதவும்.

*மரம் நடும் காலம்*

பருவமழை தொடங்கியவுடன், அதாவது மழை பெய்த 3, 4 நாட்களுக்குள், மரக்கன்றுகளை நட்டு முடிக்க வேண்டும். மேலும், முதல் மழையிலேயே நாற்றுகளை நடுவதால், பிறகு கிடைக்கும் மழையுல், நாற்றுகள் நன்கு வளரும் வாய்ப்பு உள்ளது. நாற்றுகள் நட்டவுடன், நாற்றைச் சுற்றியுள்ள மண்ணை, நன்கு இறுக மிதிக்க வேண்டும். இல்லையேல் நாற்றுகள் காய வாய்ப்பு உண்டு.

கரையான் அரிப்பைக் கட்டுப்படுத்த, நாற்றுகள் நடும் குழிகளில் சிறிதளவு பி.எச்.சி. 10 சதத்தூள் மருந்திட்டு நட வேண்டும்.





*பராமரிப்பு மற்றும் பின்செய் நேர்த்தி*

சமவெளிகளில் நாற்றுகளை நட்டவுடன் சுற்றி வட்ட வடிவில் குழிப்பாத்திகள் அமைத்தல் வேண்டும். இப்பாத்திகளின் விட்டம் ஒரு மீட்டரும், அதன் ஆழம் 15 செ. மீட்டரும் இருத்தல் வேண்டும். மிதமான சரிவுப் பகுதிகளில், சரிவின் குறுக்கே, நாற்றுகளின் கீழே பிறைச்சந்திரன் வடிவில், கரைகள் அமைக்க வேண்டும். இக்கரைகளின் உயரம் 15.20 செ.மீ. இருத்தல் வேண்டும்.

வருடத்திற்கு இருமுறை, நிலத்தைக் கொத்தி, பாத்திகளில் உள்ள களைகளை நீக்கிவிட வேண்டும். இதனால் நீர்ச் சேமிப்பு அதிகரிக்கிறது.

மேலும் நாம் நடும் மரங்கள் ஆடுமாடுகளால்சேதமடையாமலும் வழிப்போக்கர்களால்பாதிக்கப்படாமலும் பாதுகாப்பது அவசியம்.

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளைச் சுற்றி மரங்களை வளர்த்தல்*

இத்திட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காகக் கட்டப்படும் குடியிருப்புகளைச் சுற்றியுள்ள நிலத்தில் பயன்தரும் சூபாபுல், முருங்கை, அகத்தி போன்ற மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பணியை இக்குடியிருப்புகளில் வசிக்கும் பெண்கள் மேற்கொள்கிறார்கள். ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் 60 செடிகள் வரை நடப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இவற்றை நன்கு பராமரிக்க ஒரு ஆண்டிற்கு மாதம் ஒன்றுக்கு ரொக்கம் மற்றும் தானியமாக அரிசியும் கோதுமையும் ரூ. 40 வீதம் ஒரு வீட்டுப் பெண்மணிக்கு வழங்கப்படுகிறது.

*மரப்பட்டா திட்டம்*

தேசிய ஊரக வேலை வாய்ப்புத திட்டம்மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டங்களின் கீழ் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு, கண்மாய் புறம்போக்கு மற்றும் ரோடு ஓரங்களில் நடப்படும் மரங்களை வளர்க்கவும், அவற்றின் பயனை அடையவும், நிலமற்ற ஏழைப்பெண்களுக்குஅரசு அனுமதி வழங்குகிறது. இவர்களில் குறைந்தது 50 சதவீதம் ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். ஒரு ஏக்கரில் அல்லது ரோடு ஓரத்தில் ஒரு கிலோ மீட்டர் உள்ள மரங்களை வளர்த்து, அதன் பயனை இப்பெண்கள் அடையலாம். இதற்கென வருவாய்த் துறையின் மூலமாக ஒவ்வொரு பெண் பயனாளிக்கும் அரசு மரப்பட்டா வழங்குகிறது. மேலும் ,மூன்றாண்டுகளுக்கு மரங்களைப் பராமரிக்கும் சம்பளத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையர் மூலமாக, பகுதி தானியமாகவும், பகுதி பணமாகவும், அரசு மாதந்தோறும் தருகிறது. மரம் வளரும்போது, கிடைக்கும் பயன்களைப் பெண் பயனாளிகளே அனுபவித்துக் கொள்ளலாம். மரம் முதிர்ச்சி அடைந்ததும் மரத்தை வெட்டி இப்பெண்களே எடுத்துக் கொள்ளலாம்.

*மரப்பட்டா பெறும் பயனாளிகளின் பொறுப்புகள்*

1. பெண் பயனாளிகள் மரத்தைச் சுற்றிக் கொத்தி விடுதல், களை எடுத்தல் மற்றும் தண்ணீர் விடுதல் ஆகியபணிகளைத்தேவையான சமயத்திலும், குறிப்பிட்ட இடைவெளி நாட்களிலும் செய்து, நடப்பட்ட கன்றுகளில் குறைந்தது 80 சதவீதமாவது உயிருடன் இருக்குமாறு பார்த்துக் கொள்வதோடு, மரங்களை நன்கு பராமரித்து வர வேண்டும். கன்றுகள் உயிருடன் இருப்பது 80 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தால் பராமரிக்கும் சம்பளம் வழங்கப்பட மாட்டாது. மேலும் மரக்கன்றுகள் அவர்களிடமிருந்து எடுக்கப்படும்.

2. மரங்களை ஆடுமாடுகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். மரங்களைக் காய விடவோ அல்லது மரங்களை முதிர்ச்சியடையும் காலத்திற்கு முன்பாக வெட்டவோ கூடாது.

3. இறந்து போன கன்றுகளை மாற்றி புதிய கன்றுகளை நடவேண்டும்.

4. மரம் முதிர்ச்சியடைந்து வெட்டப்படுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்குமுன்பே வெட்டப்பட இருக்கும் ஒவ்வொரு மரத்திற்கும் இரண்டு கன்றுகள் வீதம் நட்டுப் பராமரிக்க வேண்டும்.

*பயனாளிகள் அடையும் பயன்களும் உரிமைகளும்*

1. பெண் பயனாளிகளுக்கு மூன்றாண்டுகளுக்குமரங்களைப்பராமரிக்கும் சம்பளத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையர் மூலமாகப் பகுதி தானியமாகவும், பகுதி பணமாகவும் அரசு மாதந்தோறும் தருகிறது.

2. மரத்திலிருந்து காய்ந்து போன கிளைகளைப் பெண் பயனாளிகள் சேகரித்துக் கொள்ளலாம்.

3. மரம் அதிக வளர்ச்சியாகும் போது வெட்டப்படும் குச்சிகளையும், கிளைகளையும் பெண் பயனாளிகள் எடுத்துக் கொள்ளலாம்.

4. மரத்திலிருந்து கிடைக்கும் இலைகள், பூக்கள், பழங்கள், விதைகள் மற்றும் பிசின்முதலியவற்றைப் பெண் பயனாளிகள் உபயோகிக்கலாம்.

5. தேன் வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், கோந்து உற்பத்தி செய்தல் முதலிய மரம் சார்ந்த தொழில்களைப் பெண் பயனாளிகள் செய்யலாம். ஆனால், இதற்கென எந்த அமைப்பும் நிலத்தில் அமைக்கக் கூடாது.

6. மரங்களைக் கடனுக்காக நிதி நிறுவனங்களுக்கு அடமானம் வைக்கலாம்.

7. மரம் முதிர்ச்சி அடைந்ததும் மரத்தை வெட்டி, பெண் பயனாளிகள் எடுத்துக் கொள்ளலாம்.

1987-88ஆம் ஆண்டில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 42,092 கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு மரப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மரப்பட்டா திட்டம் மற்றும் நடப்பட்ட மரக்கன்றுகளைப் பராமரிப்பது குறித்து, மரப்பட்டா பெற்ற பெண்களுக்கு, விழிப்புணர்வும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. 1988-89ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 44,000 பெண்களுக்கு மரப்பட்டா வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# நிலாப் பாட்டு

நிலாவைக் கண்டால் கவிஞர்களுக்குக் கொண்டாட்டம்; காதலர்களுக்குக் கொண்டாட்டம். இலக்கியங்களில் கவிஞர்கள் சந்திரனைப் படுத்தி வைக்கும் பாடு ஒன்றல்ல, இரண்டல்ல. காவியம் செய்ய வேண்டுமானால் அதில் சில வருணனைகள் அவசியம் அமைய வேண்டுமாம். சந்திரன் உதயமாகும் அழகை வருணிக்க வேண்டும். காதலனும் காதலியும் நிலாவினால் துன்புற வேண்டும். ஒருவரை ஒருவர் காணாமையால் அவர்களுக்கு விரகதாபம் அதிகமாகி விடும். சந்திரன் விஷப் பிண்டமாகத் தோற்றுவான். நிலா அக்கினிக் கொழுந்தாகத் தகிக்கும். சந்திரனைக் காதலனும் காதலியும் ஒரு மூச்சு வையத் தொடங்கி விடுவார்கள். இதைச் 'சந்திரோபாலம்பனம்' என்று சொல்வார்கள்.

நிலாவினால் விளையும் இந்த நிகழ்ச்சிகளைக் கவி உலகத்திலேதான் காண முடியும். உண்மையான உலகத்தில் நிலா எல்லோருக்கும் இன்பத்தை அளிக்கிறது. குழந்தைகளுக்கு அபரிமிதமான களிப்பை உண்டாக்குகிறது. கிராமங்களில் நிலாக் காலங்களில் சிறு குழந்தைகள் கூடிக்கொண்டு தெருவில் சின்னச் சின்ன மண்வீடு கட்டி விளையாடுகிறார்கள். சிற்றில் இழைத்துச் சிறுசோறு சமைத்து மணல் விருந்தை வழங்குகிறார்கள். அவர்கள் விளையாட்டாக நிகழ்த்தும் அந்த நாடகத்தில் அவர்களுக்கு எல்லையில்லாத இன்பம் உண்டாகிறது. குழந்தைகளின் இயல்பை உணர்ந்து இன்புறும் உள்ளம் படைத்தவர்களுக்கும் அந்த ஆனந்தத்தில் பங்கு உண்டு. இந்த விளையாடல்களைக் கண்ட புலவர்கள் 'பிள்ளைத் தமிழ்'களில் சிற்றில் பருவம் என்று ஒரு பகுதியை அமைத்திருக்கிறார்கள்.



சந்திரன் சின்னஞ்சிறு குழந்தைகளின் உள்ளத்தில் இன்பத்தைப் பாய்ச்சுகிறான். குழந்தைகளுக்கு நிலாவைக் காட்டி மகிழ்வித்தல் தாய்மார்களின் வழக்கம். பிள்ளைத் தமிழ்களில் 'அம்புலிப் பருவம்' என்ற ஒரு பகுதி உண்டு. குழந்தை அழுதால், தாய் நிலாவைக் காட்டிச் சமாதானம் செய்கிறாள். ஒரு பருக்கை கூட உண்ணாத குழந்தைக்கும் நிலாவைக் காட்டியும், பாட்டுப் பாடியும் தாயானவள் சோற்றை ஊட்டி விடுகிறாள். பாலுஞ் சோற்றையும், தயிருஞ் சோற்றையும் குழந்தைக்கு நிலாவைக் காட்டி ஏமாற்றி ஊட்டிவிடுகிறாள். குழந்தையும் தண்ணிலாக் காட்சியிலும் பாட்டிலும் மயங்கிப் போகிறதென்றுதான் சொல்லவேண்டும்.

நிலாவும் பாட்டும் குழந்தையை வளர்க்கின்றன. அதன் இளைய உள்ளத்திலே இயற்கைத் தேவியின் சௌந்தரியமும் இன்னிசையும் புகுகின்றன. மனிதன் உண்டாக்கிய வண்ணப் பொம்மைகளைக் காட்டிலும் இறைவன் உண்டாக்கிய சந்திரனென்னும் பொம்மை அதன் உள்ளத்தை வசப்படுத்துகிறது. நிலாவுக்கு மோகன சக்தி உண்டென்பதற்கு இலக்கியத்தில் ஆதாரம் தேட வேண்டாம். கண்முன்னால் நிகழும் இந்த நிகழ்ச்சியே சிறந்த உதாரணம்.

தாய் குழந்தைக்கு விளையாட்டுத் தோழனாகச் சந்திரனை அழைக்கிறாள். வெள்ளிய நிலா, வெள்ளிக் கிண்ணம், வெள்ளிய பாலுஞ் சோறு-இந்த இணைப்பில் தாய் வெள்ளிய மல்லிகைப் பூவை நினைக்கிறாள். எல்லாம் வெள்ளை மயம்! அதிலே கூடக் கலை நயம். அம்மா! தமிழ்நாட்டில் குழந்தைக்குப் பாலூட்டுகையிலே கலையையும் ஊட்டும் தாய்மார்கள் இருந்தார்கள். இந்தத் தாய்மரபு மாறாமல், நிலைகுலையாமல் இருக்குமா?

நிலாவைத் தன் குழந்தையோடு விளையாட ஓடி வரும்படி அழைக்கிறாள் தாய். மல்லிகைப் பூக் கொண்டு வரச் சொல்கிறாள். பாட்டுப் பாடும் பொழுதே கையை நீட்டி நிலாவைச் சுட்டிக் காட்டுகிறாள். குழந்தையும் கையை நீட்டுகிறது. நிலாவைப் பார்க்கிறது. இந்தத் தருணம் பார்த்துத் தாய், பாட்டில் பாலுஞ் சாதத்தைக் கொண்டு வந்து முடித்துக் குழந்தையின் வாயிலும் அதை ஊட்டி விடுகிறாள். என்ன சாமர்த்தியம்!

நிலா நிலா வாவா நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா மல்லிகைப் பூக் கொண்டுவா
நடு வீட்டில் வையே நல்ல துதி செய்யே
வெள்ளிக் கிண்ணத்தில் பாலுஞ் சோறும் பிசைந்து
அள்ளி எடுத்து அப்பன் வாயில்
கொஞ்சிக் கொஞ்சி ஊட்டு
குழந்தைக்குச் சிரிப்புக் காட்டு!

நிலாவை அழைப்பதோடு தாய் நிற்பதில்லை. காக்கையையும் குருவியையும் கூட அழைக்கிறாள். எப்படியாவது போக்குக் காட்டிக் குழந்தைக்குச் சோறு ஊட்டும் தந்திரத்தைக் கற்றிருக்கிறாள் அவள். பாட்டிலே ராக விசேஷம் இல்லை. தாள நயம் மாத்திரம் அமைந்திருக்கிறது. குழந்தை அசைந்து ஆடுவதற்கு அந்தத் தாள இயல் உதவியாக இருக்கிறது.

காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா!
குருவீ கொண்டைக்குப் பூக் கொண்டுவா?!
கொக்கே குழந்தைக்குத் தேன் கொண்டுவா?
கிளியே கிண்ணத்தில் பால் கொண்டுவா?
அப்பா முன்னே வாருங்கள்
அழாதே என்று சொல்லுங்கள்!

சோறு ஊட்டும்போது வேறு விதமான பாடல்களையும் தாய் பாடுகிறாள். சாதத்தைப் பற்றியே பாட்டுப் பாடுகிறாள்.

அம்ம அம்ம பூச்சி சின்னக் கிண்ணி தேச்சி
இன்னம் கொஞ்சம் சோச்சி பின்னும் கொஞ்சம் பாச்சி
எல்லாம் செரித்துப் போச்சா? இன்னும் பெருமூச்சா
நின்று உண்ட தாச்சா நீயே பெரும் பாச்சா!

குழந்தை அகராதியிலே சோற்றுக்குச் சோச்சி என்று பேர்; பாலுக்குப் பாச்சி என்று பேர்.

குழந்தையைத் தட்டிக்கொடுத்து, என்ன கொடுத்தாலும் தின்னும் பிள்ளை என்று ஒரு தாய் பாடுகிறாள்.

தத்தாங்கி தத்தாங்கி தட்டும் பிள்ளை
தயிரும் சோறும் தின்னும் பிள்ளை
அப்பம் சுட்டாலும் தின்னும் பிள்ளை
அவல் இடித்தாலும் தின்னும் பிள்ளை

சற்று வயசான குழந்தைகள் நிலாச் சோறு சமைக்கும்போது பாட்டுப் பாடுவார்கள். சமையல் செய்யும்போது என்ன என்ன செய்வார்களோ அவற்றையெல்லாம் வரிசையாகச் சொல்லிப் பாடி அந்தக் கற்பனை விருந்தை நடத்துவார்கள்.

அரிசியைக் குத்து முன்னே
அரித்துக் கழுவு பின்னே
உலையில் அரிசி போடு
உடனே மேலே மூடு
கொதித்து வந்தபின் வடித்துக்
கொட்டி ஆற்றி எடுத்து
கத்திரிக் காயை அரித்து
காரம் புளிப்புத் தெரிந்து
உப்பும் மசாலும் போட்டு
ஒத்தி ருக்கக் கூட்டு
வெந்த பின்னே தாளித்து
விரித்து இலையில் அமைத்து
யாவரும் கூடிப் புசிப்போம்
இன்ப மாக ருசிப்போம்!

## கி.வா.ஜகந்நாதன்

நிலாவைப் பார்த்துக் கேள்வி கேட்பதாகவும் அதற்கு அது விடை சொல்வதாகவும் சில பாட்டுக்கள் உண்டு. பணம் சேர்ப்பதும், மாடு வாங்குவதும், வீடு மெழுகுவதும், பிள்ளை பெறுவதும், பிள்ளையின் விளையாட்டைக்கண்டு இன்புறுவதுமாகிய காட்சிகளைப் பாட்டிலே தொடர்பு படுத்திப் பாடுவார்கள். குடும்பத்தை நடத்தும் ராணியாகிய தாய்க்குத் தன்னுடைய அரசாங்கத்தைப் பற்றின நினைவு அதிகமாக இருப்பது இயல்புதானே!

நிலா நிலா எங்கே போனாய்?
மணியாங் குளத்துக்கு மண் எடுக்கப் போனேன்.
மண் எதற்கு? சொப்புப்பண்ண.
சொப்பு எதற்கு? பணம் போட.
பணம் எதற்கு? மாடு வாங்க.
மாடு எதற்கு? சாணி போட.
சாணி எதற்கு? வீடு மெழுக.
வீடு எதற்கு? பிள்ளை பிறக்க.
பிள்ளை எதற்கு?
ஓலைப் பாயிலே ஓடி விளையாட
ஈச்சம் பாயிலே இருந்து விளையாட
கோரைப் பாயிலே குதித்து விளையாட
பிரப்பம் பாயிலே புரண்டு விளையாட
தாழம் பாயிலே தவழ்ந்து விளையாட
என்னைக் குடத்திலே துள்ளி விளையாட.

வேறு விதமான பாட்டு ஒன்று வருமாறு:

அம்புலி அம்மானே ஆடு சித்தப்பா
சோதி பெரியவனே சக்கல என் தம்பி!
எங்கெங்கே போனாய்?

127075
சென்னை-600

ஆத்தி பறிக்கப் போனேன்
ஆத்தி என்னத்துக்கு?
அம்பி பிறக்க.
அம்பி என்னத்துக்கு?
ஆத்து மணலிலே சேர்ந்து விளையாட.

இப்படியாக நம் கண் முன்னே, நிலாவை வைத்துக் கவிதை செய்கிறார்கள் தமிழ்நாட்டுத் தாயும் குழந்தைகளும்.

## அஞ்சு விரல் பாட்டு

மனிதன் முயற்சி செய்யாவிட்டால் நடைப் பிணம் ஆகிவிடுகிறான். அவன் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த இயக்கத்தில் ஒழுங்கு வேண்டும்; நல்ல இலட்சியம் வேண்டும். இந்த இரண்டும் இருந்தால் நல்ல பயன், தானே உண்டாகும். காலத்தை வீணே போக்கும் மனிதன் மரத்துக்குக்கூடச் சமானமாக மாட்டான். மரம் வளர்கிறது; தழைக்கிறது; பூத்துக் காய்த்துக் கனிகிறது. கல்லைச் சொல்லலாமா? கல்லுக்கு இயக்கம் இல்லையென்பது உண்மை; ஆனால் அது திண்ணியதாக இருக்கிறது. மனிதன் அப்படி அல்லவே? இன்பத்தினால் மகிழ்ந்தும் துன்பத்தினால் சோர்ந்தும் போகிறானே! சோம்பேறி மனிதன் விஷயமோ இன்னும் மோசம். எந்த வகையான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கும் அவனுக்குச் சுகத்தைவிடத் துக்கமே அதிகம். மிகச் சிறிய துக்கங்கூட அவனை உலுக்கிவிடும். தாளாண்மையால் முறுக்கேறாத உடம்பும் சிந்தனையினால் உரமேறாத உள்ளமும படைத்த மகா பலவீனனான அவனுக்கு மிகச்சிறிய இடையூறும் மலைபோல் படும். அப்போது அவன் நடுங்குகிற நடுக்கத்தைப் பார்க்கவேண்டுமே! செத்துப்போகிறவனுக்குக் கூட அவ்வளவு அவஸ்தை இராது. 'கோழை நாளைக்கு நூறு தரம் சாகிறான்' என்று இங்கிலீஷிலே ஒரு பழமொழி உண்டு. சோம்பேறியும் அந்தச் சாதியைச் சேர்ந்தவனே!

இறைவன் அளித்த உடம்பு இருக்கும்போது முயற்சியின்றி இருப்பவன் இறைவனை அவமதிப்பவன் ஆகிறான். அவன் பக்தனாக வேஷம் புனைந்தாலும் உண்மைப் பக்தன் ஆகமாட்டான். தோட்டக்காரன் ஒருவனை ஒரு செல்வர் வேலைக்கு வைத்திருக்கிறார். அவனுக்கு வேண்டிய கருவிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார். சம்பளமும் தருகிறார். அவன் என்ன செய்ய வேண்டும்? கருவிகளைக் கொண்டு ஒழுங்காக வேலை செய்யவேண்டும். அப்பொழுதுதான் எஜமானருடைய அன்பைப் பெற முடியும். அப்படிச் செய்யாமல் எஜமானர் தோட்டத்துக்கு வரும்போது அவரைப் புகழ்ந்து பாடியும், வரவேற்பும் வாழ்த்தும் கூறியும் அவர் உள்ளத்தைக் கவர எண்ணுகிறான். எஜமானர் மகிழ்ச்சி அடைவாரா? "நீ என்ன வேலை செய்தாய்? ஏன் அந்தச் செடிக்கு நீர் பாய்ச்சவில்லை?" என்றுதான் கேட்பார்.

இறைவன் கொடுத்த உடம்பையும் பொருளையும் பெற்றுக்கொண்ட மனிதன் உழைக்கவேண்டும். அப்போதுதான் இறைவன் அருளைப் பெறலாம்.

உழைப்புக்காகவே உடம்பு ஏற்பட்டிருக்கிறது. உடம்பில் உள்ள உறுப்புகளில் உணர்வுப் பொறிகள் அல்லது ஞானேந்திரியங்கள் ஐந்து உள்ளன; கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற ஐந்தும் ஐந்து வகையில் பொருள்களின் இயல்பை உணர்கின்றன. இவற்றையன்றிச் செயற்பொறிகள் அல்லது கர்மேந்திரியங்கள் ஐந்து இருக்கின்றன. அவை ஐந்தும் ஐந்துவிதமான காரியங்களைச் செய்கின்றன. கால் நடக்கிறது. கை வேலை செய்கிறது. வாய் பேசுகிறது; நீரை ஓர் உறுப்பும், மலத்தை ஓர் உறுப்பும் வெளிப்படுத்துகின்றன. ஞானேந்திரியங்களின் தலைமையானது கண். தர்மேந்திரியங்களில் சிறந்தது கை. கை நாம் செய்யும் முயற்சிக்கு அடையாளம். மனிதனுக்குக் கை அமைந்தது போல வேறு எந்தப் பிராணிக்கும் அமையவில்லை. ஆகவே அவன் நல்ல முயற்சிகளைச் செய்ய வேண்டியவன்.

கையில் ஐந்து விரல்கள் இருக்கின்றன. அவை தனித்தனியே சில காரியங்களைச் செய்கின்றன. சேர்ந்து பல காரியங்களைச் செய்கின்றன. இரண்டு விரல்கள் சேர்ந்தும் சில காரியங்களைச் செய்கின்றன. பூத்தொடுக்கும் போது ஆள்காட்டி விரலும் பெருவிரலும் வேலை செய்கின்றன.



## போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் ரத்து

கடந்த ஆண்டு 1988-ல் நடந்த அரசு ஊழியர்-ஆசிரியர் போராட்டத்தின் விளைவாக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும், பிற கோரிக்கைகளை முன் வைத்தும் 'ஜாக்டீ' மற்றும் இதர அரசு ஊழியர்களின் சங்கங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தன. அவர்களின் வேண்டுகோளைப் பரிவுடன் பரிசீலித்து முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு 1988 ஜூன்-ஜூலைத் திங்களில் நடந்த அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் போராட்டத்தின் விளைவாக அவர்கள் மீது எடுக்கப்பட்ட அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளையும் விலக்கிக் கொள்ளவும், ஊழியர்களைப் பாதிக்கும் வகையில் தண்டனைகள் வழங்கப்பட்ட ஆணைகளை ரத்து செய்யவும் மற்றும் ஊழியர்கள் யாரேனும் தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்திருப்பினும் அந்தக் காலங்களில் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருப்பினும் இல்லையாயினும் சம்பந்தப்பட்ட ஊழியர்களின் தகுதிக்கு ஏற்ப விடுப்பாகக் கருதவும் ஆணையிட்டார்கள்.

இந்த ஐந்து விரல்களிலும் தலைமையானது இன்னதென்று சொல்லவா வேண்டும்? கட்டை விரல் எனறும், பெருவிரல்என்றும் பெயர் பெற்ற விரல்இல்லாவிட்டால் கையினால் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது. இறைவனைப் போல் அந்த விரல் மற்ற விரல்களோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கிறது. பிரிந்து நிற்பது போலத் தோன்றினாலும் வேலை செய்யும்போது முன் வந்து உதவி செய்கிறது. அதன் உதவி இல்லாவிட்டால் மற்ற விரல்களுக்கு மகிமை இல்லை.

உலகத்தில் மனிதன் தாளாண்மையுடன் வாழவேண்டும் என்ற குறிப்பை, இந்த அஞ்சு விரல்களும் காட்டுவதாக ஒரு நாடோடிப்பாவலன் சொல்கிறான். சின்னஞ்சிறு குழந்தைகள் வேடிக்கையாகப் பாடும்படி அந்தப் பாட்டு அமைந்திருக்கிறது. ஒவ்வொரு விரலும் ஒரு விஷயத்தைச் சொல்கிறதாம். குழந்தைகள் ஒவ்வொரு விரலையும் தொட்டுக் காட்டிக்கொண்டே இந்தப் பாட்டைப்பாடுவார்கள். பாட்டை இனிப் பார்க்கலாம்.

கைவிரல்களில் சிறியது சுண்டுவிரல். அதற்கென்று தனிவேலை ஒன்றும் இல்லை. சின்னஞ்சிறு குழந்தையைப் போல இருக்கிறது அது. குழந்தை பசியென்றால் வீரிட்டு அழும். அதை அடக்கிக்கொள்ள வழி தெரியாது. இந்தச் சுண்டுவிரலும் பசி என்று அழுகிறது; சோறு சோறு என்று பறக்கிறது.

**சோறு சோறு என்குதாம்**

குழந்தை அழுதால் உடனே அதற்கு அடுத்த பெரிய குழந்தை அதை எடுத்துக்கொண்டு ஆசுவாசப் படுத்தும். குழந்தைக்குச் சோறு ஊட்டும் வழியைத் தேடும். தானும் சாப்பிட வகையை நாடும். சுண்டு விரல் சோறு சோறு என்று அழுதபோது, அதற்கு அடுத்த மோதிர விரல் கவலை கொண்டது. "எப்படிச் சோறு கிடைக்கும்?" என்று யோசித்தது. அதற்குமேல் வகை தெரியாத பருவம் உள்ளது அது.

**சோற்றுக்கென்ன செய்யலாம் ?**

என்றதாம் அந்த மோதிர விரல். அதற்கு அடுத்தபடி பெரியது நடுவிரல். அழுத குழந்தையை விட, என்ன செய்யலாம் என்று கேட்ட குழந்தை பெரியது. அந்தக் குழந்தையைவிடப் பெரிய பிள்ளை என்ன செய்வான்? ஏதாவது உருப்படியான யோசனை சொல்வான். இங்கே நடுவிரல் அப்படி ஒரு யோசனையைச் சொல்கிறது.

**கடன் வாங்கித் தின்னலாம்**

என்று அந்த விரல் சொல்கிறதாம். கடன் வாங்கினால் சோறு தின்னலாம். பசி போய்விடும். ஆனால் அப்போதைக்குப் பசி போனாலும் புதிதாகக் கடன் தொல்லை வந்து விடுமே! இதைப்பற்றிய யோசனை இன்னும் பெரிய பிள்ளைக்கு வருகிறது. ஆட்காட்டி விரல் இந்த யோசனையில் ஈடுபடுகிறது.

**கடன் எப்படிக் கட்டலாம் ?**

என்றகேள்வி அதன் அகக் கண்ணில் பிரம்மாண்டமாக எழுகிறது.

எல்லோருக்கும் தலைமை பூண்டு, யாவருக்கும் உரிய குறைகளைப் போக்கும் குடும்பத்தலைவன் என்ன சொல்கிறான்? 'கடன் வாங்கினால் கட்ட வழி என்ன?" என்பது அவனுக்குத் தெரியும். உழைத்தால் கடனைக் கட்டிவிடலாம். பசியைப் போக்கிக்கொண்டு உற்சாகத்தோடு உழைத்தால் கடனைக் கட்டிவிடலாம். முயற்சி உடையவர் கடனுக்குப் பயப்பட வேண்டியதில்லை. போதிய அளவு உணவு கிடைத்து, உடம்பு நல்ல நிலையில் இருந்தால், எத்தனை கடனாக இருந்தாலும் கட்டுவதற்குத் தயங்கவேண்டியதில்லை. ஆகவே,

**பிழைத்திருந்தால் கட்டிக்கலாம்**
**பிழைத்திருந்தால் கட்டிக்கலாம்**

என்று ஒருமுறைக்கு இருமுறையாக அழுத்தந் திருத்தத்தோடு பெருவிரல் சொல்கிறது. சொல்லியபடி செயலில் நிறைவேற்றிக் காட்டும் தகுதி உள்ளது அது. மற்றவர்களையும் இயக்கி அவர்களுக்குத் தலைமை பூண்டு உழைக்க அறிந்தது அது.

மனிதனுடைய முயற்சி எப்படி ஆரம்பமாகிறது, எப்படி வளர்கிறது என்பனவற்றை இந்தப் பாட்டானது படிப்படியாகக் குறிப்பிக்கிறது. இயற்கையாகவே பசி உண்டாகிறது. அதை மனிதன் உணர்கிறான். அதோடு அவன் நின்றுவிட்டால், அவன் பசித்தபோது அழும் குழந்தையைப் போன்ற அபக்குவ நிலையில் இருப்பவனாகிறான். பசியைத் தீர்க்க வழி என்ன என்று ஆராய்கிறான். பிறகு ஒரு வழியைக் கண்டு பிடிக்கிறான். அந்த வழியில் உள்ள இடையூறு அடுத்தபடி அவன் அறிவுக்குப் புலனாகிறது. அதனைப் போக்கவும் வழி அவனுக்கு இறுதியில் தோன்றுகிறது. உழைப்பின் உறுதியும், நம்பிக்கையும் உடையவன் காரியத்தைச் சாதித்துவிடலாம் என்பதைப் பெருவிரல் சொல்கிறது. பெரிய மனிதர்களும் அதையே சொல்கிறார்கள்.

உழைப்பின் உயர்வினைத் தெரிவிக்கும் குறிப்பையுடைய பாட்டைக் குழந்தைகள் கைவிரல்களைத் தொட்டுக் காட்டிக்கொண்டே பாடுவார்கள்.

**சோறு சோறு எனகுதாம் (சுண்டுவிரல்)**
**சோற்றுக் கென்ன செய்யலாம் (மோதிரவிரல்)**
**கடன் வாங்கித் தின்னலாம் (நடுவிரல்)**
**கடன் எப்படிக் கட்டலாம்? (ஆள்காட்டிவிரல்)**
**பிழைத்திருந்தால் கட்டிக்கலாம்.**
**பிழைத்திருந்தால் கட்டிக்கலாம் (பெருவிரல்)**

மாணவர் பக்கம்

# மனம் போல வாழ்வு

பழ. சாந்தி





தேங்கரும்பு நட்டுவைத்தால்
தேன்கதலி முளைக்காது!
புங்கன்விதை நட்டுவைத்தால்
புளியங்காய் காய்க்காது!

விதைத்ததுவே முளைக்குமிதில்
வேறெதுவும் மாற்றமிலை!
இதைநன்றே உள்ளத்தில்
ஏற்பதனால் நன்மையுண்டு!


நன்மைகளும் தீமைகளும்
நமக்குவெளி யேயில்லை!
இன்பங்கள் துன்பங்கள்
இதயத்தால் விளைவனவே!

எண்ணங்கள் நன்றானால்
இன்பங்கள் சூழுமிங்கே!
கண்களிலே பழுதென்றால்
காட்சியினை இகழ்வதுவோ?

எண்ணத்தால் சிறந்தவர்கள்
இப்புவியில் வாழுமட்டும்
தண்ணளியால் இவ்வுலகம்
தழைத்தோங்கி வாழ்ந்திருக்கும்!

மனம்போல்நீ வாழ்கவென
வாழ்த்துவது தமிழ்மரபாம்!
மனந்திருந்தி வாழ்ந்தாலிவ்
வையகமும் வானகமாம்!





## ஆபிரகாம் லிங்கன் வீடு

அமெரிக்காவின் 16-வது ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கனின் ஒரே வீடு இது. 1844-ம் ஆண்டில் லிங்கன் இந்த வீட்டை வாங்கினார். 1861-ல் அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் இந்த வீட்டில் தமது குடும்பத்தினருடன் குடியிருந்தார். அதன் பிறகு அவர் வெள்ளை மாளிகையில் குடியேறினார். அண்மையில், வரலாற்று ஆசிரியர்கள், கட்டடக் கலை நிபுணர்கள் முதலியோரின் துணையுடன் இந்த வீடு புதுப்பிக்கப்பட்டது. எதிர்காலச் சந்ததியினரின் நன்மைக்காக, இந்த வீடு ஒரு வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்கப்படுகிறது. *

## விளையும் பயிர்....


அண்ணா மாவட்டம், திண்டுக்கல் புனித வளனார் மகளிர் மேல் நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவி சி.கனிமொழி.

இவர் கட்டுரை, பேச்சு, நடிப்பு ஆகியபோட்டிகளில்கலந்துகொண்டு மாவட்ட அளவில் பரிசுகள் பெற்றுள்ளார். பாரதிநூற்றாண்டுவிழாப் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசையும், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி நடந்த பேச்சுப் போட்டிகளில்கலந்துகொண்டுமாவட்ட அளவில் முதல் பரிசும் பெற்றுள்ளார்.



தெரிந்து கொள்ளுங்கள்

# தட்டச்சுப்பொறி - சில தகவல்கள்



பொதுவாக அலுவலகங்களில் தட்டச்சுப் பொறி இல்லாமல் வேலை எதுவும் நடைபெறுவதில்லை.

தட்டச்சுப் பொறி முதன் முதலில் இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த ஜான் ஹென்றி மில் என்னும் ஆங்கிலேயரால் 1714ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அவருக்குப் பிறகு 1829-ஆம் ஆண்டு வில்லியம் ஆஸ்டின் பர்ட் என்பவர் கண்டுபிடித்தார். இவர்கள் இருவரும் கண்டுபிடித்த பொறிகள் திருத்தம் பெறாதனவாக, அமைப்பில் குறைபாடுடையனவாகவும் இருந்தன.

1843-ஆம் ஆண்டில் சார்லஸ் தர்பெர் என்னும் அமெரிக்கர், எழுத்தச்சுகள் ஒன்றன் பின் ஒன்றாக விழும்படியும், பக்கவாட்டு நகர்தலுடனும், உருளையுடனும் கூடிய பொறியைத் தயாரித்தார். இந்தப் பொறியானது பேனாவினால் எழுதுவதைக் காட்டிலும் மிக மெதுவாகவே தட்டச்சுச் செய்யும் நிலையில் இருந்தது.

அமெரிக்காவில் 1867-ஆம் ஆண்டு சார்லஸ் லிதம் ஷோல்ஸ், கிளைடன், எஸ். டபுள்யூ. சோலஸ் ஆகிய மூவரும் கூட்டாகச் சேர்ந்து செப்பமுறாத பொறியை உருவாக்கினர். அதற்குப் பிறகு மேற்கண்ட மூவருள் கிளைடன், எஸ்.டபிள்யூ சோலஸ் ஆகியஇருவரும் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டனர். பின்பு, சார்லஸ் லிதம் ஷோல்ஸ் இயந்திர அமைப்பு வல்லுநரான யோட்ஸ் என்பவருடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு, டென்ஸ்மோர் என்பவர் அளித்த பண உதவியால், நன்முறையில் செம்மைப் படுத்திய யாதொரு குறைபாடுமில்லாத-எழுத்துக்களும் எண்களும் கூடிய ஒரு பொறியைக் கண்டுபிடித்து. அதற்குத் 'தட்டச்சுப்பொறி' என்னும் பெயரைச் சூட்டினார்.

இத்தட்டச்சுப்பொறியை உற்பத்தி செய்யும் உரிமையை நியூயார்க்கில், துப்பாக்கிகளைத் தயாரிக்கும் நிறுவனமான ரெமிங்டன் என்னும் நிறுவனத்தார் பெற்று, அதற்கு 'ரெமிங்டன்' என்று தங்களது நிறுவனத்தின் பெயரையே வைத்து, 1873-ஆம் ஆண்டு, சந்தைக்குக் கொண்டுவந்தனர். சார்லஸ் லிதம் ஷோல்ஸ் அவர்களுக்குப் பிறகு, பலர், நன்முறையில் இயங்கக்கூடிய பலவித மாறுதல்களுடன் கூடிய தட்டச்சுப் பொறிகளை உருவாக்கினர். இத்தட்டச்சுப் பொறிகளை மற்ற நிறுவனங்களும் உற்பத்தி செய்து, அதற்குத் தங்கள் தங்கள் நிறுவனத்தின் பெயர்களைச் சூட்டிச் சந்தையில் விற்றன. அவ்வகையில் பின்காணும் தட்டச்சுப் பொறிகள் உலக மக்களின் பயன்பாட்டுக்குக் கிடைத்தன.

1876-ஆம் ஆண்டு முதல்தான் தட்டச்சுப் பொறிகள் இந்தியாவில் புழக்கத்திற்கு வந்தன. 1896-ஆம் ஆண்டு ஒருமைப்படுத்தப்பட்ட விசைப்பலகை அறிமுகப்படுத்தப்பட்டது. 1915-ஆம் ஆண்டு சத்தமில்லாத ரெமிங்டன் தட்டச்சுப் பொறிபுழக்கத்திற்கு வந்தது. 1920-ஆம் ஆண்டு, ஜேம்ஸ் ஃபீல்டு ஸ்மாத்தர்ஸ் என்பவரால் மின்தட்டச்சுப் பொறி கண்டுபிடிக்கப்பட்டது. சென்னையில் மின்தட்டச்சுப் பொறியை இந்துஸ்தான் டெலிபிரின்டர்ஸ் நிறுவனத்தார் உற்பத்தி செய்கின்றனர்.

தமிழ்த் தட்டச்சுப் பொறியைப் பெறுத்தவரையில் முதன் முதலில் 1932-இல் உட்ஸ்டாக் தட்டச்சுப் பொறிகள் சந்தைக்கு வந்தன. இப்பொறியில் விசைப் பலகை அமைப்பு 1935-இல் ஒரு மாறுதலையும், 1937-இல் மற்றொரு மாறுதலையும் அடைந்தது. 1950-ஆவது ஆண்டிலிருந்து தான் ரெமிங்டன் தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வெளிவந்தன.

இந்தியாவில் தயாரிக்கப்படும் தட்டச்சுப் பொறிகள் ரெமிங்டன், காட்ரெஜ், ஹால்டா, பாசிட் ஆகும். ரெமிங்டன் தட்டச்சுப்பொறி கல்கத்தாவிலும், காட்ரேஜ் பம்பாயிலும், ஹால்டாவும், பாசிட்டும் முறையே சென்னைக் கருகிலுள்ள கிண்டியிலும், பெருங்குடியிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

— திரு சி. சண்முகம் எழுதிய 'தட்டச்சுப் பொறி' என்னும் நூலலிருந்து.


## தட்டச்சு இயந்திரம்

கருமலைப் பழம்நீ

தட்டெழுத்து இயந்திரம்!
தட்டிப்பாரு தங்கச்சி!
தட்டித்தட்டி எழுத்தினை
தாளில்நன்கு பதிக்கலாம்!

வளர்ந்துவரும் விஞ்ஞானத்தால்
வந்துதித்த இயந்திரம்!
விதவிதமாய்க் கடிதங்களை
வேகமாக அடிக்கலாம்!

தட்டெழுத்துப் பயிற்சியில்
தக்கதேர்வு பெற்றதும்
அலுவலகப் பணியிலே
அமர்ந்துவேலை புரியலாம்!



## நிலக்கடலையில் வட்டத் தேமல் நோய்

நிலக்கடலைப் பயிரில் நச்சுயிரிகளால் ஏற்படும் இந்நோயின் தாக்குதல் பல மாவட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. பொதுவாக, நிலக்கடலை விதைத்து மூன்று வாரங்களுக்குப் பிறகு நோயின் ஆரம்ப அறிகுறிகள் தென்படும்.

சிறிய மஞ்சள் நிற வட்டமான வளையங்கள் அல்லது புள்ளிகள் இளம் இலைகளில் தோன்றும். பின்னர் கிளைகளின் நுனியிலுள்ள இலை மொட்டுகள் தாக்கப்பட்டுக் கருக ஆரம்பிக்கும். நாட்கள் போகப் போகக் கிளைகள் முழுவதும் நுனியிலிருந்து அடிவரை கருகிக் காய்ந்து விடும்.

வயதான செடிகளை இந்நோய் தாக்கினால் பாதிப்பு அதிகம் இருக்காது. இலைகள் பலவடிவங்களுடனும், பச்சை, மஞ்சள் பகுதிகள் கலந்து தேமல் போன்ற அறிகுறிகளுடனும் காணப்படுகின்றன. செடிகள் குட்டையாகவும், இலைகள் அடர்த்தியாகவும் இருக்கும். பூக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விடும். அதனால் விளைச்சல் வெகுவாகக் குறைந்து விடும். இலைப்பேன்களால் இந்நோய் பரவுகின்றது.

விதைத்தபின் 45 நாட்கள் வரை நோய் தாக்கிய செடிகளைப் பார்த்தவுடன் அவற்றைப் பிடுங்கி அழித்துவிட வேண்டும். விதைத்த 30 நாட்களுக்குப் பின் எக்டருக்கு மோனோ குரோட்டோப்பாஸ் 50 மி.லிட்டர் விதம் பயிரில் தெளித்து, நோயினைப் பரப்பும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தினால் நோய் பரவுவதைத் தவிர்க்கலாம்.

சோளம் அல்லது தென்னை இலைகளைக் காயவைத்துத் தூளாக்கி ஒரு கிலோ தூளினை 5 லிட்டர் நீரில் கலந்து, 70 டிகிரி செ.கி. வெப்பநிலையில் ஒரு மணி நேரம் காய்ச்சி, வடித்த நீருடன் 10 லிட்டர் அளவு வரும்வரை தண்ணீரை ஊற்றவேண்டும். இவ்வாறு தயாரித்து ஏக்கருக்கு 200 லி.வீதம் விதைத்த 10-வது 20-வது நாட்களில் பயிரில் தெளிப்பதால் நோயினைக் குறைக்கலாம்.

## வறுமை ஒழிப்புத் திட்டம்

வறுமை ஒழிப்புத் திட்டங்களில் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கப் புதியதாக ஊராட்சி அளவில் ஒவ்வொரு தெரிவுக்குழு வீதம் அமைக்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

இது குறித்துத் தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது :

வறுமை ஒழிப்புத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்த உதவும் வகையில் ஒன்றிய அளவில் இரண்டு குழுக்கள் இருந்தன. இவ்விரண்டு குழுக்களின் மூலம்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற நிலைமை இருந்தது.

இவ்விரு குழுக்கள் ஒரே நோக்கத்திற்காகவே செயல்படுகின்றன. பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இவ்விரு குழுக்களும் தனித்தனியே செயல்பட வேண்டிய அவசியமில்லை என்று கருதி இவ்விரு குழுக்களையும் கலைத்துத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

வறுமை ஒழிப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க ஊராட்சி அளவில் ஒரு தெரிவுக் குழு அமைக்கப்படும்.

ஊராட்சி அளவிலான தெரிவுக் குழுவில் வட்டார வளர்ச்சி அலுவலர் உறுப்பினர் மற்றும் அமைப்பாளராகவும், சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர், வட்டாட்சியர், வங்கிக் கிளை மேலாளர், ஆதிதிராவிடர் பழங்குடியினருள் ஒருவர், இரண்டு பெண்கள், படித்து வேலை இல்லாத இளைஞருள் ஒருவர், சிறிய அல்லது நடுத்தர விவசாயி ஒருவர் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பர்.

இக்குழு மாநில அரசு மற்றும் மைய அரசு வெளியிட்டுள்ள செயல் வழிகாட்டு அறிவுரைகளுக்குத் தக்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் இதர வறுமை ஒழிப்புத் திட்டங்களின் பயனாளிகளைத் தெரிவு செய்யும்.

பேரூராட்சிக் குழுக்களே, பேரூராட்சிகளில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் வேலைகளைத் தெரிவு செய்யும்.



## பெரியார் மாவட்டம்

## கீழ் பவானி

# பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

பெரியார் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது கீழ் பவானி நீர்த்தேக்கத் திட்டமாகும்.

கீழ்பவானி அணையின் பாசனப் பரப்பு 2,07,000 ஏக்கர் ஆகும். 124 மைல் நீளம் கொண்ட பிரதானக் கால்வாயும், இடையிடையே பிரிந்து செல்லும் பகிர்வு வாய்க்கால்களும், மண் வாய்க்கால்களாக அமைந்திருப்பதால், நீர்ச்சேதாரம் அதிக அளவில் ஏற்படுவதுடன் தேவையான அளவு நீர், உரிய காலத்தில் வயல்களுக்குச் செல்வதில்லை. எனவே, நிர்ணயிக்கப்பட்ட பாசனப் பரப்பில் பயிர் செய்ய இயலாததோடு, பாசனம் பெற்ற பரப்பிலும் நீர் விநியோகம் சீராக இல்லாத காரணத்தினால், உரிய மகசூல் எடுக்க இயலாததோடு, உற்பத்தித் திறனும் குறைகிறது.

எனவே, அதிக மகசூலுக்கும், அதிக உற்பத்தித் திறனுக்கும் 'நீர் நிர்வாகமுறை' அவசியமாகிறது. இப்பணியினைக் கீழ்பவானிப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றி வருகிறது. 1982-83ஆம் ஆண்டு முதற்கொண்டு, இத்திட்டம் பெரியார் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர் ஆகியோர் ஈரோட்டினைத் தலைமையகமாகக் கொண்டு இயங்க, கீழ்பவானிப் பாசனப் பகுதியினை ஐந்தாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியின் கீழ் ஓர் உதவிச் செயற்பொறியாளர் பணியாற்றி வருகிறார். கோபிச்செட்டிபாளையம், ஈரோடு (இரண்டு உபகோட்டங்கள்), காங்கயம், மற்றும் கொடுமுடி ஆகிய இடங்களில் உப கோட்டங்கள் நிறுவப்பட்டு, கீழ்பவானி பாசனப் பகுதியில் திட்டப் பணிகள் செயலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

### திட்டப்பணிக்கு முன் பாசனப் பரப்பின் நிலைமை

மதகின் கீழ் உள்ள விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் நிர்ணயிக்கப்பட்ட உரிமையுள்ள நீர் அளவு, உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. குறிப்பாக மதகின் அருகாமையுள்ள பாசனதாரர் அதிக நீர் எடுப்பதும், அதனால் மதகின் கடைக்கோடியிலுள்ளோர், மிகக் குறைந்த நீர் பெறுவது அல்லது நீர் கிடைக்காமல் துயருறுவது நடைமுறையில் உள்ள நிலைமையாகும்.

அகன்ற மண் வாய்க்கால்களினாலும், உரிய சரிவில் வாய்க்கால்கள் இல்லாததாலும், பாசனப் பரப்பின் மண் அதிக அளவில் நீர் உறிஞ்சிடும் தன்மையுள்ளதாலும், நீர் தேங்கி நின்று பூமிக்கடியில் சென்று விடுவதாலும், பாசனம் செய்வதற்குத் தேவையான நீர் கிடைக்காமல் போகிறது.

கொப்பு வாய்க்காலிலிருந்து நேரிடையாக நீர் எடுத்து, வயலுக்கு வயல் நீர் பாய்ச்சி வருகிறார்கள். இதனால், நீர் பெறும் அளவு, வயலுக்கு வயல் மாறுபடுகிறது. எனவே பாசனம் பெறும் பரப்பு நிர்ணயிக்கப்பட்டதை விடக் குறைகிறது.

### திட்டத்தின்கீழ் செயலாக்கப்படும் பணிகள்

திட்டப்பணிகள் செயல்படுவதற்கு முன், மதகின் ஒவ்வொரு விவசாயியும் சந்தித்து, அங்கு நடைமுறையில் உள்ள பாசன முறை, பாசனதாரர்களுக்குள் உள்ள உட்பூசல்கள் ஆகியவை நன்கு ஆராயப்பட்டு, அதன் பிறகே திட்டமிடும் பணி தொடங்கப்படுகிறது. இதற்கிடையே விவசாயிகள் தனிச் சந்திப்பும், மற்றும் அனைத்து விவசாயிகள் கொண்ட கூட்டங்களும் நடத்தி, என்னென்ன பணி மதகின் கீழ் செய்யப்பட உள்ளது என்பதை விவசாயிகளிடம் கலந்துரையாடித் திட்டமிடப்படுகிறது. விவசாயிகளைச் சந்தித்துப் பேசி, விவசாயிகளிடையே ஒருமித்த கருத்தைக் கொண்டு வருவதற்காகப் பொறியியலில் பட்டயம் பெற்றுள்ளவர்களில் சிலர் நீர்ப்பாசன சமூக அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மதகின் பாசனப் பரப்பு சுமார் 10 ஏக்கரிலிருந்து 200 ஏக்கர் வரை உள்ளது. குறைந்த பரப்புக்குக் கிடைக்கும் நீரின் அளவு, பயிர்ப் பாசனத்திற்குக் குறைவாக உள்ளதாலும், அதிகப் பரப்புக்குக் கிடைக்கும் நீரின் அளவு கையாள முடியாத அளவிற்கு அதிகமாக உள்ளதாலும், சீரான பாசனம் கிடைப்பதில்லை.

எனவே, நிலம் எங்கிருந்தாலும் ஒவ்வொரு விவசாயிக்கும் உரிய நீர்,

### நீண்ட ஆயுளின் இரகசியம்

தமிழறிஞர் முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு 90 வயது ஆகிறது. இந்த வயதிலும் அவர் சுறுசுறுப்போடு இருக்கிறார். இளைஞரைப் போல ஓடியாடி வேலை செய்கிறார். எப்படி இவரால் இப்படி உடல் நலத்தோடு இருக்க முடிகிறது?

இதற்கு அவரே சொன்ன பதில்:

நல்ல உள்ளம்
நல்ல உணவு
நல்ல மனம்
நல்ல ஒழுக்கம்

இவற்றைக் கடைப்பிடித்தாலே போதும், நீண்ட காலம் உயிர் வாழ முடியும்.

### கற்க கற்றபடி நிற்க

திருக்குறள் நமது மறை-வேதம், செல்வம். குறளைப் படிக்கிறோம். எதற்காக? புலவனாக-எழுத்தாளராக-பேச்சாளராக. ஆனால் குறள் கூறும் கருத்துப்படி நடக்க வேண்டும். ஒரு குறளையாவது படித்துப் பயன்பெற வேண்டும்.

புலவர் ஒருவர் என்னைச் சந்திக்க வந்தார். "நான் திருக்குறளை அஷ்டாவதானம் செய்வேன் என்றார், பெருமையாக. "அது சரி, நீங்கள் எந்தக் குறளைப் பின்பற்றி நடக்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தேன், புலவரைக் காணவில்லை!

—சென்னை மாணவர் மன்ற விழாவில், முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம்.

உரிய நேரத்தில் வழங்க, தக்க நடவடிக்கை இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதனைச் செயலாற்றும் வகையில் 40 ஏக்கருக்குக் குறைவான பாசன நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டும், 90 ஏக்கருக்கும் மேல் அதிகமாக உள்ள பாசன நிலங்களைப் பகுதிகளாகப் பிரித்தும், ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனிக் காரை வாய்க்கால் அமைத்து, நீர்ப் பங்கீடு செய்யப்படுகிறது.

ஒவ்வொரு வயலுக்கும் கொப்பு வாய்க்காலிலிருந்து நீர் எடுக்கும் வகையாக, சிறிய வாய்க்கால்கள் அமைக்கப்படுகின்றன.

தேவையான கட்டுமானப் பணிகளான பிரிவுத் தொட்டிகள், இறக்கக் கட்டமைப்புகள், வண்டிப் பாதைகள், நீர் அளவைக் கட்டுமானங்கள்-ஆகியவை விவசாயிகளுக்குச் செய்து தரப்படுகின்றன.

மேற்படிப் பணிகள் உபயோகமுள்ள முறையில் அமைய, சீரான திட்டம் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படுகிறது.

இதற்கெனப் பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் 'பாசன சமூக அமைப்பாளர்களாக' நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் கிராமத்திலேயே தங்கி, முதல் முதலில் ஒவ்வொரு விவசாயியையும், சந்தித்துப் பேசி அவர்களுக்குள் உள்ள நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளை அறிகிறார்கள். பின்னர் ஒவ்வொரு மதகு விவசாயியையும் கூட்டி, அம்மதகில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளும், ஆராயப்படுகின்றன. ஒவ்வொரு மதகிற்கும் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர்-ஆகியோர் செயல்பாட்டுத்திறன் அடிப்படையில் விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். விவசாயிகளின் தேவையான அடிப்படையின் பேரில், ஒவ்வொரு மதகிலும்செய்யப்பட உள்ள திட்டப் பணிகள் தீர்மானிக்கப்பட்ட பின்னரே, வரைபடங்களிலும் மதிப்பீடுகளிலும் தயாரிக்கப்பட்டு, செயலாக்கப்பணி தொடங்குகிறது. திட்டப்பணிச் செயலாக்கம், இயன்ற அளவு விவசாயிகள் சங்கம் மூலமாகவே மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இது அவர்களுக்கு மன நிறைவைத் தருவதுடன், அவைகள் அவர்களின் சொந்த உடைமையாகக் கருதும் எண்ணம் ஏற்பட்டுப் பராமரித்திட வழி வகுக்கின்றது.

வருங்காலங்களில் நீர் நிர்வாகத்தை, விவசாயிகளே மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில், கீழ்பவானி பாசனப் பரப்பாகிய 2,07,000 ஏக்கர் சுமார் 5,000 ஏக்கர் கொண்ட 38 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் 'பாசனக் கோட்டம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பாசனக் கோட்டம் என்பது, கிளை வாய்க்கால், உப கிளை வாய்க்கால், மதகு ஆகியவற்றைக் கொண்ட அமைப்பாகும். இம்மாதிரி அமைக்கப்பட்ட 'கீழ்பவானி விவசாயிகள் சபை, திண்டல் பிரிவு வாய்க்கால், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

### திட்டத்திற்கான செலவின முறை

திட்டத்திற்கான செலவினத் தொகையில் 50 விழுக்காடு மைய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும், சமமாகப் பங்கிட்டு கொள்கின்றன. இதில் மைய அரசு மற்றும் மாநில அரசும் முறையே 25 விழுக்காடு கடனாகவும், 25 விழுக்காடு மானியமாகவும், வழங்குகின்றன. ஆக மொத்தச் செலவில் 50 விழுக்காட்டுப் பணி முடிந்த 3ஆம் ஆண்டு முதல் ஆண்டுச் சம தவணைகளில் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

முன்னோடியாக, திண்டல் கிளை வாய்க்கால் பகுதியில் ஒரு மதகுப் பரப்பில் அமைக்கப்பட்ட விவசாய சங்கத்தால், புதிய உத்தியின்படி, திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு, இத்துறையின் ஆலோசனைப்படி நிர்வாகத்தை விவசாயிகளே மேற்கொண்டு, பாசன நீரைச் சிக்கனப்படுத்தி, பாசனப் பரப்பினை அதிகப்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

இத்திட்டப்பணி 1982-83ஆம் ஆண்டு முதல் தொடங்கி, 1987-88 ஆண்டு வரை 64,670 ஏக்கரில் ரூபாய் 483 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நா. தில்லை கோவிந்தன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்.**

## காமராசர் மாவட்டம்:
# ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி

வறட்சி மிகுந்த மாவட்டம் காமராசர் மாவட்டம். விவசாயமே இப்பகுதி மக்களின் முக்கிய தொழிலாகும். காமராசர் மாவட்டத்தின் மேற்குப்பகுதிகளான இராஜபாளையம், வத்திராயிருப்பு ஆகிய பகுதிகள் மட்டும் சிறிது செழிப்பான பகுதிகளாகும். பருவ மழையை நம்பியே விவசாயத்தொழில் நடைபெற்று வருகிறது. இம்மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை வளர்ச்சி அடைவதற்கு எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில் 'ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்' என்ற திட்டம் இங்கு செயல் படுத்தப்படவுள்ளது.

காமராசர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி மூலமாகச் செயல்படுத்த, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக்கழகம், "ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்" ஒன்றை அனுமதித்துள்ளது. இத்திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு தொடக்க வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள். நுகர்வோர் கூட்டுறவுகள் ஆகியவற்றிற்கு வங்கி முகப்புகள், பாதுகாப்பு அறைகள், இருப்புப் பெட்டகங்கள், டிராக்டர்கள், கிட்டங்கிகள், விற்பனை முகப்புகள், கடைகள், பணிமனைகள், அலுவலகக் கட்டடங்கள், லாரிகள், இராஜபாளையத்தில் ஒரு பஞ்சு அரவை ஆலை ஆகியவை அமைக்கவும் கட்டவும் மொத்தமாக ரூ. 613.81 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தலைப்பின்கீழ், விளிம்புப் பண உதவி, அலுவலர்களுக்குப் பயிற்சி ஊக்க ஊதியம் ஆகியவை அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் செயல்படும் இரண்டு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்குக் கிட்டங்கிகள் கட்டவும், லாரிகள், பருப்பு ஆலை ஆகியவை கட்டவும் ரூ. 53.35 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் விளிம்புப் பண உதவியாக ரூ. 20. இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஐந்து கூட்டுறவு கைத்தறி விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும், இரண்டு பணிமனைகள் அமைக்கவும் ரூ. 57 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் விளிம்புத் தொகை ரூ. 25 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிக்குப் பங்குத் தொகை முதலீடு ஆக ரூ. 35 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 802.46 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் கடனாக ரூ.742.71 இலட்சமும், மானியமாக ரூ. 60.05 இலட்சமும் வழங்க உள்ளது. மீதமுள்ள தொகை ரூ. 60.05 இலட்சத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ள இருக்கிறது.

**எஸ். தீனதயாளன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காமராஜர் மாவட்டம்**



குழந்தைக் கவிஞர் என்றதும் நமக்கு அழ. வள்ளியப்பா அவர்களின் பெயரே நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு அவர் குழந்தை இலக்கியத்திலே குன்றாத ஆர்வம் கொண்டு குன்றிலிட்ட விளக்காய் விளங்கினார்.

எப்போதும் சிரித்த முகம், இனிய பேச்சு, பண்புடன் பழகும்தன்மை, எளிய தோற்றம், இவற்றின் மொத்த உருவம்தான் குழந்தைக் கவிஞர்திரு அழ. வள்ளியப்பா அவர்கள்.

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் அறிவு நலம்பெற வேண்டும்என்பதிலே தனி அக்கறை செலுத்தினார். அதற்காகக்காலமெல்லாம் உழைத்து வந்தார்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் இராயவரத்திலே 1922-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 7-ந் தேதி பிறந்தார். பெற்றோர் அழகப்பா-உமையாள் ஆச்சி.



1940ஆம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்பை முடித்த கவிஞர், மேற்படிப்பைத் தொடரவில்லை. அப்போதெல்லாம் நூலகமே கதியாகக் கிடந்தார். அந்தச் சமயம்தான் திரு வை.கோவிந்தன், கவிஞரைச் சென்னைக்கு அழைத்து வந்தார். இராயவரத்தைச் சேர்ந்த வை. கோவிந்தன், 'சக்தி', 'மங்கை', 'அணில்' ஆகிய இதழ்களை வெளியிட்டவர்.

சென்னையில் குழந்தைக் கவிஞரை, 'சக்தி' அலுவலகத்தில் பொருளாளராக நியமித்தார், வை. கோவிந்தன். 'சக்தி' இதழின் ஆசிரியராக இருந்தவர் தி.ஜ.ர. இவருடைய நட்பு, கவிஞருக்குக் கிடைத்தது: சக்தியில் சுவையான துணுக்குகள் எழுதினார். தி.ஜ.ர.வைத் தன் ஆசானாக ஏற்றார்.

1941இல், சக்தியிலிருந்து விலகி, இந்தியன் வங்கியில் சேர்ந்தார். நல்ல வேலை கிடைக்கவே, திருமணமும் நிச்சயமாயிற்று. இவருக்கு 4.2.1944இல் திருமணம் நடந்தது. மனைவி பெயர் வள்ளியம்மை. அப்போது அம்மையாருக்கு வயது 16. கவிஞருக்கு வயது 22.

# குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

'ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்'

—என்று பிற்காலத்தில் பாடிய குழந்தைக் கவிஞர், ஏடு தூக்கிப் பள்ளி சென்றார். பள்ளியின் பெயர் காந்தி பாடசாலை. இதனை நிறுவியவர் சு.கதி. கதிரேசன். சீர்திருத்த வாதியான இவர், தந்தை பெரியாரின் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர். தன் மகனுக்குச் சீர்திருத்தத் திருமணம் புரிந்ததுடன், திருமண விருந்துக்கு ஹரிஜனங்களை வரவழைத்தாராம். அத்தகையவரின் பள்ளியிலே படித்தார் குழந்தைக் கவிஞர். பண்பின் படிவமாக விளங்க, இப்பள்ளியே அவருக்கு அடித்தளமாக அமைந்தது.

பள்ளிப் பருவத்திலேயே அறிவுச் சுடராய் விளங்கினார் குழந்தைக் கவிஞர். மாணவர்கள் எப்போதும் இவரையே வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். குறும்புத்தனமாகப் பேசி அனைவரையும் குதூகலப்படுத்துவார், படிப்பில் மட்டுமல்ல, சித்திரம் எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பது அவர் வாழ்க்கையில் உண்மையாயிற்று. எல்லாவற்றுக்கும் மேலாக சின்னஞ்சிறு வயதிலேயே அவர் மனத்தில் கவிதை ஊற்றெடுத்தது.

தொடக்கக் கல்வி முடிந்து இவர் தொடர்ந்து பயின்ற பள்ளி, இராமச்சந்திரபுரத்தில் உள்ள ஸ்ரீபூமீஸ்வரஸ்வாமி இலவச உயர்நிலைப் பள்ளி, குழந்தைக்கவிஞரின் வகுப்புத் தோழர்களில் குறிப்பிடத்தக்கவர் குன்றக்குடி அடிகளார்.

சிறுவயதில், தின்பண்டம் வாங்கக் கொடுத்த காசுகளைச் சேர்த்து வைத்து, புத்தகங்கள் வாங்கிப் படித்தார் குழந்தைக் கவிஞர். அப்போதே படிக்கும் ஆர்வம் அவருக்கு மிகுதியாக இருந்தது. சொந்தமாக வாங்கிய நூல்கள் நிறையச்சேர்ந்து, அவையே ஒரு குட்டி நூலகமாகவும் காட்சியளித்தது. தன்னிடமுள்ள நூல்களை, தம் நண்பர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தார் அவர். இந்தப் பழக்கம் அவருக்கு இறுதி வரை இருந்து வந்தது.

பிறகு, பாரதி வாலிபர் சங்கம் என்ற அமைப்பை நிறுவினார். பாரதி பாடல்களைப் பரப்பினார். பாரதி பிறந்த நாளில் அவரது படத்துடன் ஊர்வலமாக வருவார் தம் தோழர்களுடன். அப்போது குழந்தைக் கவிஞர் இளைஞர்.

கவிஞருக்கு ஐந்து மக்கட் செல்வங்கள். நால்வர் பெண்கள், ஒரே ஒரு மகன் அழகப்பன், பரோடாவில் பொறியாளராக உள்ளார்.

1944இல் கவிஞரின் முதல் நூல் வெளி வந்தது. அதுதான் 'மலரும் உள்ளம்'. இதில் இடம் பெற்றுள்ள பாடல்களை திரு ஐயன்பெருமாள் கோனாரிடம் காட்டினார். அவரும் பாடல்களைத் திருத்தித் தந்ததுடன் கவிஞரை மேலும் ஊக்கப்படுத்தினார்.

குழந்தைப் பத்திரிகைகளுக்கு வித்திட்டது இராயவரமே எனலாம். இங்குதான் அலை, பாப்பா மலர், பாலர் மலர், டமாரம், சங்கு, ஆகிய பத்திரிகைகள் வெளிவந்து ஏராளமான குழந்தைகளைக் கவர்ந்தன. பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய பத்திரிகைகளுக்குச் சென்னையிலிருந்தே கதை, கட்டுரைகளையும் ஓவியங்களையும் அனுப்பி அவை செம்மையாக வெளிவர ஆவன செய்தார். இந்தப் பத்திரிகைகளில் கவிஞர் எழுதிய பாடல்கள் தொகுக்கப்பெற்று பாலர் பாடல், மல்லிகை, சிட்டுக் குருவி ஆகிய தலைப்புகளில் நூல்களாக வெளிவந்தன. 'சிங்காரப் பாடல்கள்' என்னும் கவிதை நூலும் வெளிவந்தது. இதன் விலை அரை பணா.

இன்று, பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளராக விளங்கும் திரு எஸ்.எம். பழனியப்பா அவர்கள், கவிஞரின் பள்ளித் தோழர். அவர் 'குழந்தைப் பதிப்பகம்' ஒன்றை அப்போது தொடங்கினார். அதன் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றார் கவிஞர். கவிஞரின் முதல் கதை நூல் 'பாட்டிக்குப் போட்டி', இப்பதிப்பகத்தின் முதல் வெளியீடாக வெளி வந்தது. கவிஞர், இப்பதிப்பாசிரியராக இருந்து இருபது நூல்களை வெளியிட்டார்.

1951இல் 'பூஞ்சோலை' என்னும் மாத இதழ் தொடங்கப்பட்டது. அதன் கௌரவ ஆசிரியரானார் கவிஞர். பூஞ்சோலை உண்மையில் குழந்தைகளுக்கு அறிவுப் பூஞ்சோலையாக விளங்கியது. இந்தச் சமயத்தில் கவிஞரின் மகன் அழகப்பன் பிறந்தான். அவனைச் செல்லமாகப் 'பூஞ்சோலை','பூஞ்சு' என்றே அழைத்தனர்.

சிறிய அளவில் வெளிவந்த மலரும் உள்ளம் பிறகு பெரிய அளவில் நிறையப் பாடல்களுடன், படங்களுடன் வெளிவந்தது.

இந்தக் கவிதைத் தொகுதியில் தான்—

'கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்'

'வட்ட மான தட்டு
தட்டு நிறைய லட்டு'

'நெல்லுக் குள்ளே அரிசிஇருக்கு.
சொல்லாதே'


முதலான பாடல்கள் குழந்தைகளின் நாவிலே ஒலிக்கத் தொடங்கின.

குழந்தைக் கவிஞரின் பாடல்களிலே சந்தம் துள்ளி விளையாடும். கருத்து மழை பொழியும். ஆடிப் பாடுவதற்கும் படித்து மகிழுவதற்கும் ஏற்ப இவரது பாடல்கள் விளங்கின. எல்லாவற்றுக்கும் மேலாக எளிமையும் இனிமையும் கொஞ்சிக் குலவின.

பாவேந்தர் பாரதிதாசனார் பரம்பரைபோல,இன்றுகுழந்தைக்கவிஞர் பரம்பரையே உருவாகி இருக்கிறது. அந்த அளவுக்கு அவர், இன்றைய குழந்தைக் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக, முன்னோடியாக விளங்கி வந்திருக்கிறார். இன்னும் விளங்கி வருவார்.

குழந்தைகளுக்காக எழுதுவதையே தம் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருந்த கவிஞர் மனத்தில், குழந்தை எழுத்தாளருக்காக ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதன் விளைவாக ஏற்பட்டதே குழந்தைஎழுத்தாளர் சங்கம்.

1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள் - தமிழ்ப் புத்தாண்டு



தினத்தில், குழந்தை எழுத்தாளர் சங்கம் தோன்றியது. சங்கம தோன்றிய இடம், எஸ்.எம்.பழனியப்பா அவர்களின் இல்லத்தில்; சங்கத்தின் முதல் தலைவராக வை.கோவிந்தனும், துணைத் தலைவராக தமிழ்வாணனும், செயலாளர்களாகக் குழந்தைக் கவிஞரும், வானதி திருநாவுக்கரசும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கடந்த 38 ஆண்டுகளாக, குழந்தை எழுத்தாளர் சங்கம், குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வருகிறது. அதற்கு வித்திட்டவர் குழந்தைக் கவிஞர். இந்தியன் வங்கியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் கூட, தம் தலையாய பணியாக இந்தச் சங்கத்தை நடத்தி வந்தார், தம் இல்லத்திலேயே.

சங்கத்தின் சார்பில், எட்டு குழந்தை இலக்கிய மாநாடுகள் நடந்திருக்கின்றன. சங்கத்தின் வெள்ளிவிழாவை இந்தியக் குடியரசுத் தலைவர் திரு பக்ருதீன் அலி அகமது துவக்கி வைத்துச் சிறப்பித்தார்.

'சங்கம், குழந்தைகள் புத்தகக் காட்சி, குழந்தை எழுத்தாளர் புகைப்படக் காட்சி, நாடக விழா ஆகியவற்றை நடத்ியதுடன், பண்டித நேரு பிறந்த தினமான குழந்தைகள் தினத்தில்,குழந்தைகள் நூல்களை வெளியிட்டும் நூலாசிரியர்களையும், பதிப்பகத்தாரையும் சிறப்பித்தும்வருகிறது.

'தமிழில் குழந்தை இலக்கியம்- ஒரு மதிப்பீடு' என்ற நூலையும், சிறப்பு மலர்களையும், 'குழந்தை எழுத்தாளர் யார்? எவர்?' என்னும் நூலையும் வெளியிட்டு, குழந்தை இலக்கியப்பயிர் செழித்து வளரத் துணை செய்தது. குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய பெரியவர்களையும் சிறப்பித்து வருகிறது.

குழந்தைப் புத்தகங்களாக வெளியிடுவதற்கேற்ற, கையெழுத்துப் பிரதிகளில் சிறந்தவற்றிற்கு திரு ஏவி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் தாமாகவே முன்வந்து, ஏவி.எம். அறக்கட்டளையின் சார்பில் ஆண்டுதோறும் இரண்டு தங்கப்பதக்கங்களும், இரண்டு வெள்ளிப் பதக்கங்களும் அளிப்பதாக அறிவித்தார். அதன்படி 1972ஆம் ஆண்டு முதல், இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இதே போல எல்லம்மா ரங்கம்மாள் நினைவுப் பரிசும், செல்லப்பன் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பல கையெழுத்துப் பிரதிகள் தயாராகின்றன. பல புதிய நூல்கள் வெளிவரவும் வழிகோலப்படுகின்றன.

இந்தப் பணிகளுக்கெல்லாம் மூல காரணமாக இருந்து முனைந்து செயல்பட்டவர் குழந்தைக் கவிஞர் என்பதை இங்கே குறிப்பிடவேண்டும்.

குழந்தைக் கவிஞர், மூதறிஞர் இராஜாஜியோடும்,தமிழ்த்தென்றல் திரு.வி.க.வோடும் தொடர்பு கொண்டிருந்தார். தமிழ்ப்பணியையே மூச்சாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

பேராசிரியர் மதுரை முதலியார், டாக்டர் மா.இராசமாணிக்கனார், இளவழகனார் ஆகியோரிடம் தமிழ் கற்ற திரு அழ. வள்ளியப்பா அவர்கள், பல்வேறு இதழ்களில் எழுதிக்கொண்டே இருந்தார்.

கவிஞரை எந்த நேரத்திலும் அவரது இல்லத்தில் சந்திக்கலாம். அவர் வீட்டுக் கதவு கவிஞர்களை வரவேற்க எப்போதும் திறந்தே இருக்கும். அவர் மனக் கதவும் அப்படியே. அவர் மணிக்கணக்கில் பேசிக் கொண்டே இருப்பார். அவர் பேச்சு, குழந்தை இலக்கியம் பற்றியதாகவே இருக்கும். அவர் ஓய்வு பெற்றிருந்தும் கூட, சிறிதும் ஓய்வே இல்லாமல் உழைத்து வந்தார். பல தமிழ் அமைப்புகளில் அவர் பங்குகொண்டு சிறப்பாகச் செயலாற்றி வந்தார்.

கவிஞர், வங்கியிலிருந்து ஓய்வு பெற்ற கையோடு, பல பெரிய பதவிகள் அவரை நாடி வந்தன. என்றாலும் அவர் மனமுவந்து ஏற்றுக்கொண்டபணி 'கோகுலம்' கௌரவ ஆசிரியர் பணி தான்.

தன்னுடைய 13-வது வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கிய குழந்தைக் கவிஞர், குழந்தைகளுக்காக 55 நூல்கள் எழுதிப் பெரும் புகழும் பெற்றுள்ளார். இவர் எழுதிய 'மலரும் உள்ளம்' நூலின் முதல் தொகுதி, 'பாட்டிலே காந்தி' ஆகியவை மத்திய அரசின் பரிசு பெற்றவை. மலரும் உள்ளம், நல்ல நண்பர்கள், பாப்பாவுக்குப் பாட்டு, ஆகியவை தமிழக அரசின் பரிசு பெற்றன.

குழந்தைக் கவிஞர் கவிதைத் தொகுப்புகள், நாடகங்கள், வாழ்க்கை வரலாறுகள் முதலானவற்றை எழுதியுள்ளார். 'நம் நதிகள்' என்னும் கவிதைத் தொகுப்பு, பதினான்கு மொழிகளிலும், 36 கவிதைகள் தெலுங்கு மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தவிர, இலங்கை, மலேசியா, மொரீசியஸ் ஆகிய நாடுகளிலும் இவரது கவிதைகள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'பேரவைச் செம்மல்' என்னும் விருதினை வழங்கியுள்ளது.

இவரது எழுத்துக்கள், எம்.பில். பி.எச்.டி., ஆகிய பட்டங்களுக்காக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழன்னைக்குக் கவின்மிகு கவிமாலைகள் சூட்டி மகிழ்ந்த கவிஞர் அவர்களுக்கு, 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'தமிழ்ஙலனப்' பரிசினைத் தந்து மகிழ்ந்தது.

1989ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் நாள், மதுரைகாமராசர் பல்கலைக் கழகக் கல்விப் பேரவை அகாடமிக் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மதுரை சென்றார் கவிஞர். அங்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, 16.3.89 அன்று காலமானார்.

அவரது மறைவு, குழந்தை இலக்கிய உலகுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு. கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக, குழந்தை இலக்கியமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர்.

தனிப் பாடல்கள் தவிர, கதைப் பாடல்கள் எழுதுவதிலும் கவிஞர் தனி முத்திரையைப் பதித்தார். கோகுலத்தில் 'பழைய கதை புதிய பாடல்' என்ற தலைப்பில் அருமையான கதைப் பாடல்களைத் தந்தார் கவிஞர்.

இளங் கவிஞர்களை ஊக்குவிப்பதில் அவருக்கு நிகர் அவரே. எவரையும் புண்படப் பேசியதில்லை. பண்பட — பண்பாடப் பேசியதையே அறிய முடிந்தது.

கவிஞர், தென்னிந்தியப் புத்தக டிரஸ்டில் பணியாற்றி, குழந்தை இலக்கிய உலகுக்குப் பல அரும்பணிகள் ஆற்றியுள்ளார். அன்னாரின் அரிய தொண்டினைப் பாராட்டி பல மாநில அமைப்புகள் அவரைக் கௌரவித்துள்ளன.

கடைசியாக,கோவையில், நடந்த எட்டாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் அவர் தலைமையுரையாற்றுகையில், குழந்தைப் புத்தக டிரஸ்ட் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற தம் நீண்ட நெடுநாளைய ஆசையை மீண்டும் வலியுறுத்தினார். அவரது அந்த நல்ல ஆசையை நிறைவேற்றுவது தான், நாம் அவருக்குச் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

—பி.வி. கிரி

தெரிந்து கொள்ளுங்கள்

வரலாற்றுச் சிறப்புமிக்க

# சீனத்து நெடுஞ் சுவர்

உலகத்து அதிசயங்களில் சீனத்து நெடுஞ்சுவர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். இருப்பினும் இது உருவாவதற்கு என்ன காரணம் என்பது பலருக்குத் தெரிய நியாயமில்லை.

பசிபிக் மகா சமுத்திரத்திலிருந்து கோபி பாலைவனம் வரையில் கட்டப்பட்டுள்ள இப்பெருஞ்சுவர் பூமியில் சுற்றளவில் இருபதில் ஒரு பாகம் அமைந்துள்ளது.

இந்தப் பெருஞ்சுவர் பாம்பைப் போன்று வளைந்து,நெளிந்து செல்கிறது. பெரிய பெரிய மலை முகடுகளிலும், பள்ளத்தாக்குகளிலும்,சமவெளிகளிலும், காட்டாறுகளின் மீதும் செல்லும் இதன் மொத்த நீளம் ஆறாயிரம் கிலோ மீட்டராகும்.

சீனத்தின் நெடுஞ்சுவர் கட்டப்பட்டது கிறிஸ்து பிறப்பதற்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன் என்றால் தற்போது கணக்கின்படி 2,300 ஆண்டுகள் ஆகின்றன.

ஆட்கள் ஏற முடியாத உயரங்களில் சுவரைக் கட்டுவதற்குச் சுமார் இரண்டு டன் எடையுள்ள கருங்கற்களை வைத்துக் கட்டியுள்ளனர். இந்தக் கருங்கற்களை அந்த உயரத்திற்கு எடுத்துச் செல்ல மலை ஆடுகளைப் பயன்படுத்தியதாக சீனத்தின் வரலாற்றுச் சித்திரம் கூறுகின்றது.

சீன நெடுஞ்சுவர் ஏற்படக் காரணமாக இருந்தவன் சின் அரசக் குடும்பத்தைச சேர்ந்தவனாகும். முதல் சின் அரசன் பட்டம் சூட்டிக் கொண்டு சீனத்தை ஆண்டான். அவன் பிரிந்த பகுதிகளை ஒன்றுபடுத்தி குறுநில மன்னர்களை ஒழித்தான். மைய ஆட்சிமுறையை ஏற்படுத்தி சீனம் முழுவதும் ஒரே மாதிரியான எழுத்து வடிவத்தைப்பின்பற்றும்படியும் உத்தரவிட்டான்.

சீனத்தின் வடக்குப் பகுதியில் உள்ள நெடுஞ்சுவர் தவிர, மற்ற ஆங்காங்கே நாட்டைப் பிரிப்பது போன்று உள்ள குட்டிச் சுவர்களையெல்லாம் இடித்துத் தள்ளும்படி உத்தரவிட்டான். பின்னர் சின் அரசன் ஆண்ட எல்லைப் பகுதியான கிழக்கிலும் மேற்கிலும் 2800 கிலோ மீட்டர் சுவரை எழுப்பினான்.

நெடுஞ்சுவருக்குத் தெற்குப்பகுதி முழுதும் - அன்று அரசாண்ட சின் பரம்பரையின் பெயரைக் குறிக்கும் வகையில் ''சீனா'' என்றழைக்கப்பட்டது.

சின் அரசன் இந்த நெடுஞ்சுவரைக் கட்டும்போது பல சிறந்த அறிஞர்களை எல்லாம் ஈடுபடுத்தினான். பலஇலட்சக்கணக்கான மக்களை நெடுஞ்சுவர் கட்டும் பணியில் பலவந்தமாக ஈடுபடுத்தினான்.

இதனால் வேலையில் ஈடுபட்டவர்கள் பனியாலும் குளிராலும், வெயிலின் கொடுமையாலும், பசியாலும் வாடி - நோயால் அவதியுற்று மாண்டனர்.

இந்த நெடுஞ்சுவரின் வேலையால் சீனாவின் மக்கள் தொகை கணிசமான அளவு குறைந்ததுடன் கஜானாவும் காலியானது.

சின் அரசன் கி.மு.21 ஆம் ஆண்டு 29 வது வயதில் இறந்தான். அவனைத் தொடர்ந்து வந்த சின் வாரிசுகள் அந்த நெடுஞ்சுவரைப் பாதுகாத்து,மேலும் 3200 கிலோமீட்டர் தூரம் நீட்டித்தனர். இந்த நெடுஞ்சுவரின் பயனால், சீன மக்கள் ஒற்றுமையுடன் வாழ வழிகிடைத்தது.

இன்று சீனா என்றால், உலக மக்களின் எண்ணங்களில் சின் அரசன் கட்டிய நெடுஞ்சுவர்தான் ஞாபகத்திற்கு வரும். அந்த அளவுக்குச் சிறப்புப் பெற்று விளங்குகிறது, வரலாற்றுச் சிறப்புமிக்க சீனத்தின் நெடுஞ்சுவர்.

—திரு மயிலைத் தொண்டன் எழுதிய 'அறிவியல் சிந்தனைக் களஞ்சியம்' என்னும் நூலிலிருந்து

# அரசின் அறிவிப்புகள்

## ஆக்கப்பணிகள்

அரசு அலுவலகங்களில் நிருவாகத் திறனையும் செயற்பாட்டையும் மேம்படுத்தும் வகையில், சுயமாகச் சிந்தித்து ஆலோசனை வழங்கும் அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசும் சான்றிதழும் வழங்கிட 'ஆலோசனைத் திட்டம்' என்னும் ஒரு திட்டத்தினை அரசு 1969ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தற்காலிக அடிப்படையில் உருவாக்கியது.

இத்திட்டம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3 ரொக்கப் பரிசுகளும் 2 தகுதிச் சான்றிதழ்களும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்காக வழங்கப்பட்டுள்ளன. இப்போது இத்திட்டத்தை நிரந்தரப்படுத்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் 13.3.89 அன்று கும்பகோணம் அருகிலுள்ள பம்பப்படையூரில் நலிந்தவர் மற்றும் விவசாயிகளுக்கு வண்டி மாடு மற்றும் உழவு மாடு, கறவைமாடு, வெள்ளாடு, சிறுதொழில் கடன் என 203 நபர்களுக்கு ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 11 இலட்சம் கடனுதவி வழங்கினார். இதில் ரூ 3 இலட்சம் அரசு மானியமாகும். மேலும் முன்னோடி விவசாயிகளுக்கு டிராக்டர், தெளிப்பான்கருவி, களைக்கொல்லி, மண்வெட்டி மற்றும் உர மினிகிட் வழங்கினார்.

திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் கூடி புள்ளம்பாடி பிரதானக் கால்வாய்மூலம் நீர்விடக் கோரி நடைபெற்ற கலவரத்தின்போது கலவரத்தை அடக்கவும், கூட்டத்தினரைக் கலைப்பதற்கும் காவல் துறையினர் செய்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 10,000 மற்றும் காயமடைந்த ஒருவருக்கு ரூ. 1,000, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணைப்படி வழங்கப்பட்டுள்ளது.

"உணவுப்பொருட்களிலும் இடைத்தரகர்கள் கலப்படம் செய்து கொள்ளை இலாபம் அடைகிறார்கள். கலப்படம் செய்த பொருளை எளிதில் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நுட்பமான முறைகளில் செய்கிறார்கள். கலப்படம் செய்பவர்கள் சமூக விரோதிகள். கலப்படத்தைத் தடுக்க நுகர்வோரை விழிப்படையச் செய்ய வேண்டும். அதன் மூலம் கலப்படம் செய்பவர்களை அடையாளம் காணமுடியும். இதற்காக மத்திய மாநில அரசுகள் தொடர்ந்து கடுமையான நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றன. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்". என மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் 17.3.89 அன்று மதுரையில் நடைபெற்ற மாநில அளவிலான நுகர்வோர் நலன் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கொடைக்கானல் மலையில் தரை மட்டத்திலிருந்து 5 ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது மஞ்சம்பட்டி. கேரள எல்லையோரமாக உள்ள இந்த கிராமத்தை ஒட்டிய காட்டுப் பகுதியில் திருட்டுத்தனமாக பயிரிட்டு வைக்கப்பட்டிருந்த ரூ. 35 கோடி மதிப்புள்ள கஞ்சாச் செடியை மதுவிலக்கு அமல் பிரிவு காவல்துறையினர் கைப்பற்றி அழித்தார்கள். இந்த மதுவிலக்கு அமல் பிரிவு போலீஸ்படையில் 70 பேர் பங்கு பெற்றனர். இவர்கள் 15.3.89 அன்று கொடைக்கானல் பகுதி காடுகளில் 3 நாட்கள் கால்நடையாகச் சென்று இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

"தமிழ்நாட்டில் அடுத்த ஆறு ஆண்டுகளில் ரூ. 47 கோடி செலவில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில் பணிபுரியும் மகளிர் விடுதிகளையும் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களையும் புதிதாக அமைக்க மத்திய அரசின் நிதி உதவியைக் கோர உள்ளோம்" என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் 18.3.89 அன்று திருச்சியில் தெரிவித்தார்.

குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்தவர்களில், முதன்முறையாகத் திருமணம் நடந்திருந்து, அவர்கள் ஓய்வுபெற்றபின்னர் குழந்தை பிறந்திருந்தால் அத்தகையக் குழந்தைகளுக்கு ஓய்வூதியம் அளிக்கும்படி அரசு ஆணையிட்டுள்ளது.

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க உதவும் வகையில் சுமார் ரூ. 65 கோடி செலவில் பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து விநியோகிக்கும் திட்டம் சென்னைப். பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. இத்திட்டம் குறித்த வல்லுநர்களின் ஆய்வறிக்கை மே திங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆம்பூர், வாணியம்பாடி சாலையிலுள்ள விண்ணமங்கலம் அரசு தோல் பதனிடும் - தொழிற்சாலையான டால்கோவிற்கு 18.3.89 அன்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி சோதனை நடத்தினார். இத்தொழிற்சாலையில் ஆண்டுக்கு ரூ. 2.5 கோடிக்கு மேல் தோல் வாங்கியதில் ரூ. 1 கோடி ஊழல் நடந்துள்ளதை அமைச்சர் அவர்கள் கண்டறிந்தார். 'மேலும் அலுவலர்களை இங்கு பார்வையிட அனுப்பி தொழிற்சாலை விரைவில் நல்ல முறையில் சீரமைக்கப்படும்' என அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சென்னை கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள புறநகர் மருத்துவமனையில் 17.3.89 அன்று மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் திடீர் சோதனை நடத்தினார். இங்கு ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1977ஆம் ஆண்டில் கட்டப்பட்ட அறுவைச்சிகிச்சைக்கூடங்கள் அடங்கிய கட்டடம் இதுவரையில் பயன்படுத்தப்படாமல் இருந்ததைக் கண்டறிந்து உடனடியாய் அதனைப் பயன்படுத்துமாறு ஆணையிட்டார்.

### செய்தித் தாள்கள்

தினசரி செய்தித் தாள்கள் உலகிலேயே சுவீடன் நாட்டில் தான் அதிகமாக வெளிவருகின்றன. அங்கு 12,000 தினசரி செய்தித் தாள்கள் வெளிவருகின்றன. காரணம். அங்கு காகிதம் மிகமிக விலைகுறைவு.



1



# நோயை அறிவோம்

பொதுவாக நம்மைப் பிடிக்கும் சில நோய்களுக்கான அறிகுறிகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த அறிகுறிகள் என்றால் இன்ன நோய் தான் என்று நாமே உறுதி செய்து கொள்ளக் கூடாது. மருத்துவரை அணுக வேண்டும். பரிசோதனைகள் செய்து, நோய் இன்னதென்று அவர் கண்டறிவார். அதன்பின் அவர் அளிக்கும் சிகிச்சையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். நோயின் அறிகுறிகளை அறிந்திருந்தால் விரைவில் மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வழிகோலும் என்பதற்காகத்தான் இப்பட்டியல் வெளியிடப்படுகிறதே தவிர, தாமாகவே சிகிச்சை செய்து கொள்ளத் தூண்டுவதற்காக அல்ல. தமக்குத் தாமே மருந்துகளைத் தேர்ந்தெடுத்து உட்கொள்வது உடலில் ஊறு விளைவித்து, கேடுகளை உண்டாக்கும்.

### 1. மலேரியா

விட்டு விட்டுக் குளிருடன் கூடிய முறைக் காய்ச்சல், காய்ச்சல் நின்றதும் உடல் வியர்த்தல், மணிக்கொரு முறை 15 நிமிடங்களுக்கு உடல் நடுக்கம், தலைவலி, தலை பாரமாய். உணர்தல், உடல் வலி, வாந்தி முதலியன.

### 2. நிமோனியா காய்ச்சல்

இருமல், அதிக காய்ச்சல், மூச்சு விடச் சிரமம், தொடர்ந்து 2, 3 நாட்களாக இருக்கும். நெஞ்சு வலி, கடுமையாக நோயுற்ற தோற்றம்

### 3. இளம்பிள்ளை வாதம்

மிதமான காய்ச்சல், தலைவலி, சளி, வாந்தி, வயிற்றுக் கோளாறு, கை, கால், கழுத்துவலி, முதுகுப் பிடிப்பு, மலச்சிக்கல், குழந்தை நிற்கவோ உட்காரவோ முடியாமல் தொல்லைப்படும். கைகால்கள் வலுவிழந்து அதன்மேல் பாரம் போட முடியாமல் வருத்தும். சில நேரங்களில் மூச்சு விட அல்லது விழுங்க சிரமப்படுவதுண்டு.

### 4. தட்டம்மை

காய்ச்சல் 100 டிகிரியிலிருந்து 104 டிகிரி வரை அதிகரிக்கும். மூக்கு, வாய், கண் இவற்றிலிருந்து நீர்வடியும், கண் சிவக்கும். வெளிச்சத்தைப் பார்க்க கண் கூசும். இருமல் இருக்கலாம். தலைவலி, முதுகு வலி இருக்கும். நோய் கண்டவரின் வாயின் உட்புறம் சிவந்திருப்பதுடன் உப்புப் பொடியைத் தூவியதுபோல் இருக்கும். காய்ச்சல் தோன்றி மூன்று அல்லது நான்கு நாட்களில் அம்மை தோன்றும். அம்மை காதுக்குப் பின்னால் தெரியும். பிறகு மார்பு, முதுகு, கைகள், வயிறு, உயிர்நிலை, கடைசியாகக் கால்களில் தோன்றும். உடம்பு முழுவதும் சிவப்பு மையைத் தூவியது போல் இருக்கும். பின் சிவப்பு நிறம் மாறி நீல நிறமாகும். பிறகு கருகி உதிர்ந்து விடும்.

### 5. தொண்டை அடைப்பான் (டிப்தீரியா)

உடம்பில் அலுப்பு, தொண்டைக் கரகரப்பு, கம்மல், கடுமையான காய்ச்சல், கழுத்துச் சுரப்பிகளில் வீக்கம், உணவு விழுங்க சிரமம், குழந்தைக்குப் பசியின்மை, மூச்சுக் காற்றில் அருவருப்பான வாடை, சிலருக்கு மூக்கில் இரத்தம் வருதல், ஏதாவது குடித்தால் சிலருக்கு அது மூக்கின் வழியே வழிதல், தொண்டை, மேலண்ணம், டான்சில் ஆகியவற்றில் வெள்ளையான அல்லது சாம்பல் வாகான சிறு திட்டுகள்.

### 6. கண்டமாலை

கட்டி தோன்றும்போது காய்ச்சல் இருக்காது, கட்டி வளர வளர இருமல், காய்ச்சல், பசிக் குறைவு, சோர்வு, உடல் இளைத்தல், கட்டி வாரக் கணக்கில் மாதக் கணக்கில் அழுங்காது.

### 7. கக்குவான்

இருமல் தொடர்ந்து வந்து 'ஊப்' எனும் சப்தமுடன் இழுத்துக் கொண்டே போதல், கண் சிவத்தல், மூக்கில் ஓயாத ஒழுக்கு, தொண்டைப்புண், சங்கிலித் தொடர் போன்ற இருமல், மூச்சுத் திணறல், அடிக்கடி வாந்தி, சில மாதம் முதல் ஐந்து வயது வரை குழந்தைகளை இந்நோய் தாக்கும்.

### 8. இரத்தச் சோகை

மயக்கம், தலை சுற்றல், களைப்பு, பசியின்மை, அதிகம் வேலை செய்தால் மூச்சு இரைத்தல், முகம் ,உடல், வெளிறிப் போதல், தோலில் தேமல் குறிப்பாக மூட்டுக்களிலும், விரல் நகங்களிலும், முகத்திலும், இருதயத்தில் படபடப்பு, உடல் பருத்து, கை கால்களில் அசதி, தேவையின்றி உடல் நடுக்கம், கண்ணின் மேற்புறச் சவ்வு மங்கலாகத்தோன்றும், நகங்கள் உலர்ந்து ஒடிந்து விடும் தன்மையுடையதாக இருக்கும்-வெளிறிய சருகள்,

## தொழுநோயாளர் தொகை

உலகத்திலேயே இந்தியாவில் தான் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. இந்தியா முழுதும் ஏறக்குறைய 40 இலட்சம் தொழுநோயாளிகள் இருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

### MDT என்றால் என்ன?

M D T என்றால் Multy Drug Therapy என்று பொருள். அதாவது பலவகை மாத்திரைகளின் மூலம் அளிக்கப்படும் சிகிச்சை.

ரி∴பாமிசின், குளோ∴பாஸைமின் டாப்சோன் (Rifampicin, Clofazimine, Dapson) ஆகிய மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. இவற்றை உட்கொள்வதால் தொழுநோய் ஒருசில மாதங்களுக்குள்ளேயே குணமாகி விடுகிறது.

### 9. இரத்த அழுத்த நோய்

கடும் தலைவலி, இடது தோளிலும் நெஞ்சிலும் சில சமயங்களில் வலி-பெரும்பாலும் தலையின் பின் பக்கத்தில் அதிலும் குறிப்பாகக் காலையில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் மயக்கம், சோர்வு, படபடவென்று திடீர் இதயத் துடிப்பு போன்றவை.

### 10. ஈசினோபிலியா

வறட்டு இருமல், நெஞ்சிலுள்ள கோழையை வெளியேற்ற சிரமம், தும்மல் அடிக்கடி அடுக்கடுக்காக வரும். மூச்சை உள்ளே இழுக்க கஷ்டமாகவும் வெளியே விடச் சிறிது சிரமமாகவும் இருக்கும். உள்ளே ஆர்மோனியம் வாசிப்பது போல சப்தம் விட்டு விட்டு ஒலிக்கும். சில சமயங்களில் இரைப்பு, தூக்கம் கெடுதல் ஆகியன.

### 11. வயிற்றுப் பூச்சிகள்

ஆசனவாயில் நமைச்சல், லேசான வயிற்று வலி, இரவில் பற்களைக் கடித்து சப்தம் செய்தல், பசியின்மை உடல் சோர்வு, செரிமானமின்மை, உடல் வளர்ச்சி பாதிப்பு முதலியன.

### 12. மூளைக்காய்ச்சல்

பெரும்பாலும் ஏழு அல்லது எட்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கும். குளிர் நடுக்கம், 103 டிகிரி, 104 டிகிரி எனக் காய்ச்சலின் அளவு அதிகரிக்கும். மார்பில் சளி, கழுத்துச் சதையில் விறைப்பு, கழுத்தை மடக்க சிரமம், பேச சிரமம், இசிவு, சுயநினைவு இழத்தல்.

### 13. மூலம்

வயிற்றில் வலி, அடி வயிற்றில் இரைச்சல், ஆசனக் கடுப்பு, பசியின்மை, மலம் கழிக்கும்போது சில வேளைகளில் இரத்தத்துடன் கூடிய சீழ் வருதல்.

### 14. மாரடைப்பு

நெஞ்சின் நடுப்பகுதியில் பயங்கரமான வலி, பின் இடது பக்கம் பரவும். கை, முதுகு, கழுத்தில் வலி. குபீரென்று வியர்க்கும். இரத்த ஓட்டம் குறைந்து உடல் சில்லிட்டுப் போகும். இரத்த அழுத்தம் குறைதல், மயக்கம் முதலியன.

### 15. நீரிழிவு நோய்

பலக் குறைவு, மயக்கம், முட்டிக் கால்களில் வலி, அடிக்கடி சிறுநீர் அதிகம் கழித்தல், அதிக பசி, அதிக தாகம், உடல் மெலிதல், காயம்-புண்கள் இவை விரைவில் ஆறாமல் இருத்தல், கைகால்கள் மரத்துப் போதல், அல்லது வலி எடுத்தல், பார்வையில் வேறுபாடு ஏற்படும். நமைச்சல், அரிப்பு ஏற்படும். கட்டி சிரங்குகள் முதலிய தோல் நோய்கள் தோன்றும்.

### 16. தொழுநோய்

சிறிய, சிவந்த, உணர்ச்சியற்ற, பளபளப்புடன் கூடிய, வலி இல்லாத, அரிப்பு இல்லாத ஓரங்களில் மேடுடன் கூடிய தேமல்கள், பொதுவாக இத்தேமல்கள் முகம், கை கால்கள், முழங்கை, முட்டிக்கால், குழந்தைகளின் புட்டம் ஆகிய இடங்களில் காணப்படலாம். தோல் தடித்து பளபளப்புடன் இருக்கலாம், தடித்த பகுதியில் ரோமம் இருக்காது; வியர்வை சுரக்காது; ஊசியால் குத்தினால் வலி இருக்காது; அல்லது வலி குறைவாக இருக்கும். கை கால்களில வலி தெரியாத நீண்ட நாள் ஆறாத புண் காணப்படலாம். நரம்பு புடைப்பு, உஷ்ணம் உணராமலிருத்தல் போன்றவை.

### 17. யானைக்கால் நோய்

திடீரென்று குளிர் நடுக்கத்துடன் காய்ச்சல், தலைவலி, வாந்தி, வடிநீர் அடைப்பட்ட பகுதியில் தோல் சிவந்து அந்த இடத்தில் வீக்கம், விட்டு விட்டு காய்ச்சல்-கால் கை, விதைப்பை உறை, பெண் இன உறுப்பின் வெளிப்பகுதியில் ஒரு வகை நிலையான வீக்கம்.

### 18. ஆஸ்துமா

நெஞ்சை யாரோ பலமாக அமுக்குவது போன்ற உணர்வு, மூச்சு விடுவதில் சிரமம், இருமல் இருக்கலாம், கோழை வராது, நெஞ்சில் உள்ளே விசிலடிக்கும் சப்தம், இதயம் வேகமாகத் துடிப்பதால், வியர்வை கொட்டும், வெளிக்காற்றைச் சுவாசிக்க நோயாளிக்கு ஆர்வம்.

### 19. காசநோய்

இருமல் தொடர்ந்து இரு வாரங்களுக்கு மேல் இருத்தல், மாலையில் காய்ச்சல், நெஞ்சுவலி, உடல் மெலிதல், பசியின்மை, இருமும் போது கோழையோடு இரத்தம் வருதல், எடை குறைதல், இரவில் வியர்த்து வடிதல், நெஞ்சில் அல்லது மேல் முதுகில் வலி.

### 20. காலரா

முதலில் பத்து இருபது முறை மலமாக ஏற்படும் வயிற்றுப்போக்கு பின்னர் நிறம் மாறுபட்டு கஞ்சி போல் போக ஆரம்பிக்கும், வயிற்று வலி இருக்காது, நேரம் செல்லச் செல்ல வாந்தி, அரிசி கழுவிய நீர் போல மலம் போதல், சிறுநீர் சொட்டுச் சொட்டாகப் போகும். உடல் குளிர்ந்து, கண்களில் குழி விழும், தோலில் சுருக்கம், ஒட்டிய கன்னம், விறைப்பான விரல்கள், உடலில் வலி, அசதி.

### 21. புற்றுநோய்

இருமினால் இரத்தம் வருதல், ஆறாத புண், தீராத வயிற்று வலி, மறையாத கட்டிகள், காரணமே இல்லாத வீக்கங்கள், பல், ஈறுகளில் தாடைகளில் ஆறாத புண்கள், நெடுநாட்களாகத் தொடர்ந்திருக்கும் நெறி கட்டிகள் வருதல்.

### 22. டைபாய்டு

ஆரம்பத்தில் எந்தவித அறிகுறியும் தென்படாது. இலேசான தலைவலி, மாலை நேரங்களில் உடம்பு காயும், அசதி, எடைகுறைதல், நீரிழப்பு, தொண்டையில் கரகரப்பு படிப்படியாக காய்ச்சல் 103 டிகிரி, 104 டிகிரி என அதிகரித்தல், இருமல், இரத்தம் வரலாம். கோழை வராது, பசியின்மை, சிலருக்கு மூக்கிலிருந்து இரத்தம் வருவதும் உண்டு. மலம் கட்டுதல், காய்ச்சல் இரண்டு மூன்று வாரங்களுக்குத் தொடரும்.

### 23. மனநோய்

ஒருவரின் நடவடிக்கைகளில்படிப்படியாக அல்லது ஒரேயடியாக திடீரென ஏற்படும் மாறுதல் முக்கிய அறிகுறி ஆகும். காரணமின்றி மற்றவர்களைத் திட்டுதல், அடித்தல், மற்றவர்களுடன் பேசாதிருத்தல், உண்ணாமலிருத்தல், தூக்கமின்மை, வேலைக்குச் செல்லாமை, அறிமுகமில்லாதவர்களுடன் சண்டை போடுதல், தற்கொலை முயற்சி, அவசியமின்றி அதிகப் பணம் செலவிடுதல் போன்ற செயல்கள்.

—வி. இராவணன்



# வளரும் வேளாண்மை

### சுடுமல்லி என்னும் புல்லுருவியைக் கட்டுப்படுத்துதல்

போதிய மழையில்லாதபோதும், நீர்ப்பற்றாக்குறைஏற்படும்போதும், தோட்டக் காலச் சாகுபடியில் கரும்பு, சோளம் ஆகிய பயிர்களை மல்லி என்னும் புல்லுருவி அதிக அளவில் தாக்கும்.

சுடுமல்லியின் விதைகள் நிலத்தில் 20-25 ஆண்டுகள் வரை முளைப்புத் திறன் குறையாமல் இருக்கும். சோளம் கரும்புப் பயிர்கள் சாகுபடி செய்யும்போது சுடுமல்லியின் விதைகள் முளைக்கும். இதன் வேர் மண்டலம், சோளம், கரும்புப் பயிர்களின் வேருடன் இணைந்து வளரும் இயல்பினைக் கொண்டது. மேலும் மண் இளக்கம் இருக்கும்போதும் அதிக வெப்பமும், குறைந்த ஈரமும் இருக்கும்போதும் சுடுமல்லி அதிகமாக முளைத்து சோளம், கரும்புப் பயிர்களின் மகசூலை 25-40 சதம் குறைக்கின்றது. சுடுமல்லியின் வேர்ப்பாகத்திற்கு மேல் உள்ள பாகம் ஒளிச்சேர்க்கையின் அடிப்படையில் பசுமையாக வளரும். சுடுமல்லியின் வேர்கள், பயிர்களின் வேருடன் இணைந்து பயிர்களை உறிஞ்சும் ஊட்டச்சத்துக்களை எடுத்துக் கொள்கிறது.

### சுடுமல்லியைக் கட்டுப்படுத்தும் முறைகள்

Δ சுடுமல்லி தாக்காத கோ. 20, சி.எஸ்.எச். 5 போன்ற சோள ரகங்களைப் பயிர் செய்யவும்.

Δ ஆழமான உழவும், மற்றும் கரும்பு, சோளம் ஆகிய பயிர்களோடு மற்ற பயிர்களான பருத்தி, காய்கறிகள், நிலக்கடலை போன்ற பயிர்களைப்பயிர் சுழற்சியின் மூலம் சாகுபடி செய்ய வேண்டும்.

Δ தீவனப் பயிருக்காக, சோளத்தை அடர்த்தியாக விதைத்து, சுடுமல்லி தோன்றி பூக்கள் தோன்றும் முன், தட்டையை 70-75 நாளில் அறுவடை செய்து, ஈரப் பதத்தில் நிலத்தை உழுதுவிட்டால் இக்களையின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

Δ நிலத்தில் போதிய தொழுஉரம் கம்போஸ்ட் போன்ற இயற்கை உரங்களையும், தழைச்சத்து தரக் கூடிய இரசாயன உரங்களையும், காலாகாலத்தில் பயிர்களுக்கு இட்டு முறைப்படி நீர்ப்பாசனம் செய்தால் சுடுமல்லியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு அதன் எண்ணிக்கை குறையும்.

Δ சுடுமல்லி விதைகள் முளைக்கும் பருவத்தில் நீரினைச் சிறிது அதிகமாகக் கூட்டினால் 3வது நீர்ப்பாகம் (பூரித நிலை) முளைப்புத் திறன் பாதிக்கப்பட்டு அதன் எண்ணிக்கை குறையும்.

Δ அட்ராசைன் (50சதம்) எனும் களைக் கொல்லியை சோளத்திற்கு 200 கி. கரும்புக்கு 800 கி. வீதம் 200-250 லிட்டர் நீரில் கலந்து சீராய்த் தெளித்து விதைக் கரணை முளைக்கும் முன்பு முளைத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

Δ சுடுமல்லி முளைத்து பூக்கள் தோன்றும் முன்பு பெர்னாக்ஸ்லோன் (2-4டி) எனும் களைக் கொல்லியை ஏக்கருக்கு 500 கி. வீதம் 200-250 லிட்டர் நீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும். இந்த களைக் கொல்லியை சோளம் விதைத்த நான்காவது வாரத்திலும், கரும்புக் கரணை நட்டு மூன்றாவது மாதத்திலும் தெளிக்க வேண்டும். இதனால் சுடுமல்லிக் களைகள் கட்டுப்படுத்தப்படும். இதற்காக ஏக்கருக்கு புல்லுருவி ரூ. 50-60 வரை செலவாகும்.

Δ யூரியா, அம்மோனியம் சல்பேட், சோன்று உப்பு ஆகிய ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு 10சதம் கரைசல் தயார் செய்து சுடுமல்லி பூக்கும் பருவத்தில் தெளித்தால், களை கருகி விதைகள் உண்டாகாமல் தடுக்கும். இதனாலும் புல்லுருவியைக் கட்டுப்படுத்தலாம். மேற்கூறிய உழவியல் முறைகளைக் கையாண்டால் சுடுமல்லி ஒரு பிரச்சனையாக இராது.

### முல்லை பூக்காது

முல்லைச் செடிகள் வீட்டுத் தோட்டங்களிலும் மற்றும் வயல்களிலும் வியாபார நோக்குடன் பயிரிடப்பட்டு வருகின்றன. முல்லைச் செடிகளில் சாதாரணமாக இலைகளைத் தின்று அழிக்கும் புழுக்களும், மொட்டுகளை அழிக்கும் புழுக்களும் சிறிய அளவில் காணப்படும். இவற்றால் ஏற்படும் சேதம் மிகவும் சொற்பமே.

சில ஆண்டுகளாக முல்லைச் செடிகளை ஒருவகைச் சிலந்திகள் (அசிரியா ஜேஸ்மின்) தாக்கி பெருத்த நஷ்டத்தை உண்டாக்கி வருகின்றன. இச் சிலந்திகள் நுண்ணியவை. உருப்பெருக்கி மூலம் பார்த்தால் இச்சிலந்திகள் உருவில் நீண்டும் நான்கு கால்களை உடையனவாகவும் இருப்பது புலப்படும்.

இச்சிலந்திகள் இலைகளைத் துளைத்துச் சென்று சாற்றை உறிஞ்சிக் குடித்து உயிர் வாழ்கின்றன. இச்சிலந்திகளால் தாக்கப்பட்ட முல்லை இலைகளில் 'வெல்வெட்' போன்ற அல்லது பஞ்சு போன்ற வெள்ளைநிற வளர்ச்சி காணப்படும் மிக அதிக அளவில் தாக்கப்படும் போது இலைகள் முழுவதும் பச்சையாக இல்லாமல் வெளுத்து வெல்வெட் அல்லது பஞ்சு போன்ற வெள்ளை நிறத்தில் காணப்படும். இச் சிலந்திகளால் தாக்கப்பட்டிருக்கும் முல்லைச் செடிகள் பூப்பதில்லை. ஆகவே, வியாபார நோக்குடன் பயிரிடுவோர் மிகுந்த நஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

முல்லைச் செடிகளை இச் சிலந்திகள் தாக்கியிருக்கமுன்னெச்சரிக்கையாகத் தண்ணீரில் கரையும் கந்தகத்தூளை 0.17 கலவையாக (125 கிராம் தண்ணீரில் கரையும் கந்தகத்தூளை 100 லிட்டர் தண்ணீரில்) செடிகளின் மீது மாதம் ஒருமுறை தெளிக்கவும்.

பெருமளவில் சிலந்தியால் தாக்கப்பட்டிருக்கும் செடிகளில் உள்ள இலைகளை எல்லாம் பறித்து எரித்து விட வேண்டும். பின் மோனோகுரோட்டோபாஸ் 200 மி.லி. மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 'பாரி' என்னும் ரகமானது இச் சிலந்தித் தாக்குதலுக்குட்பட்டதில்லை.

### வேளாண்மையில் பிளாஸ்டிக்கின் உபயோகங்கள்

தற்போது பிளாஸ்டிக் பல தொழில்களிலும் மற்றப் பொருட்களுக்குப் பதிலாக உபயோகப்படுகிறது. வேளாண்மையிலும் பிளாஸ்டிக், சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம், நீர்க் கால்வாய்கள், நீர்ப் பதன அறை, நிலத்திற்கு மூட்டமிடுதல், நீர் எடுத்துச் செல்லும் குழாய்கள் மற்றும் இணைப்பு உதிரிகள், வேளாண் இயந்திரங்களில் பிளாஸ்டிக்கினால்

செய்யப்பட்ட சாதனங்கள்போன்ற பல வகைகளில் உபயோகத்தில் உள்ளது.

நீர் எடுத்துச் செல்லும் குழாய்களில் வளைவுகள் மற்றும் குறைப்பான்கள் போன்ற பலஉதிரிப்பாகங்கள் உபயோகத்தில் உள்ளன. இவைகளின் திறனே அந்த நீர்ப்பாசன அமைப்பின் திறனை எடுத்துக்காட்டும். பிளாஸ்டிக்கில் பல வகைப்பட்ட உதிரிகள் தற்போது உபயோகிக்கப்படுகின்றன இவைகளையும், உலோகத்தினாலான உதிரிகளையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இதில் பிளாஸ்டிக்கினாலான இணைப்பு மற்றும் உதிரிகள் அழுத்தம் மற்றும் பிற விரயங்களை 25-30 சதவிகிதம் வரை குறைக்கிறது. மேலும் விலையில் பலவகைப்பட்ட உதிரிகளுக்கு 30 முதல் 60 சதவிகிதம் வரை குறைந்ததாக உள்ளது. உலோகத்தினாலான உதிரிகளுடன் பிளாஸ்டிக்கிலான உதிரிகளின் உழைப்புத்திறனை ஒப்பிட்டதில், வேறுபாடின்றி நீண்ட காலம் தங்கும் திறன் கொண்டதாக உள்ளது.

### நவீன பண்ணை இயந்திரங்களின் பயன்கள்

உழவர்கள் ஏன் நவீன பண்ணை இயந்திரங்களைத் தேவையான அளவு உபயோகிப்பதில்லை? என்பது குறித்து ஆராய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒரு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்காக, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய எட்டு மாவட்டங்களிலிருந்து 400 விவசாயிகளைப் பேட்டி கண்டதில் கீழ்க்காணும் கருத்துக்கள் கிடைத்தன.

விவசாயிகளைப் பொருத்தவரை, பெரும்பாலான நவீன பண்ணைக் கருவிகளைப் பற்றி முக்கியமாக, மனித உழைப்பை மிச்சப்படுத்தும் கருவிகளைப் பற்றி விவரம் தெரியாமலிருப்பதே அவர்கள் அத்தகைய இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாமலிருப்பதற்கான முக்கிய காரணமாகும். அப்படி அவர்கள் ஏதேனும் ஒரு சில கருவிகளைப்பற்றித் தெரிந்திருந்தாலும், கருவிகளின் விலை மற்றும் குறைந்த தரம், பழுது பார்க்கும் வசதியின்மை, வாடகைக்குக் கிடைக்காமை போன்ற காரணங்களால் அவைகளை விவசாயிகள் பயன்படுத்த இயலவில்லை.

எனவே, குறைந்த விலையில் பண்ணைக் கருவிகளை விவசாயிகளுக்குக்கிடைக்க செய்வது அவசியமாகிறது. கருவிகள் வாங்க மானியம் மற்றும் செயல் விளக்க முறை

ஒருவனுடைய மனம் தூய்மையாய் இல்லாவிட்டால், பணமோ, வலிமையோ, அழகோ அவனுக்குப் பயன்படமாட்டா.

— அரிஸ்டாட்டில்

களைப் பெருக்குதல் பண்ணை இயந்திரங்களின்உபயோகத்தினைப் பரவலாக்கும். ஆனால், கருவிகளை விவசாயிகள் பயன்படுத்துமாறு ஆலோசனை கொடுக்குமுன்னர் அக்கருவிகள் அந்தந்த இடம் மற்றும் பயிர்களுக்கு ஏற்றவையா என்பது குறித்து விவசாய அதிகாரிகளால் தீர ஆராயப்படவேண்டும்.

மேலும், விவசாயப்பொறியியல் விரிவாக்கப் பணி தனியாக ஆரம்பிக்கப்பெற்றால், நவீன விவசாயக் கருவிகளின் உபயோகத்தை அதிகரிக்கலாம்.

### திராட்சைத் தளிர்களைத் தாக்கும் புள்ளி வண்டுகள்

திராட்சைக் கொடிகளைத் தாக்கும் பலவகைப் பூச்சிகளுள் புள்ளி வண்டுகள் புதிதாக தளிர்கள் வரும் காலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றன. இவ்வண்டுகள் புதிதாக வளரும் தளிர்களையும், மொட்டுகளையும், பூக்களையும், தின்று மிகுந்த சேதத்தை உண்டு பண்ணுகின்றன. இவ்வண்டுகளால் தாக்கப்பட்ட கொடிகளின் காய்ப்புத்திறன் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

இவ்வண்டுகள் தம் முட்டைகளைக்கொடியின் தண்டின்மேலும், மண்ணிலும் இடுகின்றன. இம்முட்டைகள் சுமார் நான்கு நாட்களில் பொரித்துப்புழுக்களாக மாறுகின்றன.

இப்புழுக்கள் மண்ணினுள் சுமார் ஆறு அங்குலம் வரை சென்று வேர்களைத் தின்று வளர்கின்றன. இப்புழுக்களினால் ஏற்படும் சேதம் வெளியில் தெரிவதில்லை. வளர்ந்த புழுக்கள் மண்ணினுள் கூட்டுப்புழுக்களாக மாறி பின்பு வண்டுகளாக உருப்பெற்று வெளி வருகின்றன. முட்டைப் பருவத்திலிருந்து வண்டுகளாக மாற சுமார் இரண்டு மாத காலமாகிறது.

இப்புள்ளி வண்டுகளைத் தடுக்க கொடிகளைக் கவாத்து செய்தபின் பி.எச்.சி.30 நனை தூள் 0.1 மருந்துக் கலவையை 1200 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலக்கவும் 15 நாட்களுக்கு ஒரு முறை நன்குகாய்ப்பிடிப்பு ஏற்படும் வரை தெளிக்க வேண்டும்.

பழங்கள் முதிரும் காலங்களில் வண்டுகள் மிகுதியாகக் காணப்பட்டால் மாலத்தியான் 0.1 கலவையைப் (200 மி.லி. மருந்தை 100 லிட்டர் தண்ணீரில்) பழங்கள் மீது நன்கு படும்படி தெளிக்கவும்.

### ஒட்டுப் புல்லின் இரும்புச்சத்துக் குறைபாடு நீங்க....

கோ.1 என்ற கம்பு நேப்பியர் ஒட்டுப் புல் இரகம் நல்ல தீவன மகசூல் கொடுப்பதோடு, புரதச் சத்து, சுண்ணாம்புச் சத்து, மணிச் சத்து, இரும்புச்சத்து, தாமிரம் மற்றும் மங்கனீசு சத்து அதிகம் கொண்டது.

இதில் இலை தண்டு விகிதம் அதிகம் உள்ளதால் கால்நடைகள் விரும்பிச் சாப்பிடுகின்றன. இதன் செரிக்கும் திறனும் மிக அதிகம். வருடத்திற்கு 7-8 அறுவடைகள் ஒன்றரை மாத இடைவெளியில் செய்யலாம். நான்கு வருடங்கள் வரை தொடர்ந்து பயிரிடலாம்.

அறுவடை செய்தவுடன் முளைக்கும் இலைகள் வெளிறிய மஞ்சள் நிறமாகச் சில இடங்களில் காணப்படுகின்றது. முக்கியமாக, சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள நிலங்களில் இம்மாதிரி காணப்படுகிறது. ஒவ்வொரு முறையும் அறுவடைக்குப் பிறகு களை எடுத்து யூரியா மேலுரம் இட்ட போதிலும் இந்த மஞ்சள் நிறம் நீடிக்குமாயின் இதற்குக் காரணம் இரும்புச் சத்துக் குறைபாடு என அறியலாம். இதனால் இலைப் பச்சையும் சூரிய வெளிச்சத்தையும் முழு அளவு உபயோகித்து உணவு உற்பத்தி செய்ய முடியாத நிலையில் தீவன மகசூல் கணிசமாகக் குறைகிறது.

பரிசோதனைகள் மேற்கொண்டதில் 1 சதம் யூரியாவுடன் 0.5 அன்ன பேதியைக் கலந்து இலைகளில் நன்கு படுமாறு தெளித்தால் 2-3 நாட்களில் மஞ்சள் நிறம் நீங்கி இலைகள் பசுமை நிறம் அடைந்து தீவன மகசூல் அதிகமாகிறது.

எனவே, ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ யூரியாவையும் ஒரு கிலோ அன்னபேதியையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதற்காகும் செலவு ரூ. 26 தான். ஆனால் சுமார் 2டன் மகசூல் அதிகமாகக் கிடைக்கிறது.

தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோவை-641003.




## படமும் செய்தியும்



சென்னைக்கு வருகை புரிந்த இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் டாக்டர் ஜான் ஆர். ஹப்பர்டு, மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்களை 5.4.89 அன்று கிண்டி ஆளுநர் மாளிகையில் சந்தித்தார்.




மாண்புமிகு ராஜஸ்தான் மாநில சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் திரு கிஷன் முத்வானி அவர்கள், மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் அவர்களை 20-3-89 அன்று சந்தித்து உரையாடினார்.



இங்கிலாந்து நாட்டு வெளிநாடு மற்றும் காமன்வெல்த் விவகாரத் துறைச் செயலர் ஜாப்ரி ஹாவ் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 29-3-89 அன்று சந்தித்தார்.



சென்னை மருத்துவக் கல்லூரியில் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 7-4-89 அன்று திறந்துவைத்தார். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு ஆற்காடு வீராசாமி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு பொன்முடி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு அ. கலாநிதி ஆகியோர் உடன் உள்ளனர்.




அண்ணா நகர் சாந்தி காலனியில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக் கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 18-3-89 அன்று பாலிவுடர், எவர்சில்வர் தட்டு, பாய் முதலியவற்றை வழங்கினார்

சென்னையில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி நிறைவு விழாவில் (1-4-89) வெற்றி பெற்ற அரசுத் துறைகளுக்குரிய பரிசுகளை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் அவர்கள் அளித்தார். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு கே.பி. கந்தசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.






# செய்திகள்... செய்திகள்... செய்திகள்...



● கேரள மாநிலம் வைக்கத்தில் 1924ஆம் ஆண்டு நடைபெற்ற ஆலயப் பிரவேச அறப்போரின் நினைவாக ரூ. 3.36 கோடி மதிப்பீட்டில் நினைவுச் சின்னம் அமைப்பதற்கான திட்டம் ஒன்றை கேரள அரசு, மத்திய அரசிடம் வழங்கி உள்ளது. போராட்டம் நடந்த இடத்தில் தந்தை பெரியார், விடுதலைப் போராட்ட வீரர் திரு டி.கே. மாதவன் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் நிறுவப்பட உள்ளன.


● தமிழ்நாட்டில் பிளஸ் டூ தேர்வுகள் மார்ச் 23 முதல் ஏப்ரல் 20வரை நடைபெறுகின்றன. இத்தேர்வில் 1,96,486 மாணவ மாணவியரும், 75,217 தனித் தேர்வர்களும் கலந்து கொண்டனர். கடந்த ஆண்டைவிட 45,000 பேர் கூடுதலாக இத்தேர்வு எழுதினர். 1,336 தேர்வு மையங்களில் இத்தேர்வுகள் நடைபெற்றன.

● இந்திய வனக் கொள்கையின்படி மொத்த நிலப்பரப்பில் 33 சதவிகிதம் காடுகள் இருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது இந்தியப் பரப்பில் சுமார் 23 சதவிகிதம் காடுகளே உள்ளன. அதிலும் தமிழ்நாட்டில் 17 சதவிகிதம்தான் உள்ளன.




● சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக திரு.ஏ.ஆர். இலட்சுமணன் நியமிக்கப்பட்டுள்ளார். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் தேவக்கோட்டையைச் சேர்ந்த இவர், சென்னை வழக்கறிஞர்கள் சங்கச் செயலாளராகவும் உள்ளார்.

● நோபல் அறக்கட்டளை வழங்கும் நோபல் பரிசுத்தொகை இவ்வாண்டு 20 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இனி நோபல் பரிசின் மதிப்பு 30 இலட்சம் குரோனராக (4,73,000 டாலர்) இருக்கும். சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஆல்பிரட் நோபல் என்பவர் அளித்த தொகையைக் கொண்டு 1901 முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.




● இந்தியாவில் உணவுதானிய உற்பத்தி தற்போது ஆண்டு ஒன்றுக்கு 150 மில்லியன் டன்களாகும். இது 10 ஆண்டுக் காலத்தில் 300 மில்லியன் டன்களாக உயரவேண்டும். இல்லையாயின் முன்னர் - 1960ஆம் ஆண்டு எப்படி இந்தியாவுக்கு உணவு நெருக்கடி ஏற்பட்டதோ அதே நிலை மீண்டும் ஏற்படும் என இந்திய அறிவியல் அமைப்பின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

● சென்னையிலிருந்து பம்பாய், லண்டன் வழியாக நியூயார்க் செல்லும் நேரடி விமானப் போக்குவரத்தை 'ஏர் இந்தியா' நிறுவனம் 2.4.89 முதல் அறிமுகப்படுத்தி உள்ளது.



● இந்தியாவில் மொத்தம் 4,131 செய்திப் பத்திரிகைகள் வெளி வருகின்றன. இவற்றில் 3,452 செய்திப் பத்திரிகைகள் சிறிய பத்திரிகைகளாகும். இவற்றின் மொத்த விற்பனை எண்ணிக்கை 16 கோடியே 61 இலட்சத்து 83 ஆயிரமாகும்.

● இராணுவத்தில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதியை, பள்ளி இறுதி வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புக்கு (தேர்வு பெற்றிருக்க வேண்டும்) மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது ஏப்ரல் முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. மற்ற தகுதிகள் அனைத்தும் இருந்து, போதுமான கல்வித் தகுதியைப் பெற முடியாத சூழ் நிலையில் உள்ளோருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.




● அமெரிக்காவில் நியூயார்க் மாநிலத்தில் பரவலாக இருக்கும் லிம் டிஸிஸ் (Lyme Disease) என்னும் மூட்டு நோயைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி, ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் பயன்பெற உதவியிருக்கிறார் இந்திய டாக்டர் ஒருவர். சீதா சௌத்ரி என்னும் அந்த டாக்டர் டெல்லியைச் சேர்ந்தவர். இவர் தற்போது நியூயார்க்கிலுள்ள லிங்கன் மருத்துவமனை, செயின்ட் ஜோஸப் மருத்துவமனை ஆகியவற்றில் பயிற்சி மருத்துவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியராக உள்ளார்.


● மைசூர் பல்கலைக் கழகம் நடத்தும் அஞ்சல் வழிக் கல்வியில் சேர்வதற்காக நடத்தப்படும் நுழைவுத்தேர்வு அடுத்த ஆண்டு முதல் விலக்கிக் கொள்ளப்படும் என மைசூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் செல்விதாஸ் தெரிவித்தார். மைசூர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வி பயிலும் மாணவர்கள் அமைப்பின் 15-வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது துணைவேந்தர் இத்தகவலைத் தெரிவித்தார்.

● குண்டூரில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான 27வது அதலெடிக் போட்டிகளின் உயரம் தாண்டுதல் பிரிவில் தமிழக வீராங்கனை செல்வி ஏஞ்சலா வின்சி புதிய சாதனை ஏற்படுத்தி உள்ளார். பெண்களுக்கான உயரம் தாண்டுதல் பிரிவில் ஏஞ்சலா 1.68 மீட்டர் உயரம் தாண்டி 12 ஆண்டுகளாக இருந்த பழைய சாதனையை முறியடித்தார்.

● புதிய வீட்டிற்குக் குடி புகுவோர்க்கு வாழ்த்துத் தந்தி அனுப்புவதற்கு வசதியாக புதியசொற்றொடரைத் தொலைத் தகவல் தொடர்புத்துறை அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட வாழ்த்து எண்: 38.



## ஏழை எளியோர் இதயம் குளிர தமிழக அரசின் பொன்னான திட்டங்கள்



வீடற்ற கைத்தறி நெசவாளர்களுக்கு குடியிருக்க வீடு, தொழிற்கூடம், நெசவாளப் பெண்களுக்குத் தறிகள் வழங்கப் படுகின்றன.




விதவைகள், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு மாதம் ரூ. 50 உதவிப் பணம் வழங்கப்படும்.




தந்தை பெரியாரின் கனவு நனவாகும் வகையில் பரம்பரைச் சொத்தில் ஆண் வாரிசுகள் போல, பெண் வாரிசுகளும் உரிமை பெறச் சட்டத் திருத்தம்.




மைய அரசு உதவியுடன் மாநில அரசு பொறுப்பேற்று நடத்தும் நகர்ப்புற ஏழையர் சுயவேலை வாய்ப்புச் சிறப்புத் திட்டத்தின்கீழ் 44 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு.




ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 8-ஆம் மாதத்திலிருந்து குழந்தை பெற்ற 2 மாதம் வரை ரூ. 50 உதவித்தொகை வழங்கப்படும்.




8-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த ஏழைப் பெண்களின் திருமணச் செலவுக்கு ரூ. 5,000 நிதி உதவி அளிக்கப் படும்.




படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்க்கு உதவும் திட்டத்தின் கீழ் 18,000 இளைஞர்கள் சொந்தத் தொழில் தொடங்குவதற்கு உதவி.




வறட்சிப் பகுதிகளில் கடன் தொகைகள் அறவே ரத்து செய்யப்படுவதுடன், நீண்ட காலக் கடன்கள் மீது ஒத்தி வைக்கப்பட்டுள்ள வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்படுகிறது.




விபத்தில் இறக்கும் லாரி, ஆட்டோ, டாக்ஸி, பேருந்து - கார் ஓட்டுநர்கள், மற்றும் கட்டடக் கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம் நிதி உதவி.

பொங்கல் திருநாளன்று ஏறக்குறைய 150 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும் வகையில் இலவசச் சேலை-வேட்டி வழங்கப்படும்.







மாத வருமானம் ரூ. 300க்குக் குறைவாக உள்ள குடும்ப அட்டை வைத்திருக்கின்ற ஏழைக் குடும்பத்தினருக்கு, தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், தீபாவளி ஆகிய நாட்களில் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

அட்டைசொல்லும் செய்தி

# கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே!

ஆடற்கலைக் கழகு
தேடிப்பிறந்தவள்
ஆவிதபொற்பாவை
ஆடவந்தாள்-மகிழ்ந்து
ஆடவந்தாள்-என்னோடு
ஆடவந்தான்

வாடாத தாமரைக்கை
வானின் ஒளி தெறிக்க
மங்காத செங்காந்தள்
விரல்கள் பொருள்குறிக்க

—ஆடற்கலை தெரிந்த நாயகியையும், ஆடற்கலையையும் இவ்வாறு சிறப்பித்துப் பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

ஆடற்கலைக்கு நாட்டியம் -நடனம்-கூத்து என்று பல்வேறு பெயர்களும் உண்டு.

இயல், இசை, கூத்து என்ற மூன்று பிரிவுகள் கொண்டு விளங்குவதால்தான் நமது அன்னைத்தமிழ் முத்தமிழ்' என்று வழங்கப்படுகிறது.

மனிதன் ஒவ்வொரு விதமான நிலையில் இருக்கும்போது வெளிப்படையாகச் சில அங்க அசைவுகளை, மெய்ப்பாடுகளை ஏற்படுத்துவது இயல்பு. மகிழ்ச்சி மிகுந்ததும் மனிதன் கூச்சலிட்டான். அது இசையாகியது. குதித்து ஆடினான். அது கூத்தாகியது. கூத்துக்கு சரியாக இரு கரங்களையும் கொட்டி முழக்கினான். அது தாளமாகியது. இப்படி மனிதன் தன்னையறியாமலேயே இசை, கூத்து, தாளம் ஆகியவற்றைக் கண்டுபிடித்தான்.

தன்னை மீறிய மிகுந்த உற்சாகத்தினால் ஆடினான் மனிதன்.

அப்படி ஆடுபவனைக் கண்டு பலரும் சேர்ந்து ஆடி மகிழ்ந்தனர்.

அப்படி ஆடுபவன், தனது திறமையின் உதவியினால் எதிரே அமர்ந்திருக்கும் பொது மக்களின் மனதைக் கவர்ந்து அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினான்.

இப்படி உருவான கூத்து-நாளாக நாளாகப் பண்பட்டு, நாட்டியம் எனப் பெயர் பெற்றது.

திருவிழாக் காலங்களில் சங்கீத அனுபவமுள்ள பாகவதர்கள் புராண நிகழ்ச்சிகளை நாடக வடிவில் அமைத்து நாட்டியமாடி வந்தனர். கைமுத்திரையின் மூலம் எந்தக் கருத்தையும் உன்னதமான முறையில் வெளியிட்டு வந்தார்கள்.

நாட்டியத்தையும் இசையையும் கொண்டு நடத்தப்படும் ஒரு நாடகம்தான் பரதநாட்டியம் எனப் பெயர் பெற்றுள்ளது.

இசையையும் நாட்டியத்தையும் உயிருக்கும் உடலுக்கும் ஒப்பிடுகின்றனர். எப்படி உயிரில்லாமல் உடல் பயன்படாதோ அதுபோலத்தான் இசை இல்லாமல் நாட்டியமும்.

கை, முகம் இவ்விரண்டின் உதவியால் உணர்ச்சிகளை (பாவம்)



வெளியிடுவது அபிநயம் எனப்படும். தாளத்திற்கேற்பக் கைகால்களின் அசைவு நர்த்தனம் எனப்படுகிறது. அபிநயம், நர்த்தனம் இரண்டின் சேர்க்கையையே நாட்டியம் என்று வழங்கி வருகிறோம்.

நாட்டியத்துக்கு நளினம் மிக மிகத் தேவை என்பதால் நாளடைவில் பெண்களே இக்கலையில் ஈடுபடலாயினர்.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் கூத்து எனப்படும் நடனம் மிகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. காப்பியத்தின் நாயகிகளில் ஒருத்தியான மாதவி, நடனநங்கையாகவே படைக்கப்பட்டிருக்கிறாள்.

இந்நாளில், நாட்டியம் பலராலும் விரும்பப்படுகிறது. திரைப்படம், தொலைக்காட்சி ஆகியவற்றில் நாட்டிய நிகழ்ச்சிகள் சிறப்பிடம் பெறுகின்றன. கலைவிழாக்களிலும், திருவிழாக்களிலும், கல்லூரி, பள்ளி விழா நிகழ்ச்சிகளிலும் நாட்டியம் தவறாது இடம் பெறுகின்றது.

'கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே' என்று பாடிய தியாகராச பாகவதரின் தேனிசை நமது காதுகளில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இறைவனே நாட்டியத்தை விரும்புகிறான் என்ற கருத்தை உணர்த்துவதற்காக எழுந்த உருவமைப்புதான் ஆடல் அரசனான நடராசனின் திருத்தோற்றம்.

கவலையைப் போக்கி - களிப்பை நல்கும் நாட்டியக்கலை தமிழகத்தின் கலைப்பண்பாட்டைப் பிறநாட்டவர்களுக்கும் பிறமாநிலத்தவர்களுக்கும் எடுத்துச் சொல்ல உதவும் இனிய கலையாகத் திகழ்கிறது.

எஸ்.எஸ்.சுந்தரம்

ஆதாரம்: ரஞ்சன் நடத்திய நாட்டியம் — மாதஇதழ்.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங்
● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# முதல்வர் கலைஞர் அளித்துள்ள முத்தான திட்டங்கள்

## மகளிர் மேம்பாட்டுக்கு

- தந்தை பெரியாரின் கனவை நனவாக்க, பரம்பரைச் சொத்தில் ஆண்வாரிசைப்போலவே பெண்ணுக்கும் சம உரிமை வழங்கச் சட்டத் திருத்தம்.
- வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவீத ஒதுக்கீடு.
- முதல் - இரண்டாம் வகுப்புகளில் ஆசிரியர் பணி இனி பெண்களுக்கே.
- ஏழை-நடுத்தரக் குடும்பப் பெண்களுக்கு இளங்கலைப்பட்டப்படிப்பு வரை இலவசக்கல்வி.
- எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த ஏழைப் பெண்களின் திருமணச் செலவுக்கு ரூ. 5,000 நிதி உதவி.
- கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு 8வது மாதம் தொடங்கி, 4 மாதங்களுக்கு உதவித்தொகை. (முதல் இரண்டு குழந்தைகளுக்கு)
- சேலம், தருமபுரி, தென்னார்க்காடு மாவட்டங்களில், 40,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கச் சிறப்புத் திட்டம்.



—இந்தத் திட்டங்கள்

தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக நமது அரசு வகுத்துள்ள திட்டங்களில் சில...

எல்லார்க்கும் ஏற்றமளிக்கும் இந்தத் திட்டங்கள் வெற்றிபெற அனைவரும் பாடுபடுவோம்! அரசுக்குத் துணை நிற்போம்!!